இருநிலத்திலும் சாதனை படைத்த வெற்றிமணி

தாயகத்தில் வெளிவந்த முதலாவது
சிறுவர் மாத இதழ்
வெற்றிமணி

ஐரோப்பாவில் வெள்ளிவிழாக்கண்ட
முதல் வண்ணத்தமிழ் இலவசப் பத்திரிகை
வெற்றிமணி




வெற்றிமணி வெளியீடு

25வது ஆண்டு பூர்த்தி மலர்

# வெற்றிமணி
Vettimaniy



## கால்நூற்றாண்டு
## வெற்றிச் சுவடுகள்

1994-2019 யேர்மனி






## சக்தி தந்த சக்திகள்

வெற்றிமணியின் வெள்ளிவிழா மலரை தனித்தே தொகுத்து வடிவமைத்து தந்தாலும்,அதற்கான சக்தியை தந்தவர்களை மறக்கமுடியாது.

என்போக்கில் என்வேலையை சுயமாக சுதந்திரமாகச் செய்ய வழிவிட்ட மனைவி, காலத்திற்கு ஏற்ற மாற்றங்களை கனிவுடன் புகட்டியபிள்ளைகள், என் கூடப்பிறவாத சகோதரர்களாக என் தளர்வைப்போக்கும் நல் உறவுகள், இவர்களின் அளப்பரிய அன்பும் அக்கறையும் வெற்றிமணி ஓங்கி ஒலிக்க சக்தியை எனக்கு வழங்கியது.

அவர்களை இந்த மலரில் பூரிப்போடு பதிவுசெய்கின்றேன்.

திருமதி ஜெயபவானி சிவகுமாரன்
திருமதி சிவஜெனனி அரவிந்தன்
திரு.சஞ்ஜீவன் சிவகுமாரன்
திரு.பொ.தில்லைராஜா
திருமதி.லோகேஸ்வரி தில்லைராஜா
திருமதி.கௌசி.சிவபாலன்
திரு.சிவகுருநாதன்.சக்திவேல்

என்றும் தமிழுடன்
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
பிரதம ஆசிரியர் : வெற்றிமணி,சிவத்தமிழ்

வெற்றிமணி வெளியீடு 2019
Vettimaniy@hotmail.com
Vettimaniy Ltd








# கால்நூற்றாண்டு
# வெற்றிச் சுவடுகள்

1994- 2019 யேர்மனி



ஆசிரியை திருமதி நவநிதி .சுப்பிரமணியம்.



அதிபர்.மு.க.சுப்பிரமணியம்.

கடந்த காலங்களைப் பின்னோக்கிப் பார்ப்பது பின்னோக்கி நடப்பதற்காக அல்ல! முன்னோக்கி நடப்பதற்கான அனுபவ அறிவை பெறுவதற்கே.

இன்று 25 வருடங்களை ஐரோப்பாவில் நிறைவு செய்த ஒரே பத்திரிகையாக வெற்றிமணி திகழ்கின்றது.
இலவசமாக வர்ணத்தில் என்று பார்த்தால் உலக அரங்கிலும் அதற்கு நிச்சயம் ஓர் இடம் உண்டு..

யேர்மனியில் 1994 ஆண்டு வெற்றிமணி ஆரம்பிக்கும்போது எனது தந்தை மு.க.சுப்பிரமணியம் அவர்கள் இலங்கையில் 1950 இல் ஆரம்பித்து சாதனை படைத்த வெற்றிமணிதான் என் கண்முன் நின்றது.

தந்தையோடு நான் வாழ்ந்த காலத்தில் வெற்றிமணியின் ஆக்கத்தை அருகில் இருந்து கற்றுக் கொண்டேன்.
கற்றவர்கள் எல்லோருக்கும் கற்றதை வெளிப்படுத்தும் வாய்ப்புக்கள் கிடைப்பது அருமை. வாய்ப்புக்கள் தானாகவும் வரும், பல நாம் தேடினாலும் வரும். சில தேடினாலும் வரமாட்டாது. எனக்கு வெற்றிமணி ரூபத்தில் வாய்ப்பு வரமாக வந்தது.
சில வேலைகளைத் தொடங்கும்போது நமக்கு, செய்யலாம் என நம்பிக்கை தருவது நம் முன்னோர்களிடம் கற்றதும், அவர்கள் மூலம் பெற்ற அறிவும், என்று சொல்லலாம்.

நான் பிறந்த ஊர் குரும்பசிட்டி. இலங்கையில் வெளிவந்த ஈழகேசரி வாரப்பத்திரிகை ஸ்தாபகர் நா.பொன்னையா அவர்கள் பிறந்ததும் வாழ்ந்ததும் அவ்வூரே. குரும்பசிட்டி சன்மார்க்கசபையில் அன்று வந்த ஈழகேசரி பத்திரிகைகளை பார்த்துப் பார்த்து பழைய காலத்தை தரிசித்துள்ளேன்.

ஈழகேசரி வார இதழின் வெள்ளிவிழா மலர் ஒன்றினை அண்மையில் கனடா சென்றபோது தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திரு எஸ்.திருச்செல்வம் அவர்களிடம் பார்க்கும் வாய்ப்புக்கிட்டியது. அதன் நேர்த்தியும், இன்றும் மங்காது இருக்கும் படங்களின் தெளிவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. சுன்னாகம் திருமகள் அச்சக நிறுவனரும் நா. பொன்னையா அவர்களே. பாலபாடம் பாலபோதினி முதல் பல பாடநூல்களின் பிறப்பிடமும் அதுவே.

எனது தந்தையின் விடா முயற்சியும், என் முன்னே நின்ற பெரியவர்களின் ஆற்றலும் ஆசியும் என்னை யேர்மனியில் வெற்றிமணி அடிக்க அடிநாதமாக அமைந்தது.

யேர்மனியில் 1994 ஆம் ஆண்டு
வானொலி, தொலைக்காட்சி,
வட்சப், பேஸ்புக் என இலகுவான
இணைய ஊடகம் ஏதுமற்ற
ஒரு காலம்.
அச்சுப்பதிப்புக்கும் அதன்
வடிவமைப்பிற்கும், இன்றுபோல்
கணனி கைகொடுக்காத காலம்.

ஒவ்வொரு கட்டுரையாக கைவிரல்
தேயத் தேய அடித்து, அதனை
பிரதி எடுத்து, ஒட்டுப்புத்தகத்தில்
ஒட்டுவதுபோல் ஒட்டி நேர்த்தியாக
இன்றைய கணனிக்கு நிகராக
கணக்குப்பார்த்து, பார்த்து,
செய்த பத்திரிகைதான் வெற்றிமணி.



மு.க.சு.சிவகுமாரன்
பிரதம ஆசிரியர்
வெற்றிமணி.

இன்றைய கணனியை அன்றே தூக்கிப்போட்டு விளையாடியது நான் களனி பல்கலைக்கழகத்தில் கற்ற ஓவியக் கலை. கண்ணாவின் ஓவியக்கலை இல்லை என்றால் அன்றே காணாமல் போயிருக்கும் வெற்றிமணி.

ஓவியம் என்பது வரைதல் மட்டும் என்று வரையறுத்து நின்ற காலம், அன்றும் உண்டு. இன்றும் உண்டு. ஆனால் என் அனுபவத்தில் கற்றதை அப்படியே ஒப்புவிப்பவன் கலைஞன் அல்ல. கலைஞனிடம் இருக்கும் பார்வைக் கோணங்கள் வேறு. மக்கள் மனதை படம்பிடிப்பவன் ஓவியன் என்றால், அவன் ஓவியத்துடன் மட்டும் ஏன் நிற்கவேண்டும்.

இந்தக் கேள்விக்கு பதிலாக வெற்றிமணி 25 வருடங்களை நிறைவு செய்தது. 25 புத்தங்கங்களுக்கு மேலே வடிவமைத்து அச்சுப்பதித்து வெளியிட்டது. விருதுகளை வடிவமைத்து தனித்துவமாக வழுங்கியது, எரிமலை சஞ்சிகையில் நவீன ஓவியத்தை கொடுத்து மலைக்கவைத்தது. பாடல் காட்சிகளை படமாக்கியது, தமிழே காதல் கவிதைப்புத்த கத்தை சித்திரத்துடன் கவிபாடவைத்தது. இவை தற்பெருமை அல்ல. ஓவியக்கலையின் பெருமையைப் பதிவு செய்கின்றேன் அவ்வளவு தான்.
எனது ஆற்றலுக்கு யாழ் பல்கலைக்கழத்தில் ஆரம்பித்த கலைவிளக்கு சு.பாக்கியநாதன் அவர்களுடனான எமது நட்பு கைகொடுத்தது. (மாதம் இருமுறை என ஈழமணி பத்திரிகை 1993 இருவரும் இணைந்து ஆரம்பித்தோம்.
அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராக என்னை நியமித்தார். எட்டு மாதங்கள் வெளிவந்து பொருளாதார நெருக்கடியால் நின்றுபோயிற்று) இந்த இடத்தில் திரு.சு.பாக்கியநாதன் அவர்கள் என்னை மட்டுமல்ல யேர்மனியில் பலரைத் தட்டிக்கொடுத்து வளர்த்தவர் என்ற உண்மையை இங்கு பதிவுசெய்ய விரும்பு கின்றேன்.
மேலும் வெற்றிமணிக்கு பக்கபலமாக நின்றவர்கள் படைப் பாளிகள், மற்றும் வியாபார ஸ்தாபனங்கள். இவர்களை வாழ்வில் மறக்க முடியாது. காலத்திற்கு காலம் புகையிரதப் பயணம்போல் பல படைப்பாளிகளும் வியாபார ஸ்தபனங் களும் வெற்றிமணியுடன் பயணித்துக்கொண்டே உள்ளனர்.

இன்று 70 வீதமான படைப்பாளிகள்
இளையவர்கள் என்று எண்ணும்போது
எனது தந்தையின் கனவை
நிறைவுசெய்த ஆத்மதிருப்தி
எனக்கு ஏற்படுகின்றது.
1994 முதல் இன்று வரை
வெற்றிமணியில் உள்ள
பதிவுகள்
பார்ப்பவர் கோணத்தில்
ஒவ்வொரு துறையிலும்
ஆய்வு செய்யும் வண்ணம்
சிறந்த ஆவணமாக

புலம்பெயர் நாட்டில் வணிகம், கலைகள், விழாக்கள், எழுத்தாளர்கள், இலங்கையில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள், நம் இளம் சந்ததியினர் செய்த சாதனைகள், ஆலயங்களும் அதன் வளர்ச்சியும்,தமிழ் பாடசாலைகளும் அதன் வளர்ச்சியும், வெற்றிமணியின் வெற்றி என பல ஆய்வுகளை மேற்கொள்ள எதிர்காலத்தில் உதவும் ஒரு ஆவணமாகத் திகழ்கின்றது.

உங்கள் பத்திரிகை உங்களுக்கு கற்றுத்தந்தது ஏராளம்.

அது எனக்கு தந்த செல்வம் எவ்வளவு பாருங்கள் வெற்றிமணி எனக்கு கணனி கற்றுத்தந்தது. பொறுமை புகட்டியது, நேர்மறை எழுத்தை பறைசாற்றியது, குற்றம் குறை காணும் குணம் தவிர்த்தது, எதிர்ப்பவர்களையும் நேசிக்கும் பண்பை வளர்த்தது, மௌனத்தின் பலத்தை காட்டியது, நேரத்தின் அர்த்தம் புரியவைத்தது, அதிகாலைச் சூரியனைக் காணவைத்தது, தந்தை தாயை கணமும் நினைக்கவைத்தது. பெரியவர்களின் நட்பைப் பேண வைத்தது. கவிதை பாட வைத்தது, கலைஞனாக வாழ வைத்தது. இவைதான் வெற்றிமணி எனக்கு அளித்த பெரும் செல்வங்கள்.

25வருட பூர்த்தி மலர் வாழ்த்துக்களால் மட்டும் நிறைக்காது, நிறைவான பல ஆக்கங்களால் நிறைந்த கனித்தோட்டமாக உள்ளது.
இன்று பார்ப்பவர்களுக்கான படையல் மட்டுமல்ல இது. பல ஆண்டுகளின் பின்னரும் பார்த்து புசிக்கக்கூடி வகையில் பல ஆக்கங்கள் உள்ள சிறப்பான படையல் இது. நான் உங்களுக்காக என் கைப்பட சமைத்த பெரு மடைதான் இந்த வெள்ளிவிழா மலர்.

என்றும் தமிழுடன்

மு.க.சு.சிவகுமாரன்.

பிரதம ஆசிரியர் வெற்றிமணி,
சிவத்தமிழ் -யேர்மனி
01.06.2019

யேர்மனியில் வெற்றிமணியின் கால்நூற்றாண்டு சேவையை
காலத்தால் அழியாது, மறைக்காது,பாதுகாக்கவேண்டிய
பெரும்பணி படைப்பாளிகளையும், வாசகர்களையும் சாரும்.
இது இணையத்தளங்கள் அற்ற காலத்தில் உதித்த பத்திரிகை
இடர்களை உழைப்பால் வென்று நம் துன்பம் மறந்து
உங்களிடம் புன்னகை இதழ்விரித்த வெற்றிமணி.
காலத்தால் அழியாது காப்பதுவே
உங்களை வளர்த்த வெற்றிமணிக்கு நீங்கள் செய்யும் கைமாறாகும்

## வெற்றி மணி மணியாய்த் தந்த பெற்றவர்க்கு சமர்ப்பணம்




கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 06.10.2002 ம் ஆண்டு வெற்றிமணி இதழ்களின் கண்காட்சி விழாவில்
அன்னையுடன் தந்தையை வணங்கும் காட்சி

# தடைசெய்யப்பட்ட நூல்களால் ஆனதொரு நினைவாலயம்



என்.செல்வராஜா
நூலகவியலாளர், லண்டன்

நூல்களை எரிப்பதும் நூலகங்களை எரிப்பதும் அறிவு ஜீவிகளை அழிப்பதும் தமக்குப் பாதகமானதெனக் கருதும் மாற்றுக் கருத்தை இல்லாமல் செய்வதற்கான வழிமுறை களாக உலகெங்கினும் உள்ள அரசியல் அதிகார வர்க்கங் களினால் நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

மடாலயங்களில் சேகரித்து வைக்கப்பெற்ற நூல்களை எதிரிகள் அழித்தார்கள், அலெக்சாந்திரியா நூலகத்தை நிர்மூலமாக்கினார்கள் என்பதெல்லாம் நாம் அறிந்த வரலாறு. பப்பைரஸ் என்னும் பத்திரிகைத்தாளின் முன்னோடி அறியப்படாத அந்நாளில் இருந்த நூல் ஒரு பிரதியோ, சில பிரதிகளோ ஏடுகளிலும், களிமண் தகடுகளிலும் எழுதப்பட்டுப் பேணப்பட்டு வந்திருந்தன. அவற்றை அழிப்பதன் மூலம் அதிகார வர்க்கம் அதிலிருந்த கருத்துக்களை குழி தோண்டிப் புதைப்பதில் ஓரளவு வெற்றி கண்டிருக்கலாம். அன்று மட்டுமல்ல இன்று அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பிற்காலத் திலும் இந்த நடைமுறையைக் கைக்கொள்வ தினால் இவர்கள் எதைச்சாதித்து விட்டார்கள்?

கி.மு. 213இல் புராதன சீனாவின் சக்கரவர்த்தி *Shih Huang-ti*. ஒருங்கிணைக்கப்பட்ட பெருஞ்சீனப் பேரரசின் முதலாவது மன்னராகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டவர். இவர் தான் சீனப்பெருஞ்சுவரைக் கட்டுவிப்பதில் முன்னோடி யாயிருந்தவர். தனது ஆட்சிக்காலத்தில் தான் சீன வரலாறு எழுதப்படவேண்டும் என்ற நோக்கில் விவசாயம், விஞ்ஞானம் மற்றும் எதிர்வு கூறும் சாத்திர நூல்களைத் தவிர்ந்த அனைத்து நூல்களையும் சீனாவில் எரித்துவிடும்படி உத்தர விட்டிருந்தார்.
மாய மந்திரக்கலைகளின் பாலிருந்த இவரது அதீத ஈடுபாட்டுக்கு கன்பூசிய கொள்கையாளர்களினால் தெரிவிக் கப்பட்ட மாற்றுக் கருத்தும் இந்த முடிவுக்குக் காரணம் என வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர்.
தடைசெய்யப்பட்ட நூல்கள் பற்றிக் கலந்துரையாடுவதே மரண தண்டனைக்குரிய குற்றமாகப் பிரகடனப்படுத்தி யிருந்தார். இதன் மூலம் எதிர்பார்த்த நீடித்த ஆட்சி அவருக்குக் கிடைக்கவுமில்லை. பெருஞ்சீன வரலாறு திருத்தி எழுதப்படவுமில்லை. சீன உளவியல் கருத்துக்கள் உலகப் புகழ்பெறத் தவறவுமில்லை.



தூண்கள் அனைத்தும் புத்தகங்களால் உருவாக்கப்பட்டுள்ளன

மாறாக, கி.மு.206 இன் பின் அவரது ஆட்சியைக் கைப்பற்றிய ஆட்சியாளர்களால் சீன இலக்கியம் செழிக்கவைக்கப்பட்டது. ஆவணக்காப்பகங்கள் உருவாகின. பழைய வரலாறு பேண வழிகோலப்பட்டது.
கிரேக்கத்தில் அலெக்சாந்திரியா நூலகம் கி.மு.283இல் பல்லாயிரம் ஆவணச் சேகரிப்புகளால் பெருமை பெற்றிருந்தது. ஏதென்சின் பலநூறு நாடகப்பிரதிகள் அங்கிருந்தன.

அரிஸ்டாட்டிலின் சொந்தச் சேர்க்கைகள் கிரேக்க இலக் கியங்கள் அனைத்தும் அந்த நூலகத்தில் பேணப்பட்டு வந்தன. நவீன பொது நூலகச் சிந்தனை இங்கு தோற்றம் பெற்றிருந்தது. பல்வேறு படையெடுப்புக்களால் இவை சேதமாக்கப்பட்ட போதும் கிரேக்க இலக்கியமோ அரிஸ் டாட்டிலின் தத்துவங்களோ மறைந்துவிடவில்லை என்பதை நாம் இன்று உணர்கின்றோம்.

தமிழகத்தில் சோழர் கால சாசன ஆவணங்களிலே அடிக்கடி இடம் பெறுகின்ற சரசுவதி பண்டாரங்கள் என்பது அக்காலத் தில் இருந்த நூலகங்களே என்பது வரலாற்றாய்வாளர் கூற்று.

இவை பின்னாளில் சரஸ்வதி மகாலயம் என்றும் குறிக்கப்பட்டு வந்துள்ளது. படையெடுப்புக்களால் நூலகங்கள் அழிந்த போதிலும் இங்கு பேணப்பட்டு வந்த தமிழ் இலக்கியங்கள், இந்து சமயத் திருமுறைகள் எவையும் அழியாமல் இன்றும் நிலை பெறுகின்றன.



(புகைப்படம்: பார்த்தெனன் (Parthenon) ஆலயம் கி.மு.447)

இந்தப் பின்னணியில் தான் ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சிக் காலகட்டத்தில் நாசி (Nazi) இயக்கத்தின் நூல் எரிப்புப் போராட்டத்தையும் பார்க்கவேண்டியுள்ளது. 19 மே 1933இல் ஜேர்மனியின் பல நகரங்களிலும் ஜெர்மனிய மாணவர் யூனியன் சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கிவைத்த இந்த நூல் எரிப்புப் போராட்டத்தில் நாசிசத்திற்கு எதிரானதும், அவர்களது கொள்கைகளுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியவை என்று அவர்களால் சந்தேகிக்கப்படுபவையுமான சுமார் 2000 தடைசெய்யப்பட்ட நூல்களை அவர்கள் எரித்துத் தொலைத் தார்கள்.

அன்று ஹிட்லரின் நாசி ஆதரவாளர்களால் நூல்கள் பலாத்காரமாகப் பறிமுதல் செய்யப்பட்டும் சேகரித்தும் எரிப்பதற்காகப் பொது இடமொன்றில் மலையாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த அறிவியல் மற்றும் வரலாற்று நூல்களின் முன்னால் நின்று அன்றைய நூல் எரிப்பு வைபவத்தை சம்பிரதாய பூர்வமாகத் தொடக்கி (எரித்து) வைத்துப் பேசும் போது ஜேர்மானிய கொள்கைத்திட்ட மந்திரி ஜோசப் கொயபெல்ஸ் (*Joseph Goebbels*) கூறிய வாசகங்கள் இவை.

“அடுத்த ஆயிரம் வருடங்களுக்கு ஜேர்மானிய வாழ்க்கை முறையே உலகெங்கும் விதந்து பேசப்படப்போகின்றது. இன்று கொழுந்து விட்டெரியப் போகும் இத்தீயின் சுவாலைகள் ஒரு பழைய சகாப்தத்தின் முடிவைத் தெரிவிப்பதுடன் புதிய சகாப்தத்தின் மலர்வுக்கும் ஒளியூட்டப் போகின்றது. வரலாறு திருத்தி எழுதப்படுகின்றது.”

தமது அதிகார வலிமையால் ஜேர்மனியர்களின் பழைய வரலாற்றை இந்த நூல் எரிப்பால் ஜோசப் கொய பெல்ஸ்ஸாலும் அவரது அதிகாரவர்க்கத்தாலும் துடைத் தெறிய முடியவில்லை. மாறாக அந்த எரிப்பின் பின் எஞ்சிய சாம்பல் தான் அவர்களது முகங்களில் கரியாய் நிலைத்தது.

நாசிகளின் நூல் எரிப்பு ஒரே நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் ஜெர்மனிய மாணவர் யூனியன் முன்னெடுத்த போதிலும், பெருமழை காரணமாக மத்திய ஜேர்மனியின் வடபகுதியில் உள்ள Hesse மாநிலத்தின் முக்கிய நகரமான கஸ்ஸெல் நகரில் மாத்திரம் அன்று நடைபெறவில்லை. பிறிதொரு தினத்தில் அது பெருமெடுப்பில் அங்கு மேற் கொள்ளப்பட்டது.

இன்று அதே கஸ்ஸெல் நகரத்தின் மையப்பகுதியில், கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் அமைந்திருந்த வரலாற்று முக்கியத்துவமான பார்த்தெனன் (Parthenon) என்ற ஆலயத்தின் மாதிரி வடிவமைப்பில் ஒரு தற்காலிக கட்டிடத்தை வடிவமைத்து நிர்மாணித்துள்ளார் ஆர்ஜென் ரீனியக் கலைஞரான மார்த்தா மினுஜின் (Marta Minujin). கட்டிடக் கட்டுமானப்பணிகளுக்குப் பயன்படுத் தப்படும் (Scaffolding) உலோகக் குழாய்களைப் பொருத்தி பார்த்தெனன் ஆலய வடிவமைப்பு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பத்திரிகைத் தணிக்கை, எழுத்துச் சுதந்திரம் ஆகியவற்றை வலியுறுத்தி இந்தக் கலைப் படைப்பை இவர் இவ்வாண்டின் (2017) Documenta 14 கலைத் திருவிழாவில் காட்சிப்படுத்தும் நோக்கில் உருவாக்கியுள்ளார்.

இக்கட்டிடப் படைப்பின் முக்கியத்துவம் என்னவென்றால், கட்டிடத்தின் சுவர்கள், தூண்கள் அனைத்தும் புத்தகங்களால் உருவாக்கப்பட்டுள்ளன என்பதாகும். அதுவும் வெறும் புத்தகங்கள் அல்ல. உலக நாடுகளில் பல்வேறு அரசாங்கங் களால் காலம் காலமாகத் தடைசெய்யப்பட்ட நூல்களைக் கொண்டே இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை பிரமிப்பூட்டு வதாயுள்ளது. அன்று ஜேர்மனியில் தடைசெய்யப்பட்ட, எரித்து மறைக்கப்பட்ட 2000க்கும் அதிகமான நூல்களுடன், இன்று இஸ்லாமிய உலகினால் தடைசெய்யப்பட்ட சல்மான் ருஷ்டி யின் நூல்கள் உள்ளிட்ட ஏராளமான நூல்கள் தேர்வு செய்யப்பட்டு இக்கட்டிடத்தில் பிளாஸ்டிக் பைகளில் பாதுகாப்பாக இடப்பட்டு கட்டிடத்தில் ஒவ்வொன்றாகப் பொருத் தப்பட்டுள்ளன.



ஆர்ஜென்ரீனியக் கலைஞர் மார்த்தா மினுஜினுக்கு இக்கலைப் படைப்பு புதியதொன்றல்ல. இதனையொத்த கலைப்படைப் பினை இதற்கு முன்னரும் இவர் துணிச்சலுடன் உருவாக்கி யிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது தாய்நாடான ஆர்ஜென்டீனாவில் 1976 முதல் 1983 வரை அமுலிலிருந்த சர்வாதிகார இராணுவ ஆட்சியின்போது தடைசெய்யப் பட்டிருந்த நூல்களைப் பயன்படுத்தி ஆர்ஜென்ரீனாவின் தலை நகரான புவனொஸ் அயர்ஸ் (BuenosAires) இல் பார்த்தெனன் ஆலயத்தின் மாதிரி வடிவமைப்பில் காட்சிப்படுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.
19 டிசம்பர் 1983 அன்று, அந் நாட்டில் ஜனநாயக ஆட்சி மீளக்கொண்டுவரப்பட்ட ஒரு வாரத்திலேயே இக்கலைவடிவம் நிர்மாணிக்கப்பட்டுவிட்டது. மேலும், கண்காட்சியின் பின்னர் அங்கு பொருத்தப்பட்ட அனைத்து நூல்களையும் ஆர்ஜென்ரீ னியர்கள் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப் பட்டிருந்தது.

தணிக்கை என்பது என்றுமே நிரந்தரமானதல்ல அவற்றை யாரோ ஒருவன் உலகின் எங்கோ ஒரு கோடியில் ஆவணப் படுத்தி வைத்திருக்கும் வரையில். இது ஈழத்தமிழர்களுக்கும் பொருந்தும்.

ஈழத்தமிழரின் போராட்டக் காலத்தில் வன்னியில் தோன்றிய நூல்கள் அனைத்தையும் இன்றைய அரசியல் சூழலில் சுதந்திரமாக காட்சிப்படுத்த முடியாதபோதும் எதிர்காலச் சந்ததியினருக்காக, பேணிப்பாதுகாக்கும் முயற்சியில் தமிழ்ப் பிரதேசத்தின் பிரதான நூலகங்கள் இணைந்து முன்வருவது பற்றிச் சிந்திப்பார்களா?

# உலகெலாம் ஒலிக்கும் வெற்றிமணி

-திக்குவல்லைக் கமால்

இலங்கை - நாவலப்பிட்டியிலிருந்து வெற்றிமணி 1950ல் சிறுவர் சஞ்சிகையாக வெளிவந்துள்ளதாகத் தெரிகிறது. இருந்தும் அறுபதுகளின் பிற்பாதியில்தான் எமக்கு வெற்றிமணியுடன் தொடர்பேற்பட்டது. அப்போது நாங்கள் பள்ளி மாணவர்கள். அம்புலிமாமா, ஆதவன் போன்ற சஞ்சிகைகள் இலக்கிய ஆர்வமுள்ள எங்கள் பார்வைக்குக் கிட்டிய போதிலும் அதனோடு ஒட்டுறவு ஏற்படவில்லை. அவை இந்தியச் சஞ்சிகைகளாக இருந்தமையும் அதற்கு நாம் எழுத முடியுமா என்பதற்கும் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

அப்போது நாம் தேசியப் பத்திரிகைகளிலும் சில வாரப் பத்திரிகைகளிலும் ஆரம்ப எழுத்தாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட பக்கங்களில் சிறுசிறு ஆக்கங்கள் எழுதினோம். அனுப்பிவிட்டு மாதக் கணக்கில் காத்திருந்தோம். அது வெளிவருமா? இல்லையா என்று தவித்தோம். இதற்கிடையில் சஞ்சிகைகளில் எழுத வேண்டுமென்ற ஆவலும் ஏற்படாமலில்லை.

இந்நிலையில் எமக்கு அறிமுகமான வெற்றிமணியை தபால் மூலம் பெறுவதற்கான ஏற்பாடு செய்து கொண்டோம். மாதாமாதம் குறைந்து ஐந்து பிரதிகளாவது வெற்றிமணி மாத்தறை மாவட்டத்திலுள்ள எமது சிற்றூருக்கு வந்து சேர்ந்தன. அப்போது நானும் எமதூரிலிருந்து சில நண்பர்களும் புது எழுத்தாளர்களாகப் பேனா பிடித்திருந்தோம்.

வெற்றிமணியில் இரண்டு பகுதிகள் எம்மை வெகுவாகக் கவர்ந்தன. கவிதைகளுக்காக நாலைந்து பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. மரபு சார்ந்த கவிதைகள் மட்டுமே வெளிவந்தன. அடுத்தது, மாணவர் ஆக்கங்களுக்கான பகுதியில் கட்டுரை சிறிய கதைகள் போன்றன வெளிவந்தன. எமது ஆக்கங்கள் மாறிமாறி இப்பகுதிகளில் வெளியாகின. அதில் எமது ஆக்கம் வெளிவரும் போது பெரிய அங்கீகாரம் கிடைத்து விட்டதாகத் துள்ளிக் குதித்தோம். பொதுவாக வெற்றிமணியில் இடம் பெறும் விடயங்களைப் பற்றி நாம் கூடிக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டோம்.

**வேறு எந்தப் பத்திரிகையும் செய்யாத பணி இது.**

**வெற்றிமணியில் மனதைக் கவர்ந்த விடயம் ஆசிரியர் மு. க. சுப்பிரமணியம் அவர்கள் இளம் எழுத்தாளர்களோடு உரையாடு ஓர் உத்தியைக் கையாண்டதுதான். அதற்கென்று ஒரு பக்கம் ஒதுக்கி பெயர் குறிப்பிட்டு நாம் எழுதும் விடயங்களைப் பற்றி சிறு குறிப்புக்கள் எழுதி எங்களைத் தவிக்கவிடாது நெறிப்படுத்தினார். வேறு எந்தப் பத்திரிகையும் செய்யாத பணி இது.**

வெற்றிமணியில் சிறுவர்களுக்காக கூடிய பக்கங்கள் ஒதுக்கப்பட்டபோதிலும், கனக செந்திநாதன், வி.கந்தவனம், ஏ.ரி. பொன்னுத்துரை போன்றோரின் எழுத்துக்களும் இடம் பெற்றன. கல்வி சார்ந்த விடயங்களும் வெளிவந்தன.
நாம் மாணவர் கட்டத்தைத் தாண்டி தொழிற்துறையில் நுழைந்தபோதும் வெற்றிமணியின் தொடர்பு எங்களோடு கூடவே வந்தது. பிரதிகளைக் கவனமாகப் பாதுகாத்தும் வந்தோம்.

எழுபதுகளின் முற்பகுதியை கல்வித் தேவைக்காக சில ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் இருந்தேன். ஒரு மாலைப் பொழுதில் சில நண்பர்களோடு தெல்லிப்பளை சென்று வெற்றிமணி ஆசிரியரின் வீட்டைக் கண்டுபிடித்தேன். திரு மு. க. சுப்பிரமணியம் ஐயா எங்களை வரவேற்றார். அறிமுகப் படுத்திக் கொண்டோம். தேநீர் தந்து மகிழ்வித்தார்.

உரையாடல் தொடர்ந்தது. எழுத்துலகில் தடம் பதித்தபோது பெரும் தைரியத்தைத் தந்த அந்தப் பெருமகனை நேரில் கண்டு பரவசமடைந்தேன்.



திக்குவல்லைக் கமால்

அன்னாரின் அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்ட அந்த இனிய மாலைப் பொழுது இன்னும் என் நெஞ்சில் நீடித்து நிலைத்திருக்கின்றது.


பத்திரிகை நறுக்குகளையும் சஞ்சிகைகளையும் எதிர்காலத் தேவைக்காக பாதுகாத்து வரும் பழக்கம் எனக்கு இன்றும் இருக்கின்றன.
ஆசிரியரான நியமனம் பெற்று நான் பாடசாலைகளுக்கு சென்ற போது, மாணவரின் மொழிவிருத்தி கருதியும் வாசிப்பில் ஆர்வமேற்படுத்தும் நோக்கிலும் பெரும்பாலான வெற்றிமணி பிரதிகளை அவர்களது பயன்பாட்டுக்காகக் கையளித்தேன்.

என்னைப் போலவே அன்று வெற்றிமணியில் எழுதிய பலரும் கவிஞர்களாக, கதாசிரியர்களாக, ஆசிரியர்களாக இன்னும் பல்துறை சார்ந்தவர்களாக உயர்ந்துள்ளனர். தானும் ஒரு ஆசிரியராக இருந்து கொண்டு மாணவர்களை மையப்படுத்தி ஐயா அவர்கள் வெளிக்கொணர்ந்த வெற்றிமணி ஒரு சிறிய பணிபோல் தெரிந்தாலும், பாரிய பிரதி பலனை அது தந்துள்ளது கண்கூடு.

நாட்டில் யுத்த நெருக்கடி தொடர்ந்ததால் பாதிப்புக்குள்ளான எல்லாவற்றையும்போல வெற்றிமணி வெளி வரமுடியாத சூழ்நிலை உருவாகியமை தவிர்க்க முடியாததே.

ஆனால் வெற்றிமணி நின்றுவிடவில்லை. அது யேர்மனிக்கு புலம்பெயர்ந்து பல்வேறு பரிமாணங்கள் பெற்று இப்பொழுது வெள்ளி விழா ஆண்டை நிறைவு செய்து நிற்கின்றது.

மு.க.சு பிறந்த மண்ணில் இட்டவிதை இன்று புகுந்த மண்ணில் அவரது மகன் மு.க.சு.சிவகுமாரனை முன்நிறுத்தி குடும்பத்தவர்களின் முயற்சியால் பெருவிட்சமாய் உயர்ந்து நிற்கிறது.
அது இன்று பெருந் தோப்பாகமாறியுள்ளதென்பதில் எந்த ஐயமும் கிடையாது. வெற்றிமணியின் இனிய நாதம் உலகெலாம் ஓங்கி ஒலிக்கட்டும்.



கவிதை அரங்கம்

வானமே!

"திக்குவல்லை கமால்"

வையகத்தின் கூரையென விரிந்தெலாம்
வளைந்தெங்கும் கவிந்தொளிரும் வானமே!
மெய்யளந்து விளங்கிடாத புதிரென
விரிந்திடுமுன் விந்தைகளைப் பாடவோ?

காலைதரும் கவின்காட்சி மிளிர்ந்திட,
களிகுலுங்கப் பார்செழித்து உயர்ந்திட,
நீலமணித் துகில்கொண்டே ஞாயிறை
நீசுமந்து தருமழகைப் பாடவோ?

இரவென்னும் இருட்சேலை போர்த்தியே,
இளங்காதல் சோடிகளை வாழ்த்தியே,
தரளம்போல் விண்பூக்கள் கூட்டியே,
தங்கநிலாப் பவனிவரும் வானமே!

புவிவரண்டு நிலைகுழையும் வேளையில்
புலரவைக்க நீர்சொரியும் வானமே!
குவலயத்தில் உன்பரந்த சேவைகள்
கொண்டுமிக வியக்கின்றேன் நாளுமே!

# நெருக்கத்தைக்காட்டும் "நீ"



கலாநிதி பாலா. சிவகடாட்சம்



அம்மாவை அல்லது பாட்டியைப் பிள்ளையோ பேரப்பிள்ளையோ 'நீ' என்று அழைத்துப்பேசினால் எவரும் கோபிப்பதில்லை. பாசத்துடன் கூடிய உரிமையினால் அந்த அழைப்புக்கு அனுமதியுண்டு. அந்நியர்களைப் பொதுவாக நீங்கள் என்றே அழைத்துப்பேசுவோம். சிலவேளைகளில் வயதில் குறைந்தவர்களை 'நீர்' என்று குறிப்பதுண்டு. பொதுவாக 'நீ' என்பது மிக மிக நெருங்கிய உறவை அல்லது நட்பைக் குறிக்கும்.

ஆனால் சைவத் தமிழ்ப்பக்தர்கள் இறைவனோடு நீ என்று தன் பேசுவார்கள். பிறமதத்தவர்களைப்போல் பரமண்டலத் தில் உள்ள பிதாவே எங்களை ஆசீர்வதியும் என்றெல்லாம் நாம் வேண்டிக்கொள்வதில்லை. பிள்ளையாரப்பா நீதான் உதவி செய்யவேண்டும் என்று உரிமையுடன் கேட்பார்கள். முருகா என்னுடைய கஷ்டமெலாம் உனக்குத் தெரியாதா என்று கேட்பார்கள்.? அம்மாளாய்ச்சி என்னைக் கண்திறந்து பார் தாயே என்று ஒருமையிலேதான் இறைவனோடு பேசுவார்கள். இது தமிழர்களுக்கே உரிய சிறப்பு. அதீத பக்தியில் விளைந்த நம்பிக்கையின் வெளிப்பாடு.

அப்பன் நீ, அம்மை நீ, ஐயனும் நீ,
அன்பு உடைய மாமனும் மாமியும் நீ,
ஒப்பு உடைய மாதரும் ஒண் பொருளும் நீ,
ஒரு குலமும்சுற்றமும் ஓர் ஊரும் நீ,
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ,
துணை ஆய் என்நெஞ்சம் துறப்பிப்பாய் நீ,
இப் பொன் நீ, இம் மணி நீ, இம் முத்து(ந்)நீ,
இறைவன் நீ-ஏறு ஊர்ந்த செல்வன் நீயே.

என்று எத்தனையோ நீ போட்டு இறைவனோடு பேசுவார் அப்பர் சுவாமிகள்.

தம்பிரான் தோழர் எனப் போற்றப்படும் சுந்தரமூர்த்தி நாயனார் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு இறைவனை நீ என்றும் அழைப்பார் நீர் என்றும் அழைத்துப் பேசுவார். அப்போதும் கூட அதிக பாசத்தோடு மிக நெருக்கமாக இருந்தால் நீ என்று அழைப்பார். சற்றுக் கோபத்தோடு விலகி நிற்பதுபோல் இருந்தால் நீர் என்பார்.

கண்ணாய் ஏழுலகுங் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணார் இன்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

கனவிலே இறைவன் தோன்றி "மழபாடிக்கு வர மறந்தனையோ" என்று கேட்டபொழுது "அண்ணா உன்னை நினைக்காமல் வேறுயாரை நான் நினைப்பேன்" என்று உரிமையோடு பாடிய சுந்தரர் சத்தியம் மீறிய குற்றத்துக்குத் தண்டனையாக இறைவன் அவர் கண்கள் பார்வையை இழக்கச் செய்தபோது சற்று விலகி நின்று இறைவனை நோக்கி "நீர் என் கண்களைப் பறித்துவிட்டீர். ஏதோ வாழ்ந்து போம்" என்று சலிப்புடன் கூறிவைக்கின்றார்.

விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்த தில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே

## வெற்றிமணி பெற்ற வெற்றிக்கு வாழ்த்துக்கள்

தேமதுரத் தமிழோசையை இன்று உலகமெலாம் பரவச் செய்வதில் தமிழ்ப் பத்திரிகையாளர்க்கும் திரையுலகக் கலைஞர்களுக்கும் மிகப்பெரும் பங்குண்டு. அந்தவகையில் ஓர் ஐரோப்பிய நாடொன்றில் இருந்து இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் பரப்புவதில் வெற்றி கண்டுள்ள வெற்றிமணி இதழுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அத்துடன் இச் சஞ்சிகையினை இத்தனை ஆண்டுகளாகப் பொலிவுடன் வெளிக்கொண்டுவரும் திறன்மிகு ஆசிரியர் மு.க.சு. சிவகுமாரன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஜெர்மனியில் இருந்து தமிழ் மணமுடன் கூடவே ஆன்மீகமும் கலந்து வீசப் பவனிவரும் வெற்றிமணியின் அரும்பணி மென்மேலும் சிறந்தோங்க இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

அன்புடன் பாலசிவகடாட்சம்





### முதலாவது வர்ணப்பதிப்பு

யேர்மனியில் அச்சுப் பதிவாகி வெளிவந்த முதலாவது வர்ணப்பதிப்பு "புதியவடிவங்கள்" . ஓவியர் கண்ணாவின் ஓவிய,சிற்பக் கண்காட்சி மலர் இது. 1990 ஆண்டு வெளியிடப்பட்டது. (Photo copy அல்ல)

# வரலாறுகளை மாற்றிய செய்திப் படங்கள்









திரு எஸ். திருச்செல்வம்
மூத்த ஊடகவியலாளர்
முதன்மை ஆசிரியர் - தமிழர் தகவல், கனடா

டிஜிட்டல் எனப்படும் எண்ணியல் உலகம் சூறாவளி வேகத்தில் வளர்ந்துவரும் காலமிது. சமூக ஊடகங்கள் (Social Media) செய்தித் தேடலுக்கான நேரத்தையும் தேவையையும் குறைத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இவைகள் ஊடாகக் கிடைக்கும் செய்திகளும் தகவல்களும் போதுமென்கின்ற எண்ணம் ஊடகப்பரப்பில் பரவலாக உள்ளது. புலம்பெயர் நாடுகளில் வெவ்வேறு மொழி வானொலிகளும் தொலைக்காட்சிகளும் சமூக ஊடகங் களையே தங்கள் செய்தித் தேடலுக்கான பிரதான தளங்களாகப் பயன்படுத்துகின்றன.

இதனால் அச்சு ஊடகங்களின் (Print Media) தேவை சமூக மட்டத்தில் குறைந்து வருவதாக கருதப்படுகிறது. வாட்ஸ் அப்பில் வரும் செய்திகளே போதுமென்னும் நிலையில் பெரும்பாலானவர்கள் இருப்பதாக கருதுவோரும் உளர்.

ஆனால், சமூக ஊடகங்கள் வாயிலாகத் தாங்கள் தெரிந்து கொள்ளும் செய்திகளையும் தகவல்களையும் உறுதிப் படுத்தவும், அவற்றின் நம்பகத்தன்மையைத் தெரிந்து கொள்ளவும் அச்சு ஊடகங்களையே பொதுமக்கள் நாடு கின்றனர் என்பது மறைமுக உண்மை.

எண்ணியல் மற்றும் சமூக ஊடகங்கள் சவாலாக அமைந்துள்ள வேளையிலும், அச்சு ஊடகங்களின் வளர்ச் சியும் அவற்றின் அத்தியாவசியமும் அதிகரித்து வருவதை அண்மைய சில ஆய்வுத் தரவுகள் சுட்டுகின்றன.

கடந்த வருடத்தின் (2018) இறுதி மூன்று காலாண்டுகளையும், இந்த வருடத்தின் முதற் காலாண்டையும் ஒப்பிட்ட தரவு இந்தியாவில் வந்துள்ளது. இந்தக் கணிப்பின்படி மேற்குறிப்பிட்ட 12 மாத காலப்பகுதியில், முன்னைய ஆண்டு களைவிட மேலதிகமாக 1.8 கோடி மக்கள் அச்சு ஊடகங் களைப் பயன்படுத்தியது தெரியவந்துள்ளது. அச்சு ஊடகங்கள் வாயிலாக செய்திகளை நுகருவோர் எண்ணிக்கை 24 வீதத்தால் அதிகரித்துள்ளதையும் இக்கணிப்பு தெரிவிக் கின்றது.

கனடாவின் ரொறன்ரோ மாகாணத்திலிருந்து வெளிவரும் நான்கு ஆங்கிலத் தினசரிகளும் நாளொன்றுக்கு 27 இலட்சத்துக்கும் அதிகமான பிரதிகளை விற்பனை செய்கின்றன. இங்கிலாந்தின் முக்கிய ஆங்கில தினசரியான கார்டியன் நாளொன்றுக்கு ஒரு இலட்சத்து எண்பதாயிரத் துக்கும் அதிகமான பிரதிகளை விற்பனையாகக் கொண்டுள்ளது. இந்த பத்திரிகைகளின் விற்பனை கடந்த பத்தாண்டுகளில் படிப்படியாக உயர்ந்துள்ளதை இங்கு குறிப்பிட வேண்டும்.

அச்சு ஊடகங்கள் உலகளாவிய ரீதியில் விற்பனையில் பின்னிலைக்குச் செல்லாமைக்கு சில காரணங்கள் முக்கிய மானவை. அச்சில் வரும்போது செய்திகளின் நம்பகத்தன்மை கூடுதலாகிறது. நேர காலம் பாராது ஒரு செய்தியை மீள்வாசிப்புக்கு உட்படுத்துத்துவதற்கு இது உதவுகிறது. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உசாத்துணைக்குப் பயன்படுத்த அச்சு ஊடகம் கை கொடுக்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக வரலாறுகளை மாற்றியமைக்க அச்சு ஊடகங்களில் வெளிவரும் ஒளிப்படங்கள் பெரிதும் உதவி வருகின்றன. இதற்கான உதாரணமாக கடந்த ஐம்பது ஆண்டுகளில் மூன்று வெவ்வேறு நாடுகளில் இடம்பெற்ற மூன்று செய்திகளின் படங்களை இக்கட்டுரையில் நோக்கலாம்.




ஓடிய இந்தச்சிறுமியுடன் இன்று படப்பிடிப்பாளர் Nick Ut

வியட்நாம் போரில் அமெரிக்காவின் வான்தாக்குதலில் எரிகுண்டுக்கு இலக்கான கிம் புக் என்ற ஒன்பது வயதுச் சிறுமியை பலரும் நினைவில் வைத்திருப்பர். உடலில் ஆடையேதுமின்றி எரிகாயங்களுடன் கைகளை உயரத் தூக்கியவாறு ஓலமிட்டுக் கொண்டு வீதியால் ஓடிய இந்தச் சிறுமியை அசோசியேட்டட் பிறஸ் (ஏ.பி) செய்தி நிறுவனத்தின் படப்பிடிப்பாளர் நிக் உற் (Nick Ut) தனது கமராவுக்குள் புகுத்திக் கொண்டார்.

உயிருடன் போராடிய அச்சிறுமியின் படம் அடுத்த சில மணிநேரத்துள் உலகளாவிய ரீதியில் ஊடகங்களில் வெளியானதால் அமெரிக்காவின் யுத்தவெறி முகம் சர்வதேசத்தின் முன்னால் அம்பலமானது. பல பத்திரிகைகள் தொடர்ந்து இப்படத்தை வெளியிட்டு வந்தன.

வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கா தோல்வியடையவும் பின்வாங்கவும் இந்தப் புகைப்படம் காரணமானது.

1972ஆம் ஆண்டு யூன் மாதம் 8ஆம் திகதி இப்படத்தை எடுத்தவேளை நிக் உற் 21 வயது இளைஞர். இப்படத்துக்காக அவருக்கு பிரபல புலிற்சர் ஊடக விருது கிடைத்தது. இப்படியான ஒரு கோரக்காட்சியை தாம் தனது வாழ்க்கையில் ஒருபோதும் காணவில்லையென்று பீப்பிள் சஞ்சிகைக்கு அளித்த செவ்வியில் இவர் தெரிவித்துள்ளார்.

இவரது மூத்த சகோதரர் ஏ.பி. செய்தி நிறுவனத்தின் படப்பிடிப் பாளராகவிருந்தபோது 1965ஆம் ஆண்டுப் போரில் கொல்லப் பட்டது இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

நீண்டகால தோல் சீரமைப்புச் சிகிச்சையின் பின்னர் திருமணமாகி இரண்டு புதல்வர்களுக்குத் தாயான கிம் புக் அவர்களுக்கு கனடா அகதி உரிமை வழங்கியது. ஒன்ராறியோவில் வாழ்ந்து வரும் இவரை ஐக்கிய நாடுகள் அமைப்பு சமாதானத் தூதுவராக நியமனம் செய்துள்ளது.

இவரது மனிதாபிமானத்தை மதித்து கனடா 'தமிழர் தகவல்' 1988இல் சிறப்பு விருது வழங்கிக் கௌரவித்தது.


சோமாலியாவில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் தொடர்பான செய்திப் படத்துடன் தொடர்புபட்டது அடுத்தது.
1993இல் அங்கு இடம்பெற்ற யுத்தத்தில் சோமாலியர்கள் கைப்பற்றிய அமெரிக்க இராணுவத்தின் பிரதம அதிகாரிகளில் ஒருவரான சார்ஜன்ட் வில்லியம் கிளிவ்லான்ட் என்பவரின் சடலத்தை கயிறுகளால் பிணைத்துக் கட்டி மொகாடி நகரின் வீதி வழியாக அந்நாட்டு மக்கள் இழுத்துச் செல்லும் படம் சர்வதேச மட்டத்தில் அச்சு ஊடகங்களில் வெளியானது.

இந்தப் படத்தை எடுத்தவர், ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகையின் ஒளிப்பட மற்றும் புலனாய்வுச் செய்தியாளரான போல் வாற்சன். ரொறன்ரோவை பிறந்தகமாகக் கொண்ட இவர் (ஒரு கையை இழந்தவர்) யுத்தச் செய்தியாளராக பல களங்கள் சென்று பிரபல்யமானவர்.

இந்தப் படத்தை எடுத்தவேளை சோமாலிய மக்களின் சந்தேகம் தம்மீது ஏற்பட்டால் விபரீதமான விளைவு ஏற்படலாமென்பதைத் தெரிந்து கொண்டும் மிகத்துணிச்சலாக இப்படத்தை எடுத்தார் போல் வாற்சன். இதற்காக 1994ஆம் ஆண்டு இவருக்கு உயரிய ஊடக விருதான புளிற்சர் விருது வழங்கப்பட்டது.
(இலங்கையின் யுத்த நிலைவரம் தொடர்பாக இக்கட்டுரை யாளரைச் சந்தித்து, 1989 ஆகஸ்ட் 19ஆம் திகதி ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகையில் ஒரு கட்டுரையை போல் வாற்சன் எழுதியிருந்தார்)
சர்வதேச யுத்தங்கள் தொடர்பாக இவர் எழுதிய மூன்று நூல்களுக்கு வெவ்வேறு விருதுகளும் பரிசுகளும் கிடைத்தன.

கடந்தாண்டின் (2018) ஆரம்பத்தில் அச்சு ஊடகங்களில் வெளியாகி உலகெங்கும் வைரலாகப் பரவிய ஒரு புகைப்படத்தின் கதையை இனிப் பார்ப்போம்.





அமெரிக்காவுக்குள் எல்லை தாண்டிவரும் மெக்சிக்கோவினரை தடுப்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஒரு நடவடிக்கையை எடுத்தார். எல்லை தாண்டி வருபவர்களைப் பிடித்து தண்டனை வழங்கும் அதே சமயம், பெற்றோருடன் வரும் குழந்தைகளை அவர்களிடமிருந்து பிரித்து காப்ப கங்களுக்கு அனுப்பும் காட்டுமிராண்டித்தனமான இந்தச் செயற்பாடு பலத்த கண்டனங்களுக்குள்ளானது.

ஆயிரக்கணக்கான குழந்தைகளை பெற்றோரிடமிருந்து பலாத்காரமாகப் பிரித்து அமெரிக்காவின் வெவ்வேறு இடங்களிலுள்ள காப்பகங்களுக்கு அனுப்பினர்.
பெற்றோரிடமிருந்து குழந்தைகளைப் பிரிப்பது சட்டப்படி குற்றமென அறிந்தும் ட்ரம்ப் தனது முடிவை மாற்றவில்லை.

மெக்சிக்கோவின் ஒரு தாய் - அவரது பெயர் சான்ட்ரா சான்செஸ். இவரது குழந்தையின் பெயர் சான்ட்ரா சிக்கிக். தாயிடமிருந்து பிள்ளையைப் பிரிக்க அதிகாரிகள் முயன்ற போது பிள்ளை தாயின் முழங்காலைக் கட்டிப்பிடித்தவாறு நகர மறுத்து அழுகிறது.

இந்தக் காட்சியை அங்கு நின்ற செய்திப்பட ஊடகவியலாளர் ஜான் முரேய் துரிதமாகப் படமெடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்பி விட்டார். உலகம் முழுவதும் ட்ரம்ப் மீது கண்டன மழையைப் பொழிந்தது. இவரது மனிதாபிமானமற்ற செயலை பத்திரிகைகள் கண்டித்தன.

அமெரிக்க - மெக்சிக்கோ எல்லைப்புற கொள்கைகளை ட்ரம்ப் மாற்றியமைப்பதில் இந்தப் புகைப்படம் பிரதான பங்கு வகித்தது. ஜான் முரேய் அவர்களுக்கு சர்வதேச செய்திப் படத்துக்கான விருதும் கிடைத்தது.

அகதிகளின் படகுகள் கவிழ்வது, அகதிகள் கடலுக்குப் பலியாவது, நீரில் அடித்துச் செல்லப்பட்ட அகதிச் சிறுவ னொருவன் முகம் குப்புற சடலமாகக் கரையில் ஒதுங்கியது போன்ற பல புகைப்படங்கள் அண்மைய காலங்களில் ஊடகங்களில் வெளியாகி பல மாற்றங்களை ஏற்படுத்தின. ஆனால், பத்தாண்டுகளுக்கு முன்னர் தமிழர் தாயகத்தில் நடைபெற்ற மோசமான இனவழிப்பின் படங்கள் சர்வதேச மட்டத்தில் வெளியாகியும் அதற்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லையென்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

மின்னியல் ஊடகங்களின் அதீத வளர்ச்சியும், விரைந்து மக்களிடம் செய்திகளை எடுத்துச் செல்லும் வாய்ப்பும் நவீன தொழில்நுட்பம் வாயிலாக கிடைத்துள்ளது. ஆயினும், அச்சு ஊடகங்கள் செய்திகளை எழுத்துருவில் பதிவு செய்வதாலும், படங்களை ஆதாரமாகச் சேர்த்து வெளியிடுவதாலும் நம்பகத்தன்மையுடன் நீண்டகால உசாத்துணைக்கு இவை உதவுகின்றன.
இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒரு விடயம் உள்ளது. இவ்வகையான ஒளிப்படங்களை எடுத்து வரலாற்றை மாற்றியமைத்த செய்திப்பட ஊடகவியலாளர்கள் பலர், பின்னாட்களில் மனஉளைச்சலுக்குள்ளாகியதை எவரும் அறிவதில்லை.

## வாழ்த்தும் பாராட்டும்.



"தமிழர் தகவல்; விருது (1999)


தாயகத்தில் தமது தந்தையார் ஆரம்பித்து வெளியிட்ட வெற்றிமணியைப் புலம்பெயர்ந்த ஜேர்மனிய மண்ணில் தொடர்ந்து வெளியிட்டு வெள்ளிவிழா காணும் உலகளாவிய வெற்றிமணிக்கும், இதன் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் பணிபுரியும் கனடா "தமிழர் தகவல்; விருது (1999) பெற்ற திரு. மு.க.சு.சிவகுமாரன் அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்தும் பாராட்டும்.

திரு.கனடா

# ஓவியத்திற்காக ஓடிய தூரம் 56 ஆயிரம் கி.மீ

ஓவியர் கண்ணா





1994 ஆம் அண்டு மாசிமாதம் 5ம் திகதி நல்ல பனிக்காலத்தில் யேர்மனியில் பிலபெல்ட் நகரத்தில் உலகத்தமிழர் இயக்கத்தின் தமிழாலயம் ஆரம்பமானது. அங்கு தமிழோடு கலைகளும் போதிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. மிருதங்கம்,வாய்ப்பாட்டு,சித்திரம்,வீணை, பரதம் என ஒரு நுண்கலைக்கல்லூரியின் மிடுக்குடன் ஆரம்ப மானது. சின்னஞ்சிறு தளிர்களாக பல வர்ணங்கள் கொண்ட சிறு பிள்ளைகள் சித்திர வகுப்பில் இணைந்து கொண்டனர். அவர்களை வகுப்பில் இருத்தி கவனிப்பதற்காக தாய்மாரும் வகுப்பில் இருந்தனர்.

சித்திரங்கள் பற்றிய முகவுரையுடன் வகுப்புக்கள் ஆரம்பமானது. சின்னஞ் சிறுவர்களுக்கு வர்ணங்களை எடுத்துக் கொடுக்கவும், தட்டுப்பட்டு ஊற்றப்படும் வர்ணங் களை துப்பரவு செய்வதிலும் ஈடுபட்டிருந்த சில தாய்மார்கள் உள்ளத்தில், அங்கு சிந்தப்பட்ட இளவர்ணங்கள் ஒட்டிக் கொண்டன. இதனால் அவர்கள் தம்மையும் அறியாது சித்திரத்தில் தாமாக ஈடுபட முன்வந்தனர்.
நாளடைவில் சித்திரவகுப்பில் மரங்கள், தளிர்கள், பூக்கள், கனிகள், என பல வர்ணத் தோப்பாக மாறியது

எனது இருப்பிட நகரத்தில் இருந்து வகுப்பு நடந்த நகரம் 140கி.மீ. சென்று திரும்ப 280கி.மீ. மாதத்தில் 4 தடவைகள். கோடைகால விடுமுறையில் மட்டும் ஆறுவாரங்கள் ஓய்வு. இப்படியாக 5வருடங்கள் வகுப்புக்கள் தொடர்ந்தன. மாதம் 1120 கி.மீ என்றால் வருடம் (10மாதம்) என்று பார்த்தாலும் 5 வருடங்களும் 56 ஆயிரம் கி.மீ காரில் ஓடி இந்த வகுப்பில் பங்குகொண்டேன்.
இவற்றை இங்கு ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், வெற்றிகள் மட்டும் சரித்திரத்தில் பதியப்படவேண்டியவை என நினைப்பது தவறு. வெற்றிகளைவிட வெற்றிக்கு முதல் படிவரை சென்றவர்களது பல அனுபவங்கள்தான் நாளைய வெற்றிக்கு உரமான உத்தரவாதங்களாக இருக்கும். அத்துடன் தாயகத்தில் ஒவ்வொரு செயலுக்கும் சாட்சிகளாக மக்கள் நிற்பர், பின் பகர்வர். இங்கோ சாட்சிகள் இல்லாத காட்சிகளே பல. அதனை நாமாகச் சொல்வானேன் என்று அடக்கம் காத்தால், இந்த நாட்டில் நம்மவர் சரித்திரமே நாளை அடங்கிவிடும்.

நாம் எம் குழந்தைகளுக்கு ஓவியத்தினைக் கற்றுக்கொடுக்க எண்ணியதன் நோக்கம். அவர்களது சித்திரங்களில் எம்மினத்தின் கோலங்கள், பண்பாட்டின் வர்ணங்கள் கோலமிடவேண்டும் என்பதற்காகவே. இந்தமுயற்சியில் பெற்றவர்களும், மாணவர்களும் பாடசாலை நிர்வாகிகளும் முழுமையான ஆதரவினை நல்கினர்.

ஆரம்பத்தில் அதியற்புதமான சித்திரங்களை அந்தப் பிஞ்சுவர்ணங்கள் அள்ளித் தெறித்தனர். அவர்களுக்கு மெல்லமெல்ல எம் தாயகத்தின் சித்திரக்கோலங்களை புகட்டினேன். மேற்கத்தியவர்களின் சூழலில் அவர்கள் இங்கு தம்பாடசாலைகளில் கற்ற புதிய சித்திர நுட்பங்களுடன் என்னுடன் சேர்ந்து எம்மினத்தின் கோலங்களைப் பதியவிட்டனர். நாட்கள் செல்லச் செல்ல அவர்களது உள்ளத்தில் மேற்கத்திய எண்ணங்கள் கலைகள் யதார்த்தமாகச் செறிவடைய எமது தாயகத்தின் சுவடுகள் வெறுமைப்பட்டு, கற்பனைக் காட்சிகளாக வெளிப்பட்டு ஒரு பொய்யான முகத்தினைக் கொண்டுவர முயன்றனர். இதனால் அவர்கள் தீட்டிய ஓவியங்களில் உள்ளத்தில் செறிவாக இருந்த, மேற்கத்திய எண்ணங்கள் அவர்களது வண்ணக் கோலங்களாக, மலர்ந்தன. இந்த நேரத்தில் நான் தாயகததுடன் கட்டப்பட்டிருந்த கயிற்றை தளர்த்தி அவர்களைச் சுதந்தரமான சித்திரக்கூடத்துள் நுழைய விட்டேன். அற்புதமான சித்திரங்கள் மலர்ந்தன. ஆனால் அந்த மலர்கள் அப்படியே மரத்தில் பூத்து வாடிச் சருகாகின. அந்த மலர்களுக்கு அரங்கம் கிடைக்கவில்லை. அந்த மலர்களை எம் தமிழினம் அங்கீகரிக்கவும் இல்லை. கலைகளை வெறும் அழகியற்கலைகளாக மட்டும் எண்ணிக்கொண்டதன் விளைவே அது.

நாம் பிறந்த மண்ணில் உள்ள ஒரு நோய், இங்கும் எம்மக் களைத் தொற்றிக்கொண்டது. அழகாக ஓவியம் தீட்டினால் அதனைத் தட்டிக் கொடுப்பார்கள். குறைந்தது, ஐந்தாம் வகுப்புவரை, அதன்பின் இவன் சும்மா கிறுக்கிக் கொண்டு திரிகிறான் பாடத்தைப் படிக்கிறான் இல்லையே என்று புறுபுறுப்பார்கள்.

பிள்ளைகளும் மனமுடைந்து விடுவார்கள். நல்ல களம் காணாப் பயிரும், பாராட்டு இல்லாத கலைகளும் உலகில் உயர்வதில்லை. இந்தச் சித்திரக் கலைகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கத் தவறியவர்கள் எம்மினத்தவர்கள். அப்படி யாரும் அமைத்துக்கொடுத்தாலும் அதில் கலைகளை விதைக்க ஊக்கிவிக்காதவர்கள் நம் பெற்றோர்கள்.
இதற்குக்காரணம், இவன் கீறி என்னத்தைக் கிழிக்கப் போகிறான்.

மிஞ்சி மிஞ்சிப்பார்த்தால் நாளைக்கு இவனை ஒரு விழாவிற்கு பனர் எழுதச் சொல்வார்கள், அல்லது ஒரு மணவறைக்கு யாழி வரையச் சொல்வார்கள், என்று எண்ணினார்களே ஒழிய, அதனையும் ஒரு கலையாக ஏற்கும் பக்குவத்தை இழந்தார்கள். சித்திரம் என்பது சினிமாவில் கதாநாயகியை அழகுபடுத்த பின்னணியில் ஆடும் சில வர்ணப்பெண்கள் போன்றதே என எண்ணினார்களே அன்றி சித்திரத்தை கதாநாயகியாக காணமறுத்தனர்.



சித்திரமும் சிற்பமும் தனித்து நின்று காவியம் படைக்கும் சரித்திரத்தை உணராது இருந்தனர். சித்திரக் கண்காட்சி களை நம்மவர்கள் எத்தனைபேர் பார்கிறார்கள். சித்திரத்திற்கு உரிய களம் இல்லாதமையினால் சித்திரம் வெற்றிக் கொடி நாட்ட முடியவில்லை. ஆனாலும் ஏனைய கலைகளின் உயர்ச்சிக்கு முதுகெலும்பாய் உழைத்தது.

புலம்பெயர்ந்த நம்மவர்கள் நிலை நாட்டிய சாதனை ஒன்று என்றால் அது பரதக்கலை ஒன்றுமட்டுமே! என்று கொள்ளலாம். வேண்டும் என்றால் மெல்ல மெல்லிசையையும் சேர்த்துக்கொள்ளலாம். இதன் வெற்றியை எடுத்துப்பார்த்தால் அவர்களுக்கு கிடைத்த களங்கள் அற்புதமானவை. இந்தப் பரதத்தை சித்திரம்போல் தீட்டிவிட்டு, அப்பா அம்மா மாமா,சித்தி மட்டும் பார்த்துவிட்டு,பிள்ளை பாடசாலை செல்ல, மெல்ல அதனை எடுத்து குப்பை வாளிக்குள் போடுவதுபோல், பரதமும் அமைந்திருந்தால் வெற்றிபெறுமா?



களனி பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பிரிவு மாணவி

நம்மவர் சித்திரம் மீதுகாட்டும் ஆவலுக்கு ஒரு உதாரணம். 1990ம் ஆண்டு யேர்மனியில் ஒரு நகரில் எனது சித்திர சிற்பக்கண்காட்சி நடைபெற்றது. அங்கு பல வெளி நாட்டவர்கள் வந்து பார்வை இட்டுச் சென்றனர். கண்காட்சி இடம் பெற்ற இடம் கரிடாஸ் மண்டபம். அந்த நிறுவனம் எம்மவர் பலருக்கும் பலவழிகளிலும் உதவிபுரிந்த நிறுவனம். நான் காலை எட்டுமணியில் இருந்து மாலை 5மணி வரை அந்தக் கண்காட்சி மண்டபத்தில் இருந்தேன். காலை 9 மணிக்கு, ஒரு தமிழர் வந்தார். ஓரக்கண்ணால் என்னையும் அந்தச் சித்திரங்களையும் பார்வையிட்டுச் சென்றார்.
சென்றவர் மேலே தான் பெற வந்த உதவியினைப் பெற்றுக்கொண்டு படிகளால் இறங்கி என்னருகில் வந்தார்.
அங்கே இருந்த ஓவியம் பற்றிய என் ஒரு துண்டுப் பிரசுரத்தை எடுத்துக் கொண்டார். என்மனதில் பல குளிர்வர்ணங்கள் பரவின.
யார் பார்த்தால் என்ன எம்மினத்தவர் வந்து பார்த்து மகிழ்வதில் ஒரு தனி இன்பம் உண்டல்லவா? நான் புத்தம் புது பென்ஸ்காரில் செல்லும்போது கெல்மூட் முல்லர் பார்ப்பதைவிட என் நாட்டவர், அதிலும் தெரிந்த ஒரு நவரத்தினமோ? இல்லை பரமேஷோ பார்த்துவிட்டால் அந்த இன்பம் ஒரு ரகம் அல்லவா. அது உங்களுக்குத் தெரியாதா என்ன? இப்படியான ஒரு இன்பம் கிட்டுவதை எண்ணிக் கொண்டிருந்தவேளை அந்த துண்டுப் பிரசுரத்தை எடுத்துக் கொண்டு 'தம்பி உங்களிடம் பேனை உண்டா' என்று கேட்டார். கொடுத்தேன், சித்திரம் பற்றியவிபரம் எழுதப் போகிறார் என்று. அவர் படியால் இறங்கும் போது அவர் மனதுள் பாடமாக்கி வந்த ஒரு தொலைபேசி இலக்கத்தை என் காகிதத்தில் எழுதிவிட்டு திரும்பியும் பாராது தன்கருமமே கண்ணாகச் சென்றார்.

எப்படி இருக்கிறது நம்மவர் கலையார்வம். ஒரு தமிழன் இதில் எதோ ஒரு வேகத்தில் நிற்கிறான். அவனது கலைப் படைப்புகளைப் பார்க்க என்று வராவிட்டாலும் வந்த இடத்தில் பார்த்துச்செல்லவும் மனமில்லாத ஆவலர்களால் கலை எப்படி வளரும்.
இதே இவர் வீட்டிற்குச் சென்று தன் மனைவியிடம், போன இடத்தில் கத்தரிக்காய் கிடந்தது வேண்டிவந்தேன் என்று சொல்லி, கத்தரிக்காயைக் கொடுக்கத்தான் போகிறார். நம் மண்ணில் விழைந்த முருக்கங்காய்க்கும், கத்தரிக்காய்க்கும் இருக்கும் மதிப்பில் ஒரு துளி தன்னும் இந்தக்கலைக்கு கொடுக்கவிரும்பவில்லை.
இந்த நிலையிலும் நான் சிறுவர்களுக்கு கற்றுக்கொடுக்க ஓடினேன். முடிவில் அவர்கள் இன்று வளர்ந்துவிட்டார்கள். படிப்பு படிப்பு என்று படி ஏறுகிறார்கள். உலகத்தைத் துரத்திக்கொண்டு ஓடுகிறார்கள். நாளை அவர்களை உலகம் துரத்தும் வேளை, உள்ளத்தில் அன்று நாம் விதைத்த வித்துக்கள் பெரு விருட்சமாக நின்று அவர்களுக்கு உரம் கொடுக்கும்,நிழல் கொடுக்கும், அதுவரை உறங்கு நிலையில் கெடாமல் அந்தச் சித்திர வித்துக்கள் தூங்கட்டும்.

என் மாணவர்கள் என்னைக் கண்டால் சித்திரத்தை நினைக்கிறார்கள். நான் நன்றிப் பெருக்குடன் அவர்களைப் பார்க்கின்றேன். ஆசிரியனாக அன்றி மாணவனாக இருப்பதில் ஆலாதி சுகம் உண்டு. குழந்தைகளிடம் கற்றகலைகள் இன்றும் என் கலைகளை இளமையாக வைத்திருக்கின்றது.
வெற்றியை அடையாது அதற்கு முதல் படியில் நான் மறைந்தாலும், ஒரு வெற்றிக்கு இருக்கும் சக்தியைவிட நான் கண்ட படிகளுக்கு அதிக சக்தி உண்டு என்னும் பெருமிதம் எனக்குண்டு.
இந்த இடத்தில் ஒரு உண்மையச் சொல்லித்தான் ஆகவேண்டும். நான் களனி பல்கலைக்கழகத்தில் ஓவியம் கற்ற அதே இடத்திற்கு 2002 ஆண்டு சென்றேன். மாணவர்கள் மாணவிகள் ஆர்வத்துடன் அங்கு தற்போதும் பயில்வதைக் கண்டேன்.அவர்களது ஓவியங்களை நண்பர்களும் பெற்றவர்களும் பாராட்டி மகிழ்வைதை நேரில் கண்டேன்.

அவர்களுக்கு ஓவியம் எதிர்காலத்தில் ஒரு நல்வாழ்வுதரும் என்ற நம்பிக்கை இருக்கலாம். அதற்கு சிங்கள அரசு தரும் ஒத்துழைப்பும் அவர்களுக்கு காரணம் என்று நாம் எண்ணலாம். இருந்தாலும் அவர்களைச் சற்றி இருக்கும் ஆதரவு வட்டம் அவர்களை ஓவியத்தில் உச்சத்தை தொட வழிசமைத்தது என்பதும் உண்மையே. தற்போது அவர்கள் மாதம் பல இலட்சம் உழைக்கும் ஓவியர்களாக அங்கு வாழ்கின்றார்கள்.

களனி பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பிரிவு மாணவி



இலட்சம் வரும் என்றால்தான் இலட்சியம் வருமோ! என்பது இங்கு கேள்வியல்ல. உண்மையான கலையார்வம் நல்ல இலக்கை நோக்கியே நகரும்.



எடுப்பவர்கள் எண்ணிக்கையும் அதோடு அதிகரித்துக்கொண்டு போயிருக்கிறது. தற்போதைய காலத்தில் உளநல மருத்துவர்களும் கலந்துரையாடல் மூலம் அல்லாமல் கூடுதலாக மருந்துகள் மூலமாகவே உளநல சிகிச்சையை வழங்குகிறார்கள். 1987ல் Prozac என்ற மருந்து புழக்கத்துக்கு வந்தது.



# உளநோய் ஏன் வருகிறதென்று உயிரியல் பதில் சொல்லுமா?


**Dr.புஷ்பா கனகரட்ணம்.**
Ph.D., C. Psych.
Clinical Psychologist


உளநல சிகிச்சைக்காக (psychological treatment) என்னிடம் வந்த ஒருவர், மருந்துகள் பெறுவதற்காக ஒரு உளநல மருத்துவரை (psychiatrist) சந்தித்ததாக சொன்னார். மேலும் விளங்கப்படுத்தும் போது, அந்த மருத்துவர், மூளையின் இரசாயன சமமின்மையால் (chemical imbalance) தான் தனக்கு உளச்சோர்வு (depression) ஏற்பட்டிருப்பதாகவும், மருந்துகள் எடுக்கும்போது அந்த இரசாயன மட்டம் இங்கிருந்து இங்கு மட்டும் அதிகரிக்கும் என அவர் சொன்னதாக கையால் சைகை செய்தும் காண்பித்தார். இந்த விளக்கம் சரிதானா என்பது கேள்விக்குறி தான்.

எங்கள் சமூகத்தில் உளநோய் மருந்துகளின் பாவனை அதிகரித்திருக்கிறதா இல்லையா என்ற தரவுகள் நம்மிடம் இல்லை. ஆனால், உளநோய்களை இழுக்காக கருதுபவர்களுக்கு, அது நம்மவராக இருந்தாலும் வேறு சமூகத்தவராக இருந்தாலும், "உங்களுக்கு மூளையின் இரசாயன சமமின்மையால் தான் உளநோய் வந்திருக்கிறது" என்று வைத்தியர் சொன்னால், அதனை கொஞ்சம் இலகுவாக ஜீரணிக்க கூடியதாக இருக்கலாம். அந்த காரணத்திற்காகவே, சில வைத்தியர்கள் அந்த கருத்தை முன்வைக்க கூடும். அதனாலேயே, அந்த கருத்து உண்மையாகிவிடாது.

முன்னாள் F.D.A. Psychopharmacologic Drugs Advisory Committee தலைவர் Wayne Goodman சொல்கிறார்: மருந்துகள் இரசாயன சமநிலையை உருவாக்கும் என்பது ஒரு உபயோகமான உருவகமாக இருந்தாலும் அதனை ஒருநாளும் நோயாளிகளுக்கு விளக்கமாக நான் முன்வைக்கமாட்டேன் என்கிறார;. Psychiatric Times இன் முன்னாள் ஆசிரியர் Ronald Pies, மருந்துகள் இரசாயன சமநிலையை உருவாக்கும் என்ற விளக்கத்தை கொடுக்கும் உளநல வைத்தியர்கள் சற்று சங்கோஜப்பட்டு தான் இந்த விளக்கத்தை கொடுப்பார்கள் என நினைக்கிறேன் என்கிறார். ஏனென்றால், நேரத்தை சேமிப்பதற்காக, வைத்தியர்கள் கொடுக்கும் ஒரு மேலோட்டமான கருத்து இது என்பது அவர் வாதம்.

இன்றைய காலகட்டத்தில், உளநோய்களுக்கு சிகிச்சை பெறுபவர்கள் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்துக்கொண்டு வருகிறது. 2001 க்கும் 2003க்கும் இடைப்பட்ட காலத்தில் National Institute of Mental Health நடத்திய ஒரு ஆய்வின் படி, 46% அமெரிக்கர்கள் தம் வாழ்க்கை காலத்தில் ஏதாவது ஒரு உளநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் அதிர்ச்சி தருவதாக இருக்கிறது.

மருந்துகள் மூலம் உளநோய்களுக்கு சிகிச்சை வழங்குவதென்பது, மூளையின் இரசாயன சமநிலையை மருந்து சரிசெய்கிறது என்ற கடந்த 40 ஆண்டு கால கண்ணோட்டத்தோடு ஒத்து போயிருக்கிறது. மருந்து உளச்சோர்வுக்கு மூளையில் Serotonin குறைபாடே காரணம் என்றொரு கருத்தை முன்வைத்தது [Serotonin xU neurotransmitter - நரம்புக்கலன்களுக்கிடையில் அல்லது நரம்பு கலன்களுக்கும் தசைகளுக்கும் இடையில் இரசாயன தொடர்பாடலை ஏற்படுத்தும் மூலக்கூறுகள் தான் neurotransmitters]. Prozac இந்த Serotonin குறைபாட்டை நிவர்த்தி செய்கிறது என்ற எண்ணம் பரவலாக, அடுத்த 10 வருடத்தில் உளசோர்வுக்காக அமெரிக்காவில் மருந்து உட்கொள்பவர்கள் எண்ணிக்கை 3 மடங்காகியது. இப்பொழுது யதார்த்த பிறழ்வின் (psychosis) பாதிப்பை குறைப்பதற்கான மருந்துகள் பாவனை, அதிகூடிய விற்பனைக்குரிய முதல் இடத்தில் இருந்த கொலெஸ்டெரோல் மருந்துகள் பாவனையை விடவும் மிஞ்சி நிற்கிறது.

இத்தகைய தரவுகள் துறைசார் நிபுணர்களிடத்தில் பல கேள்விகளை எழுப்பி நிற்கிறது. உளநோய்களின் விகிதம் அதிகரித்து செல்கிறதா? இந்த உளநோய்களுக்கு உயிரியல் தான் காரணம், சூழல் காரணிகள் அல்ல என்றால், நோய் அடையாளம் காணலும் மருந்து பாவனையும் அதிகரித்துக்கொண்டு செல்வதென்பது சரிதானா? அல்லது எப்போதும் இருந்துவந்த நோய்களை இப்பொழுது தான் கூடுதலாக அடையாளம் காண்கிறோமா? அல்லது, முன் எப்பொழுதும் இல்லாத வகையில் சிறு பிரச்சனைகளையும் உளநோய்களாக அடையாளம் காண ஆரம்பித்து விட்டோமா? மருந்துகள் மக்களை குணப்படுத்துகிறதா? குணப்படுத்து கிறதென்றால், நோயின் விகிதாசாரம் குறைந்தல்லவா இருக்கவேண்டும்? அண்மையில் வெளிவந்திருக்கும் சர்ச்சைக்குரிய சில நூல்களின் ஆசிரியர்கள் எழுப்பும் கேள்விகள் தான் இவை. ஒருவர் உளநல நிபுணர் Irving Kirsch; இன்னொருவர் நிருபர்./எழுத்தாளர் Robert Whitaker; மூன்றாமவர் உளநல வைத்தியர். Daniel Carlat. இவர்கள் மூவரும் பல விடயங்களில் ஒரே பார்வையை கொண்டிருக்கிறார்கள்.

ஒன்று - மருந்து நிறுவனங்களின் ஊழல் என்கிறார்கள். எதனை உளநோய் என அடையாளம் காண்பது, மற்றும் எப்படி இந்த உளநோய்களுக்கு சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்ற விடயங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களில் மருந்து நிறுவனங்கள் பெரும் பங்கை வகிக்கின்றன. Kirsch விளக்குகிறார்:

மருந்து நிறுவனங்கள் ஒரு புதிய மருந்தை சந்தைக்கு விடுமுன் US Food and Drug Administration (FDA) இடமிருந்து அதற்கான அங்கீகாரத்தை பெறவேண்டும். அதற்கு அவர்களால் பொறுப்பேற்கப்பட்ட அந்த மருந்து சம்பந்தப்பட்ட எல்லா ஆய்வுகளையும் (clinical trials) அந்த மருந்து நிறுவனம் சமர்ப்பிக்க வேண்டும்.
மருந்து, நிவாரணம் கொடுப்பதற்கான அத்தாட்சியாக 2 ஆய்வுகள் இருந்தாலே போதுமானது.

தமக்கு சாதகமான கண்டுபிடிப்புகளை கொடுக்கும் ஆய்வுகளை மருந்து நிறுவனங்கள் மருத்துவ ஆய்விதழ்களில் பிரசுரிப்பதோடு, மருத்துவர்களுக்கும் அறியத்தருவார்கள். சாதகமற்ற கண்டுபிடிப்புகளை தரும் ஆய்வுகள் எல்லாம் முடக்கப்பட்டுவிடும். ஆக, இந்த வழக்கமானது மருத்துவ நூல்கள், மருத்துவ கல்வி மற்றும் சிகிச்சை முடிவுகள் எல்லாவற்றையுமே ஒருபக்க சார்பாக்கிவிடும்.

இரண்டாவது - மூளையின் இரசாயன சமமின்மை தான் உளநோய்களுக்கு காரணம் என்ற கருத்தை இவர்கள் (Kirsch, Whitaker & Carlat) ஏற்றுக்கொள்வதாக இல்லை. ஐம்பதுகளில் Thorazine, Miltown, மற்றும் Marsilid என்ற மூன்று மருந்துகள் சந்தைக்கு வந்தன. ஆரம்பத்தில் இவை உளநோய்களுக்கென தயாரிக்கப்படவில்லை.

தொற்றுக்களுக்கென பாவிக்கப்பட்ட இந்த மருந்துகள் பாவனையாளர்கள் மனநிலையை அமைதிப்படுத்தியதை அவதானித்ததை அடுத்து, ஆய்வாளர்கள் இந்த மருந்துகள் மூளையின் சில இரசாயன மட்டங்களை மாற்றக்கூடிய தன்மையை கொண்டிருந்ததையும் அவதானித்தனர்.

உளநோய்க்கான மருந்துகள் மூளையின் neurotransmitter அளவுகளை மாற்றுவதை கண்டறிந்ததும், உதயமானது தான் இரசாயன சமமின்மை கொள்கை. அதாவது, உளநோயின் காரணம் உடலில் neurotransmitter அளவுகளின் மாற்றம் தான் என்பதும், மருந்துகள் இந்த neurotransmitter அளவுகளை மாற்றுகிறது என்பதுமான தர்க்கமுரணான கருத்து முன்வைக்கப்பட்டது. உதாரணமாக, Thorazine என்ற மருந்து மூளையில் dopamin என்ற neurotransmitter அளவை குறைப்பது கண்டறியப்பட்டது. இதனை காரணமாக கொண்டு, schizophrenia போன்ற யதார்த்த பிறழ்வு நோய்களுக்கு உடலில் அதிக அளவு dopamin இருப்பதே காரணம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. ஆக, ஒரு அசாதாரண நிலையை மாற்றுவதற்கு மருந்து கண்டுபிடிப்பதை விடுத்து, ஒரு மருந்திற்கு பொருந்தக்கூடிய வகையில் ஒரு அசாதாரண தன்மை நிர்ணயிக்கப்பட்டது. இதனை தான், இந்த மூன்று நிபுணர்களும் உளமருத்துவத்தின் தர்க்கமுரணான பெரும் பாய்ச்சல் என்கிறார்கள். உடலில் Aspirin (அல்லது Tylenol) குறைபாட்டால் தான் காய்ச்சல் வருகிறது என்பதற்கு ஒப்பானது இவர்கள் வாதம் என்கிறார் உளநல மருத்துவர் Carlat.

உளநோய்களை இரசாயன சமமின்மையுடன் தொடர்பு படுத்தும் கொள்கையை உறுதிப்படுத்த ஆய்வாளர்கள் பல்லாண்டு காலமாக முயற்சி செய்தும், இதுவரை கையில் ஒரு பலனும் இல்லை. இந்த கொள்கை வெறும் ஆதாரமற்ற ஒன்று என்கிறார் Carlat. உளசோர்வு மூளையின் இரசாயன சமமின்மை சார்ந்தது என்ற கொள்கை முழுக்க முழுக்க பிழையானது என்கிறார் Kirsch. Whitaker சொல்வது - schizophrenia (யதார்த்த பிறழ்வு நோய்), உளசோர்வு போன்ற நோய்நிலைகளுக்கு சிகிச்சை பெறுமுன் மனிதர்கள் neurotransmitter தொழிற்பாடு சாதாரணமாகவே இருக்கிறது. ஒரு இரசாயன சமமின்மையும் அவர்கள் மூளையில் அடையாளம் காணப்படுவதில்லை. ஆனால் மருந்துகள் எடுக்க ஆரம்பிக்கும் போது தான் அவர்கள் நரம்பு கலன்களில், மூளையில், அசாதாரண விடயங்கள் நடக்க ஆரம்பிக்கின்றன என்கிறார். அவர் வாதப்படி, மருந்துகளின் பாவனை அதிகரிக்க அதிகரிக்க, அது தரும் பக்க விளைவுகள் இன்னும் பல சிக்கல்களை கொண்டுவர, காலப்போக்கில் நோயின் தன்மையே மாறிக்கொண்டுவருகிறது என்பது தான். இதனை மேலும் விளக்குகையில், உளநோய்களின் தீவிரம் காலத்தோடு அதிகரித்துக்கொண்டு வருவது பற்றியும் அவர் கூறுகிறார்.

யதார்த்த பிறழ்வு நோயோ, உளச்சோர்வோ, நோயின் தன்மையும் தாக்கத்தின் நீடிப்பும் இப்பொழுது அதிகரித்



திருக்கிறது என்றால், நாம் உட்கொள்ளும் மருந்துகள் எமக்கு குறுகிய கால நன்மையை கொடுத்தாலும் காலப்போக்கில் வேறு பாதிப்புகளை கொண்டுவருகிறது போல் தெரிகிறது என்கிறார். Whitaker கருத்துப்படி, உளநோய்களால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை அதிவேகமாக அதிகரித் திருக்கிறது. அதே வேளை உளநோய்க்காண மருந்துகளின் பரிந்துரைப்பும் அதிவேகமாக அதிகரித் திருக்கிறது. அப்படியானால், மருந்துகளின் அடிப்படையில் நாம் வழங்கும் சிகிச்சை, எமக்கே தெரியாத விதத்தில் பரந்த அளவிலான இந்த பெரும் உளநோய் உபாதையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி இருக்கிறதா என வினவுகிறார்.

மேலும், உளநோய்க்கான உயிரியல் காரணிகள் என்று பார்க்கும்பொழுது, குறிப்பிட்ட உளநோய்களுக்கு உரிய குறிப்பிட்ட மரபணுக்களை அடையாளம் காண பல ஆய்வுகள் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. அப்படி அடையாளம் காண முடிந்தால் மரபணு பரிசோதனை செய்து உளநோய்களை வராமல் தடுக்க சில வழிமுறைகளை உருவாக்கலாம் என்பது தான் இந்த ஆய்வுகளின் நோக்கம். ஆனால், University of Colorado Boulder தற்பொழுது American Journal of Psychiatry யில் பிரசுரித்திருக்கும் ஒரு பரந்தளவிலான ஆய்வின்படி, உளச்சோர்வுக்கான மரபணுக்கள் என்று எம் உடலில் அடையாளம் காணக்கூடியதாக ஒன்றும் இல்லை.

620,000 பேர்களின் தரவுகள் இந்த ஆய்வில் உள்ளடக்கப் பட்டிருந்தது. இந்த ஆய்வாளர்கள் கருத்துப்படி, தனிப்பட்ட மரபணுக்கள் பல்கூட்டான மனித வெளிப்பாடுகளுக்கு காரணமாக இருக்கமுடியாது. உளவியலில் நோய்க்கான காரணத்தை தனி மரபணுக்கள் தீர்மானிக்காவிட்டாலும், அதற்கு பொறுப்பாக பல்லாயிரம் மரபணுக்களின் கூட்டு காரணமாக இருக்கலாம் என்கிறார்கள் இவர்கள். அதாவது, உளநோய்களின் தோற்றம் இலகுவில் அடையாளம் காணும்வகையில் எளிதானதாக இல்லை. ஆக, தனிப்பட்ட மரபணுக்களோ இரசாயன சமமின்மையோ, உயிரியலுக்குள் உளநோய்க்கான காரணத்தை அறிய நாம் மேற் கொண்டிருக்கும் பல்லாண்டு கால தேடல், இதுவரை ஒரு தெளிவான விடையை எமக்கு தரவில்லை என்பது தான் தெளிவாக தெரிகிறது.

## வாழ்த்து

அன்புள்ள கண்ணன் அண்ணா
கண்ணைக் கவரும் பத்திரிகை
மனதை கவரும் கண்ணன் அண்ணா
இனிய கூட்டமைப்பில் ஒலிக்கும் வெற்றிமணி
மென்மேலும் லயநுட்ப மெருகு பெற்று
பல்லாண்டுகளுக்கு கம்பீரமாய் ஒலிக்க
வாழ்த்துகிறேன்!

அன்புடன்
புஷ்பா கனகரட்ணம்.
கனடா

# உலகை உருவாக்குபவை

ஏலையா க.முருகதாசன்



உலகம் உருவாவதற்கு காரணமாக இருப்பவை எண்ணங்களும் சிந்தனைகளுமே.

கற்பனை கொண்டு ஆரம்பத்தில் இந்தப் பூமி எப்படி இருக்கும் என்று பார்த்தால் மண் தோன்றாக் கல் மட்டுமே போர்த்திய பூமியாகவே இருந்தது என்று பூமி பற்றிய வரலாறு சொல்கின்றது. படிப்படியாக பூமியில் ஏற்பட்ட வேதியல் இயற்பியல் மாற்றங்களால் பூமி வேறு வடிவம் பெற்றது.

வேறு வடிவமான கூர்ப்புநிலை எய்திய பூமியில் மரங்களும் புல்பூண்டுகளுகளும் ஆறுகளும் குளங்களும் கடல்களும் தோன்றின. பூமியின் மேற்பரப்பு ஆரம்பத்தில் கற்களால் போர்த்தப்பட்டிருந்தன என்பதற்கு பூமியில் ஆங்காங்கே நிமிர்ந்து நிற்கும் மலைகளே சாட்சிகளாகும். காலப்படி முறையில் உயிரினத் தோற்றங்களில் மனித உயிரினத்தை முதன்மைப்படித்துப் பார்க்கும் போது, மனித உயிரினத்தின் எண்ணங்களிலிருந்து பிறக்கும் சிந்தனைகளே உலகை உருவாக்கியிருக்கின்றன. இன்றளவும் காணப்படுகின்ற உலக வளர்ச்சிக்கு அதன் இயற்பியல் நிலைக்கும் வேதியல் நிலைக்கும் எண்ணங் களிலிருந்து பிறந்த சிந்தனைகளே காரணமாகின்றன.

செயல்கள் மூலமே உருவாக்கம் நடைபெறுகின்றது. செயல்கள் யாவும் எண்ணங்களிலிருந்தே தொடங்குவதால் செயல்களின் பேறாக வரும் நன்மை தீமைகளுக்கு எண்ணங்களே அடிப்படையாகின்றன.

எண்ணங்கள் சிந்தனையாகி, சிந்தனை அறிவாகும் போது அந்த அறிவே உலகை உருவாக்க வழிவகுக்கின்றது. இந்த அறிவு என்றால் என்ன என்று பார்த்தால், எண்ணங்களின் தொகுப்பே அறிவாகின்றது. இந்த அறிவை மூன்றாகப் பிரிக்கலாம். அவையாவன, உணர்ச்சியால், அறியும் சக்தியால், நுண் உணர்வால் என்பனவாகும்.

நுட்பமான அறிவு அல்லது நுண்ணறிவு என்று அழைக்கப்படும் கூரறிவு கொண்டு உலகில் மகத்தான சாதனைகள் படைக்கப்படுகின்றன. கூரறிவு என்பது ஊடுருவிச் செல்லும் அறிவாகும். இந்த அறிவின் மூலந்தான் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், பொறியியல் சாதனைகள், விண்வெளிப் பயணங்கள்ஈ கோள்கள் கடந்து பிரபஞ்சத்தை ஊடுருவிச் செல்லும் ஆய்வுகள் - ஆராய்ச்சிகள், மருத்துவத்துறையில் மேற்கொள்ளப்படும் நவீன முயற்சிகள் கண்டுபிடிப்புகள் என்பவை அறிவாலும் உணர்ச்சியாலும் அறிந்து கொள்ளப்பட்டவை அல்ல.

அவையாவும் நுண்ணுணர்வு கொண்டு அறியப்பட்டவையாகும். நுண்ணுணர்வு அபூர்வ சக்தியாக மனிதனிடத்தில் செயல்பட்டு கூரறிவாக மாறுகிறது. இடைவிடாத எண்ணங்களும் அதன் ஊடாக ஏற்படும் சிந்தனைகளும் அடுத்து என்ன அடுத்து என்ன என்ற அறிவுத் தாகத்துடன் செயல்படுவதற்கு ஒருவனிடத்தில் ஊற்றாகத் தோன்றும் நுண்ணுணர்வே காரணமாகின்றன.



ஆதி மனிதர்களில் சிலரிடம் தோன்றிய எண்ணங்கள் சிந்தனையாகி அது அறிவாகி பின்னர் கூரறிவாகி நுண்ணுணர்வு கொண்டு செயல்களாகி அது சமகால வளர்ச்சிகளில் படிநிலை கொண்டு இன்றைய உலகத்தை மனிதகுலம் காண்பதற்கு வழிவகுத்திருக்கின்றது. மனதில் தோன்றும் நுண்ணுணர்வுச் சக்திதான் பல நவீன கண்டுபிடிப்பகளுக்கு வழிவகுத் திருக்கின்றன.

கண்டுபிடிப்பு என்பது ஒன்றிலிருந்து அடுத்து என்ற தொடராகும். நுண்ணுணர்வு தொடர்ச்சியாக ஊற்றுப்போல செயல்படுவதாற்தான் உலகம் தொடர்ச்சியான நவீனத்தை கண்டு வருகின்றது.

நுண்ணுணர்வால் எழும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கு தத்துவார்த்தம் காரணமாக இருப்பதில்லை.

”ஒரு விஞ்ஞானி பிரபஞ்சத்தின் அடிப்படை விதிகளைக் கண்டறிகிறான்.அதன்பிறகு அந்த விதிகளை ஆதாரமாக வைத்து பிரபஞ்சத்தின் முழுமைக்குமான விதிகளை அனுமானிக்கிறான்.இந்த அனுமானத்திற்கு தத்துவார்த்த நடைமுறை எதுவும் இல்லை. அனுபவத்தின் விளைவாக அவன் பெற்றிருக்கும் நுண்ணறிவின் மூலமாகவே அவன் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக் களைக் கண்டுபிடிக்கிறான்” என்கிறார் ஆல்பேர்ட் ஜன்ஸ்ரைன்”

சமூக ஒழுங்கமைப்புக்கு என்று ஒரு விதியும்,விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கு என்று ஒரு விதியும் மேற்கொள்ளப் படுகின்றனு. சமூக ஒழுங்கமைப்பு என்பது மனிதமனங்களைச் சார்ந்தது.மனித மனங்களை ஒழுங்கமைத்தலுக்கான விதிகளை மேற்கொள்வதும் தனிமனிதர்களின் உரிமைகளை ஏற்றுக் கொண்டு சட்டங்களை இயற்ற வேண்டுமென்பதை இந்த உலகத்துக்கு சொன்னவர்களில் முதன்மை நிலையில் இருப்பவர்களில் சாக்கிரட்டீஸ் (கி.மு 399 - 470), அரிஸ்டாட்டில் (கி.மு 322 -384 )பிளாட்டோ (கி.மு347 -428) எமர்சன் ஆகியோராகும்.
பேராசிரியர்களும் கல்விமான்களும் அறிவுபூர்வமாகச் சிந்திக்கிறார்கள். கலைஞர்களும் கவிஞர்களும் உணர்ச்சிபூர்வமாகவும், மெய்ஞானிகளும் விஞ்ஞானிகளும் நுண்ணுணர்வு மூலமாகவும் சிந்திக்கிறார்கள். அதனாற்றான் சித்தர்களும் யோகிகளும் நுண்ணுணர்வு மூலமாக கோள்களையும் பிரபஞ்சத்தையும் அளந்தார்கள்.
எந்த நிலையில் நின்று பார்த்தாலும் எல்லாவற்றுக்கும் ஆதாரமாக அமைவது எண்ணங்களே. ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பை கண்டறிவது சதா அதைப்பற்றியே சிந்திப்பதன் மூலமே கண்டறிய முடியும்.எனவே சிந்தனை வலிமையானது. சிந்தனை எண்ணங்களிலிருந்தே பரிணாமம் பெறுகின்றது.

ஒவ்வொரு மனிதனுடைய இரகசியங்களை அறிவதற்கும் ஒரு வாசல் இருக்கின்றது. அந்த வாசல்தான் அவனுடைய எண்ணமாகும். கெட்டவனிடத்திலும் அவனை சீர்திருத்தக்கூடிய சூத்திரக்கருவி இருக்கும். கெட்ட குணங்களோடு இருக்கும் ஒருவனைத் திருத்த வேண்டுமானால் அந்தச் சூத்திரக்கருவி ஏற்றுக்கொள்ளக்கூடிய எண்ணங்களை அதற்கு கொடுத்து விட்டால் அவன் தன்னை உணர்ந்து திருந்திவிடுவான் (இது எமர்சனின் தத்துவக் கோட்பாடாகும்)

ஒவ்வொரு மனிதனுடைய மனதிலும் அடிப்படை எண்ணமிருக்கின்றது. இந்த அடிப்படை எண்ணமே அவனுடைய செயல்பாடுகளைத் தீர்மானிக்கின்றது. ஒருவனுடைய அடிப்படை எண்ணம் நல்லதாக இருந்தால் நல்லவனாகவும்,அடிப்படை எண்ணம் கெட்டவையாக இருந்தால் அவன் கெட்டவனாகவும் இருப்பான். எனவே எண்ணங்களே உலகை உருவாக்குபவையாகும்.

## வெற்றி "மணியாக" என்றும் ஒலிக்கட்டும்.



வெற்றி மணி வழங்கிய வெற்றி நிலாமுற்றத்தில் விருது பெற்ற படைப்பாளிகள் 2017

ஜேர்மனியில் இருபத்தைந்து ஆண்டுகளாக ஒரு மாதாந்தப் பத்திரிகை தொடர்ந்து வெளிவருகிறது என்றால் அது வெற்றிமணிப் பத்திரிகை மட்டுந்தான்.

ஒரு பத்திரிகையை தொடர்ந்து வெளியிடுவதற்கு ஒரு அடிப்படைக் காரணம் தேவைப்படுகின்றது. வெற்றிமணிப் பத்திரிகை வெளிவருவதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல அதன் ஆசிரியர் கலாநிதி திரு.மு.க.சு.சிவகுமாரன் அவர்களே.

ஒரு பத்திரிகையை வாசகர்கள் விரும்பிப் படிக்கிறார்கள் என்றால், வாசகர்களுக்குள் அனைத்து வயதினரையும் அவரவர்களின் இரசிப்புத்தன்மையைப் பொறுத்தும் அப்பத்திரிகை அவரவர்களக்கு தீனி போடுவதாக அமைய வேண்டும். வெற்றிமணிப் பத்திரிகையின் ஆசிரியர் அனைத்து வயதுப் பிரிவினருக்கேற்றவாறும் அவரவர் குணாம்சங்களுக்கு ஏற்றவாறும் அவர் ஒருவரே பலராக இருக்கின்றார். வெற்றிமணியின் தளர்ச்சியில்லாத இந்த வீறுநடைக்கு இதுவே காரணமாகும். அதுமட்டுமல்லாமல் வெற்றிமணி ஆசிரியர் பேனாவை அகப்பையாக பாவிக்கிறார். சுவைபல கொண்ட பத்திரிகை "சமைப் பவராகவும்" சுவைஞராகவும் இருக்கின்றார். வெற்றிமணிப் பத்திரிகையை கடைகளில் தேடி எடுக்கும் வாசகர்களை நான் பலமுறை கண்டிருக்கிறேன்.

பத்திரிகையை கையிலெடுக்கும் வாசகனை பத்திரிகை பக்கங்களில் நிலைகுத்தச் செய்ய வேண்டும். ஒருவரை அழகுபடுத்தி வியக்க வைப்பதற்கு ஒரு சிறந்த ஒப்பனைக் கலைஞரால் முடியும்.
அதிலும் வெற்றிமணி ஆசிரியர் வெற்றிமணிப் பத்திரிகையை அழகுபடுத்துவதில் கைதேர்ந்தவராக இருக்கின்றார். அழகியல் உணர்வில்லாதவர்கள் அரிதிலும் அரிது.அழகு எல்லாரையும் வசப்பாடுத்தும். வெற்றிணிப் பத்திரிகையை அழகழகான வர்ணங்களால் அழகுபடுத்தி அனைவருக்கும் ஏற்ற வாறு காத்திரமான ஆக்கங்களை அதில் இட்டு பெண்ணுக்குரிய நளினத்தையும் ஆணுக்குரிய கம்பீரத்தையும் அதில் பிரம்மாவாக நின்று படைப்பவர் நுண்கலைப் பட்டதாரியான கலாநிதி திரு.மு.க.சு.சிவகுமாரன் அவர்கள்.

தந்தை காட்டிய வழியில் இருபத்தைந்து ஆண்டுகளாக கம்பீரமாக வெற்றிமணிப் பத்திரிகையை நடைபோட வைப்பவரை வாழ்த்திப் பாராட்டி மகிழ்ச்சியடைகிறேன்.
புலம்பெயர் தமிழரின் வரலாற்றில் தவிர்க்க முடியாத அச்சு ஊடகமாக தமிழரின் சமகாலத்தை வெளிப்படுத்திய ஆவண நிருபணமாக நிலைத்து நிற்பதில் எவ்வித ஐயமுமில்லை என்கிறேன்.
அன்புடன்
**ஏலையா க.முருகதாசன்** 23.04.2019

## வெற்றிமணி அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களுக்கு
## கனடாவில் முத்திரை வெளியீடு 21.09.2005




தாயகத்தில் 1950 இல் சிறுவர்களுக்கு என ஒரு சஞ்சிகை தேவை எனச்சிந்தித்து அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் வெற்றிமணி சிறுவர் மாத இதழினை ஆரம்பித்தார். இலங்கையில் நாலப்பிட்டியில் ஆசிரியராக கடைமை புரிந்த வேளை முதல் யாழ்ப்பாணம் குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாசாலையின் அதிபராக இருந்த காலம் வரை மாணவர் களின் உயர்வுக்குரிய ஒரு பணியாக வெற்றிமணி யினை ஒலிக்கச்செய்தார்.

அன்று சிறுவர்களாக வெற்றிமணி இதழில் பிஞ்சுக்கரம் பதித்தவர்கள் பலர் இன்று எழுத்தாளனர்களாகவும் சமூக வேயையாளர்களாகவும் கல்வித்திணைக் கழகங்களின் சேவை மனங்கொண்ட உயர் உத்தியோகஸ்தர்களாகவும் திகழ் கின்றனர்.
சிறுவர் இதழாக வெற்றிமணி அன்று வெளிவந்ததோடு பல பயனுள்ள நூல்களையும் வெளியிட்டது. இன்றும் வெற்றிமணி யேர்மனியிலும்,கனடாவிலும் பல நூல் களை வெளியிட்டு பெருமை சேர்த்துள்ளது.

வெற்றிமணி அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் அமரத்துவம் அடைந்து 25 வருட நினைவுகூரும்முகமாக (21.09.05) அன்னாரது பெருமைகளுக்கு முத்திரை பதிக்கும் முகமாக கனடா அஞ்சல் திணைக்கழகத்தின் அனுசரணை யுடன் வெற்றிமணி மு.க.சுப்பிரமணியம் அவர்களின் திருவுருவத் தைத் தாங்கிய முத்திரையினை வெளியிட்டு சிறப்பிக்கின்றது. ஒரு ஈழத்தமிழ் சஞ்சிகை ஆசிரியருக்கு கிடைத்த முதல் கௌரவமாக இதனைக் கொள்ளலாம்.







# நெதர்லாந்தில் சோழர் தமிழ் செப்பேடுகள்!

**தனசேகர் பிரபாகரன்**

ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட தமிழ் எழுத்துக்களை கையால் தொட்டு உணருங்கள் !

இன்றைக்கு சற்றேறக்குறைய ஆயிரமாண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவின் பெரும்பகுதியையும், ஈழத்தின் பெரும்பகுதியையும் ஆட்சிசெய்து தஞ்சையில் விண்ணுயர பெரியகோயில் கட்டிய சோழன் இராஜராஜன். இவனது காலத்திய தமிழ் செப்பேடு ஒன்று இன்றைக்கும் நெதர்லாந்து நாட்டில் பாதுகாக்கப்படுகிறது. கேட்கவே ஆச்சர்யமாய் இருக்கிறது அல்லவா ? வாருங்கள் அதனைப் பற்றி பார்ப்போம்

தாய்நாட்டில் இருக்கும்போது சோழர் பாண்டிய வரலாறுகளை புரட்ட ஆரம்பித்த காலத்திலிருந்தே லெய்டன் செப்பேடுகளை பற்றி படித்ததுண்டு, சோழர் காலத்திய இரண்டு செப்பேடுகள் நெதர்லாந்து நாட்டின் லெய்டன் நகர அருங்காட்சியகத்தில் இருப்பதாக இருவரி செய்திகளாகவும், இந்திய தொல்லியல்துறை பதிப்பாம் எபிகிராபிகா இண்டிகாவிலும் பார்த்ததுண்டு !

டியூலிப் தேசமாம் ஒல்லாந்தில் பணி நிமித்தமாய் வந்து சோழர் செப்பேடுகளை தேடிச்சென்று காண்பது ஒரு புது அனுபவம் தான், காற்றில்லா இடத்தும் கடந்து செல்லும் காதல் போல் தமிழும், தமிழின் சுவடுகளும் உலகெலாம் பரவியுள்ளன!

கடல்கடந்த நாடாம் கடாரத்து அரசன் சோழ நாட்டில் நாகபட்டினத்தை அமைத்த சூளாமணி பன்ம விஹாரத்திற்கு சோழமன்னர்கள் செய்த கொடையை சொல்ல செப்பேடுகள் எழுதப்பட்டன, இந்த செப்பேடுகள் இன்று சோழ நாட்டில் இல்லை கடல் கடந்து மற்றோர் தேசமாம் நெதர்லாந்து எனும் ஒல்லாந்தில் உள்ளது.
லெய்டன் பெரிய செப்பேடு, லெய்டன் சிறிய செப்பேடு என்று இரண்டு செப்பேடுகள் லெய்டன் அருங்காட்சியகத்தின் பிரத்தியேக சேகரிப்பு பகுதியில் உள்ளன.

1. பெரிய லெய்டன் செப்பேடுகள் (21 ஏடுகள்) - முதலாம் இராஜராஜ சோழன், முதலாம் இராஜேந்திர சோழன் சமஸ்கிருதம்- 6 ஏடுகள், 111 வரிகள் தமிழ்- 15 ஏடுகள் ,332 வரிகள்
2. சிறிய லெய்டன் செப்பேடுகள்(3 ஏடுகள்)- முதலாம் குலோத்துங்கன்

எப்படி இந்த செப்பேடுகள் நெதர்லாந்து வந்து சேர்ந்தன?
என்ற கேள்விக்கு, அந்த லெய்டன் நூலகத்தில் இந்த செப்பேடுகளுடன் அவர்கள் வைத்திருந்த குறிப்பு விடையளித்தது, இந்த இரண்டு செப்பேடுகளும் ஒல்லாந்ததை சேர்ந்த திரு பிலோரென்ஷியஸ் காம்பெர் என்பவரால் இந்தியாவிலிருந்து ஒல்லாந்து (நெதர்லாந்து) கொண்டுவரப்பட்டன, இவர் பட்டாவியா அமைச்சராயிருந்தார். அவரது குடும்ப சொத்தாக இருந்த இந்த இரண்டு செப்பேடுகளும் அவரது கொள்ளுப்பேத்தி திருமதி ஜோஹன்னா காம்பெர் என்பவருக்கு வர, அவரை மணந்த கணவர் ஹெச்.ஏ. ஹாமேக்கர் என்பவர் இந்த செப்பேடுகளை 1862 ஆம் ஆண்டு லெய்டன் பல்கலைக்கழக நூலகத்திற்கு அளித்தார். இப்படி இந்த செப்பேடுகள் கடல் கடந்து லெய்டன் வந்து சேர்ந்தன.
ஏன் இந்த செப்பேடுகள் முக்கியம்?

கடல் கடந்து இந்த தூரதேசத்திலும் மிகவும் சிறப்பாய் பாதுகாக்கப்படுகின்ற தமிழர் பொக்கிஷங்களில் இவைகளுக்கு முதலிடம். இன்றைக்கும் படிக்கக்கூடிய அளவு தெளிவாய் மிக கவனத்துடன் வைக்கப்பட்டுள்ளது. சோழ நாட்டிற்கும் இன்றைய மலேயா தீபகற்பத்தில் இருக்கும் கடார தேசத்திற்கும் இருந்த தொடர்புக்கு ஆதாரமாய் விளங்குகிறது. இதனால் கடல் கடந்தும் பரவியிருந்த சோழர் செல்வாக்கை அறியமுடிகிறது.

இவைகளில் இடம்பெற்றுள்ள வடமொழி சுலோகங்களால் சோழ மன்னர்களின் வரிசையையும், வரலாற்றையும் அறிய முடிகிறது.
மெய்க்கீர்த்திகளால் மன்னனின் வீரச்செயல்களும், அவர்கள் ஆற்றிய போர்களும் வெற்றிகளும் அறியமுடிகிறது.

சோழநாட்டின் உட்பிரிவுகள், ஊர்ப்பெயர்கள், அந்த காலத்து வாழ்ந்த மக்களின் பெயர்கள், நிலஅளவைகள், வரிகள் பற்றி அறியமுடிகிறது. சைவ வைணவ கோயில்களை பேணியது போல புறசமயங்களான பௌத்த, சமணப்பள்ளிகளையும் சோழ வேந்தர்கள் பேணினர் என்பதும் நோக்கத்தக்கது.

இடைக்கால தமிழக வரலாற்றை மீள்கட்டமைத்து வரலாறு அறிய, மிகவும் உதவியாக இந்த செப்பேடுகள் திகழ்கின்றன.
எங்கிருக்கிறது செப்பேடுகள் ? எப்படி காணலாம்?

நெதர்லாந்தின் தலைநகரம் ஆம்ஸ்டர்டாம் ஸ்கிபோல் விமான நிலையத்திலிருந்து சுமார் முப்பது, நாற்பது நிமிட இரயில் பயணத்தில் வரும் இடமே லெய்டன், புகழ்பெற்ற பல்கலைக்கழகம் அமைந்துள்ள ஊர்.



**நெதர்லாந்தில் சோழர் ....**

நெதர்லாந்தில் இரயில்பயணம் மிகவும் சுலபமும் அதிவேகமானதும் ஆகும். லெய்டன் சென்ட்ரல் இரயில் நிலையத்தில் நீங்கள் இறங்கினால் கூகிள் மேப் பார்த்து நடந்து செல்ல சுமார் பத்து நிமிடம் பிடிக்கும், பேருந்தில் சென்றால் மூன்று நான்கு நிமிடத்தில் லெய்டன் பல்கலைக்கழக வாசலை அடையலாம்.

லெய்டன் பல்கலைக்கழக நூலகத்தின் சிறப்பு சேகரிப்பில் இந்த செப்பேடுகள் உள்ளன, சிறப்பு சேகரிப்பு "திங்கள் முதல் வெள்ளி" வரை காலை 9 மணி முதல் மாலை 5 வரை திறந்திருக்கும். நூலகத்தை பார்வையிட உங்களுக்கு ஒரு நாள் பார்வையாளர் அட்டை அல்லது ஒரு வருட அட்டை தேவைப்படும். வரலாற்றில் ஆர்வமுள்ள தமிழர்கள் இந்த ஒல்லாந்து பகுதிக்கு அருகே இருக்கிறீர்கள் என்றால் கட்டாயம் ஒரு முறை போய் பார்த்து வாருங்கள் ! ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட தமிழ் எழுத்துக்களை கையால் தொட்டு உணருங்கள் !

**அடுத்து டென்மார்க் போனால் ..........**

# அரிசிக்கும் வெற்றிலைக்கும் டேனிஷ் அதிகாரிக்கு தாரை வார்க்கப்பட்ட செப்புத் திருமேனிகள்!





ஐரோப்பாவின் மிகப்பிரசித்தமான ஹம் காமாட்சி அம்பாள் தேரோட்டம் நடைபெற்றது, தமிழ்க் கடலொன்று ஜெர்மனியில் நிறைந்தது போலே கூட்டம், கூட்டத்தில் இரண்டு அம்மாமார்கள் பேசிக்கொள்கின்றனர்

"எப்போ வீட்டுக்கு திரும்ப கோவிலேர்ந்து போறீங்கள் ?" ஒரு அம்மா கேட்க, மற்றோர் அம்மா சொன்னார் "அம்மா தேர் ஏறி போயிருக்கா, அம்மா பச்சை சார்த்தி வர்றத பார்த்துட்டு போவேன்" என்று பதில் சொன்னாள், ஆம் இப்படி கோடிக்கணக்கான தமிழ் மக்களுக்கு ஹம் காமாட்சியும், நல்லைக் கந்தனும், திருவாரூர் தித்யாகேசனும், சிதம்பரம் நடராஜனும் வெறும் செப்புத் திருமேனிகள் அல்ல, அவர்கள் நடமாடும் தெய்வங்கள்.

ஆனால் நீங்கள் ஐரோப்பாவின் மிகப்பெரிய நகரங்களில் உள்ள அருங்காட்சியகங்களை வலம் வந்தால் நிச்சயம் ஒரு சோழர்கால செப்புத் திருமேனியையாவது காண்பீர்கள், குறிப்பாக நடராசனென்னும் ஆடல்வல்லானின் திருமேனி. இந்த தெய்வங்களெல்லாம் ஒரு காலத்தில் திருவிழாவில் வீதி உலா வந்து மக்களுக்கு அருள் புரிந்தவர்கள் ஆனால் இன்றோ கண்ணாடிக்கூட்டுக்குள் கடல் கடந்து வசிக்கின்றனர். இவர்கள் பல காலகட்டங்களில் பல காரணங்களுக்காக நாடு விட்டு நாடு வந்தவர்கள்.

ஏன் சோழர் செப்புச்சிலைகளுக்கு அத்துணை சிறப்பு ?

பெரும்பாலும் சோழர் காலத்து செப்புத்திருமேனிகள் அதிகமாக கடத்தப்பட்டும், விலைக்கு வாங்கப்பட்டும் பல நாடுகளில் வைக்கப்பட்டுள்ளன. ஏன் இந்த சிலைகளுக்கு அத்துணை சிறப்பு ? உலகில் கலைகள் பல இடங்களில் பல காலகட்டத்தில் வளர்ந்தன, அப்படி தென்னகத்தில் பொற்கால சோழராட்சி அமைந்த போது, செப்புப் படிமக்கலை அதன் உச்சத்தை எட்டியது என்றே சொல்லலாம். முதலில் அச்சு செய்யப்பட்டு அதில் உலோகத்தை உருக்கி ஊற்றி இந்த சிலைகள் செய்யப்பட்டன, சிலையை அச்சை உடைத்தே வெளியே எடுக்க முடியும், ஒரு அச்சை ஒரு முறை மட்டுமே பயன்படுத்த முடியும், அதனால் ஒவ்வொரு சிலைகளும் தனித்துவமானது, இவற்றோடு சிற்பிகளின் கைவண்ணமும், கற்பனைத் திறனும் சேரும்போது, தெய்வங்களே கண்முன் வருவர்.


தரங்கம்பாடியிலிருந்து கோப்பன்ஹேகனிற்கு !

டென்மார்க் தலைநகரம் கோப்பன்ஹேகனில் தமிழகத்து சோழர்கால செப்புப் படிமங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. பிள்ளையார், சோமாஸ்கந்தர், உமையம்மை மற்றும் ஆடல்வல்லான் சிற்பங்கள் இவற்றுள் அடங்கும் !

எப்படி வந்தன? இதற்கு அவர்களின் இணையதளம் பதிலளிக்கிறது, தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்த ஊர் தரங்கம்பாடி, இது 17 ஆம் நூற்றாண்டில் டேனிஷ் நாட்டவரின் முக்கியமான வியாபாரத் தலமாக விளங்கியது, பின்னர் அவர்கள் கட்டுப்பாட்டிற்கும் வந்தது.

இச்சிலைகள் தரங்கம்பாடி கவர்னராக இருந்த பீட்டர் அங்கேர் என்பவரால் சேகரிக்கப்பட்டவை. 1799 ஆம் ஆண்டு சில கட்டிடவேலையின் போது நிலத்தை தோண்டினர் அப்போது செப்புப்படிமங்களும் பூஜைப் பொருட்களும் கிடைத்தன. அவற்றை வாங்கிக்கொள்ள கவர்னர் விரும்பினார், உள்ளூர் பூசகர்களும் நிலத்தில் இருந்ததால் சிலைகளுக்கு சக்தி இல்லையென்றும் மீண்டும் சக்தியூட்ட பெரியகோவிலொன்று பணித்து அதில் வைக்கவேண்டும் என்றனர். மேலும் கோவில் கட்டுமளவு வசதி இல்லமையால், வெற்றிலைபாக்கு அரிசியை வாங்கிகொண்டு சிலைகளை பீட்டருக்கு தாரைவார்த்தனர்.

அவை பீட்டர் சேகரிப்பிலிருந்து டென்மார்க் வந்து பின்னர் அவரிடமிருந்து மன்னரால் அருங்காட்சியகத்திற்கு வாங்கப் பட்டது! கோபன்ஹேகன் - வடகடலோரம் ஸ்கேண்டிநேவியா நிலப்பகுதியின் டென்மார்க்கின் தலைநகரம், கிழக்காசிய நாடுகளுக்கு வாணிபம் செய்ய வந்த மேற்குலக நாடுகளுள் ஒன்று. கோட்டைகளும், கோபுரங்களும், கால்வாய்களும் நிறைந்திருக்கும் கோபன்ஹேகன் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ளது டேனிஷ் தேசிய அருங்காட்சியகம், அந்த அருங்காட்சியகத்தில் காலனி நாடுகளில் இருந்து சேகரிக்கப்பட்டவை என்ற பகுதியில் இந்த சிலைகளை இன்றும் நீங்கள் காணலாம் !






# நிலாமகளின் கவிதைகள்

**கவிஞர் வி.கந்தவனம்**

**(2012 ஆண்டு தமிழழே காதல் நூலுக்கு கவிஞர் எழுதிய விமர்சனம் )**

கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் அவர்களின் மணிவிழா ஆண்டு இது. நந்தன வருடத்திலே பிறந்தவர் ஒரு சுற்றுச் சுற்றி மீண்டும் நந்தனத்துக்கு வெகு விரைவாகவே வந்திருக் கின்றார்.

காலம் பறப்பது தெரிவதே இல்லை. நேற்றுப்போல இருக்கிறது சிவகுமாரனின் ஒரே ஒரு தெய்வம் என்ற குறுநாவலுக்கு மதிப்புரை எழுதியது. அப்பொழுது அவருக்கு 17 வயது. குறு நாவலில் தொடங்கியவர் அதன் கிளைகளாகச் சிறுகதைகளை வளர்த்தார். காலப்போக்கில் கிளைகளிற் கவிதைகளும் பூத்தன.
சிறுகதைகளில் மாதவியாகவும் கவிதைகளில் நிலா மகளாகவும் சிவகுமாரன் படைப்பாளியானார்.

நிலாமகளின் கவிதைகளை அறிமுகஞ் செய்யும் நோக்குடன் இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

கவிதை அற்புதமான ஒரு வடிவம். ஆயிரம் சொற்களில் கட்டுரையில் அல்லது கதையில் சொல்லும் ஓர் உரிப்பொருளை நான்கு அடிகளில் சொல்ல உதவும் ஓர் உன்னத வடிவம்.
கவிதை என்றால் என்ன?

கவிதை என்றால் என்ன என்று கேட்கும் எனது மாணவருக்கு நான் வழக்கமாகச் சொல்லும் விடை இது:

கவிதை என்பது உள்ளத்தைக் கிள்ளி வெளிப்படத் துடிக்கும் உணர்வு ஒன்றுக்கு அழகானதும் அளவானதுமான சொற்களால் கற்பனையும் விற்பனமும் கலந்து வடிவம் கொடுத்தல்.

வடிவம் மரபுக்கவிதை, வரிக்கவிதை(புதுக்கவிதை), வசன கவிதை என மூவகைப்படும். புதுக்கவிதை பொருட் பிழையுள்ள ஒரு சொல்லாக்கமாதலால் நான் அதனைப் பெரிதும் பயன்படுத்துவதில்லை.

ஒருவர் மரபுக்கவிதை ஒன்றை ஆக்கிவிட்டு, "இது நான் இன்று பாடிய ஒரு புதுக்கவிதை" என்று சொல்கையில் ஏற்படக்கூடிய குழப்பத்தைப் போக்கவே புதுக்கவிதைக்கு நான் வரிக் கவிதை என்று பெயர் சூட்டியிருக்கின்றேன். வரிக் கவிதை கள் என்ற தொகுதி ஒன்றையும் வெளியிட்டிருக் கின்றேன்.

சரி, கவிதைக்கு மேற்கூறப்பட்ட வரைவிலக்கணத்தை அளவுகோலாகக்கொண்டு நிலாமகளின் கவிதைகள் சிலவற்றைச் சற்று நோக்குவாம்.

## தமிழே காதல்

வாழ்விலும் தாழ்விலும்
நம்பிக்கை காதல்

அடிமையின் வாழ்வில்
விடுதலை காதல்

தாயின் மடியில்
சேயே காதல்

பெற்றவர் எதிர்ப்பிலும்
முற்றிடும் காதல்

சுற்றும் உலகில்
தாய் மொழிக் காதல்

என்றும், எதிலும்
காதல்!காதல்!காதல்!

தாயும் மொழியும்
காதல் விழிகளானால்

தரணியில் - என்றும்
தமிழே காதல்



ஆங்கில மொழியில் love என்ற சொல்லைப் பலவிதமாகப் பாவிப்பார்கள். ஒரு மகன் தாயைப் பார்த்து I love you mom என்றும் செல்லவான் தனது சிநேகிதியிடம் I love you என்றும் சொல்வான். தனது நண்பனிடம் I love playing tennis என்றும் சொல்லக்கூடும். இவ்விதம் love என்ற சொல் ஆங்கிலத்தில் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப உணர்ச்சி பேதங்களை உணர்த்தும் இயல்புடையது.

ஆனால் தமிழில் காதல் என்ற சொல் அப்படியானதல்ல. அது ஆண் பெண் உறவோடு மட்டும் தொடர்புடையதாக வுள்ளது. தாய் பிள்ளை அன்புக்கு காதல் என்ற சொல் பயன்படுத்தப்படுவதில்லை. அதற்குப் பாசம் என்று வேறு சொல் ஒன்று வழக்கத்தில் உள்ளது. இதுபோலவே விடுதலைக்கு வேட்கை, தாய்மொழிக்குப் பற்று என்ற சொற்பிரயோகங்களை விடுத்து எல்லாவற்றுக்கும் காதல் என்ற சொல்லை ஆங்கில பாணியில் நிலாமகள் பாவித்திருப்பதைக் கவனிக்கின்றோம்.

தலைப்பைத் தமிழே காதல் என்று வைக்காது காதல் என்று மட்டும் வைத்திருந்தால் கடைசிவரி கொஞ்சம் கனதி பெற்றிருக்கும். ➡

நிலாமகளின் கவிதைகள்
வித்தியாசமான பார்வை

மற்றுமொரு கவிதை தாயின் உயர்ச்சி என்பது:

சீ-என் ரவரில்
நின்று பார்த்தால்
அந்த நிலவு கிட்ட
என்றாள்

நானோ சீச் சீ
நிலவு இன்னும் கிட்ட
தாயவள் தோள்களில்
நான் இருந்த வேளை
என்றேன்

அந்தத் தென்னங்கீற்றின்
இடையே - கைக்கெட்டும்
தூரத்தில் அல்லவா
இந்த நிலவு
இருந்தது அன்று



தாயின் உயர்ச்சி சந்திரனுக்குக் கிட்டியது என்ற கற்பனை சந்திரன் அளவுக்கு உயர்ந்த கற்பனை. பார்வை தொடர்பான இக் கவிதை கவிஞரின் பார்வை எப்பொழுதும் வித்தியாச மாகவே இருக்கும் என்பதற்குச் சிறந்த உதாரணமாகவும் அமைகின்றது. இரண்டாவது சீ யில் உதடுகள் விரிகையில் கண்கள் உதடுகளைப் பார்த்துச் சிரிக்கின்றன. நல்ல சொல் நயம்.

தேவையான அறிவுரை

முதுமை ஒரு கனிந்த பழம்; கலங்கரை விளக்கம். புலம் பெயர்ந்த நாடுகளில் முதியவர்கள் தனிமையில் தவிக் கிறார்கள். அதனைப் போக்குவதற்கென்றே பல முதியோர் அமைப்புகள் தோன்றியிருக்கின்றன.

நிலாமகள் முதியவர்க்குச் சொல்லும் அறிவுரை இது:

**முடிவு அல்ல**
**தொடக்கம்**

கற்றுத் தெளிந்து
அனுபவப் பாடத்தைக்
கரைத்துக் குடித்து - பின்
முதுமையைக் கண்டதும்
ஒதுங்கிக் கொள்ளாதே

முழுமை பெற்ற
அறிவை
முடக்க முடிவல்லவே
முதுமை

பெற்ற அறிவை
விதைக்கத் தொடங்கும்
தொடக்க இளமையே
முதுமை

பூத்துக் காய்த்து
பழுத்து வீழ்ந்த
வித்தே - உனக்கு
அது முடிவல்ல
அதுவல்லவா தொடக்கம்

முத்தமிழே!
முதுமையே - உன்
இளமையின்
காதல் இரகசியம்



எண்பதாண்டான இளைஞனே என்று வள்ளல் வெ.ப. சுப்பிரமணிய முதலியாரை வாழ்த்தினார் கவிமணி தேசிகவிநாயம் பிள்ளை.

கனடாவில் ஒரு முதியோர் அமைப்புக்கு வசந்தம் என்று பெயர். இந்தப் பாடலில் நிலாமகள் முதியோர் செய்யத்தக்க முக்கியமான அறிவுப் பரம்பல் கடமையை வலியுறுத் துவதோடு அவர்களை ஆறுதற்படுத்தும் வகையில் முதுமையை மூத்த தமிழின் இளமைக்கு ஒப்பிட்டிருப்பது அருமை!

கொள்ளாதே என்பதைக் கொள்ளாதீர் என்று மாற்றினால் முதியவருக்கு மதிப்பளிப்பதுபோல அமையும்.

நறுக்குகள்

காதல் தொடர்பான நறுக்குகள் அவ்வப்போது வெற்றி மணியில் வருவதுண்டு.

சட்டென்று உதிக்கும் சிந்தனைகளைப் பட்டென்று நாலு வரிகளாக்குவதில் வல்லவர் நிலாமகள். அதனை நான் நேரியே பார்த்திருக்கின்றேன். என்னுடன் பேசிக்கொண்டே சில வரிகளைக் கிறுக்குவார். பின்னர் இது எப்படி இருக்கு என்று எனக்கும் காட்டுவார்.

வந்ததை வரவில் வைப்போம் என்றார் கண்ணதாசன். கவிஞர்களும் சிந்தனையில் உதிக்கும் சில நல்ல கருத்துக்களை உடனுக்குடன் நிலாமகள் பாணியில் பதிவு செய்தல் நல்லது. பிறகு எழுதுவோம் என்று தள்ளிப் போட்டால், இந்த அவசர யுகத்தில் வந்தது வராமலே போய்விடும்.

மேலும் இந்த அவசர உலகுக்கு நறுக்குகளை மட்டுந்தான் மேய்வதற்கு நேரம் இருக்கும். நீண்ட கவிதைகள், நீண்ட கட்டுரைகள், நாவல்கள் போன்றவற்றைப் படிப்பவர்கள் உண்மையில் இக்காலத்தில் குறைந்து வருகின்றார்கள். இதனை உணர்ந்துபோலும் வெற்றிமணியில் சமையல் அளவாகவே பரிமாறப்பட்டு வருகின்றது.

நிலாமகளின் சிந்தனை நறுக்குகள் இளவட்டங்களை மட்டுமன்றி முதியவரின் காதல் உணர்வுகளையும் முறுக்கிவிடும் முனைப்புடையன. என்தாரம், காதல் யாகம், தமிழச்சி என்பன அத்தகைய குளிகைகள்:

**என் தாரம்**

அறுபது நிமிடம்
காத்திருந்தால்
ஒருதரமேனும்
முத்தமிடும்
கடிகாரம் - நீ

ஒருதரம் என்னை
முத்தமிட்டால்
ஆயுள் வரைக்கும்
காத்திருப்பேன்- நீ
என்தாரம்



**காதல் யாகம்**

ஊர் உறங்கையில்
நாம் விழிக்கின்றோம்

ஊர் விழிக்கையில்
நாம் உறங்குகின்றோம்

எம்மைப் பிரிக்கும் - அந்த
உறவுகளைத் தவிர்க்கும்
காதல் யாகம் இது



நிலாமகளின் கவிதைகள்
**தமிழ்ச்சி**



உன் இதழ் மேல்
என் இதழ் வேண்டும்

உன் இதழ் விரிந்தால்
இன்பத் தமிழே வேண்டும்

என்தாரம் அவதான சக்தித் தேநீரில் கற்பனைப் பனங்கட்டி கலந்தது போன்ற நல்ல பானம். சாதாரண மக்கள் மணிக்கூட்டைப் பார்ப்பது நேரத்துக்கு. கவிஞரும் அதற்குத்தான் பார்த்திருப்பார். ஒருநாள் சின்னக் கம்பியைப் பெரிய கம்பி கொஞ்சுவதைக் கண்டார். காணாதனவற்றைக் காணுகின்ற கண்தானே கவிஞன் கண். இங்கே உள்ளத்தில் மட்டுமன்றிக் கண்ணிலிருந்தும் கவிதை பிறக்கும் என்பதை நிலாமகள் காட்டியிருக்கின்றார்.

**துணிச்சல் கவிஞர்**
எப்படிக் காதல் உணர்வுகளை வெட்கப்படாது வெளிப்படுத்து கின்றாரோ அப்படிச் சில புரட்சிகரமான கருத்துக்களைத் துணிச்சலுடன் சொல்லுவதற்கும் நிலாமகள் பின்னிற்ப தில்லை.

எழுத்தாளர் மத்தியில் அரைத்த மாவையே அரைக்க ஆசைப்படுகின்றவர் அநேகர். அனுபவம் வாய்ந்தவர்கூட இன்னமும் சீதனப் பிரச்சனைகளையே தூக்கிப் பிடிக்கின்றார்கள். ஏனென்று கேட்டால் அது இருக்கும்வரை நாங்கள் எழுதிக்கொண்டுதான் இருப்போம் என்று பதில் வருகின்றது. சிந்தித்துப் பார்த்தால் அதுவும் போகப் போவதில்லை, இவர்களும் நிறுத்தப் போவதில்லை. இந்நிலையில் எழுத்தாளர் வலுவிழந்தவர் ஆகிவிடுகின்றனர். ஏனெனில் அவர் எழுத்தைச் சமூகம் மதிப்பதாக இருந்தால் சீதனம் கேட்கும் வழக்கம் என்றோ ஒழிந்திருக்கும்.

நிலாமகள் ஓர் எழுத்தாளர் மட்டுமன்றிப் பத்திரிகை ஆசிரியருங்கூட. அவருக்கு வரும் ஆக்கங்கள் பல இவ்வித அரைத்த மா விடயங்கள்தாம் போலும். பெண்ணடிமைபற்றி எழுதுவது, விவாதிப்பது, விமர்சிப்பது எல்லாம் இக்காலத்தில் ஒரு நாகரிகமாகிவிட்டது. வளர்ந்துவரும் சந்ததிக்கு அது எத்தகைய தாக்கத்தை உண்டுபண்ணுகின்றது என்பதுபற்றிச் சம்பந்தப்பட்டவர் சிந்திப்பதில்லை. மிகத் துணிவாகவே நிலாமகள் தனது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றார்:
**தணிக்கை**



பெண்ணடிமையாம்
தினம் நினைவூட்ட வரும்
கவிதைகள் கட்டுரைகள்
இன்னும் பல கதைகள்
பெண்ணடிமை நீங்குதோ
அது இல்லையோ
அதைக் கருவாக்கிப்
பிரசவிக்கும்
குழந்தைகட்கோ அளவில்லை
பெண்ணடிமை இன்னும்
உடைத்தெறியப்
படவில்லையெனில்
சொல்பவரும் செய்வதில்லை
என்பதே வெளிப்படை
சும்மாதிரியும் பெண் குழந்தை
அப்பா! நானும் அடிமையா?எனக் கேட்கவைக்குதே
நாளும் வரும் கவிதையெல்லாம்
'-----------' என்ற சொல்லைத்
தணிக்கை செய்திடுவோம்
வருங்காலச் சந்ததிக்கு
அது தெரிய வேண்டாம்

உரிப்பொருள் வைப்பு

அனுபவம் வாய்ந்த பல கவிஞர்கள் உரிப்பொருளைக் கடைசியில் வெளிக் காட்டுவதை ஓர் உத்தியாகவே கையாள்கிறார்கள். அதற்கு வாசகர்களை ஆயத்தஞ் செய்யும் வகையில் கவிதையின் முற்பகுதி அமையும். அத்தகைய உத்தியுள்ள கவிதையாகப் பின்வரும் கவிதையைக் காண்கிறேன்:

**அக்கணம்!**
சுடர் அணையும் வேளை
திரியை நேசிக்கும்



தரையில் மீன்
துடிக்கும் போது
நீரை நேசிக்கும்

புயலில் தத்தளிக்கும் படகு
துடுப்பை நேசிக்கும்

என் உயிர் பிரியும் நேரம்
உன் பெயரைச் சுவாசிக்கும்

அற்புதமான கற்பனை. அளவான சொற்கள். உள்ளத்தைக் கிள்ளும் அழுத்தமான செய்தி!
இக் கவிதைகள் எல்லாமே வெற்றிமணி இதழ்களில் வெளிவந்தவை.
தொடர்ந்தும் இவ்விதமான நல்ல படைப்புக்களைத் தரவேண்டும் என்று நான் நிலாமகளைக் கேட்கவேண்டிய தில்லை. ஏனென்றால் அவர் பாடாமல் இருக்க மாட்டார்.
வாழ்த்துகள்!

**வெற்றிமணி உலகெலாம் புகழ்பெற**
**வாழ்த்துகின்றேன்.**

யேர்மனியில் வெற்றிமணி தொடங்கப்பெற்று 14 ஆண்டுகள் ஆவது மகிழ்ச்சிக்குரியதாகவும் நேற்று நடந்தது போலவும் இருக்கின்றது.
மனதுக்கு வயதில்லை
வயது காலத்துக்குத்தான்
வெற்றிமணியைத் தொடங்கியவர் முயற்சியாளர் அதிபர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள். நல்லவர் முயற்சி நலிவடைவதில்லை.
யேர்மனி, இங்கிலாந்து, சுவிஸ், நாடுகளில் மட்டுமன்றி பிற நாடுகளிலும் வெற்றிமணியின் நற்றமிழ் ஓசை ஒலிக்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.
ஓவியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் அவர்களின் தீவிர முயற்சி மேலும் ஓங்கி வளர்ந்து, உலகெலாம் புகழ்பெற வாழ்த்துகின்றேன்.

அன்புடன்,
**வி.கந்தவனம்.**
கனடா 24.05.2019



# வெற்றிமணி பொக்கிசம் 1949

## வெற்றிமணி ஸ்தாபகர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் திருமணம்

படம் செய்தி: மகன் மு.க.சு.சிவகுமாரன்

1949 வெற்றிமணி ஸ்தாபகர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் திருமணம். யாழ்ப்பாணம் குரும்பசிட்டி நடைபெற்றபோது மயில் சோடனையுடன் அமைந்த வாகனம். ஓட்டுநர் பெயர் அண்ணாமலை.அருகில் நிற்பவர்கள் எனது தந்தையின் அக்கா பிள்ளைகள் .ஆசிரியைகள் பரமேஸ்வரி மகேஸ்வரி இன்று இங்கிலாந்திலும் கனடாவிலும் வசிக்கின்றனர்.திருமதி பரமேஸ்வரி இராசநாயகம் 1950 ஆண்டு தந்தையார் வெற்றிமணி ஆரம்பிக்கும்போது அவரோடு ஒரே வீட்டில் இருந்தவர். வெற்றிமணி ஆரம்பம் பற்றி இன்றும் கதை கதையாகச் சொல்வார்கள்.

---

# வெற்றிமணி தமிழுக்கும் தமிழ்மொழிக்கும் தன்னலம் கருதாது செய்யும் சேவைக்கு பாரோர் அறியப் பணிவதைப் பெருமையாக கருதுகிறேன்,

தனசேகரன் பிரபாகரன் (சேலம் தமிழ்நாடு)



வெற்றிமணி ஸ்தாபகர் கௌவர ஆசிரியர் அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களது நூற்றாண்டுவிழா யேர்மனியில் 12.05.2019 நடைபெற்ற வேளையில்...

தமிழர்கள் தம்முடைய உயிரினும் நேராக கருதுவது தம்முடைய மொழியைத்தான், அப்படிப்பட்ட மொழி அன்று தொடங்கி இன்றுவரை இனி உள்ள காலம் வரை உயிர்ப்போடு இருக்க வேண்டும் என்றால் பேச்சு, எழுத்து மற்றும் வாசிக்கும் பழக்கம் தொடர்ந்துகொண்டே இருக்க வேண்டும். குறிப்பாக புலம்பெயர் நாட்டில் வாழும் தமிழ்க் குடும்பங்களும் அவற்றில் இருக்கும் தமிழ்ப் பிள்ளைகளும் இம்மூன்றில் பேச்சை கொஞ்சம் எளிதாக கையாளு கின்றனர், ஆனால் எழுத்தும் வாசிப்பும் கொஞ்சம் கடினமாகித்தான் போய்க்கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் வெற்றிமணி போன்ற பத்திரிக்கைகள் வரப்பிரசாதமாய் விளங்குகின்றன. வெற்றிமணி இலங்கையில் 1950 ஆரம்பமாகி, ஜெர்மனியில் 1994 இல் தொடங்கி ஐரோப்பாவில் 25 ஆண்டுகள் நிறைவு செய்த ஒரே பத்திரிக்கை என்ற தகவல் சற்றே புல்லரிக்கத்தான் வைக்கிறது. கண்டிப்பாக இந்தப் பயணம் எளிதாக இருந்திருக்காது, கஷ்டங்கள், தடைகள் என நிறைந்திருந்திருக்கும், எனினும் எந்த ஒரு பிரதிபலனும் இல்லாமல் நம்முடைய நாளைய தமிழ்ச்சமூகம் அடையாளத்தை தொலைத்துவிடாமல் தமிழை மறக்காமல் இருக்க வெற்றிமணி செய்யும் சேவை அளப்பரியது.

ஒவ்வொரு மாத இதழும் பார்த்துப் பார்த்து வடிவமைத்து, இளம் தலைமுறையினர் பலரை எழுதிவைத்து, அச்சடித்து வாச்கர்களைத் தேடி கையில் கொண்டு கொடுக்கும் வரை ஆசிரியர் சளைப்பதில்லை, இது கண்ணார கண்டு நெகிழ்ந்த விடயம்.
தென்பாண்டி நாட்டில் தென்காசி என்னுமோர் ஊருண்டு, வடக்கே இருக்கும் காசிக்கு இணையாக மன்னன் பராக்கிரம பாண்டியன் அவ்வூரில் கோவிலொன்றை கட்டிவைத்தான், கூடவே கல்வெட்டு ஒன்றையும் வெட்டி வைத்தான்.

"ஆராயினும் இந்தத் தென்காசி மேவு பொன் ஆலயத்து
வாராததோர் குற்றம் வந்தால் அப்போழ்து அங்கு வந்ததனை
நேராகவே ஒழித்துப் புரப்பார்களை நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன் பராக்கிரம பண்டியனே"!

தாம் கட்டிய இந்தக் கோவில் பல்லாண்டு காலம் நிலைத்து நிற்கவேணும், அப்படி ஏதாவது இக்கோவிலுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அதனை நீக்கி சரிசெய்வோரை இந்த உலகம் அறிய பணிகிறேன் என்று சொல்லி, கோவிலின் அம்மன் சன்னதி வாசலில் தன்னுடைய சிலையை தரையில் பதித்துக் கொண்டான். நாடாளும் மன்னனாயினும் கோவில் நிலைக்க வேணுமென இப்படி பாரோர் அறிய பணிவேன் என்று சொல்லி இன்றைக்கும் தமிழுலகம் மெய்சிலிர்க்க கோவிலை விட்டுச்சென்றிருக்கிறான் பாண்டியன்.

தமிழ் வளர்க்கும் வாய்ப்பு நமக்கு கிடைக்கவில்லை என்றாலும் அதனை வளர்ப்போரை போற்றி பணிய மறக்கக்கூடாது. வெற்றிமணி போன்று இப்படி தமிழுக்கும் தமிழ்மொழிக்கும் தன்னலம் கருதாது சேவை செய்வோரை பாரோர் அறியப் பணிவதைத் பெருமையாக கருதுகிறேன், வெற்றிமணி பெயருக்கு ஏற்றார் போலே தமிழின் ஓசைமணியாக உலகெங்கும் ஒலிக்கட்டும், நாளைய தமிழ்க் குருந்துகள் தமிழோடு வளரட்டும், ஆசிரியரும் இந்தப் பத்திரிகை உலா வர உதவும் அத்துணை நெஞ்சங்களும் பல்லாண்டு வாழட்டும் !

# எத்தனை மொழிகளை கற்றாலும் கேட்டாலும், நம் ஒற்றை இதயத்தை ஒரு மொழி வலுவாக தட்டி செல்லும் அதுவே நம் தாய் மொழி .

தாய் மொழியின் முக்கியத்துவத்தை 50 பக்கங்களுடன் ஆவணப்படுத்தியுள்ளது யுனெஸ்கோ. உலக நாடுகள் அனைத்திலும் விழிப்புணர்ச்சியை கொண்டுவரும் முகமாக பிப்ரவரி 21ஆம் திகதி அனைத்துலக தாய் மொழி தினமாக கொண்டாடப்பட்டு வருவதும் அனைவரும் அறிந்ததே. பல ஆய்வுகளின் படி , தாய் மொழியை முதலாவதாக கற்கும் குழந்தைகள் அதி ஆற்றல் மிகுந்த கற்பனை திறன் கொண்ட படைப்பாளிகள் ஆகின்றனர் எனவும், உலக அனுபவங் களுடன் தம்மை இலகுவில் ஈடுபடுத்தி கொண்டு தொடர்பாடலை விசாலமாக்குகின்றனர் என்றும் கூறியுள்ளனர்.

தான் பெற்ற கல்வி சமூகத்திற்கு பயன்பட வேண்டும் எனில் தாய்மொழியில் கற்றிருக்க வேண்டும் என்று விபுலானந்தர் அவர்கள் கூறுகிறார். அதுபோல் அண்ணல் காந்தியின் காலத்தில் தேசப்பற்றை உய்விக்க தாய் மொழி கல்வியின் முக்கியத்துவம் நிலைநிறுத்தப்பட்டது.

ஏன் ? இது மட்டும் இன்றி, ஒருவர் தாம் கூற விரும்பும் கருத்தை தெளிவாகவும், முழுமையாகவும், ஆழமாகவும் தெரிவிக்க தாய் மொழி அவசியம் என்கின்றனர் உளவி யலாளர்கள்.
உலகமயமாக்கலில் நவீன இயந்திரங்களின் மத்தியில் சுழன்றிடும் இக்காலத்தில் தாய் மொழியின் முக்கியத் துவத்தை அறியவேண்டியதும் பெற்றோர்கள் தம் குழந்தை களுக்கு எடுத்து சொல்ல வேண்டியதும் அத்தியாவசிய மாகிறது.
எட்டு கோடி மக்களின் மூச்சான மொழி, எட்டயபுரத்து சிங்கம் பாரதியின் உயிர்ப்பு மொழி, திராவிடர்களின் திரவியம் , பல்லாயிரம் ஆண்டு பழமை மொழி முதுமொழியாம் தமிழ் மொழியை என் தாய் மொழியாய் கொண்டதன் வீராப்பில் இதோ என் தாய் மொழியின் சிறப்பில் சில துளிகளை முன் வைக்கிறேன்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்
பாமரராய் , விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சி சொல்ல பான்மை கெட்டு
நாமமது தமிழர் என கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ ? சொல்வீர் !
தேமதுர தமிழ் ஓசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்
சேமமுற வேண்டும் எனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்க செய்வீர் !
ஆஹா இத்தனை இனிமைக்குள்ளும் ஊடுருவும் வீர உணர்வின் சாரம் தமிழ்.

தொல்லிய இலக்கிய சுவை கண்ட தமிழ் சொல்லி சொல்லி வளர்த்தது வீரத்தையும் அன்பையும். முலை பால் குடிக்கும் குழந்தை மனத்தில் வீரத்தை விதைத்தாள் தமிழ் அன்னை. ஆதலால் சினத்தால் துரத்தினான் ஆங்கிலேயரை வீரபாண்டிய கட்டபொம்மன்.

அத்தனை ஏத்தி நெக்குருகும் திருமுறைகளும், அவன் புத்திரனை தொழுது தந்த அருணகிரி அருமருந்தும், கோதை நாச்சியாரின் திருமொழியும், ஆழ்வார்கள் பாசுரங்களும், வாழ்வியலில் பேணப்பட வேண்டிய அத்தனையையும் பெட்டகமாய் தரும் குறளமுதும், ஆத்திசூடியும் என செவி வழி புகுந்து, உள்ளத்தை உருக்கி விழி வழி விடையாக தேனாரமுதமாய் தமிழ் இருக்க, இப்பிறப்பில் தமிழனாய் பிறந்ததன் பயன் அடைகின்றோம்.



காலாசூரி திவ்யா சுஜேன்

ஆணும் பெண்ணும் நிகரெனக்கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தளைக்குமாம் என்பதற்கு இணங்க , கி.மு 400 ஆம் நூற்றாண்டுகளில் காணப்பட்ட சங்க கால இலக்கியம் தொட்டு தற்காலம் வரை பெண்மையை உயர்த்தி போற்றிய தலை சிறந்த மொழி நம் தமிழ் மொழி.

தமிழின் சிறப்பு என்னவென்றால், சொல்ல முடியாத உணர்வு களையும் வெளிப்படுத்தக்கூடியளவு சொற்கள் உணர்வு பூர்வமாக விரிந்து காணப்படுகின்றன. தமிழ் நம் உணர்வின் மொழி.

தாய் மொழி கற்பதால் என்ன சாதிக்கலாம் என்று இருந்து விடாதீர்கள் நமக்கின்னும் நெடிய வேலை உண்டு..தமிழை சுவாசித்த நம் பாரதியின் கட்டளை படி, பிறநாட்டு நல்லறிஞர் நூல்களை தமிழில் மொழி பெயர்போம், இறவாத புகழுடைய புது நூல்களை தமிழில் இயற்றுவோம்.

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதில் ஓர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

வார்த்தைகள் அடங்கிவிட்ட மரண படுக்கையிலும் மரிக்காது உயிர்த்திடும் மௌன மொழி நம் உயிர்ப்பின் மொழி தாய் மொழி.
ஆகவே நம் சந்ததியோடு மட்டும் தாய் மொழியின் முக்கியத் துவத்தை அறிவது நின்றுவிடாது மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்குள்ளும் மொழிப்பற்றை விதைத்து தாய் மொழியை அதன் அழிவில் இருந்து காப்போம்.

மொழி என்பது நம் அடையாளத்தின் சின்னம், கலாச்சாரத் தின் மகிமை, நம் உயிர்ப்பின் இருப்பு.

**இயல் இனிது, மொழி இனிது , வாழ்தல் இனிது.**

இவ்வரிய மொழியின் தேவை உணர்ந்து பொதுநலமறிந்து செயல்பட்டு வரும் வெற்றிமணி வெற்றி படிகளில் பாதம் பதித்து வெள்ளி விழா காண்பதையிட்டு தமிழ் அன்னைக்கு தலை வணங்கி வாழ்த்துக்களையும் அன்பையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

இயல் இனிது, மொழி இனிது , வாழ்தல் இனிது.

காலாசூரி திவ்யா சுஜேன்




வண்ணத்துப்பூச்சி சஞ்சிகை நடத்திய சிறுவர் ஓவியப் போட்டியில்
நடுவர்களாக ஓவியர் கண்ணா,திருமதி கீதா ஞானகிருஷ்ணன்.
சிறுவர் அமுதம் ஆசிரியர் திரு.சின்ன இராஜேஸ்வரன்,
முன்னாள் அறுவை சஞ்சிகை ஆசிரியர்
திரு.எஸ்.லோகநாதன் ஆசிரியர் திரு.எஸ்.சத்தியமூர்த்தி ஆகியோர். 1993

## அழியாத கோலங்கள்



சலங்கை ஒலி
நாட்டியப் பள்ளி
அதிபர்
திருமதி சாவித்திரி சரவணன்
அவர்கள் 1995



நாட்டியத்தாரகை லீலா நாராயணன் அவர்களின் மாணவி
வானதி தேசிங்குராஜா அவர்களது பரதநாட்டிய அரங்கேற்றம்
யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்தவேளை




யேர்மனி ஆடற்கலாலய வெள்ளிவிழா



உண்ணும்போது உணவில் கவனம் இருக்கவேண்டும்

# உணவோடு உறவாடு

# விருந்தும், மருந்தும்





கரிணி

ஒரு மனிதனின் தோற்றத்தையோ அவன் செயற்பாட்டையோ, அதற்கான சக்தியையோ வெளிப்படுத்துவது உடலாகும். இந்த உடல் உணவால் ஆனது. எனவே உடலின் மூல அடிப்படை உணவிலிருந்தே தொடங்குகிறது. இப்படி வாழ்வில் மிக பிரதானமாக அமைந்த உணவுக்கு இன்றைய காலத்தில் அதற்கான நேரம் ஒதுக்காமல் மிக தலையாய கடமையாகிய உணவு உண்ணலை ஏனோ தானோ என்று அவசியமற்ற ஒரு செயலைச் செய்வது போல் நின்று கொண்டும், நடந்து கொண்டும், ஓடிக்கொண்டும் பரபரப்பாக உண்பதை காண முடிகிறது. மிக அடிப்படையான விடயம் ஒன்றிற்கே அதற்கான பிரதானம் வழங்கப்படாமல் அநாவசிய காரணிகளுக்காக அதிக நேரங்கள் செலவிடப்படுகின்றன.

வேகமான வாழ்வில் உணவை வாய்க்குள் வைக்கும் வரை பழுதடைந்ததாக அறியாத மனிதர்கள் இன்று அதிகம். அதன் பின்னரே வெளியில் உமிழ்ந்து விடுவர். பொதுவாக பார்வை, மற்றும் தொடுகை மூலமே உணவின் தன்மையை உணரலாம் அல்லது நாசியால் முகர்ந்து அறியலாம். நாசி எதற்காக வாய்க்கு மேல் இருக்கிறது என உணர வேண்டும். உணவு வாயை நோக்கி கொண்டு செல்லும் போது மூக்கை தொட்டுத் தான் வாய்க்குள் உணவு செல்ல வேண்டும். அதற்கேற்ப உள்ளே சுரப்பிகள் தயாராகும். கண்கள், மூளை, நாசி, தொடுகை என அத்தனை விடயமும் உணவு விடயத்தில் கவனம் செலுத்துகின்றன. உடலின் ஒவ்வொரு பாகங்களும் இப்படி ஒவ்வொரு விடயத்திற்காகவும் அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

கண்களையும், நாசியையும் மூடிக்கொண்டு உண்ணும் போது உணவின் சுவை உணர முடியாது. இதை பரிசோதித்து பார்க்க முடியும். எனவே நுகர்தல் முக்கியம். நுகரும் போது அதிக உமிழ்நீர் சுரக்கும். உமிழ்நீர் சமிபாட்டுத் தொகுதிக்கு மிக அவசியமானது. உணவின் வாசனையை தெரிந்து கொள்ள உணர்வு உணவில் ஒன்றித்தல் வேண்டும். அப்போதுதான் அதற்கான சுரப்புகள் தானே சுரக்கின்றன. "நொறுக்கி தின்றால் நூறு" அது தவிர உணவை நன்று மென்று உண்ணும் போது உடலால் உள்ளுறிஞ்சல் இலகுவாகிறது. உணவில் கவனம் செலுத்தி அதை அனுபவித்து உண்ணும் போது அளவான உணவுடன் பசி மற்றும் உணவு மீதுள்ள ஆசை உணர்வு அடங்கும். இல்லா விடில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டோ, பிறரோடு உரை யாடிக்கொண்டோ உண்ணும் போது உண்ட திருப்தி ஏற்படாமல் பசி உணர்வு அடங்காமலும் வயிறு நிரம்பினாலும் மீண்டும் மீண்டும் உண்ண விருப்பம் ஏற்படும்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்".

முன்பு உண்ட உணவு செரிமானம் அடைந்து விட்டது என்பதை அறிந்தே அடுத்த உணவு உண்ண வேண்டும். அப்படி உண்ணும் போது உடலுக்கு வேறு மருந்து தேவையில்லை. இந்த உணவே மருந்தாகும். பசி என்பது உணவுத் தேவைக்கான உடலின் மொழி. பசி உண்டாகும் போது உண்ணுதலே மிகச் சிறப்பு. காலையில் அதிகமாகவும், மதியத்தில் அளவாகவும், மாலையில் குறைவாகவும் உண்ண வேண்டும். உடலின் தேவை, உழைப்பு என்பனவற்றுற்கேற்ப தடவைகள், அளவுகள் மாறுபடும்.

ஒரு நாளில் ஒரு வேளை மட்டும் உணவு அருந்தி ஆரோக்கியமாக வாழ்பவர்கள் உண்டு. ஒரு வேளை உண்பவர் ஞானி, இரு வேளை உண்பவர் சுகதேகி, மூன்று வேளை உண்பவர் போகி, இதற்கு மேல் உண்பவர் ரோகி அதாவது நோயாளி எனக் கூறப்படுகிறது.

உணவு உண்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பும் உணவு உண்ட பின்னர் முக்கால் மணி நேரத்தின் பின்னரும் நீர் அருந்தலாம். அவசியம் ஏற்படின் உண்ணும் போது சிறிதளவு நீர் அருந்தலாம். எதற்காக உணவோடு நீர் பருகக்கூடாது என கூறப்படுகின்றது எனில் உணவு செரிமானம் அடைவதற்காக சமிபாட்டுத் தொகுதியில் சுரக்கப்படும் அமிலம் தண்ணீரோடு சேர்ந்ததும் செறிவு குறைந்துவிடும். எனவே உணவு சமிபாடடையத் தாமதமாவதுடன் தண்ணீரில் மிதந்து நெஞ்சுக்கு அமிலம் ஏறி நெஞ்செரிவு ஏற்படும். எனவே உண்ணும்போது அதிக நீர் அருந்துவதை தவிர்க்க வேண்டும். மற்றும் உண்டவுடனோ அல்லது உண்ணும்போதோ குளிர்ந்த பானங்கள், குளிரூட்டப்பட்ட நீர் அருந்தக் கூடாது. அது உணவில் உள்ள கொழுப்பை திடமாக கட்டியாக்கி குடலில் நீண்ட நேரம் தங்க வைத்து உடலால் உள்ளுறிஞ்சப்படும். இதனால் தேவையற்ற கெட்ட கொழுப்புக்களும் உடலில் சேரும். முடிந்தவரை வெதுவெதுப்பான சுடவைத்த நீர் உணவு உட்கொண்ட பின் அருந்துவது உணவின் மேலதிக கொழுப்பை வெளியேற்ற உதவும். உணவைக் குடி நீரை சாப்பிடு என்பார்கள். அதாவது திட உணவு நன்கு மென்று உமிழ் நீரோடு உட்செல்ல வேண்டும். அல்லது கஞ்சி போன்ற நீராகாரமாக இருப்பது நலம். தண்ணீரை உறிஞ்சி சப்பிக் குடிப்பதே சிறந்தது.

குழந்தைகளுக்கு எல்லா உணவுகளும் உண்ணக் கொடுப்பதற்கு முன்பு அந்த உணவுகளைத் தொட்டு குழந்தையின் நாக்கில் வைப்பர். அந்த செயல் மட்டும் தான் சிறிது காலத்துக்கு செய்வார்கள். முழுதாக ஊட்டிவிட மாட்டார்கள். மூளை கொஞ்சம் கொஞ்சமாக அந்த உணவின் தன்மையை உள்வாங்கும். பின் வாழ்நாளில் இந்த வகையான உணவுகளால் ஒவ்வாமை எனப்படும் அலர்ஜி ஏற்படுவ தில்லை. உடலின் அகத்துறிஞ்சலுக்கும் இலகுவாக இருக் கிறது. உண்ணும் போது இரண்டு கால்களையும் மடித்து அமர்ந்திருந்து அதாவது சப்பாணிகொட்டி அமர்ந்து உண்ணுதல் என்பது மரபு வழியாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் சிறந்த முறையாகும். இந்நிலையில் கால்களுக்கு செல்லும் இரத்த ஓட்டத்தை குறைத்து வயிற்றுக்கு அதிக இரத்த ஓட்டம் பாயும்படி ஆகிறது.

மற்றும் அமர்ந்திருந்து குனிந்து உணவை வாயில் வைக்கும் போது தொடைகளால் அடிவயிறு அழுத்தப்பட்டு அதன் செயற்பாடு ஊக்குவிக்கப் படுகிறது எனவே உணவுத் தொகுதி நன்கு செயற்பட்டு உரிய நேரத்தில் கழிவு வெளியேற இலகுவாக இருக்கும்.

உணவோடு உறவாடு

இயற்கையின்படி அந்தந்த காலகட்டத்தில் விளையும் பழங்கள், காய்கறிகள் உடலுக்கு மிகவும் இயைபாக இருக்கும். எனவே பதப்படுத்தலை விட அந்தந்தக் காலத்தில் கிடைப்பதை உண்ணுதல் மிக்க பயன் தரும்.

உணவின் தன்மை என்பது வெறும் உணவு வகைகளை மட்டும் சேர்ந்தது அல்ல. அதன் விளைச்சல், அறுவடை, பதனிடல், சந்தைப்படுத்தல், கொள்வனவு, சமைத்தல், பரிமாறுதல் இப்படி எல்லா படிநிலையினுடைய சக்தியூட்டம் பெற்றே உணவு உண்ணும் கரத்திற்கு வருகிறது. பொதுவாக நீருக்கு எண்ணங்களை உள்வாங்கும் சக்தி இருப்பதாக நிருபிக்கப்பட்டுள்ளது. அது போன்றே உண்ணும் உணவானது அது கடந்து வந்த பாதையில் அதனுடனான தொடர்பில் உள்ளவர்கள் அனைவரின் உணர்வு நிலையையும் உள்ளடக்கமாக கொண்டுள்ளது. அதனை உண்பவருடைய உணர்வு நிலை எல்லாவற்றையும் விடவும் முக்கியம். எனவே உண்ணும் உணவில் உள்ள தேவையற்ற சக்தி நிலைகளை சரிப்படுத்த உண்பதற்கு முன்பு உள்ளத்தில் நல்லுணர்வோடு இரு கரங்களாலும் "இந்த உணவு என் உடலுக்கும், உள்ளத்திற்கும் சகல நலன்களையும் தருவதாக இருக்க வேண்டும்" என ஆசீர்வதித்து, இயற்கைக்கு நன்றியுணர்வோடு உணவில் எண்ணத்தை செலுத்தி நேர்மறை எண்ணத்தோடு அனுபவித்து உண்ணும்போது அந்த உணவே விருந்தாகவும், மருந்தாகவும் மாறி உடலையும், மனதையும் செம்மைப்படுத்துகிறது.

உண்ணக் கூடிய உணவுகள் என்பவை எவை என்ற கேள்விகள் எழுவதுண்டு. படைப்பின் படி பார்க்கும் போது உயிரினங்கள் உருவாகையில் அதன் முன்னரே உணவு உருவாக்கப்பட்டது. மனித நாகரிகத்தின் வளர்ச்சியே நெருப்பில் உணவை சமைத்தல். ஆனால் படைப்பின்படி அவனுக்கான உணவை இயற்கை சமைத்தே வைத்துள்ளது. பழங்கள், கிழங்குகள், காய்கறிகள், தண்டுகள் இப்படி பல. இவை சூரியன் சமைத்த உணவுகள் எனலாம். அதாவது சூரிய ஒளியில் தாவரத்தால் சமைக்கப்படும் உயிர்ப்புள்ள உணவு. அதில் அத்தனை அணுக்களும் உயிரோட்டமாக இருக்கின்றன. அவற்றை அப்படியே பச்சையாக உண்ணும் போது உடல் அதிக வலிமை பெறுகின்றது. அவற்றிலும் உண்ணத் தகுந்தவற்றை முன்னோர்கள் மரபுவழியாகத் தெரிவுசெய்து வகைப்படுத்தியும் உள்ளனர். இதில் சிரமப்பட ஒன்றும் இல்லை. அக்காலத்தில் மனிதரின் வாழ்நாள் அதிகமாகவே இருந்துள்ளது. உணவு தீயில் சமைக்கப்படும் போது அதன் முழுமையான தன்மை மாற்றம் அடைகிறது. மற்றும் சமைத்த உணவை மிக தாமதமாக பல நாட்கள் வைத்திருந்து உண்ணும் போதும் அதனுள் பல மாற்றங்கள் நிகழ்ந்து எதிர்வினை புரியத் தொடங்குகிறது. அதனதன் முழுத் தன்மை அதன் உயிர்ப்பு நிலையிலேயே உள்ளது. பதப்படுத்திய உணவுகளை விட சமைத்தவுடன் ஒன்றரை மணி நேரத்திற்குள் உண்பதே சிறப்பு. அது தவிர பச்சையாக உண்ணக்கூடிய உணவை அப்படியே உண்பதே சிறந்தது. காலை உணவு அந்த நாளில் முதல் எடுக்கப்படும் உணவாகையால் உடலில் அதற்கான தேவை அதிகம் எனவே காலை உணவு சமைக்காத உணவுகள் மிக நன்மை தரும். முளை தானியங்கள், பழங்கள், பருப்புவகைகள், தண்டுகள், பானங்களை உள்ளெடுத்தல் மிக்க நலம்.

மனிதன் ஒரு தாவர உண்ணி என்றே ஆய்வின் முடிவுகள் கூறுகின்றன. மனித இனம் அனைத்தும் உண்ணப் பழகி தன்னை இயைபாக்கிக் கொண்டதேயன்றி மனிதன் ஒரு தாவர உண்ணியாவான் என ஆய்வு கூறுகிறது. இயல்புகளின் படி பார்த்தால் தாவர உண்ணிகள் நீரை உறிஞ்சிக் குடிப்பவை. மனிதனும் அப்படியே. ஆனால் விலங்கு உண்ணிகள் நீரை நக்கிக் குடிப்பவை. தாவர உண்ணிகள் தட்டையான பற்கள், நகங்கள் கொண்டவை. மனிதனும் அப்படியே. இருபக்கமும் சிறிது கூராக அமைந்த பற்கள் உணவை அழுத்தி பிடிப்பதற்கே. விலங்கு உண்ணிகளின் பற்கள் மிகக் கூரானவை. தாவர உண்ணிகளின் குடலின் நீளம் அதிகம். மனிதனுக்கும் அப்படியே. விலங்கு உண்ணிகளின் குடலின் நீளம் குறைவு அது கடினமான உணவை எளிதில் சமிபாடடையச் செய்வதற்காக அமைந்தது. தவிர தாவர உண்ணிகள் பெரும்பாலும் கூட்டமாக சேர்ந்து வாழும். விலங்கு உண்ணிகள் பெரும்பாலும் தனித்து வாழும். இப்படி பல வகையான ஆய்வின் அடிப்படையில் மனிதன் தாவர உண்ணி என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

தாவர உணவை பச்சையாக உண்ணும் போது அதில் உப்பு இருப்பதை உணரலாம். உதாரணமாக ஒரு கரட் கிழங்கு பச்சையாக சாப்பிடும் போது சுவை இருக்கும். அதே கிழங்கை வெறும் சுடுநீரில் நன்கு அவிய வைத்து உப்பு போடாமல் எடுத்து உண்ணும் போது எந்த சுவையுமின்றி பச்சைத் தண்ணீர் போல் இருக்கும். ஆகையால் உப்பு மேலதிகமாக சேர்க்க வேண்டியுள்ளது. இப்படியே எல்லா உணவும் சமைக்கும் போது அதன் உயிர்த் தன்மைகள் அழிந்துவிடும். நெருப்பையும், உப்பையும் உணவுத் தயாரிப்பில் பயன்படுத்தத் தொடங்கிய பின்னரே மாமிச உணவுப் பழக்கம் அதிகரித்து இன்று உணவில் வன்முறை பெருகியது எனலாம்.

மாமிச உணவு ஏற்கனவே செரிக்கப்பட்ட உணவு. அதாவது புல்லை உண்டு சத்தாகி, இரத்தமாகி பின் தசையாகிய உணவு. தாவர உணவு அப்படிப்பட்டதல்ல அது முதற்தரமானது. துக்க வீட்டு உணவு துடக்கு என்பதன் பொருள். அங்கு துயரமான சிந்தனையோடு சமைக்கப்பட்டு பரிமாறப்படும் உணவில் துயர ஆற்றல்கள் பொதிந்திருந்து உடலை சென்றடையும். எனவேதான் அதனை துடக்கு உணவு என்றனர். துயர சம்பவம் உண்டான குடும்பத்திற்கு வெளியில் இருந்து அன்போடு, அக்கறையோடு சமைக்கப்பட்ட உணவையே பரிமாற வேண்டும். அத்தோடு கோபமாகவும், குழப்பமாகவும், சோக திரைப்படங்கள், நிகழ்வுகள், தொடர் நாடகங்கள் பார்க்கும் போதும், கவலையாகவும் உள்ள சமயத்திலும் சமைக்கவோ, உண்ணவோ, பரிமாறவோ கூடாது.

கைவிரல்கள் ஐந்தும் ஒவ்வொரு வடிவத்தில் இருக்கின்றன. எல்லா விரல்களும் ஒரே அமைப்பில் இருந்தால் பற்றிப் பிடிக்கவோ, உணவை உண்ணவோ சிரமமாக இருந்திருக்கும். விரல்களால் அள்ளி எடுத்து நான்கு விரல்கள் வாயினில் வைக்க பெருவிரல் உணவை உள்ளே இலகுவாக தள்ளி விடுகிறது. கைகள் நன்கு கழுவிய பின்னரும் கைகளால் பிசைந்து வைத்த உணவு மற்ற உணவுகளை விட விரைவில் புளித்துப் போய்விடும். அது போல் கரண்டியால் உண்ணப்படும் உணவை விட கைகளால் உண்ணும் உணவே விரைவில் சமிபாடடைகின்றது. ஐந்து விரல்களிலும் முறையே பெருவிரல் வழியாக நெருப்பு ஆற்றலும், சுட்டுவிரல் வழியாக காற்றின் ஆற்றலும், நடுவிரல் வழியாக ஆகாய ஆற்றலும், மோதிரவிரல் வழியாக மண்ணின் ஆற்றலும், சிறு விரல் வழியாக நீரின் ஆற்றலும் பாய்ந்து கொண்டிருப்பதாக கூறப்படுகிறது. இந்த ஐந்து விரல்களால் பிசையப்படும் இயற்கை உணவு உயிர்ப்பு சக்தி பெறும் எனக் கூறப்படுகிறது.
மரபுகள் விட்டுச் சென்றவை மகத்தானவை, அதை மறந்து போய்விடல் விபத்தானவை .

### வாழ்த்து:

## வெற்றி, வெற்றி" என்ற நேர்மறை ஆற்றல்

அனைவர் வீடுகளிலும் "வெற்றி, வெற்றி" என்ற நேர்மறை ஆற்றல் கொண்ட பெயரோடு மனங்களில் மங்கல ஓசை எழுப்பும் வெற்றி மணியே! உன் புகழ் வானோங்கி இன்று விண்ணில் வெள்ளியாய் பிரகாசித்து வெள்ளி விழா காண்கின்றாய். சூரியனாய் உனைக் காண காத்திருக்கும் பல தலைமுறைகள். வாழ்க நின் புகழ்!, வளர்க நின் பணி!!

**கரிணி**

# A struggle for good vision

By Maulia Selvarajah

After contemplating in length and with much encouragement and support from family, I finally made the decision to conduct my first volunteer project. As an optometrist working with the local communities, it has always been satisfying to help improve the quality of sight in individuals. After studying and practicing for many years in the UK I have often contemplated reaching out to those in need outside of the country. Therefore doing some charity work involving eye health seemed like a logical step to take. After a year of planning and fundraising I set out on my voluntary work to Sri Lanka in July 2018. Two weeks were spent in Mulliavalai (in the Mullaitivu District), a small town destroyed by the 2004 tsunami and then hit by the extensive and bloody civil war, before it had a chance to recover.

Raising funds to help pay for the cost of glasses and collecting spectacle frames was the initial step. With the help of generous donations from family and friends money was raised. Several of the local opticians and the hospital I worked in, were more than happy to donate new frames in support of my work, which I collected and sent off to Sri Lanka in advance of my travels.

After gaining permission from the general hospital in Mullaitivu I set out on planning the details. The aim of the project was to provide a detailed examination on the health of the eyes and to provide glasses to those in need. I had heard of many people who had visited remote areas of Sri Lanka, including Mullaitivu in the past, and provided glasses. But after questioning this further it became clear that only basic reading glasses (ready readers) were being handed out. I was not aware of full health examinations of the eyes being performed, or of glasses that would help a person see in the distance and near. I had therefore decided that my main aim was to check the eyes and then prescribe glasses tailored to the individual.



**Maulia Selvarajah**

Three days had been planned out for clinics at Mullaitivu general hospital (fondly named Mancholai Hospital by the local residents). I learned earlier on in the planning stages that performing voluntary work alone would be a lot more demanding on numerous levels than working alongside an organization or charity.

Thankfully I had support from local doctors in the hospital that had gathered some staff to select and screen patients from across the district. The selection was based on the person's vision and any eye-related symptoms they mentioned. I had emphasized that the aid I provide should go to those most in need. The doctor was a general practitioner and had little knowledge on the eyes; she had been moved to the district in the hope to compensate for the lack of eye services in the past 7 years.

A room was provided with basic equipment within the hospital. Planning for the worst-case scenario meant I had brought my own equipment and test charts. Patients had arrived at 7am holding small numbered tokens awaited eagerly to be seen. My morning was spent providing a quick learning session for the support staff, explaining to them how the tests charts were to be used.

One by one patients were called in, each one sat and confessed all of their visual problems to me. Eye health was examined and advise given on their symptoms. A prescription was written out and the individual was directed towards a table containing frames to choose from. Measurements were taken and then the frames were put aside. The patient left with the promise that their glasses would be ready the following week. In the evenings all of the frames and measurements were



A struggle for good vision



Majority of the people seen were elderly, over the age of 65 years old. They were hard laborers and heavily dependent on their sight. Many of them spoke of their hardship from the war, tsunami and daily life. A recently widowed woman spoke of her struggle to work and raise a toddler at an old age, whilst continuing to mourn the loss of her husband and children. Like several others I met, the war had torn families apart, young adults were forced to fight and die in the war, leaving the elderly to care for newly orphaned children. Many had faced unexpected turns in their life and misery beyond anything I had imagined. An old lady, diagnosed with cancer, lamented on the loss of all of her relatives except one nephew who lived abroad but had failed to come visit her in all of these years. She cried silently as she mentioned she stayed alone in the hospital and feared she would die alone soon.

Majority of the individuals performed manual jobs, such as farming. In most cases they were the only working member of the family and heavily depended on the quality of their eyesight. Not all of the people that presented had poor vision. There was an older man, who worked in a farm and had complained to me about a very red and irritated eye for the past two days. We later found the cause to be a small grain of rice that had embedded itself onto the whites of the eye (conjunctiva) and caused severe pain and discomfort. He was astounded to find such a small grain could cause so much discomfort and was extremely pleased to have it removed.

Word of mouth had spread across the district and more and more people queued outside the hospital hoping to have their eyes looked at. They looked at me eagerly, as though I held the solution to all of their problems.

After three days the clinics came to a close. Carrier bags were filled with frames, all of which were driven to Jaffna town where the local optician (Visioncall opticians) was. I persuaded a local tuk-tuk driver to make the three-hour journey to help deliver the frames in return for a fee.

The local optician was a small company, who had kindly offered to glaze the lenses for a small fee. Due to limited machinery, many of the frames were dispatched to Colombo, the capital city, where the bulk of the reglazing was completed. After many days of pestering the company I finally received the phone call stating the frames were all ready to be collected. Once again, the friendly tuk-tuk driver made the journey to pick them up.

The final days of the trip were spent calling the patients back to deliver the glasses. Fitting and a quick vision check were conducted with general advise on how to look after the eyes and the new glasses.

Overall a total of 124 patients were seen, several had dense cataracts that required surgery, however the operation was declined simply due to the long distances needed to travel. Other pathology included glaucoma, dry macula degeneration and corneal infections were detected, and for whom the appropriate management was given. 100 glasses were dispensed to the individuals to suit their needs.

I was personally astounded by the sheer struggle the individuals I met had faced and continue to face. Being a girl from Jaffna, on all of my visits to Sri Lanka in the past, I had spent time either in Colombo or in Jaffna with relatives. Never had I seen people face such difficulties and so in my mind Sri Lanka and the northern district was a modestly well-off area. It therefore came as an immense shock to find only a few hours away in the district of Mullaitivu the residents of the town continue to face hardship and appeared to have little support from its neighboring town. I felt embarrassed at my own ignorance. There were moments when I felt ashamed to state I was from Jaffna. I have always been proud to talk of my heritage but on many occasions the thought that the people of Jaffna have been living an affluent lifestyle whilst only a few miles away their neighbors have ben suffering harsh lifestyle made me bow my head in shame.

Despite spending several years performing eye tests, the two weeks spent in the remote area was enlightening in many ways. I felt rewarded by the smiles I received, and the sheer delight at how well they could see. The trip gave me a sense of appreciation for my own life and sparked the urge to carry out many more voluntary works.

The poverty that many in the northern province of Sri Lanka face is a consequence of man-made problems. With many of the Tamil population living abroad in the Western world this poverty should be short-lived. Neither our roots nor our past should be forgotten. Every individual has a role to its society and country to help one another. Such a crucial role should not be restricted to the nation you currently reside in, but should include the homeland you originated from.

With the experiences I have gathered from this voluntary work, I intend to reach out to many more of the remote areas in Sri Lanka. There are hundreds of people struggling day to day with problems in their eyesight that could easily be treated with a pair of glasses.

I am happy to give up my free time to go to such people and help them, however all of this work requires funding. If anyone is interested and willing to help please free to contact me on mauli_55@hotmail.com.

# The role of Sri Lankan girls in maintain and preserving the traditional values in Sri Lanka



Sri Lanka is an island which attracted very many people from foreign countries. Sri Lanka is popular for its natural beauty and resources. Besides these Sri Lanka is a country which has been strictly following socio cultural economics and religious values, there are numerous Hindus, Buddhist temples, churches and mosques. In ancient Sri Lanka people were very pious and strictly follows the religious rituals and followed their traditional norms. In this article the role of Sri Lankan teenage girls in maintaining and preserving the traditional values are discussed.

Traditional values

In earlier times people in Sri Lanka lived together. Quantity of one family in the past was larger than today. The great grandparents dominated the families in all the manner. They read the Ithikasa Puranas and other religious literature and explained the morals embedded in them. They lived an exemplary life. Their children and grandchildren respected them, followed their values. When a baby girl is born the entire family took care of the girl. The teenage girls in the families are very much cared by giving good and nursing food. The girls were taught how to be safe and secure and not to get deceived by others. They were taught to look after themselves as well as others by learning to cook and doing other family chores. Generally, the girls learned aesthetic skills and they were trained to get involved in other skills such as embroidery, knitting, weaving and making handy crafts. The girls were fully engaged in work at home. In earlier time only a handpicked number of girls were allowed to study. In present Sri Lanka, the teenage girls play a different role here unlike the earlier time the family shifted from their home town for educational and occupational purposes. They live as single families. Both the parents go for work and children are left at home in order to make their children occupied and stay at home. Parents give them phones, computers and televisions. But majority of the teenagers misuse them without proper guide and knowledge and get fully engaged in them and neglect their studies. Gradually they get into the present trend of using social medias and attend parties with unknown people and spend time in coffee shops and snack bars. Driven by the rootless teenagers' behavior by fake attractions and trends. They will be dragged and to do mean deeds if they are not guided by the parents.

Now a days, teenage girls in Sri Lanka except the few take their own decisions without discussing with their parents. It is when there are some serious incident take place.

The parents, teachers and others have no knowledge about the activities of the teenage girls. The teenage girls are helpless when they are caught in the so-called fashion, trend and behavoiur which bring harm to them and destroyed their good future.



**Bavvatharani Ravindran**
**Nallur**

So, there are lots of drop outs in schools. They look for jobs in teenage itself. Therefore, the situation has worsened to the level of hunting jobs at teenage to fulfill their mean deeds.

Teenage is a period where confusion and small matters seem really big. Today teenage girls in Sri Lanka very much behaved like the ones in the developed countries. The most common problems the girls facing are changes in their appearance, self-esteem, education, bullying, friendship, opposite gender attraction, menstruation and depression. In the developed countries there are many organizations to check the behavior and gave counselling for the teenage girls. In Sri Lanka every day we hear, watch horrible gender-based harassment and raping and murdering and hiring teenage girls for child labour and for various other men purposes. Even in Sri Lanka teenage girls are tempted by giving money, dresses and other facilities by drug traffickers and other sexual activities and also, they are using them for robbing and pickpocketing.

In conclusion, the teenage is the sensitive age girls facing lots of challenges like two sides of a coin. The parents, school, neighbors, kit and kin and the country have to take urgent and necessary actions and make them involved in other productive educational activities and redeem them from getting involved in malicious activities. Teenage girls must be cared advised, entertained, and watched by their parents. The use of phones and computers should be restricted. Make sure that your teenage girl understand that she should focus on study well and obtain good marks also do not forget that grades are no way of judging a child's talent. Low grades do not make anyone less educated or less talented. There are plenty of ways in this earth to show her skills and talents that she can prove herself in. Encourage her to take up extra-curricular activities that she likes. Teach how to be safe and all about precaution too, as you may not always be able to control her relationships and tell that it is alright to fight with friends and learn to say no. Having problems and difference in opinions are not bad. The best way is to discuss these problems and then forget about them. Monitor friends that she makes and ensure that they are the right company.

Looking after, safe guarding and protecting teenage girls and making them good citizen is not only a parent's duty but also the country's responsibility.



இளங்கலைஞர்களை ஊக்குவிப்பதனால் கலையை வளர்க்க முடியும்

# நாட்டியம் கற்கும் ஆண்களுக்கு பெண்களின் பாவனை தொற்றிக் கொள்வதாகக் கூறுகிறார்களே அது உண்மையா?

**கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரா.**

**(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நடனப்பிரிவின் முன்னாள் தலைவர்)**

பரதம் என்ன பலன்களைக் கொடுக்கிறது ?
சகல உடலுறுப்புகளுக்கும் பயற்சியைக் கொடுக்கின்றது. உள்ளத் தூய்மையையும் மன நிம்மதியையும் கொடுக்கிறது. மனதை ஒரு நிலைப்படுத்தி யோகநிலைக்கு ஈடான தியானப் பயிற்சியை வழங்குகின்றது. ஆன்மீக நாட்டம் கொள்ள வைக்கின்றது. உடலழகு உள்ளத்தழகு ஆத்மதிருப்தி என்பவற்றைக் கொடுக்கிறது. நாட்டியத்தில் ஒன்றித்து உலக பந்தம் நீங்கி கற்பனா உலகில் இறை அனுபவங்களில் ஆழ்ந்து அரங்கிலிருப்பவர் களையும் அந்நிலையை அனுபவிக்க வழி செய்கிறது. ஞானிகள் புலனடக்கி ஆற்றும் அருந்தவத்திற்கொப்பான ஆத்மீக பலத்தை கொடுக்கிறது. அகத்தில் அனுபவித்த இறையனுபவம் முகத்தில் தெய்வீகக் களையாக வெளிப்படும். நல்ல நல்ல கருத்துக்களையும் செய்திகளையும் பார்வையாளர்களிடம் நாட்டியத்தின் மூலம் வெளிப்படுத்த முடியும்.
பார்வையாளர்களைக் கவரும் வகையில் ஆரோக்கியமான நடனத்தை வழங்குவதில் ஏதேனும் சிரமங்கள் உண்டா ?

இறை நம்பிக்கை, ஆடற்கலை மீதான அளவு கடந்த ஈடுபாடு, ஆடல் ஆற்றுகை அனுபவ ஞானம் என்பவற்றுடன் செய்யப்படும் நடன உருப்படியில் தனைமறந்து நர்த்தனம் புரிந்தால் பார்வையாளர்களைக் கவர்வதில் சிரமங்கள் கிடையாது. இறை வணக்கம், குரு வணக்கம், அரங்க பூஜை, சபையோர் வணக்கம் என்பனவெல்லாம் நர்த்தகி தன்னைத் திடப்படுத்தி சகல தடைகளையும் களைவதற்கான உளவியல் செயற்பாடுகளேயாம். எந்தவொரு நடன நிகழ்வையும் ஆரோக் கியமானதாகவும், பார்வையாளர்களை கவரும் விதத்திலும் வழங்குதல் வேண்டும். நாம் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டால் எந்தத்தடையையும் தகர்த்தெறிந்து சாதிக்க முடியும்.





வெற்றிமணி யேர்மனியில் 16.11.2003 ஆண்டு டோட்மூண்ட் நகரில் “வெற்றி நிலா” முற்றம் எனும் நிகழ்சியை நடத்தியது. சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டு திரு.வேல். ஆனந்தன் உரையாற்றினார். அங்கும் ஆண்கள் நடனம் பயில்வது அவர்களது ஆண்மையைக் குறைக்குமா எனக் கேள்வி எழுந்தது. பதில் அளிக்கையில்.
ஒரு போதும் இல்லை. ஆண்கள் தங்களைத்துறக்காது கதாபாத்திரமாக மாறவேண்டும்.
சிவதாண்டவம் ஆடுபவர் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் உடலில் நிரந்தரமாற்றம் ஏற்பட வாய்பேப் இல்லை என்றார்.

நாட்டியம் கற்கும் ஆண்களுக்கு பெண்களின் பாவனை தொற்றிக் கொள்வதாகக் கூறுகிறார்களே அது உண்மையா?

இது தவறான கருத்தாகும். நடனத்தினைக் கற்றுக் கொள்ளும் ஆண்களுக்குப் பெண்களைப் போன்ற இயல்புகள் தொற்றிக் கொள்ளும் என்ற சொல்ல முடியாது. சில ஆண்கள் அப்படிப் பழக வேண்டும் என விரும்பிச் செயல்பட்டாலே தவிர நடனம் பயில்வதால் பெண்தன்மை தொற்றிக் கொள்ளாது. நடனத்தினைக் கற்றுக் கொள்ளும் ஒருசில ஆண்கள் அர்ப் பணிப்புடன் விரும்பி கற்றுக் கொள்வார்கள்.

அவ்வாண்கள் நடன பாவத்தினை அடிக்கடி பயிற்சியை மேற்கொள்வார்கள். இதனாலும் அவர்களைப் பார்க்கும் நடனக்கலைஞர் அல்லாதவர்கள் இப்படியாகத் தவறாகப் புரிந்து கொள்ளலாம். இதே போன்று நடனக் கலையில் அதிகமாகப் பெண்கள்தான் கற்றுக் கொள்வார்கள்.

அவர்களுடன் இவ்ஆண்கள் அதிக நேரம் பழகுவதினாலும் நடனப் பயிற்சிகளில் ஈடுபடுவதனாலும் பெண் பாவனை அவர்களிடத்தே உள்ளது போன்ற ஒரு மயக்க நிலை தோன்ற லாம்.
பெண்களும் நாயக பாவங்களை அபிநயிக்கிறார்கள். அதனால் அவர்களிடம் ஆண்தன்மை தொற்றிக் கொள்வது இல்லையே. பாத்திரத்திற்கேற்றவாறு உணர்ந்து அனுபவித்து பாத்திரமாகவே மாறுதல்தான் நாட்டிய நிகழ்வின் வெற்றிக்கு வழிகோலும்.



கலைஞர் வேல் ஆனந்தன் அவர்களின், முதல் மாணவி பத்மினி அவர்களுடன் ஒரு நடனத்தோற்றம். கதக்களி இவருக்கு அத்துப்படி

அகில இலங்கை ஆறுமுகநாவலர் பேரவையினால் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் "நாட்டியமாமணி" என விருதும் பெற்றவர்.



# அலை வாசிக்கும் அதிசய ஓர்கன் இசை!

சிவஜெனனி



2005 ஆம் ஆண்டில் கிரோசியா (Croatia) நாட்டில் அங்குள்ள ஆர்கிற்ரேக் (கட்டிடக் கலைஞர்) ஒருவர் 230 அடி நீள அளவில் ஓர்கன் கருவியை வியக்கும் வண்ணம் செய்துள்ளார். இதில் என்ன அதிசயம் என்றால் இந்தக் கருவியை இயற்கையால் தான் வாசித்து மகிழ முடியும். அந்த இயற்கைக் கலைஞன் உலகின் மூன்றில் இரண்டு பகுதியை ஆக்கிரமித்துள்ள கடல் என்னும் பெரும் கலைஞன் அவனது அலைகள் பார்ப்பதற்கு அழகாகவும் கேட்பதற்கு இதமானதுமான அலைஓசைகள்.

புல்லாங்குழல் காற்றுப்புகந்தால் புதுப்புது இசையாகும் அதுபோல் இங்கும் கடற்கரையில் அமைத்த துவாரங் களுக்குள் அலைகள் அழைத்துவரும் காற்று புகுந்தால் புதுப்புது இசை ஆகும்.

அதாவது இந்த ஓர்கன் படிக்கட்டின் வடிவில் அடிறியாட்டிக் கடற்கரை (Adriatic Sea) அருகில் அமைக்கப் பட்டிருக்கின்றது. கடல் அலைகளே இந்தக் கருவியை மீட்டுகின்றன. கடலில் இருந்து அலைகளுடன் சேர்ந்து வரும் காற்று அந்தப் படிக்கட்டில் அமைத்திருக்கும் குழாய்கள் ஊடாக சென்று வெவ்வேறு அலைவரிசையில் எவராலும் வாசிக்க முடியாத புது இசையை உலகுக்கு வெளிப்படுத்துகிறது.
இயற்கை வாசித்தவன் சிறந்த கலைஞன், இன்று உலகில் உளள் எந்தக்கண்டு பிடிப்பகளும் இயற்கையின் சாயலின்றி எதுவும் இல்லை. கணனி என்றால் மூளை. விமானம்



சிவஜெனனி

என்றால் பறவை, கப்பல் என்றால்
மீன். ரோபோ என்றால் மனிதன்,
இசை என்றால் தென்றல், அலை,
பாட்டு என்றால் குயில்,
நடனம் என்றால் மயில்,
ஒளி என்றால் சூரியன் இப்படி
எல்லாமே இயற்கை!
இயற்கையை சற்று
இரசிகத்தெரிந்த ஒவ்வொரு வரும்
கலைஞர்களே!
பின்பு இந்தக் கடற்கரையில்
இரசிகர்கூட்டத்திற்கு கேட்கவா வேண்டும்.

அலகள் ஓய்வதில்லை! அப்படி என்றால் இந்தக் கடற்கரையில் ஓர்கனும் ஓயாது வாசித்துக் கொண்டே இருக்கும்.
அலை ஓசையை அணு அணுவாக இரசித்த ஒரு கட்டிடக் கலைஞனின் கரங்களுக்குள் இசை மீட்க ஒத்துக் கொண்டது அந்த மாபெரும் அலைகள்.



அந்த ஆனந்த அலைகளின்
அலைப்பாட்டுத்தான் இக் கடற்கரையில்
வாசிக்கப்படும் ஓர்கன் இசையாக
அசத்துகின்றது.
அதுவே அலை வாசிக்கும்
அதிசய ஓர்கன் இசை!



யாமினி சர்வானந்தா




தமிழினி தேசிங்கராஜா


ஒலிவியா தனபாலசிங்கம்.


நிமலன் சத்தியகுமார்




# வெற்றிமணி அரங்கங்களில் அதிகமாக நடனம் புரிந்த கலைஞர்கள்

1994 முதல் இன்று வரை வெற்றிமணி அரங்கங்களில் அதிகமாக நடனம்புரிந்தவர்கள் என்று எண்ணும்போது நம் கண்ணில் விரிபவர்கள் ஆனந்த நர்த்தனாலயம் அதிபர் ஆனந்த நர்த்தகி டாக்டர் யாமினி சர்வானந்தா,(ஜீவகன்) பவித்திரா செல்வகாந்தன் (ஜெயக்குமார்) நாட்டியக் கலாஜோதி தமிழினி தேசிங்குராஜா.நாட்டிய கலாஜோதி ஒலிவியா தனபாலசிங்கம். நாட்டிய கலாவித்தகர் நிமலன் சத்தியகுமரா். நடனப்பாடசாலைகள் என்று பார்க்கும்போது அதிகம் நிகழ்ச்சிகளைத்தந்து வெற்றிமணி விழாக்கள் சிறக்க உதவியவர்கள் வானதி வாணி நர்த்தனாலயம்,சலங்கை ஒலி நாட்டியப்பள்ளி,விக்னேஸ்வரா இசை நடனக் கலாமன்றம் ஆனந்த நர்த்தனாலயம், ஆடற்கலாலயம் என்பன மறக்கமுடியாதவை.







வானதி வாணி நர்த்தனாலயம், சலங்கை ஒலி நாட்டியப்பள்ளி, ஆனந்த நர்த்தனாலயம், விக்னேஸ்வரா இசை நடனக் கலாமன்றம், ஆடற்கலாலயம்




# என்னை ஜப்பானுடன் ஒப்பிடாதீங்கள்!

தாயகத்தில் 1966 களில் பாடசாலை விடுமுறை விட்டு தொடங்கும் போது, சில சமயம் எங்களுடைய கார்தான் எம்மைக் கூட்டவருதா அல்லது இது வேறு காரா என எண்ணும் வண்ணம் சிலசமயம் தடுமாறவைக்கும் எமது காரின் தோற்றம்.




ஆம் நாம் பாடசாலைக்கு செல்லும் எங்கள் சோமசெற் கார் முன்பக்கம் துருப்பிடித்து லைட் கண்ணாடி உடைந்து பாதி தொங்க ஒற்றைக் கண்ணனாகவும், சீட் எல்லாம் கிழிந்து, அதனடியில் இருக்கும் ஸ்பிறிங்கம்பி குண்டியில் குத்தாமலும் தடிச்ச போர்வை போட்டு மூடி இருக்கும்.
ஆனால் இப்பொழுதோ நிமிர்ந்த சிங்கம்போல் கண்ணைக் கவரும் கடும் பச்சை நிறத்தில், எந்த பள்ளம் மேடும் இல்லாமல் பளிங்குபோல் ஜொலிக்க, முன் போணற் திறக்கும் பிடியில் ஒரு சிங்கம் பாய, அடா எப்படி வர்ணிப்பது இப்ப அந்தக் காரை.
மொத்தத்தில் உள் இருந்த இஞ்சினைத் தவிர அத்தனையும் புதிதாய் பிறந்த குழந்தைமாதிரி சிரித்துக்கொண்டு இருக்கும்.
கார் கியர் மாற்றினால் சத்தம் நாலு சந்திக்கு கேட்கும். கோண் அடித்தால் அதுகூட அழுவதுபோல் அலறும். இப்ப தேவை இல்லாமலே கோணை அடித்துக்கொண்டு வந்து நிற்கிறது. தன் குயிலோசையை காட்டக் கூவும் கூயில் போல. இது எல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால். அன்று இருப்பதை பாதுகாப்பதும், அதனை அப்படியே புதிதாக வடிவமைப்பதும் சாதாரண ஒரு மெக்கானிக்கு கூடத் தெரியும். கார் இஞ்சின் சிலிண்டர், உள்ளே தேய்ந்து விட்டால், அந்த சிலிண்டர் ஓட்டைக்குள் ஒரு இரும்பை அடித்து, பின் இருக்கும் தேய்ந்த சிலிண்டருக்கு அளவாக ஓட்டையை மீண்டும் கடைந்து எடுத்து சிலிண்டரைப் பொருத்திவிட, சத்தம் போட்டுக்கொண்டு கார் புறப்படும்.

ஏன் சத்தமாக இருக்கிறது என்று கார் சொந்தக்காரன் மெக்கனிக்கை கேட்டால். அவர் சொல்லும் பதில் ஒரு நாட்டுவைத்தியரை மிஞ்சியதாக இருக்கும். ஆனால் அது அவர் சொன்னபடி நடக்கும். அதாவது காரை ஓடுங்கள் ஓட ஓட அது தேய்ந்து சரியாக வர சத்தம் நிற்கும் என்று.
இப்படி ஒரு காரை முழுதாகத் தயாரிக்காவிட்டாலும் முப்பது வருடம், நாற்பது வருடம் சென்றாலும் கார் தெருவில் ஓடும் வண்ணம் அதனை பாதுகாத்து தேவையானவற்றை தாமே செய்து, பொருத்தும் வல்லமை அன்றும் இருந்தது.
இன்று யேர்மனியில் ஒரு லைட் கண்ணாடி உடைந்தால் லைட்டை முழுதாக மாற்றவேண்டும். கதவு நெளிந்தால் முழுதாக மாற்றவேண்டும். ஆனால் அங்கு இன்றும் எந்த இடத்தில் நெளிவு இருந்தது என்று படைத்தவனாலும் கண்டுபிடிக்க முடியாமல் மீளாக்கம் செய்வதில் வல்வர்களாக நம்மவர்கள் திகழ்கிறார்கள்.

## யாழ்ப்பாணத்தில் தயாரித்து வாகனக் கண்காட்சி

ஒரு இஞ்சின் இருந்தால் போதும், வாகனம் பறக்கும் என்ற நிலைதான் அன்று இருந்தது. ஆனால் முழுதாக நாம் கார் தயாரிக்க வேண்டும் என்ற சிந்தனை உதிக்க தன்னம்பிக்கை அன்று வரவில்லை. அது மட்டுமன்றி அதற்கான ஆதரவு கொடுப்ப தற்கும் எவரும் இல்லை.



Made in Jaffna

இன்று அதாவது விடுதலைப் போராட்டத்தின் போது நமது பொருட்களை நாமே செய்யலாம் என்ற நம்பிக்கை உதித்தது. தேவையும் இருந்தது. அதற்கான ஆதரவும் இருந்தது. அதன் ஒரு கட்ட நகர்வாக இன்று மீண்டும் சுயமுயற்சி சுடர்விடத் தொடங்கியுள்ளது.

இன்று யாழ்ப்பாணத்தில் சுயமாக வாகனங்களைத் தயாரித்து கண்காட்சிப்படுத்தும் நிகழ்வு கடந்த 13.05.2018 ஞாயிறு யாழ்பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை மற்றும் திருமதி இ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

யாழ்.பல்கலைகழக பௌதீக கல்வி அலகு இயக்குனர் கே.கணேசநாதன் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலப் போதனா மொழி யியல் துறைப் பேராசிரியர் மகேஸ்வரக்குருக்கள் சரவணபவ ஐயர் மற்றும் அவரது குழுவினரது தயாரிப்பில் முற்று முழுதாக யாழ்ப்பாணத்தில் உருவான கார்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கண்காட்சியில; "Jaffna style gokart" "Solar powered baby car" "pedal power car" "Ultralight pickup" உள்ளிட்ட நான்கு வகையான கார்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

## Made in Jaffna



கண்காட்சியின் ஒரு கட்டமாக கார்களின் பவனியும் இடம்பெற்றது. குறித்த கார்களை சிறார்கள் எளிதாகச் செலுத்திப் பார்வையாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினர். குறித்த கண்காட்சி மற்றும் கார்களின் பவனியை ஏராளமானோர் ஆர்வத்துடன் கண்டு களித்ததுடன் கார்களுடன் நின்று புகைப்படங்களும் எடுத்துக் கொண்டனர்.
மேற்படி கார்களைத் தயாரித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலப் போதனா மொழியியல் துறைப் பேராசிரியர் மகேஸ்வரக்குருக்கள் சரவணபவ ஐயர் கருத்துத் தெரிவிக்கையில்,

நான் பேராசிரியராகக் கடமையாற்றி வரும் நிலையில் எனக்கு கிடைக்கும் ஓய்வு நேரங்களில் யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் விற்கப்படும் பழைய பொருட்களைப் பயன்படுத்தி சுமார் ஒரு வருடம் இரண்டு மாதங்களாக நேரத்தைச் செலவழித்து எனது குழுவினருடன் இணைந்து இந்த நான்கு கார்களையும் தயாரித்துள்ளோம். எமக்கு நேரமும், ஆக்கம் செய்யக் கூடிய தகுதிகளுமிருக்கின்றன. நாம் அதனைச் சரியான வழியில் பயன்படுத்தும் போது எமது சமூகத்திற்கும், நாட்டுக்கும் நல்ல வெளியீடுகளை நாம் வெளியிட முடியும்.

அனைத்துப் பொருட்களையும் நாங்கள் வெளிநாடுகளி லிருந்தே இறக்குமதி செய்கின்றோம். உதாரணமாக உணவுப் பொருட்களை நாங்கள் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கின்றோம். இந்த நிலையை நாங்கள் மாற்ற வேண்டும்.
எங்களிடமுள்ள பொருட்களை வைத்தே நாங்கள் உள் ஊரி லேயே பொருட்களைத் தயாரிக்கக் கூடிய மதிநுட்பம் எங்களிட மிருக்கிறது. இதனை நாங்கள் உரியவாறு பயன்படுத்தினால் எதிர்காலத்தில் எங்களுடைய சமுதாயம் தனியே தேசிய வருமானத்தை ஈட்டக் கூடியதொரு நாடாக வளரும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையிருக்கிறது.



இவ்வாறான கார் உற்பத்திகளைத் தயாரிப்பதற்கு அரசாங்கத்திடமிருந்து அனுமதியைப் பெற்றுக் கொள்வது மிகவும் சிரமமானதொன்று. அவ்வாறான அனுமதி இல்லாமல் நாங்கள் கார்களைத் தயாரிப்பது சட்டத்திற்கு முரணானது என்பதால் நாங்கள் சிறியளவிலேயே எமது பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றோம் என்றார்.

உண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள வளங்களைப் பயன் படுத்தி இவ்வாறான கார் உற்பத்திகளைத் தயாரித்திருப்பது மிகுந்த வரவேற்புக்குரியதொன்று. அதுவும் தமிழர்கள் இவ்வாறான தயாரிப்புக்களில் ஈடுபடுவது ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும் பெருமை சேர்க்கும் விடயம். ஆனால், அரசாங்கத்தின் அனுமதி இல்லாத காரணத்தால் வீதிகளில் குறித்த கார்களைச் செலுத்துவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. என்றார்.



அன்று இருப்பதை திருத்தி புத்துயிர் கொடுத்த வல்லுநர்கள் இன்று முழுதாகவே பூரணமானதாக இல்லாவிட்டாலும் நமது என்று மூச்சோடு வரும் இந்த உற்பத்தி நிச்சயம் உச்சத்தை தொடும். இதற்கு அரசு ஆதரவு வழங்கவேண்டும். இவர்களை ஊக்கப்படுத்தவேண்டும்.

நாம் நம்மவர்கள் செயல்களை பாராட்டியும் அவர்களுக்கு பக்கபலமாகவும் இருந்து செயற்பட வேண்டும். அவர்களது படைப்புடன் யப்பான் காரையோ யேர்மன் கரையோ ஒப்பிட்டு பேசல் ஆகாது.

இது மேட் இன் யவ்னா என்று ஆங்கிலத்தில் சொன்னாலும் குறையில்லை. நம்மவர் தயாரிப்புக்கள் உச்சம் பெறவேண்டும். பனங்கட்டி தயாரிப்பதை விட்டுவிட்டோம். நெல்லிரசம், சவர்க்காரம், காய்கறித்தோட்டம் இப்படி பல காணமற்போய்க் கொண்டு இருக்கின்றன.

காசை காசாலே உழைக்கவேண்டும் என்று ஒரு கூட்டம் அலைகிறது. காசை ஒரு உற்பத்தி மூலம் காணவேண்டும் என்ற எண்ணம் அருகிப்போகிறது. இதற்கு புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் பொறுப்பு.

கணனி பழுதாகிவிட்டது என்றால் உடன் இங்கு இருந்து வட்சப்பில் மெசேஜ் போகும், திருத்தம் காசுக்கு புதுசு வாங்கலாம் அனுப்புகிறேன் புதுசு வாங்கவும். இப்படி நாம் செய்தால் அங்கு சுயமுயற்சி எப்படி வரும். பனங்கட்டி செய்யும் இடத்தில் சென்று பனங்கட்டி கேட்க அவர்கள் சொன்ன பதில் இப்ப நாங்கள் செய்வதில்லை, வெளிநாட்டில் இருக்கும் மகள் பேசுவாள்! நாம் செய்வதை விட்டுவிட்டோம். காசு மகள் ஒழுங்கா அனுப்பிறாள்.
அது சரி இந்த பனங்கட்டி செய்யும் கலையை யாருக்கும் கற்றுக் கொடுக்கலாம் அல்லவா? இன்று கார் தயாரிப்பும் உது தேவை இல்லாத வேலை! நான் காசு அனுப்பிறேன் சும்மா முறியாதை என்று நாம் எழுதினால் எம் இனத்தின் ஆற்றல் முறிந்துவிடும்.



முதலில் நாம் யப்பானுடன் ஒப்பிடுவதை நிறுத்தினால் போதும் வாகனங்கள் தானாக உருவாகும். அரசும் - நல் முயற்சிகளுக்கு நல்லாதரவு கொடுக்க வேண்டும். கொடுக்குமா?கெடுக்குமா?




நன்றி.வெற்றிமணி 15.07.1971




1.தோசை

அம்மா தோசை சுடுகின்றாள்
அருகில் ஓடிச் செல்கின்றோம்
சும்மா இருங்கள் என்கின்றாள்
சுட்டுச் சுளகில் இடுகின்றாள்

அடுப்பை நன்றாய் எரிக்கின்றாள்
அகப்பை யினில்மா எடுக்கின்றாள்
தடுக்கை நாங்கள் விரிக்கின்றோம்
தருவேன் பொறுங்கள் என்கின்றாள்

தட்டைக் கரண்டி பிடிக்கின்றாள்
சரியாய்ப் பெரிய நிலவைப்போல்
வட்டத் தோசை சுடுகின்றாள்
வடிவாய்த் தின்பீர் என்கின்றாள்

சம்பல் அரைத்துத் தாளித்து
சட்டி நிறைய இருக்கிறது
தம்பி உண்ணத் தொடங்கோமோ?
சாப்பா டென்றால் விரும்போமோ?

2.அணில்

நாவற் கிளையில் திரிகின்றாய்
நானோ நிலத்தில் நிற்கின்றேன்
ஆவல் பெரிதாய் இருக்கிறதே
அணிலே! எனக்கோர் பழம்போடு!!

கிளைக்குக் கிளைநீ பாய்கின்றாய்
கிடைக்கும் கனியைக் கடிக்கின்றாய்
அழைத்துக் களைத்து நிற்கின்றேன்
அணிலே! எனக்கோர் பழம்போடு!!

கனிதான் நிறையக் கிடைக்கிறதே
காலை தொடங்கி நிற்கின்றேன்
அநியாயம் நீ புரிவாயோ?
அணிலே! எனக்கோர் பழம்போடு!!

கண்ணோ பார்த்து நோகிறதே
கழுத்தோ சுளுக்கிக் கொள்கிறதே
அண்ணாந் தடியில் நிற்கின்றேன்
அணிலே! எனக்கோர் பழம்போடு!!

கல்லால் எறிந்தால் கனிவீழும்
கால்நீ முறிந்து விடல்கூடும்
எல்லாம் உனக்காய் எறியேன்நான்
இங்கே எனக்கோர் பழம்போடு!!

3.காடு

காட்டுக் கொருநாட் செல்கின்றேன்
கரடி அங்கே நிற்கிறதாம்
ஆட்டுக் குட்டி புலிவாயில்
அகப்பட் டுணவே ஆகிறதாம்

மானைச் சிங்கம் துரத்தியதாம்
மயிலோ பாம்பைக் கொத்தியதாம்
ஆனை முதுகில் கரிக்குருவி
அரசன் போலே செல்கிறதாம்
நண்பா பாட்டுப் பாடென்று
நரிகா கத்தைக் கேட்கிறதாம்
பண்பா டற்ற ஒருபன்றி
பள்ளச் சேற்றைக் கிண்டியதாம்

தென்னை மரத்தில் இளநீரைச்
சிவிங்கி எட்டிக் கடிக்கிறதாம்
கொள்ளைத் தமிழில் ஏதேதோ
குரங்கு பேசிப் பார்க்கிறதாம்

காண்டா மிருகம் வருகிறதே
கண்டாற் பயமே தருகிறதே
வேண்டாம் காடென் றெழுகின்றேன்
விடிந்து தூக்கம் கலைகின்றேன்.

4. புகைவண்டி

காண்டா மிருகம் வருவதுபோல்
கதறிக் கொண்டு வருகிறதே
வேண்டாம் தம்பி ஓடாதே
வேடிக் கையினைப் பாராயோ?

கறுத்துப் பருத்துக் கிடக்கிறதே
கலக்கிக் குலுக்கிக் களைக்கிறதே
அறுத்துக் கொண்டு திரிகின்ற
ஆனை போல இருக்கிறதே

புகைக் கொட்டாவி விடுகிறதே
புக்குப் புக்கென் றிரைகிறதே
திகைத்துப் பதைத்துத் திணறாதே
செல்வோம் அருகில் பதறாதே

வயலில் நின்ற பசுவொன்று
வாலைத் தூக்கிப் பாய்ந்தாலும்
அயலில் வந்து புகைவண்டி
அடங்கி ஒடுங்கி நிற்கிறதே

ஒற்றைச் சிறுகை நீட்டுகின்ற
ஒருகை காட்டி சரியாதா?
மெத்தப் பெரிய புகைவண்டி
மிகவும் அஞ்சி நிற்கிறதே

5. சின்னக்குருவி

சின்னக் குருவி பறக்கிறது
சிறகைக் காற்றில் உதைக்கிறது
திண்ணைக் குந்தில் இருக்கின்றேன்
திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறது

வெய்யில் நன்றாய் எறிக்கிறது
வெளியிற் பயறு காய்கிறது
பையக் குருவி வருகிறது
பயற்றம் பாயை அடைகிறது


என்னைப் பார்த்துக் கதைக்கிறதே
ஏதோ கேள்வி கேட்கிறதே
இன்னும் நாங்கள் பழகாத
இனிய சொற்கள் சொல்கிறதே

பயறு வேண்டும் என்கிறதோ?
பசிக்கின் றதுபார் என்கிறதோ?
வயிறு சிறிய தானாலும்
வருத்தம் பெரிதே; என்கிறதோ?

பஞ்சம் வந்து கொன்றிடுமோ?
பத்துப் பயறு வீசுவதால்
கொஞ்சம் தம்பி என்கிறது
கொத்திக் கொத்தித் தின்கிறது

பிறகு நிமிர்ந்து சிரிக்கிறது
பின்னால் திரும்பிப் பார்க்கிறது
சிறகைக் காற்றில் விரிக்கிறது
சின்னக் குருவி பறக்கிறது.

மஹாகவியின்
பிஞ்சுப் பாடல்கள்



6. மாலைக் காலம்

கையிற் கடலைச் சரையோடு
கடலோ ரத்தில் நிற்கின்றேன்
வெய்யில் அங்கே வீழ்கிறது
மேற்குக் கடலில் ஆழ்கிறது

மேகம் மஞ்சள் ஆகிறது
மெள்ள மெள்ளச் சிவக்கிறது
காகக் கூட்டம் தலைமேலே
கத்திக் கொண்டு பறக்கிறது

கடலோ மணலிற் பாய்கிறதே
களைத்துத் திரும்பிப் போகிறதே
அடடா, தம்பி! வானத்தே
அங்கோர் வெள்ளி பூக்கிறதே

வெய்யில் போயும் இருளாச்சு
வெளிச்சத் தாலே பெரிதாயோர்
சைவர் வானில் இட்டதுயார்?
சரிதான்; நிலவே வந்ததடா!

7. விளையாட்டு

அப்பன் வருவான் விளையாட
அழகன் வருவான் விளையாட
சுப்பன் வருவான் விளையாட
சோழன் வருவான் விளையாட

வல்லி வருவாள் விளையாட
வடிவு வருவாள் விளையாட
நல்லாள் வருவாள் விளையாட
நளினி வருவாள் விளையாட

பொன்னி வருவாள் விளையாட
புனிதை வருவாள் விளையாட
தென்னன் வருவான் விளையாட
சேரன் வருவான் விளையாட

மாரி வருவாள் விளையாட
மரியாள் வருவாள் விளையாட
நூர்தீன் வருவான் விளையாட
நுகுமான் வருவான் விளையாட

இனியாள் வருவாள் விளையாட
இளையாள் வருவாள் விளையாட
சனிஞா யிற்றை விடுவோமா?
சரிநாம் ஓடிப் பிடிப்போமா?

8. விந்தை அறிந்திடுவாய்

பஞ்சு காற்றிற் பறப்பானேன்?
பனங்காய் நிலத்தில் விழுவானேன்?
பிஞ்சு மாங்காய் புளிப்பானேன்?
பிறகு கனிந்து சுவைப்பானேன்?

கல்லு நீருள் அமிழ்வானேன?
கப்பல் மட்டும் மிதப்பானேன்?
புல்லு மழையில் தளிர்ப்பானேன்?
பூக்கள் மலர்ந்து சிரிப்பானேன்?

பந்தை உருட்ட உருள்வானேன்?
பாறை அசையா திருப்பானேன்?
விந்தை பலவும் நிகழ்வானேன்?
விரும்பி நாங்கள் படிப்பானேன்?

விரும்பி நாங்கள் படிப்பதற்கே
விந்தை பலவும் நிகழ்கிறதாம்
கரும்பைத் தின்னப் பிடிக்காதோ?
கற்றுக் கொள்ளத் துடிக்காயோ?

9.முதற் பூ

காலை கண்ணை விழிக்கின்றேன்
கதவு திறந்து வருகின்றேன்
பாலைச் சிந்தி விட்டதுபோல்
படியில் வெய்யில் விழுகிறது

முற்றத் தினிலே பார்க்கின்றேன்
முதல்நாள் இருந்த மொட்டொன்று
புத்தம் புதிய பூவாகப்
பூத்துச் சிரித்து நிற்கிறது

நானே கையால் நட்டசெடி
நானே தண்ணீர் வார்த்தசெடி
ஆனபடி யால்எனைப் பார்த்து
அங்கே நின்று சிரிக்கிறது.

இதற்கு மட்டும் பேசுவதற்
கியலா திருந்த, இன்றைக்கே
முதற்பூ பூத்தென் செவ்வந்தி
முன்னால் நின்று சிரிக்கிறது.

மிக்க வாசம் தருகிறதே
மிகவும் மெத்தென் றிருக்கிறதே
அக்காள் தலையிற் சூடிடவே
அன்றே ஆய விடுவேனோ?

10. தொழில்



நெல்லை ஒருவன் விதைக்கின்றான்
நிறையச் சோறு படைக்கின்றான்
கல்லை ஒருவன் உடைக்கின்றான்
கட்டி வீடு முடிக்கின்றான்

பஞ்சை ஒருவன் நெய்கின்றான்
பால்போல் ஆடை செய்கின்றான்
அஞ்ச ஒருவன் வருகின்றான்
அவனோ கல்வி தருகின்றான்

பேனை ஒருவன் பிடிக்கின்றான்
பிஞ்சுப் பாடல் கொடுக்கின்றான்
வாளை ஒருவன் அளக்கின்றான்
மயிரைக் கூடப் பிளக்கின்றான்

வீணை ஒருத்தி எடுக்கின்றாள்
வியக்கும் இசையை வடிக்கின்றாள்
தோணி ஒருவன் வலிக்கின்றான்
தொடர்ந்து மீனாய் இழுக்கின்றான்

ஆலை ஒருவன் கட்டுகின்றான்
அதனாற் பயன்கள் காட்டுகிறான்
பாலை நிலமும் இவராலே
பசுமை பெற்று நிற்கிறதே



# எமது சிறார்களும் வேற்றுமொழிச் சூழலும்

"கலைவிளக்கு" சு.பாக்கியநாதன் B.A



இன்று உலகநாடுகளில் ஈழத்தமிழர்கள் தாயகச் சுதந்திர விடுதலைப்போர் காரணமாக முற்றிலும் கலாச்சார வேறுபாடுள்ள நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான மாறுபட்ட சூழலுக்கேற்ப எமது சந்ததிகளும் வளர்ந்து வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் படுகின்றார்கள். பிஞ்சு மனம் எதையும் உள்வாங்கிக் கொள்ளும் சக்தி படைத்தது. எனவே எமது சிறார்கள் தாம் வாழும் நாட்டுச் சிறுவர்களின் பழக்கவழக்கங்களையும், வாழ்வுமுறைகளையும் அப்படியே பின்பற்றத் தூண்டப்படு கின்றார்கள். இதனால், பெற்றோர்களின் முக்கிய கவனம் பிள்ளைகள் மேல் திருப்பப்பட வேண்டும்.

நமது தாயகம், நமது மொழி, நமது பண்பாடு, கலாச்சாரம், என்பவற்றை நாளாந்தம் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறி, வேறுபட்ட கலாச்சாரங்களின் தன்மை, நமது கலாச்சாரம் வேறு, நாம் வாழும் கலாச்சாரம் வேறு என்பதை இளவயதிலிருந்தே அவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

நமது கலாச்சாரம் வேறு, நாம் வாழும் நாட்டுக் கலாச்சாரம் வேறு என்ற பேதத்தை அவர்கள் மனதில் ஊற்றி வளர்க்க வேண்டும். இவ்வாறான வாழ்வில் வளர்ந்தவர்களின் மனநிலை ஒருபுறமிருக்க எமது சிறுவர்களின் வாழ்க்கை ஒரு திட்டவட்ட மான எதிர்காலமற்றதாக இருக்கிறது. தாய்மொழிக்கல்வி அற்ற நிலையில் தமிழ்மணம் மறந்த நிலையில் இன்று பல இடங்களில் பெரும்பாலான சிறுவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். எமது சிறுவர்கள் வாழும் நாடுகளுக்கு ஏற்ப அந்தந்த நாட்டு மொழியையே தாய்மொழி எனக் கொண்டு அதைப் பேசுவதிலும் படிப்பதிலும் அக்கறையுள்ளவர்களாக இருக்கின்றார்கள். அதுவே சரியென்றும் முறையென்றும் ஒருசில பெற்றோர்கள் நியாயம் பேசி வருகின்றார்கள்.

ஒரு பிள்ளை தன் சொந்த நாட்டைவிட்டு எங்கு பிறந்தாலும், எங்கு வாழ்ந்தாலும், அந்தந்த நாட்டு மொழியையே பேசுவது சர்வசாதாரணம் ஆகும். இது ஒரு விசித்திரம் அல்ல. பிள்ளை தானாகவே பேசக் கற்றுக் கொள்ளும். உதாரணமாக ஒரு தமிழ்ப்பிள்ளை பிரான்ஸ் நாட்டில் பிறந்து, அல்லது அங்கு வளர்ந்து பிரெஞ்சு மொழியைச் சரளமாகப் பேசினால் அது ஒரு பெரிய திறமை என்று கூற முடியாது. ஆனால், அப்பிள்ளை பிரெஞ்சு மொழியுடன் தாய்மொழியைப் தாய்மொழியான தமிழ் மொழியைப் பேச எழுதத் தெரியும் போதுதான் உண்மையான ஒரு விவேகமான பிள்ளை என்று கூற முடியும், போற்ற முடியும்.



"கலைவிளக்கு" சு.பாக்கியநாதன் B.A

எங்கள் பிள்ளைகளில் ஒருவர் கானா, நைஜீரியா நாடுகளில் பிறந்து வளர்ந்து வருமானால் அது கானா மொழியைத்தான் பேசும். கானா மொழி பேசினால், அது விவேகமான பிள்ளை எனலாமா? எமது தாயகத்திலுள்ள கிளி ஒன்றை நாம் இங்கே வளர்த்து, அதற்கு ஜேர்மன் மொழி சொல்லிக் கொடுத்தால், கிளியும் ஜேர்மன் மொழி பேசுவது ஆச்சரியம் இல்லையே. எனவே ஒரு பிள்ளை வாழ்வியற் சூழ்நிலைகளால் வளரும் நாட்டு மொழியையும், வேறு பிற மொழியையும் கற்றிருந் தாலும் அதனுடன் தாய்மொழிக் கல்வியறிவும் இருந்தாலேயே ஆற்றல் உள்ள பிள்ளை எனக் கூறமுடியும்.

ஜேர்மன் மொழியையோ, பிரெஞ்சு மொழியை யோ பேச, எழுத வாசிக்கத் தெரிந்திருந்தால் மட்டும் போதும். அதுதான் திறமை என்று எண்ண வேண்டாம். ஒரு பிள்ளைக்கு ஏறக்குறைய ஐந்து மொழிகளுக்கு மேல் கற்றுக் கொள்ளக் கூடிய ஆற்றல் உண்டு என குழந்தை மனோதத்து வவியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். எனவே ஜேர்மன் மொழியையோ, பிரெஞ்சு மொழியையோ, ஆங்கில மொழியையோ, வாழ்விட மொழியைக் கற்றுவரும் ஒரு பிள்ளைக்குத் தாய்மொழியாம் தமிழ்மொழியையும் கற்பித் தால் கலக்கமாகும் அல்லது குழப்பமாகும் என எண்ணுவது மாபெரும் தவறு.

எனவே ஒவ்வொரு பிள்ளையும் தாய்மொழியை அவசியம் கற்க வேண்டும். இது தமிழ்ப் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல எல்லா நாட்டுப் பிள்ளைகளும் தத்தம் தாய்மொழியைக் கற்றிருத்தல் அத்தியாவசியம் எனலாம்.

தாய்மொழி அறிவில்லாத பிள்ளையினால், தத்தம் கலாசாரங்களையும் மரபுகளையும் அறியவே முடியாது. எனவே கற்கும் மொழியுடன் தாய்மொழியும் கற்றிருப்பது பிள்ளையின் திறமைக்கு மேலும் அடிகோலும் என்பது மறுக்கமுடியாத உண்மையே.

இன்று சில பெற்றோர்கள் தம் பிள்ளைகள் ஜேர்மன் மொழியைப் பேசுவதையோ, பிரெஞ்சு, ஆங்கிலத் தைப் பேசுவதையோ தாம் வாழும் நாட்டு மொழியைப் பேசுவதைக் கண்டு பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு பேசும்படியே பிள்ளைகளை ஊக்குவிக்கிறார்கள். ஆனால், ஒரு காலத்தில் அப்பிள்ளை ஜேர்மன் மொழியிலோ, பிரெஞ்சு மொழியிலோ எழுதும் கடிதத்தை வாசித்து விளங்கக் கூடிய அறிவு பெற்ற பெற்றோர்களாக இருக்கின் றார்களா? என்பது கேள்விக்குறி.

எல்லா நாடுகளிலும் வாழ்ந்த பிள்ளைகளும் தாய்நாட்டில் சந்திக்கிறார்கள் என்ற எடுகோளின் கீழ் நோக்குவோம். நோர்வே, சுவீடன், பிரான்ஸ், நெதர்லாந்து, இத்தாலி, கனடா, சுவிற்சலாந்து, இலண்டன், ஜேர்மனி, டென்மார்க், ஆகிய நாடுகளில் பிறந்து வளர்ந்த பிள்ளைகள் சந்திக்கிறார்கள் என்றால், இவர்களுக்குரிய பேச்சு ஊடகம் எது? தமிழ்மொழி தெரியாது. எந்த மொழியில் எல்லா நாடுகளிலும் இருந்து வந்த பிள்ளைகள் உரையாடுவார்கள்? சைகை பாஷைதான் இவர்களுக்கு உதவி செய்யும். இந்தப் பரிதாப நிலையை மொழி பேசத் தெரியாத ஆதிச் சமுகத்தை அறிமுகப் படுத்தியது யார்? இதற்குப் பெற்றோர்கள்தான் குற்றவாளியா கின்றார்களேயன்றி குழந்தைகள் அல்ல.

நாம் எந்த நாட்டில் வாழ்ந்த போதும் எமது கலாச்சாரம், சமயம், மொழி, என்பவற்றைப் பேணு வதுடன் அவற்றை எமது சந்ததியினருக்கு ஊட்டி வருதல் வேண்டும். அந்நிய நாடுகளில் வாழும் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் அந்தந்த நாட்டு மொழியைக் கற்பது இலகு. அவற்றுக் கிடையே ஆர்வத்துடன் தாய்மொழியைக் கற்பதுதான் சிரமம். எனவே பெற்றோர்கள் அதிக அக்கறை எடுத்துத் தமது பிள்ளை களுக்குத் தாய்மொழியைக் கற்பிக்க வேண்டும். ஒரு பிள்ளை க்கு தாய்மொழி தெரியாமல் இருப்பதற்கு அவர்தம் பெற் றோர்களே காரணம் எனலாம்.

எடுத்துக்காட்டாக இலண்டனில் உள்ள ஒரு சிறுவர் பாடசாலையில் உள்ள அறிவிப்புப் பலகையொன்றில் "இந்த வாக்கியம்" பொறிக்கப் பட்டுள்ளது. "இங்கு ஆங்கில மொழியை மட்டும்தான் நாங்கள் பேசக் கற்றுக் கொடுக் கின்றோம். உங்கள் தாய்மொழிகளை நீங்களே அவர் களுக்குக் கட்டாயம் கற்பியுங்கள்" என்னும் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. பல இனத்தவர்கள் வாழும் அந் நாட்டில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளமை வரவேற்கக் கூடிய அறிவுபூர்வமான செய்கை எனலாம். ஆனால், ஜேர்மனியைப் பிரான்ஸைப் பொருத்தவரை இப்படிக் கேள்விப்பட்டதில்லை. அதற்காக நாம் நம் தாய்மொழியைக் கற்பிக்கக் கூடாது என்று அர்த்தமல்ல.

எனவே எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை நாம்தான் திட்டமிட வேண்டும், நிர்ணயிக்க வேண்டும். அந்நிய நாட்டவர்கள் அல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஜேர்மன் கல்வியோ பிரெஞ்சுக் கல்வியோ ஏதாவது ஒன்று போதும் எனத் திருப்தியடையாமல் தாய்மொழிக் கல்வியைக் கற்பித்து, பின் காலம் செல்லச் செல்ல இன்னோர் அந்நிய மொழியையும் பிள்ளைக்குக் கற்பிக்கலாம். அது பாடத்திட்டத்துடன் இணைந்த அத்தியாவசியமான பாடமாக உள்ளது. ஆங்கில மொழி, இத்தாலி மொழி என ஒன்று அல்லது இரண்டு என அந்நியமொழி ஒரு பிள்ளை அறிந்திருக்க வேண்டும் என ஒவ்வொரு நாட்டுப் பாடசாலைகள், கல்வித் திணைக் களங்கள் சட்டமியற்றியுள்ளமை பொதுவாக எல்லோரும் அறிந்ததே. இத்தோடு எமது பண்பாட்டையும் நாம் தமிழர் என்ற முத்திரையையும் குத்துவதற்கு ஒவ்வொரு தமிழ்ப் பிள்ளைகளுக்கும் தமிழ்மொழி தெரிய வேண்டும் என்பது எமது வேணவா. கண்மூடித்தனமாக வாழும் சில பெற்றோர்களால் இன்று சில பிள்ளைகள் தமிழ்மொழியையே ஜேர்மன் உச்சரிப்பில் எழுதி வாசிக்கிறார்கள். கலைவிழா ஒன்றிலே சிறுவர் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அப்போது ஒரு சிறுமி தனது பேச்சை(டொச்) ஜேர்மன் மொழியில் எழுதித் தமிழ்ப் பேச்சைப் பேசினாள். இப்படி இருக்கிறது ஜேர்மன் மொழி மோகம். இது உண்மைச் சம்பவம். இன்னும் சிலர் பரதநாட்டியப் பாடல்களை ஆங்கிலத்திலோ, ஜேர்மன் மொழியிலோ, பிரெஞ்சு மொழியிலோ எழுதிப் பாடமாக்கி, அதற்கு அபிநயம் பிடிக்கிறார்கள். இத்தகைய ஒரு நிலை யார் ஏற்படுத்தினார்கள். பெற்றோர்கள் தானே!

"தமிழ்மொழியை ஏன் எனக்கு நீங்கள் படிப்பிக்கவில்லை? என்ற ஒரு கேள்வியை தாய்மொழி தெரியாத பிள்ளை ஒவ்வொருவரும் என்றோ ஒருநாள் கேட்கத் தயாராக இருப்பார்கள் என்பதை இங்கு வாழ் பெற்றோர்கள் இன்னும் உணரவே இல்லை. "என் பிள்ளைக்குத் தமிழ் தெரியாது. ஆங்கிலம், ஜேர்மன், பிரெஞ்சு தான் தெரியும்" என்று சொல்லும் போது அவர்கள் காதில் இன்பத் தேன் வந்து பாயும். அப்பப்பா! அளவிட முடியாத ஆனந்தம்.

தன் பிள்ளை ஜேர்மனி நாட்டுச் சிறுவனைப் போலே, பிரெஞ்சு நாட்டுச் சிறுவனைப் போலே ஜேர்மன், பிரெஞ்சு கதைக்கிறான் என அற்ப சந்தோசம் அடைகின்றனர். ஆனால், அப்பிள்ளை. அதாவது, தன் பிள்ளை ஜேர்மனி, பிரெஞ்சு நாட்டுச் சிறுவர்களைப் போல தோலின் நிறம் வெள்ளையாக இல்லையே என்பதை மறந்து விடுவார்கள். எப்படிப் பிற மொழி பேசி வாழ்ந்தாலும் எமது பிள்ளையின் நிறத்தில் வேற்றுமை இருப்பது இயற்கை நியதி. மாற்ற முடியாத ஒன்று. அதேபோல்தான் ஜேர்மன் - பிரெஞ்சு மொழி கற்றாலும் தாய்மொழியும் அப்பிள்ளையை விட்டுப் பிரிக்க முடியாத ஒன்று என்பதை ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

வாழும் நாட்டுச் சிறுவர்களைப் போல நாமும் வாழலாம் என்ற மனப்பான்மையைச் சிறுவர் மனதிலே பதிய விடாமல் எமது கலாச்சாரத் தன்மைகளை நாம் சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்குப் பழக்குவதைத் தவற விட்டோமானால், அது பாரிய உருவில் விஸ்வரூபம் எடுத்து பெற்றோராகிய எமது மன நிம்மதியைச் சுக்குநூறாக்கும் என்பது உண்மை. அந்நிய கலாச்சாரத்திலே, அவர்களைப் போலவே தம்பிள்ளை வாழவேண்டும் என்று எண்ணுகின்ற பெற்றோர் எதிர்காலத்திலே ஜேர்மனி, பிரெஞ்சு சிறுவர்களைப் போல் பதினெட்டு வயதுக்குப் பின் தத்தம் சுய வாழ்க்கையை நாடிச் செல்லும் போது, அதற்கு இந்தப் பெற்றோர்கள் அனுமதி வழங்கத் தயாராக இருக்க வேண்டும். இது நடைமுறையில் எமக்குச் சாத்தியமாகுமா? சிந்திக்கத் தொடங்குங்கள்!

## வெற்றிமணி கால்நூற்றாண்டில் காலடி பதித்தது!




பொதுவாகவே வெளிநாடுகளில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றை அச்சிட்டு வெளியீடு செய்வது என்பது மிகமிகச் சிரமமான செயற்பாடாகும். அவ்வாறான சூழ்நிலையிலும் தமிழ் மணம் கமழும் வெற்றிமணி பத்திரிகை தோற்றம் பெற்று, வாலிபப் பருவம் எய்தி, எத்தனையோ சவால் களையும் தடைகளையும் கடந்து (01.06.1994 01.06.2019) 25 வருடத்தில் வெற்றியுடன் வீறுநடை போடுவது

பெருமைக்கும் பாராட்டுக்கும் உரிய விடயம் மட்டுமன்றி ஒரு சாதனை என்றும் கூறுவது பொருத்தமானதே.
தமிழ் மக்களின் ஆதரவும் வெற்றிமணி ஆசிரியரின் அயராத உழைப்புமே இந்த மாபெரும் சாதனைக்கு அடிநாதமாக அமைந்துள்ளன. வெற்றிமணி பத்திரிகை மட்டுமன்றி வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு. சிவகுமாரன் அவர்கள் பல நூல்களையும் தொடர்ந்து வெளியிட்டு இலக்கிய ஆர்வலர் களுக்கு விருந்து படைத்து வருவது குறிப்பிடக்கூடிய விடயமாகும். வெற்றிமணி தொடர்ந்து வெளிவந்து புலம்பெயர் நாட்டின் தமிழ்மொழி வளர்ச்சியிலே தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுக் கம்பீரத் தொனியுடன் ஒலிக்க வாழ்த்தி, ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன்(கண்ணா) அவர்களுக்கு எமது பாராட்டி னைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.
சு.பாக்கியநாதன் B.A
"கலைவிளக்கு"

# சிரிப்பின் சிறப்பு



டாக்டர் "கலைக்கதிர்" கதிர். துரைசிங்கம்
கனடா

சிரிப்பு அனைவரையும் கவரும் ஓர் அற்புத சக்தி. மனதை மயக்கும் ஒரு மந்திரசக்தி. மதம், மொழி, இனம், வயது, ஏழை, செல்வந்தர் ஆண் - பெண் என்ற பேதமின்றி அனைவரையும் இணைக்கும் பொதுவான மொழி சிரிப்பு.

முகபாவத்தின் மூலமோ, பல் தெரிய உதடுகளை விரிப்பதன் மூலமோ அல்லது சிலவகை குரலொலிகளை எழுப்புவதன் மூலமோ, இரசனை இன்பம், மகிழ்ச்சி ஆகியவற்றை வெளிப்படுத்தல் சிரிப்பு எனலாம்.
சிரி என்றால், நகை. நகைக்கு ஆபரணம் என்றும் பொருள். சிரிப்பு முகத்திற்கு அழகைக் கொடுக்கவல்ல ஒரு ஆபரணம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும். முகத்தின் அழகு நகையால் மேம்படும். நகையைத் தோற்றுவிப்பது நகைச்சுவை. நவரசங்களின் ஒன்றான நகைச்சுவை உணர்வும், சிரிப்பும், மனித குலத்திற்குள்ள தனிச்சிறப்பு. விலங்குகளிலும் நகைச்சுவை உணர்வு இருக்கலாம். ஆனால், மனிதர்களில்தான் இது துலாபாரமாகத் தெரிகிறது. கடி, கேலிப்பேச்சு, கோமாளித்தனம், வேடிக்கை ஒலி, சிலேடை, நையாண்டி, அங்கசேட்டை என்பன நகைச்சுவையின் புலப்பாடுகள். முகமலர்ச்சி, முறுவல், புன்னகை, நகை, வாய்விட்டுச் சிரித்தல், வயிறு குலுங்கச் சிரித்தல், விழுந்து விழுந்து சிரித்தல், கலகலவென்று சிரித்தல், என்பன நகைச்சுவை உணர்வின் வெளிப்பாடுகள்.
மற்றவர் சிரிக்கும் வகையில் எதையும் சுவைபடக் கூறுப வர்கள் அல்லது செய்பவர்கள் ஒருவகையினர்: மற்றவர்கள் சுவைபடக் கூறுவதையும் செய்வதையும் இரசித்துச் சிரிப்பவர்கள் இரண்டாம் வகையினர்.

சுவைபடக் கூறவோ, செய்யவோ தெரியாமலும், முயலாமலும், அதேவேளை சுவைபடச் செய்வதையும் கூறுவதையும் இரசித்துச் சிரிக்க முயற்சி செய்யாமல் இருப்பவர்கள் மூன்றாம் வகையினர். மன அழுத்தத்திற்குத் தூபமிடும் இன்றைய உலகில் மிக மோசமாக ஏதோ நடக்கப் போகிறது என்று அதை எதிர்பார்த்து, மகிழ்வதையும், சிரிப்பதையும், மலர் மறந்து விடுகிறார்கள். இவர்கள் பரிதாபத்திற்கு உரியவர்கள்.

தொழில்நுட்பத்தின் பொற்காலத்தில் பீடுநடைபோடும் நாம், நகைச்சுவை உணர்வில் கற்காலத்தை நோக்கிச் செல்கின்றோம் என்பது வருத்தத்திற்குரிய உண்மை. கைக் குழந்தையாக இருந்தபோது 200 - 300 தடவை தினமும் சிரித்துக் கொண்டிருந்த நாம் 20 ஐத் தாண்டியதும் 10 15 தடவையாவது தினமும் சிரிக்கின்றோமா! என்பது கேள்விக்குறியாயிற்று.
வாய்விட்டுச் சிரிக்கும்போது எமது சுவாசம் அதிகரிப்பதால், உட்கொள்ளும் பிராணவாயுவின் அளவும் அதிகரிக்கின்றது. மனம் விட்டுச் சிரிப்பதால் அசதி குறையும், உற்சாகம் ஏற்படும், உள்ளத்தில் தெளிவு பிறக்கும். இவற்றின் மூலம் அறிதிறன் அதிகரிக்கும், புரிந்து உணரும் திறன் கூடும், பேச்சுத் தொடர்பாடல் எளிதாகும். ஆளுமை உயரும், படைப்பாற்றல் மேம்படும், சுயபச்சாதாபத்தினைக்கூட துரத்தியடிக்கும் வல்லமை நகைச்சுவைக்கு உண்டு.

"நகை பிறக்க துயர் பறக்கும்" என்று ஒரு சொற்றொடர் உண்டு. சிரிக்க வைப்பவர்களையும் சிரிப்பவர்களையும் பார்த்தால் அவர்களின் முகம் பளிச்சென்று இருப்பதோடு, தெளிந்த மனநிலையை உணர்த்துவதாக இருக்கும். நகைச்சுவை தலைமுறை இடைவெளியைப் போக்கி விடுவதால், நகைச்சுவை உணர்வு உள்ளவர்களைச் சுற்றி எல்லா வயதினர்களும் கூடி இருப்பதைக் காணலாம்.



குருவாக, சீடனாக, நண்பனாக, பழகும் பொ.கனகசபாபதி அவர்களும், இக்கட்டுரை ஆசிரியர் கதிர். துரைசிங்கம் அவர்களும்

"வாய்விட்டுச் சிரித்தால், நோய்விட்டுப் போகும்" என்பது வழக்கு மொழி மட்டுமல்ல. விஞ்ஞான உண்மையும் கூட. மனித மனமும் மூளையும் மனிதனை இயக்குகின்றன. சிந்திக்கும் சக்தியை மூளைக்கு அனுப்பும் வடிகால்களில் ஒன்று சிரிப்பு எனலாம். உளவழுத்தம் (Depression) உள முறிவு (Frustration) உளைச்சல் (Stress ) பதற்றம் (Tension) பதைப்பு (Anxiety) இவை அனைத்தும் Adrenaline, Noradrenaline, Corticosteroids ஆகிய Hormone கள் அதிகமாகச் சுரக்கும்போது ஏற்படுபவை. மனம்விட்டுச் சிரிக்கும் போது Hormone அதிகமாகச் சுரக்கச் செய்யும் சமிக்ஞை, சுரப்பிகளுக்கு மூளையில் இருந்து புறப்படாது. இரத்தக்குழாயின் உட்சுவர் சுருங்குவதும் அதில் கொழுப்புப் படிதலும் இரத்த அழுத்தத்திற்கு முக்கிய காரணிகள்.

## மனம்விட்டுச் சிரிக்கும் ஒவ்வொரு கணமும் மரணம் ஒத்தி வைக்கப்படுகிறது

சிரிப்பு Endrophin னை மூளையில் சுரக்கச் செய்கிறது. Endrophin இரத்தக்குழாய்களின் உட்சுவரை விரிவடையச் செய்வதோடு வலி, துன்பம், ஆகியவற்றை உணரும் தன்மையைக் குறையச்செய்து மனநிலையை உற்சாகப்படுத் திவிடும். நோய் எதிர்ப்பு சக்திக்குக் காரணமாக இருக்கும் Antibodies மனம் விட்டுச் சிரிக்கும்போது அதிகரிப்பதால் நோய் எதிர்ப்புச் சக்தி வலுவடைகிறது. மனம்விட்டுச் சிரிக்கும் ஒவ்வொரு கணமும் மரணம் ஒத்தி வைக்கப்படுகிறது என்று கூறுகின்றார்கள். அரசசபைகளில் விகடகவி, சர்க்கஸ் இல் கோமாளி, நாடகம், திரைப்படங்களில் நகைச்சுவைக் காட்சிகள் என அன்று தொட்டு இன்றுவரை சிரிப்பு தனிஇடம் வகிக்கின்றது. நத்தார் கொண்டாட்டத்தின்போது வரும் நத்தார்ப்பப்பா (Santa Claus) கூட சிரிப்பை ஏற்படுத்தும் ஒரு பாத்திரம் எனலாம். சிரித்து, சிரிக்க வைத்து, சிந்திக்க வைக்கும் திரைப்படப் பாடல்கள் சில



# சிரிப்பின் சிறப்பு

சிரிப்புத்தான் வருகுதையா பொன்வயல்
சிரிப்பு வருது சிரிப்புவருது - ஆண்டவன் கட்டளை
சிரித்து வாழவேண்டும் - உலகம் சுற்றும் வாலிபன்
சிரிக்கிறேன் சிரிக்கிறேன் - ராஜபாட் ரங்கத்துரை
சிரி சிரி சிரி - ஆளவந்தான்
சிரிப்பு இதன் சிரிப்பு - ராஜா ராணி

சிரித்துச் சிரித்து என்னைச் சிறையில் இட்டாள் -தாய் சொல்லைத் தட்டாதே



## தாய் சொல்லைத் தட்டாதே

1956ல் வெளிவந்த ராஜா ராணி படத்தில் பாடலாசிரியர் அ.மருதகாசி எழுதிய வரிகளுக்கு N.S. கிருஷ்ணன்-மதுரம் பாடி நடித் திருந்தார்கள். இதில் "சிரிப்பு சிந்திக்கத் தெரிந்த மனித குலத்திற்கே சொந்தமான கையிருப்பு" என்று கூறப்படுகிறது. அத்துடன் சிரிப்பின் ரகங்களும் செய்து காட்டப்படுகின்றன. அசட்டுச் சிரிப்பு, அகங்காரச் சிரிப்பு, அதிகாரச் சிரிப்பு, ஆணவச் சிரிப்பு, பிறர் நோகச் சிரிப்பு, இவை அனைத்தும் ஆரோக்கியத்துக்குத் துணைபோகாத சிரிப்புக்கள். இவை எதிர்மறை விளைவுகளை உண்டாக்கும். திருவள்ளுவர் வெவ்வேறு அதிகாரங்களில் 15க்கு மேற்பட்ட குறள்களை நகைத்தல் சம்பந்தமாக தந்திருக்கிறார். பண்புடைமை அதிகாரத்தில் வரும்

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்
-999

என்னும் குறளின் விளக்கத்தைப் பார்ப்போம். சிரிக்கத் தெரிந்த மனிதனுக்கு இரவு கூட பகலாக இருக்கும். சிரிக்கத் தெரியாத மனிதனுக்கு பகல்கூட இரவாக இருக்கும்.

"நீங்கள் சிரித்தால் உலகம் முழுவதும் உங்களோடு சிரிக்கும்". ஆனால், அழுதால் நீங்கள் மட்டுமே அழ வேண்டும். துக்கம் எல்லோரிடமும் இருக்கிறது. ஆனால் மகிழ்ச்சியை எல்லோரும் கடன் வாங்க வேண்டியதாய் இருக்கு. சிரிப்பு ஒரு கலை. சிரிப்பு ஒரு கருவி, சிரிப்பு ஒரு சக்தி, சிரிப்பு ஒரு மந்திரம், சிரிப்பு ஒரு மருந்து, எனவே சிரிப்போம். வாழ்வில் சிறப்போம்.



## சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தவர் சந்திரபாபு




## வெற்றிமணியை மணி மணியாய் வாழ்த்துகின்றேன்

Germany "மணி" யில் வெள்ளிவிழாக் கண்டு சிரிப்புடன்
"மணி" ஒலி எழுப்புகிறது வெற்றி "மணி"
ஆசிரியர் சிவகுமார் ஒரு "மணி"
ஆசிரியரின் ஆசிரியர் சுப்பிர "மணி"
ஆக்கங்கள், நிழற்படங்கள் "மணி"
அச்சுப்பதிவு, வடிவமைப்பு "மணி"
விளம்பரங்களும் "மணி" (Money)

என்னை 2002 ல் நகைச்சுவை பற்றி எழுத வைத்து
அவற்றை 2005 ல் தொகுத்து காதோடு காதாக நூலாக்கி, 2008ம் ஆண்டு
வெற்றிமணி விழாவில் "கலைக்கதிர்" என பட்டமளித்து கௌரவித்த
வெற்றிமணி, பொன்விழாக் கண்டு தொடர நன்றியுணர்வுடன் வாழ்த்தும்

கதிர் துரைசிங்கம்
கனடா.05.04.2019



வெற்றிமணி விழா 2008 - டாக்டர கதிர் துரைசிங்கம் அவர்களுடன் வெற்றிமணி ஆசிரியர்கள் யேர்மனி .இலங்கை

# வெற்றி எங்கள் கையிலே!





**இளவாலை எஸ்.ஜெகதீசன்.**

வண்ணத்துப்பூச்சிக்கு வண்ணம் தீட்டிக் கொள்வது போல என்ற ஓர் அழகான சொற்சித்திரத்தை அடிக்கடி சொல்லிக் கொள்வார் வெள்ளி விழாக்காணும் வெற்றிமணியின் பிரதம ஆசிரியர் பல்கலைச் செல்வர் மு.க.சு.சிவகுமாரன். வெள்ளி விழா மலருக்கு எழுதுமாறு அவரது வேண்டுகோளால் அதே சொற்சித்திரம் என் இதயத்தில் நவீன ஓவியமாகி - எந்த வர்ணத்தை எப்படித் தீட்டுவது என்ற அழகியல் மயக்கத்தை என்னுள் ஏற்படுத்தியது!

வெற்றி மணியின் ஆலோசகர்களில் ஒருவராகத் திகழ்ந்த கவிநாயகர் கந்தவனம் அவர்கள் வெற்றி மணியை அன்றைய மாணவர்களின் கைகளுக்குள் 'கட்டாயமாக கட்டிவைத்ததும்' மாணவர்கள் வெற்றிமணிக்கு கடன் பட்டவர்கள் என அப்பொழுது வார்த்தையில் சில்மிஷம் செய்ததும் ஞாபகத் தில் இனித்தது.

ஒரு புத்தகம் யாரை அடைய வேண்டுமோ அவர்களை துல்லியமாகச் சென்று அடைய வேண்டும்.அதன் நோக்கம் நிறைவேற்ற வேண்டும். மக்கள் தொடர்பு சாதனங்கள் மனித வாழ்வில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற உணர்வு கடைசி வாங்கில் இருக்கும் கடைசி மாணவனின் காதுகள் வரை ஒலிக்க வேண்டும் எனக் கூறிய கவிநாயகரது அன்றைய வரிகளுக்குள் இன்றும் வசிக்கிறது மனது.

இலங்கையின் மத்திய மாகாணத்திலிருந்து அதுவரை காதில் கேட்டு வந்த வெற்றிமணி அப்பொழுதுதான் வட மாகாணத் திலிருந்து ஒலிப்பதற்காக ரகசியமாக மாணவர்வகளுடன் கைகுலுக்கத் தொடங்கியிருந்தது.

இலங்கையின் முதலாவது மாணவர் இதழான வெற்றிமணியில் சொல்லப்பட்ட விடயமோ, சொல்லப்பட்ட விதமோ எதுவோ ஒன்று கையில் கிடைத்த வெற்றி மணியை கீழே வைக்க விடாமல் உள்ளுக்குள் ஒரு சின்னக் கிளுகிளுப்புச் செய்தது.

இயல்பாகவே எதனையும் அறிந்து கொள்ளும் ஆர்வமுடைய மாணவர்களிடமும், தாம் அறிந்து கொண்டவற்றை பிறருக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்ற ஆவலுடைய மாணவர் களிடமும் பள்ளிக்கூடப்படிப்பை பங்குபோடவும் ஆரம்பித் திருந்தது. மாணவ வாழ்வுடன் நெருக்கமான ஓர் அடையாளம் வெற்றி மணிக்கு இருந்தது என்பதை வரலாற்றை மறக்காத வர்கள் மறந்து போவதில்லை.

காலங்கள் உருண்டோட ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியராக இணைந்திருந்தேன்.
அப்பொழுது ஒருநாள் பிரதம ஆசிரியர் எஸ்.எம். கோபால ரத்தினத்தையோ அல்லது வாரமலர் ஆசிரியர் ஈ..கே.ராஜ கோபாலையோ சந்திப்பதற்கென வெற்றிமணியின் ஆசிரியர் மு.க.சுப்பிரமணியம் வந்திருந்தார்.

அவர்கள் இருவரும் அலுவலகத்துக்கு வருவதற்கு சற்றே தாமதமாகும் என்ற நிலையில் தனித்திருந்த நாம் இருவரும் சினேகிதமான கருத்துக்களை அறிமுக வார்த்தைகளாக்கிக் கொண்டோம். தரக்குறைவான கட்டுரைகள் இரண்டொன்றை 'வேணுமென்றே' போட்டு உதிலும் பார்க்க நான் நல்லா எழுதுவேன் என இதர மாணவர் மனதில் 'உந்துதல்' ஏற்படுத்தி வெற்றி கண்ட சமயோசிதம் உங்களிடம் இருந்ததோ? என்றேன்.
- முறுவலித்தார்!
பாடசாலை ஆசிரியரும் பத்திரிகை ஆசிரியரும் பல்வேறு விடயங்களை அறிந்து இருக்க வேண்டும். எதனையும் புதிய கோணத்தில் வெளிப்படுத்தும் அறிவு இருக்க வேண்டும். இவ்விதமாக அன்றைய சிறு பொழுதில் அமைந்த எமது சிறு உரையாடல் பின்னர் இலங்கையில் சிறு சஞ்சிகைகள் நலிவுறுவதற்கும் மேலேறி வருவதற்கு பெரும் பிரயத்தனம் எடுக்க நேரிடுவதற்கும் இந்தியாவின் ஏகோபித்த ஆதிக்கமே காரணம் என்ற வார்த்தையில் ஸ்தம்பித்தது இன்னமும் மனசின் இடுக்குகளில் மாட்டிக் கொண்டு தவிக்கின்றது.

அருகில் மேசையில் இருந்த Readers's Digest சஞ்சிகையில் அவர் பார்வை படர்ந்தது.அதிலிருந்து கட்டுரை ஒன்றை எழுதி பிரதி செய்து கொள்வதில் அவர் மும்மரமாக மூழ்கினார். பதிவிறக்கம் - வருடல் - ஒளிப்பிரதி ஒளிநகல் இவை எல்லாம் என்ன என்று தெரியாத காலத்தில் பத்திரிகை உலகம் இருந்தது.
அன்றைய பத்திரிகையாளரின் அன்றாட பணிகளான செய்திகளை தரம் பிரிப்பதும் இச்செய்திகள் எத்தனை பந்திகளுக்குரியவை என தீர்மானிப்பதும் ,அதற்கேற்ப 12, 14, 18, 24, 36 புள்ளி எழுத்துகளை தலைப்பாக தெரிவு செய்வதும் படியெடுப்பதும்,மெய்ப்பு பார்ப்பதும், பக்கங்களை வடிவமைப்பதுவும் கட்டுரைகளை எழுதுவதும் இப்பொழுதும் என் சந்தோஷக் கற்பனையில் சஞ்சரிக் கின்றது. 48 அல்லது 72 புள்ளி எழுத்துக்கள் முன்பக்க முகப்பு செய்திகளுக்கு உரியவை.வெகு அபூர்வமாக அக்காலத்தில் உட்பக்கங்களில் பாவிப்பதும் உண்டு என்ற நினைவுக்கு கூட இன்னும் வயசாகிவிடவில்லை.

இலங்கையில் சிறு சஞ்சிகைகள் நலிவுறுவதற்கும் இமேலேறி வருவதற்கு பெரும் பிரயத்தனம் எடுக்க நேரிடுவதற்கும் முரணான ஆச்சரியமான அனுபவமொன்று எனக்கு பிற்காலத்தில் இங்கிலாந்தில் ஏற்பட்டது.

லண்டன் இதழியல் துறையின் கணக்கற்ற சஞ்சிகைளுடன் புத்தம் புதிதாக வாரந்திரி ஒன்று முளைத்திருந்தது. கவரும் விடயங்கள் எதுவுமே அதில் இல்லாததால் தாக்குப்பிடிக்குமா என பலரது விழிகள் ஏங்கின.

ஆனால் அவர்களின் விளம்பர யுக்தியொன்று கிடுகிடுவென அந்த சஞ்சிகையை சக்கை போடு போட வைத்து மூன்று வாரங்களுக்குள்ளாகவே இங்கிலாந்தின் முன்னணி சஞ்சிகை யாக்கி நிலைபெற வைத்தது அதிசயம்!

இளம் பெண்ணிடம் முட்டையொன்றைக் கொடுத்து, அதனை மார்பில் வைத்து 21 நாட்கள் அடைகாக்க வைத்தார்கள். இருபத்தொரு நாட்களும் குஞ்சு பொரிக்கும் வரை அப் பெண்ணின் நிலைமை பற்றியும் முட்டையின் தன்மை பற்றியும் செய்திகளை பிரத்தியேக படங்களுடன் பிரசுரித்துதான் அவர்கள் செய்தது.
தமிழரின் கலாசாரத்துக்கு ஒவ்வாத அபத்தமான அல்லது விபரீதமான விளம்பரம் எனினும் அவர்கள் புதிது புதிதாக எதையாவது செய்வார்கள் என்ற எதிர்பார்ப்பை என்ற நம்பிக்கையை ஊட்டியதுதான் எமக்கான பாடம்.
தரக்குறைவான கட்டுரைகளுக்கோ ஆபாச விளம்பரங் களுக்கோ கிஞ்சித்தும் இடமில்லை என்ற குறிக்கோளுடனும் நம்பிக்கையுடனும் வர்ணத்தமிழ் பேசி ஜேர்மனியில் வெற்றிமணி ஓங்கி ஒலிக்க ஆரம்பித்தது

வெற்றி எங்கள் கையிலே!

1994ல். நினைவுகள், நிகழ்காலநிகழ்வுகள், அறிவியல், இலக்கியம், கலை,கல்வி,வரலாறு, சினிமா,விளையாட்டு என செய்திகளாக, படங்களாக, ஓவியங்களாக மாறாத மனிதாபிமானத் துடனும் வாழ்வை நேசிக்கும் வைராக்கியத்துடனும் இதயத்துக்கு நெருக்கமாக இடம் பெயர்ந்து விட்ட உணர்வை எடுத்த எடுப்பிலேயே ஏற்படுத்தியது.

வான் உயர ஓங்கி நிற்கும் நாட்டிலிருந்து, வான் உயர ஓங்கி நிற்கும் தகவல் யுகத்திலிருந்து, வான் உயர ஓங்கி நிற்கும் வனப்புடன் வெற்றிமணி தமிழின் பண்பாட்டுச் செழுமங்களை ஜேர்மன் காற்று காதுகளுக்கு அறிமுகப்படுத்தியது நேற்றுப் போல் இருக்கின்றது.

பலவீனனின் பாதையில் தடையான கல் பலசாலியின் பாதையில் படிக்கட்டாகும் என்ற ஜேர்மனிய பழமொழியை வெற்றி மணி படிக்கட்டாக்கி அதற்குள் 25 வருடங்கள் பறந்தோடிவிட்டன.


எந்த வேலை உனக்கு பழக்கமானதோ அதில் புதுமைகளை புகுத்த மறக்காதே என்ற புது மொழிக்கு ஏற்ப மிக நேர்த்தியாகவும் விரிந்த பார்வையுடனும் வாசிப்போரின் மனதை செப்பனிடும் வகையில் பார்த்துப்பார்த்து வடித்த வார்த்தைகள் பரவிக் கிடக்க - சூழியலையும் அறிவியலையும் காட்டும் வெற்றி மணிக்கு வயது 25!

கல்லாமற் பாதி குலவித்தை என்ற ஆற்றல் இயற் பொருளாகவும், கற்ற கல்வி துணைப்பொருளாகவும் அமைய,இளமையோடும் இஇலக்கியத்தோடும் நிறமுள்ளதாகவும், எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி, புதிய தொனியில் வெற்றி மணி ஒலித்திட உள்ளிருந்தே உற்சாகமாக் கிளர்ந்த ஜேர்மன் தமிழ் காற்றும் இன்று வெள்ளி விழா காண்கின்றது.

மு.க.சுப்பிரமணியத்தின் வெற்றிமணி நேற்றைக்குரியது. மு.க.சு.சிவகுமாரனின் வெற்றிமணி இன்றைக்குரியது. என்ற வரலாற்றுச் சிறப்பை யாரும் வழிமறிக்க முடியாது.

இருந்ததைக் கொண்டு சிறந்தது அன்றைய வெற்றிமணி என்பது ஊர் அறிந்தது!
சிறந்ததைக் கொண்டு சிறப்பது இன்றைய வெற்றிமணி என்பது பார் புரிந்தது!

- வெற்றி மணியின் ஒலி வரலாற்றில் கேட்டுக்கொண்டே இருக்கும்!



01.05.1957


நடனம்: செல்வி. கலாநிதி சுப்பிரமணியம் வயது.07
அட்டைப்படம்.அ.குகதாசன்

## காலதத்தின் பெருமிதம்!

ஏறத்தாழ 50 வருடங்களுக்கு முன் கிராமிய இதழியல் எவ்வாறு இருந்திருக்கும் என்பதற்கும் தகவல் தொழில் நுட்ப யுகத்தில் இதழியல் இன்று எவ்விதம் இருக்கின்றது என்பதற்கும் நல்லதொரு சான்று வெற்றி மணி.


தமிழீளம் மாணவர்களுக்காக இலங்கையில் வெளிவந்த முதலாவது மாத இதழான வெற்றி மணி மூலம் அறிவின் பேரெழுச்சி அனைவரையும் சார வேண்டும் என்பது பெற்றவரின் நினைப்பு. சிந்தனை வீச்சுடனும் கற்பனை வளத்துடனும் வாசகர்களை வசப்படுத்தும் உன்னத எழுத்துக்களால் அதனை விசாலப்படுத்தி வியாபகப்படுத்தி வியப்பின் விளிம்பு வரை நவீனப்படுத்தியது பிறந்தவரின் முனைப்பு.
பசி எடுத்தவனுக்கு பாத்திரம் முக்கியமல்ல பண்டம் தான் முக்கியம் என இருந்து வந்த நிலையை மாற்றியமைத்து பாத்திரமும் முக்கியம் என நிருபித்துக் காட்டியவர் ஓவியர் - பத்திரிகையாளர் - கட்டுரையாளர் - கவிஞர் என பல திறங்குகளில் திறமையுள்ள கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.
இதயத்தில் இடம் பிடிக்கும் ஆக்கங்களின் களமாக அன்றும் இன்றும் திகழ்ந்து பரவலான வாசகர் வட்டத்தை வெற்றி கொண்ட வெற்றி மணி. - காலத்தின் பெருமிதம்!

வரலாற்றில் வாழும். வரலாறு வாழ்த்தும்.
**இளவாலை எஸ்.ஜெகதீசன்.**

# சக்தி அச்சகமும் வெற்றிமணியும்







கே.எஸ்.சுதாகர்

சிறு பிராயத்தில் நான் சக்தி 'அச்சகத்திற்கு செல்வதுண்டு. அப்போது ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்திலும், பின்னர் சுண்ணாகம் பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்னாலும் சக்தி அச்சகம் இருந்தது. அச்சுக்கூடம் செல்லும்போது சிலவேளைகளில் சினிமாவும் பார்த்ததுண்டு. அச்சுக்கூடம் போனதும் முதலில் அங்கே என்னென்ன அப்போது அடிக்கின்றார்கள் என்று பார்த்துவிடுவேன். பின்னர் ஒரு கதிரையில் அமர்ந்து ஏற்கனவே அங்கு பிரசுரமாகிய புத்தகங்கள் துண்டுப்பிரசுரங்களைப் படிப்பேன்.

கோர்க்கப்படும் அச்சுக்களைக் பார்க்கும்போது, சில இடங்களில் சொற்களின் நடுவே /பிளாங்கான (ஒரு எழுத்தும் இல்லாத) அச்சுக்களைக் காணக்கூடியதாக இருக்கும். எழுத்துக்கூட்டி வாசித்து அந்த எழுத்துக்கள் எவை எனக் கண்டுபிடிப்பது ஒரு விளையாட்டாக இருக்கும். அந்த விளையாட்டு எனக்கு மிகவும் பிடித்துப் போனது.

"அத்தான்... இது ஏன் எழுத்து இல்லாமல் / பிளாங்காக இருக்கு?"
"எழுத்துக்கள் பற்றாக்குறை தான் காரணம். இண்டைக்கு சிலதுகள் அடித்து முடித்துவிடுவேன். பிறகு அதிலிருந்து எழுத்துக்களைக் கழட்டி இதற்குப் போடுவேன்" என்றார் அத்தான். அத்தான் என்று இங்கே நான் குறிப்பிடுவது பொன்.இராசரத்தினம் அவர்களை.



பொன்.இராசரத்தினம்

இப்பொழுது உள்ள நடைமுறை போன்று ஒரேயடியாக அப்பொழுதெல்லாம் அச்சடித்துவிட முடியாது. அப்போதுள்ள தொழில்நுட்பம் அப்படி. எழுத்துக்கள் போதுமானவையாக இருக்கமாட்டா. அங்கையிருந்து எடுத்து இஞ்சை எண்டு போடுற நிலைமைதான்.

எது முதல் தேவை என்பதைப் பொறுத்து வேலை நடக்கும். அதுவும் ஒரு கலை. Time Management சிக்கனம் முக்கியமானது.

இப்போதும் எனக்கு ஞாபகம் வருவது பெரியதொரு சில்லுப் பூட்டின மெஷின் தான். ஒரு பக்கத்தில் அந்தச்சில்லு பூட்டியிருக்கும். கால் வைத்து இயக்குவதற்கு இயந்திரத்தின் அடியில் ஒரு தட்டும் இருக்கும்.

ஹபுளொக்' என்று சொல்லப்படும் அச்சுக்கலையின் நுணுக்கங்கள் பல. ஒரு கலர், இரண்டு கலர், மூன்று என்று வகைப்பாடுகள். "உங்களுக்கு எத்தனை கலரில் வேணும்?" என்றதைப் பொறுத்துத்தான் விலை விபரங்கள். இப்போது உள்ளவை போல மில்லியன் கலர் எல்லாம் அப்போது கிடையாது. அப்போது வெளிவந்த புத்தகங்களின் அட்டைப்படங்களைப் பாருங்கள். சிலவேளைகளில் 'ஆறுமுகசாமி' போல படங்கள் சற்றேநடனமாடுவதைக் கண்டிருப்பீர்கள். எல்லாம் இந்த வர்ணங்களின் விபரீதம் தான்.

இலங்கையில் வெளிவந்த முதலாவது சிறுவர் மாத இதழான வெற்றிமணி' அங்குதான் அச்சிடப்பட்டது.

வெற்றிமணி டாண் டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள் மொழி நலமுற ஒலித்திடுவாய் - என்ற

வாழ்த்து ஒலியுடன் வெளிவந்தது.


1950 இல் நாவலப்பிட்டியில் ஆசிரியராகப் பணிபுரிந்த அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களால் இந்த வெற்றிமணி ஆரம்பிக்கப்பட்டது. 1957 ஆம் ஆண்டுவரை நாவலப்பிட்டியிலும், 1958 இல் இருந்து க.வே.மகேந்திரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பூண்டுலோயாவிலும், பின்னர் 1964 இல் இருந்து திரு. பொ. இராசரத்தினம் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு முல்லைத்தீவு தண்ணீரூற்றிலும் இருந்து வெளிவந்தது வெற்றிமணி. தொழில் இடமாற்றம், கடதாசி விலை உயர்வு போன்ற பல காரணங்களால் இடையிடையே வெளிவருவதில் தடையேற்பட்டாலும், முல்லைத் தீவில் இருந்து வெளிவரும்போது அது தனக்கென ஒரு சொந்த அச்சகமான "சக்தி அச்சகத்தை" ஸ்தாபித்திருந்தது.

1968 இல் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் குருப்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலத்தில் அதிபராக பதவி உயர்வு பெற்ற பின்னர், சக்தி அச்சகம் யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரான்லி றோட்டிற்கு இடம் மாறி வெற்றிமணி அங்கிருந்து வெளியாகியது. அதன் பின்னர் 1972 இல் இருந்து 1979 வரை சக்தி அச்சகம் சுண்ணாகத்திலிருந்த பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம் மாறியது.

திரு.வை.சி.சிவஞானம், கவிஞர் வி. கந்தவனம், இரசிகமணி. கனக செந்திநாதன் மற்றும் டாக்டர் நந்தி (சிவஞானசுந்தரம்) அவர்கள் எழுதிய புத்தகங்கள் வெற்றிமணி வெளியீடுகளாக அன்று வெளிவந்தன.

பண்டிதமணி கணவதிப்பிள்ளை, பண்டிதர் இ.நமசிவாயம், இரசிகமணி கனகசெந்திநாதன், கவிஞர் வி.கந்தவனம், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கவிஞர் இ.நாகராஜன், காரை சுந்தரம்பிள்ளை, திக்குவல்லை கமால், க.மொழிவரதன்(மகாலிங்கம்), கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, வேல் அமுதன், வை.சி.சிவஞானம், நந்தி, பாலமுனை பாறுக், சரணாகையூம்,சௌமினி, மூதூர் கலைமேகம், சொக்கன், அரியாலையூர் ஐயாத்துரை, அருட்கவி சீ.விநாசித்தம்பி, கோப்பாய் சிவம், சு.சிவகுமாரன், பண்டிதர் சோ.இளமுருகனார், நெல்லைதாசன், திமிலைத்துமிலன் (எஸ்.கிருஷ்ணபிள்ளை), கேணிப்பித்தன் (சி.அருளானந்தம்), வ.ந.கிரிதரன் போன்றோரும் தமிழகத்திலிருந்து சாலை இளந்திரையன், மதுரை கா.தமிழ்த்தம்பி போன்றோரும் அன்று வெற்றிமணியில் எழுதிய எழுத்தாளர்களில் ஒரு சிலராவார்.

## சக்தி அச்சகமும் வெற்றிமணியும்



### "தமிழ் எங்கள் உயிருக்கு மேல்"

உன்னதமான இடத்தை வாசிப்பு பெற்றிருந்த அவ்வேளையில், அதனை உரிய முறையில் பாவித்து வெற்றி கண்டவர் அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள். அன்னார் 1980 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இவ்வுலகை நீத்தார். அத்துடன் வெற்றிமணியும் அங்கு ஓய்வு கொண்டது.





தந்தையும் தனையனும்

அமரர் மு.க.சுப்பிரமணியம். திரு.மு.க.சு.சிவகுமாரன்

அதன் பின்னர் - கவிஞர் வி.க.வின் தமிழ் எங்கள் உயிருக்கு மேல்' என்னும் வாசகத்துடனும், தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச் செல்கிறது' என்ற அரவிந்தரின் மணிமொழியுடனும் 1994 இல் இருந்து புலம்பெயர்ந்த தேசத்தில் வெளிவருகின்றது வெற்றிமணி. அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் புதல்வர் மு.க.சு.சிவகுமாரனை ஆசிரியராகக் கொண்டு ஜேர்மனியில் இருந்து வெளிவருகின்ற வெற்றிமணி, ஐரோப்பாவில் தொடர்ந்து வெளிவந்து வெளிவந்து வெளிவிழாக்கண்டு தொடரும், முதலாவது இலவச வண்ண மாத இதழாகும்.

திரு சிவகுமாரன் இலங்கை களனி பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பட்டதாரியாவார். அதனால் பத்திரிகை, வர்ணத்தில் அழகாகவும் சிறந்த வடிவமைப்புடனும் வருகின்றது. கலைகளுள் பழையது ஓவியம். மொழி தோன்று வதற்கு முன்னரே ஓவியம் தோன்றிவிட்டது என்பார்கள். எழுத்தும் ஓவியமும் ஒருங்கே சேர்ந்து அச்சுக்கலையின் வளர்ச்சியில் இன்று வெற்றிநடை போடுகின்றது வெற்றிமணி.

வெற்றிமணியில் வெளிவந்த கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், அறிவியல் விடயங்கள் நூலுருவம் பெறுகின்றன. தாயகத்தில் உள்ள மாணவர்களுக்கு இலவசமாக கொடுக்கப்படுகின்றன. இந்த வகையில் கவிஞர் வி.கந்தவனம், பொ.கனகசபாபதி, மாதவி, சுகந்தினி சுதர்சன், இந்துமகேஷ், கதிர் துரைசிங்கம், மு.க.சு.சிவகுமாரன், வலன்ரீனா இளங்கோவன் ஆகியோரின் புத்தகங்கள் நூலுருப்பெற்றுள்ளன.

2005ஆம் ஆண்டிலிருந்து, வெற்றிமணி மீண்டும் மாணவர் இதழாக காலாண்டிற்கொருமுறை யாழ்ப்பாணத்தில் இலவசமாக வெளிவருகின்றது. இதன் இணை ஆசிரியராக வலன்ரீனா இளங்கோவன் அவர்களும், கௌரவ ஆலோசகராக மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் உள்ளனர். அத்துடன் அறிவியல் ஆன்மீகம் கலந்த சிவத்தமிழ் என்னும் காலாண்டு சஞ்சிகையையும் 2004 இல் இருந்து வெற்றிமணி வெளியிடுகின்றது.




வெற்றிமணியின் ஸ்தாபகர் இன்று நம்மிடம் இல்லை. அதன் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்கள் பலரும் மறைந்து விட்டார்கள். வெற்றிமணி வெளிவந்த அச்சுக்கூடங்களும் இன்று இல்லை.
ஆனால் வெற்றிமணி இன்னமும் வந்துகொண்டே இருக்கின்றது. அது டாண்... டாண்...' என்று என்றும் எதிரொலிக்கும்.



தந்தையும் தனையனும்

யோ்மனியில் வெற்றிமணி அச்சாகும் அச்சகத்தின் உரிமையாளா்கள் Arona. Seltmann அவரது தந்தை Seltmann



# பெண் எனும் பேராச்சரியம்



**அமரர் பொ.கனகசபாபதி**
(முன்னாள் அதிபர் மகாஜனாக்கல்லூரி)

நீங்கள் எப்படியோ தெரியவில்லை ஆனால் என்னால், இந்த வயதில் தான் சிந்திக்கத் தொடங்கியுள்ளதால் போலும், பெண்ணினைப் பற்றிப்பிறப்புரிமையியல் (Genetics) ரீதியாகச் சிந்திக்க ஆச்சரியம் ஆச்சரியமாய் வருகிறது. ஒரு மனிதனிலே உள்ள இயல்புகள் யாவற்றையும், உயரமோ, குள்ளமோ, கறுப்போ, சிவப்போ,கூர்மூக்கோ, சப்பை மூக்கோ, சுருட்டை மயிரோ, வணங்கா முடியோ என ஒவ்வொன்றையும் 23 சோடி நிறமூர்த்தங்களில் (Chromosomes) அமைந்த பரம்பரை (Genes) அலகுகள் தான் தீர்மானிக்கின்றன என்பது நீங்கள் அறிந்ததே. ஒருவரிலே உள்ள பரம்பரை அலகுகளின் எண்ணிக்கை கிட்டத் தட்ட 100,000 ஆகும். இருபத்தி நான்கு சோடி நிறமூர்த்தங்கள் என்று சொன்னாலும் கூட அவற்றிலே 23 சோடிகள் மாத்திரமே உடல் இயல்புகளுக்குக் (somatic characters) காரணமானவை. எனவே அவற்றினை தன்மூர்த்தங்கள் (autosomes- குறியீடு-n) என அழைப்பர்.

மற்றைய ஒரு சோடி மட்டும் சற்று வித்தியாசமான தன்மை காட்டுபவையாக உள்ளன. அவற்றிலும் உடல் இயல்புகளுடன் சம்பந்தமான பரம்பரை அலகுகள் காணப் பட்டாலும் கூட அவற்றின் பிரதான தொழில் இலிங்கத் தீர்வையே ( Sex determination) அதாவது பிறக்கப் போகும் பிள்ளை ஆணா? பெண்ணா? என தீர்மானிப்பது இவ்நிறமூர்த்தங்களே. எனவே அவை இரண்டும் அயன்மூர்த் தங்கள் அல்லது இலிங்க நிறமூர்த்தங்கள்
( allosomess - குறியீடு- X) எனப் படுகின்றன.
இங்கேதான் நான் சொன்ன பேராச்சரியம் காத்திருக்கிறது. நிறமூர்த்தங்கள் எப்பொழுதும் சோடியாக அமைவதாலே இலிங்க நிறமூர்த்தங்களை XX எனும் குறியீட்டினால் குறிப்பிடலாம்.

மனித இனத்தின் கூர்ப்பின் ஆரம்பக் காலங்களிலே இவை இரண்டும் அச்சொட்டாக ஒத்திருந்தாலும் பின்னர் அவற்றில் ஒன்று சற்றே போக்கிரித் தன்மை காட்டி அதன் விளைவாக தன்னகத்தே கொண்ட பரம்பரை அலகுகள் பலவற்றை இழந்து சிதைந்து பரிதாபத்துக்குரியதாய் நின்றது.

கௌரவம் இழந்த இந்தப் போக்கிரி நிறமூர்த்தத்தை மற்றைய X, ஒப்புக்குச் சோடியாகக் கொண்டிருந்த போதிலும் இதனுடன் எந்த விதமான இணைதலோ அதன் விளைவாக ஏற்படக் கூடிய பகுதிப் பரிமாற்றமோ செய்ய முன்வராமையால் இந்நிறமூர்த்தம் கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரியாகவே வாழ வேண்டிய கொடுமை. இதன் கையாலாகாத தன்மை யைப்பிட்டுக் காட்டும் முகமாக இதனை Y எனும் குறி யீட்டினால் பரம்பரையியலறிஞர்கள் குறித்தனர்.

அடுத்ததாக ஒரு பெரும் பிரச்சனை! இந்த அவைக்குதவாத Y நிறமூர்த்தத்தை எங்கே கொண்டு போய் குப்பை கொட்டுவது.? “ செல்லும் செல்லாததற்குச் செட்டியார் வீடு“ என்பார்கள். எனவே, ஆண்வர்க்கத்துக்கு முதல் அடி விழுந்தது. Y நிறமூர்த்தம் ஆணின் ஏகபோக உரிமையாயிற்று. பெண்ணியம் பேசுபவர்கள் கவனியுங்கள், அன்றே பெண்ணுக்கு கௌரவமான அந்தஸ்து கொடுக்கப் பட்டுள்ளது என்பதை.
அன்று தொட்டு கருக்கட்டப்படுகையில் XX நிறமூர்த்தம் வருமானால் குழந்தை பெண்ணாகவும், XY வந்தால் குழந்தை ஆணாகவும் விருத்தியுறுகிற நியதி ஏற்பட்டது. நிறக்குருடு, குருதி உறையாமை, மாலைக்கண், வழுக்கை போன்ற இயல்புகள் X நிறமூர்த்தத்தில் அமைந்த பரம்பரை அலகுகளால் தீர்மானிக்கப்படுபவை. எனவே, அவை இலிங்கம் இணைந்த இயல்புகள் எனப் படுகின்றன. Y நிறமூர்த்தத்தில் பரம்பரை அலகுகள்? அண்மைக் காலம் வரை குடும்பங்கள் சிலவற்றில் பிரச்சனை ஏற்படக் காரணமான செய்தி ஒன்றைப் பிறப்புரிமையியலாளர் கூறி வந்தனர்.

சில ஆண்களிலே காதுச் சோணையில் மயிர் காணப் படுகின்றதை கண்டிருப்பீர்கள். இந்த இயல்புக்குரிய பரம்பரை அலகு Y நிறமூர்த்தத்திலேயே அமைந்துள்ளது என்றனர். அப்படியாயின் இவ்வியல்பு தந்தையில் இருந்தால் மகனில் கட்டாயமாக இருக்க வேண்டும். அப்படிக் காணப்படாவிட்டால் தாயின் கற்பு நெறியிலே சந்தேகம் ஏற்படக் கூடிய நிலை ஏற்பட, அது பல பிரச்சனைகளுக்கு வித்திடலாம். இது பிழையான தகவல் என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

ஒரு முக்கிய தகவல், (ஆண்களுக்கு மாத்திரம்) Y நிறமூர்த்தம் சிதைவடைந்ததால் அது தற்பொழுது X நிறமூர்த்தத்தின் மூன்றில் ஒரு அளவு பரிமாணத்திலேயே உள்ளதாம். போகிற போக்கைப் பார்த்தால் அது ஒரு காலத்திலே முற்றாகவே இல்லாமல் போகிற சாத்தியம் நிறையவே உண்டு. அப்போ ஆண்களின் கதி? கவலைப் படாதீர்கள். அது ஏற்பட இன்னும் பல தலைமுறைகள் செல்லும். நாம் அப்போ உயிர் வாழ்ந்தால்தானே அந்தக் கவலை!

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே பிறப்புரிமை அமைப்பிலே உள்ள வேறுபாடு வெறும் ஒரு X நிறமூர்த்தம் மட்டுமே. இந்த ஒரு சிறு வேறுபாடு எத்தகைய பாரிய வித்தியாசங்களுக்குக் காரணமாக அமைகிறது என எண்ணும் போது ஆச்சரியமாயில்லை? வெறும் பாலியல் சம்பந்தமான வேறுபாட்டுடன் நின்று விட்டால் பரவாயில்லையே! வேறு எத்தனை வேறுபாடுகள்!

பாலியல் வேறுபாடுகள் இருவகைப்படும். அவை முதல் இலிங்க இயல்புகள் ( primary sex characters) துணை இலிங்க இயல்புகள் (secondary sex characters) பெண்ணிலே பிறக்கும் பொழுதே காணப்படும் சூலகம், கருப்பை, யோனி போன்றவை முதல் இலிங்க இயல்புகள். மார்பகம் போன்ற துணை இலிங்க இயல்புகள் பின்னர் விருத்தியுறுபவை.

இவற்றுக்குக் காரணமாக அமைபவை சூலகம் சுரக்கின்ற புறோஜெஸ்ரறோன் ( Progesterone) ஈஸ்றோஜென் ( estrogen) போன்ற ஓமோன்கள் (hormones) ஆகும்.
ஒரு நிஜமான கதை சொல்கிறேன். கேட்கிறீர்களா? 1967ஆம் ஆண்டிலே வினிப்பெக் நகரிலே (கனடா) றெயிமர் தம்பதிகளுக்கு ஒத்த இணைகளாக இரு ஆண் குழந்தைகள் பிறந்தனர். குழந்தைகளுடைய ஆண் உறுப்புக்களில் முன்தோல் மூடியபடி காணப்பட்டமையால் முன்தோலை அகற்றும் பொருட்டு வைத்தியர் ஜீன் மேரி என்பவரிடம் சென்றனர்.

வைத்தியர் வெறுமனே அறுவைக் கத்தியைப் பாவித்து அகற்றுதற்குப் பதிலாக மின்காந்தமுறையால் எரிக்க முற்பட்டார். விளைவு? ஒரு பிள்ளையினுடைய ஆண் உறுப்பு பஸ்மமாகிவிட்டது. பரிதாபம். கொடுமை இனிமேல்த் தான்.
அமெரிக்காவில் ஒரு அரைக்கிறுக்கனான வைத்தியர் ஜோன் மனி என்பவர் இயற்கைக்கும் ( Nature) ஊட்டத்துக்கும் ( Nurture) இடையே ஏற்படும் இடைத்தாக்கம் பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருக்கும் பாலியலாய்வாளர் ( sexologist). அவர் தனது ஆய்வுக்காக ஒத்த இணைகளான இரு ஆண்களைத் தேடிக் கொண்டிருந்தார். ஒரு பிள்ளையை ஆணாகவும் மற்றையதைப் பெண்ணாகவும் வளர்க்க திட்டமிட்டிருந்தார். றெயிமர் தம்பதிகள் அவரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர். அவருக்கோ கொள்ளை ஆனந்தம். இப்படியான ஒரு அற்புதமான இணைகள்கிடைத்து விட்டதே. றெயிமர் தம்பதிகளுக்கோ தம் துன்பத்துக்கு ஒரு முடிவு வரவுள்ளதே என்ற நிம்மதி.

உடனடியாக ஆண்குறியிழந்த குழந்தையின் விதைகள் அறுவைச் சிகிசை மூலம் அகற்றப் பட்டன. புறூஸ் என்ற அவன் பெயர் பிறென்டா என மாற்றப் பட்டு பெண்ணாக வளர்க்கப்படுகிறான். பிறென்டாவுக்கு எத்தனையோ சித்திர வதைகள், அறுவைகள், பெண்ணுக்குரிய ஓமோன் ஊட்டல்கள் ஆனால் என்ன பிரயோசனம். அவள் பெயரில் மாத்திரமே பெண். காரணம்? பெண்ணின் துணை இலிங்க இயல்புகளை அவளுக்கு ஊட்டப்பட்ட ஓமோன்கள் உருவாக்கியிருக்கலாம். ஆனால் அவளின் முதல் இலிங்க இயல்புக்குக் காரணமாகவிருந்த Y நிறமூர்த்தம் அவளின் ஒவ்வொரு உடற்கலத்திலேயும் உள்ளதே. அதனை எப்படி மாற்ற முடியும்? அதனை மாற்றாத வகைக்கும் ஆண் ஆண்தானே! இறுதியில் வைத்தியர் மனி, மனிதனாகி தன் தோல்வியை ஒப்புக் கொள்கிறார்.


பிறென்டா மீண்டும் ஆண் ஆகிறார். தன் பெயரை டேவிட் என மாற்றி 1990ஆம் ஆண்டிலே ஜேன் எனும் பெண்ணை மணந்து தாம்பத்திய வாழ்க்கை மேற் கொள்கிறார். துர்ரதிஸ்ட்டம் ஆண்குறியோ, விதையோ இல்லாமலேயே வாழ்கிறார். X நிறமூர்த்தத்திலே ஏறக்குறைய இரண்டாயிரம் பரம்பரை அலகுகள் வரை உள்ளதாகக் கணிக்கப் பட்டுள்ளது. Y இல் ஒரு 20 வரையிலேதான் உள்ளனவாம். X நிறமூர்த்தம் இலிங்கத் தீர்வையுடன் சம்பந்தப்பட்டது என்றும் அதில் உள்ள பரம்பரை அலகுகள் இலிங்கம் இணைந்த இயல்புகளுக்குக் காரணமாய் உள்ளன என்று கூறுகிறார்கள். ஆனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைப் பாருங்கள். இவை எவ்விதம் வந்தன. விந்தை!
1. ஆயுட்காலம்: அலுவலக வேலைப் பழு, வீட்டில் இல்லத் தலைவியாய் ஆற்றும் தொடர் பணி எவ்வளவு தான் பெண்ணின் உழைப்பை சக்கை வாங்கினாலும் கூட ஆண்களிலும் பார்க்கப் பெண்களின் சராசரி ஆயுட்காலம் ஐந்து வருடங்கள் வரை கூடுதலாகவே உள்ளது.
இறப்பு இருவகையினால் ஏற்படலாம். முதுமை ஏற்பட்டு இயற்கையாக இறப்பது ஒரு வகை. நோயினாலோ, விபத்தினாலோ இறக்கின்ற அசாதாரண இறப்பு மற்றைய வகை. இரண்டிலுமே பெண்கள் ஆண்களிலும் பார்க்க சிறப்புத் தேர்வு பெறுகிறார்கள். பெண்ணிலும் பார்க்க நாளாந்தம் அடிப்படை அநுசேப இயக்கங்களுக்காக ஆண் செலவழிக்கின்ற சக்தி அதிகமே. இதனால் முதுமை விரைவில் ஏற்பட வாய்ப்புண்டு.

2.நோயியல் : மாலைக்கண், நிறக்குருடு போன்ற இலிங்கம் இணைந்த வியாதிகள் பெரும்பாலும் ஆண்களிலேயே காணப்பட்டாலும், பெண்களிலும் வரக் கூடிய சாத்தியம் குறைந்த அளவிலே உள்ளதே. இவை இலிங்க நிறமூர்த்தங்களில் அமைந்த இயல்புகள் எனவே ஆண்களில் வருவதைப் பெரிது படுத்த முடியாது. ஆனால் இதயக் கோளாறு, பெண்களிலும் பார்க்க ஆண்களில் அதிகமா யிருப்பதற்கு என்ன காரணம்? பெண்களிலே சுரக்கப் படுகின்ற ஈஸ்றோஜென் காரணமோ எனச் சந்தேகம் எழுகிறது. இதயச் சுவருக்கு குருதி வழங்கும் முடியுரு நாடி (coronary artery) அடைபடுமாயின் மாரடைப்பு (Heart attack) ஏற்படும். இந்நாடி பாதிக்கப் பட்ட ஆண்களுக்கு ஈஸ்றோஜென் கொடுக்கப் பட்டபோது இதயச் சுவருக்கு குருதி விநியோகம் சீரடைந் ததை ஆய்வாளர்கள் கண்டுள்ளனர். ஆண்களுக்கு உயிர் கொடுக்கும் வல்லமை கூட பெண்ணினத்திடம் தான் உள்ளதோ?

உளச்சோர்வு (Depression) ஆண்களிலும் பார்க்கப் பெண்களிலே கூடுதலாக உள்ளது என்பதை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். ஆண்களிலும் மும்மடங்கு அதிகமான பெண்கள் உளச் சோர்வினுக்கு ஆளாகின்றனர். எல்லா ஆதங்கங்களையும் உள்ளத்திலே அடக்கிப் பொறுமை பேணுதலால்த் தான் இந்நிலை என எண்ண வேண்டியுள்ளது. பெண்களிலும் பார்க்கப் பன்மடங்கு அதிகமா செறற்றோனின் (Serotonin) எனும் இரசாயனப் பதார்த்தத்தை ஆண்களின் மூளை சுரக்கிறதாம். இது உறக்கம், வன்முறை நடத்தை ( Aggressive behaviour) போன்றவற்றுக்குக் காரணமாய் அமையும். ஆண்கள் தம் ஆதங்கங்களை தமது வன்முறை நடத்தையால் போக்கிக் கொள்கின்றமையால் உளச் சோர்வு அதிகம் பீடிப்பதில்லை என எண்ண இடமுண்டு. 3.நிர்ப்பீடனம்: ஆறு வயதளவிலேயே ஆண்களிலும் பாரக்கப் பெண்களுக்குபற்றீரியா, வைறஸ் மற்றும் ஒட்டுண்ணிகளை எதிர்க்க வல்ல பிறபொருள் எதிரிகள் (Antibodies) கூடுதலாக உள்ளன என அண்மைக்கால ஆய்வுகள் ஊர்ஜிதம் செய்துள்ளன. ஆச்சரியம்தான்!

ஆனால் இது இயற்கை பெண்களுக்கு ஈந்த நற்பேறு. பெண் என்பவள் கற்பம் தரித்தல், மகப்பேறு, பாலூட்டல், குழந்தை பராமரித்தல் எனும் பணிகளை மேற்கொள்ளும் போது ஏற்படக்கூடிய அழுத்தங்களை எதிர்கொள்வதற்குரிய உடல் நலம் பெறும் பொருட்டே அவளில் பிறபொருள் எதிரிகள் அதிகம் இருக்குமாறு இயற்கை உதவிற்று என்கிறார்கள் ஆய்வாளர்கள்.





# இந்த பிரபஞ்சத்தில் நாம் எங்கே இருக்கின்றோம்.



கௌசி




இந்த பிரபஞ்சத்தில் நாம் எங்கே இருக்கின்றோம், எந்த அளவாக நாம் இருக்கின்றோம், எமது அறிவு பிற உயிர்களுடன் ஒப்பிடும் பொழுது எப்படியானது என்பன பற்றி ஆராய்வதே இக்கட்டுரை.

நாம் வாழும் பூமி சூரியக்குடும்பத்தைச் சேர்ந்தது. இச்சூரியக் குடும்பத்தில் ஒன்பது கிரகங்களும் அவை பிரயாணம் செய்கின்ற பாதைகளும் அமைந்த பரப்பு சிற்றண்டம் என்று அழைக்கப்படும். நாம் வாழுகின்ற பூமி தன்னைத் தானே சுற்றுவதுடன் சூரியனையும் சுற்றி வரும் பாதை இந்தச் சிற்றண்டத்திலேயே அடங்குகின்றது. 1008 சிற்றண்டங்கள் சேர்ந்த பரப்பு ஒரு பேரண்டமாகும். 1002 பேரண்டங்கள் சேர்ந்த பரப்பு ஒரு புவனம் ஆகும். 2214 புவனங்கள் சேர்ந்த பரப்பு சாகரம் எனப்படுகின்றது. 7 சாகரங்கள் சேர்ந்த பரப்பு பதம் எனப்படுகிறது. 814 பதங்கள் சேர்ந்ததே இந்தப் பிரபஞ்சம் என பிரபஞ்சப் படைப்புப் பற்றி தொன்மைத் தத்துவங்களும் அண்மை அறிவியலும் என்னும் நூலில் இருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது. நாம் வாழும் பூமி 51 கோடியே 66 ஆயிரம் கிலோ மீற்றர் கொண்டது. எனவே நாம் வாழுகின்ற பூமியில் நாம் வாழும் பகுதி எந்த அளவில் இருக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தில் நாங்கள் எந்த அளவில் இருக்கின்றோம் என்பதை இப்போது எம்மால் அறியக் கூடியதாக இருக்கின்றது.

நாம் வாழும் பூமி 4.54 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. அதன் வயது 460 கோடி வருடங்கள் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். இத்தனை கோடி வருடங்களில் நிலம், நீர், காற்று போன்றவற்றில் சிறிய நுண்ணுயிர்கள, தாவரங்கள், பூச்சிகள், ஊர்வன,விலங்குகள், மனிதன் என ஒரு பில்லியனுக்கும் அதிகமான வகையான உயிரினங்கள் வாழுகின்றன. அவற்றுள் ஒரு இனமே மனித இனம். இம்மனித இனத்திலே நாமே அறிவாளிகள். எம்மை மிஞ்ச ஆளும் இல்லை. எமக்கு நிகர் எவரும் இல்லை என மார்பு தட்டிக் கொள்ளும் நாம், இன்னும் கொஞ்சம் ஆழமாகப் பார்ப்போம்.

இந்த பிரபஞ்சத்தில் பூமி தவிர்ந்த வேற்றுப் பிரபஞ்சப்பரப்பில் எம்மைப் போன்ற மனிதர்களோ வேறு விதமான உயிரினங்களோ வாழ்கின்றனவா என ஆராய்ச்சியாளர்கள் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். எழுத்தாளர்களும் கற்பனை யில் உயிர்கள் இப்படி இருக்கலாம் என்று அப்படி இருக்கலாம் என்று வடிவங்கள் கொடுத்துக் கொண்டிருக் கின்றார்கள். இது பற்றிய விதம் விதமான ஆங்கிலப்படங்கள் வெளிவந்துள்ளன. ஒரு அண்டத்தில் இருந்து பிற அண்ட த்தை அடையவே மனிதனின் ஆயுள் காலம் முடிந்து விடும். இந்த அற்புதமான பிரபஞ்சப் படைப்பில் மனிதனும் அவன் போன்ற வேற்றுக் கிரகவாசிகளும் இம்முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப் பார்கள் என்பதே எனது கற்பனையா கின்றது.

எமது 450 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்தான் தாவரங்கள் தோன்றின என்றும், உலகில் மனிதனின் தொகை 700 கோடியாக அதிகரித்துள்ளது என்பதும் ஆய்வாளர்கள் கணிப்பீடு. இக்கணிப்பீடில் எமது ஆயுள் காலம் எத்தனை. நாம் வாழும் காலப்பகுதியில் திருவள்ளுவர், சுவாமி விபுலானந்த அடிகளார், தனிநாயகம் அடிகளார், விவேகானந்தர், கண்ணதாசன், சூரிய மையக் கோட்பாட்டை அறிவித்த Nicolaus Copernicus, மரபியலின் தந்தை Gregor Johann Mendel, தத்துவஞானி Socrates, பரிமாண வளர்ச்சிக் கொள்கையாளர் Charles Robert Darwin போன்ற எத்தனையோ எழுத்தாளர்கள், சுவாமிகள், மேதாவிகள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகளைக் கண்டிருக்கின்றோம். கேள்விப்பட்டிருக்கின்றோம். தற்போது இணையம் அவர்களை அடையாளம் காட்டுகிறது. காலப்போக்கில் எம்முடைய வீடியோ நாடாக்கள், ஒலி நாடாக்கள் மறைந்து போனது போல் இணைய வடிவமும் மாறலாம். அப்போது இணையம் தொலைத்து ரொபோட்டோக்கள் தேடும் காலங்களில் இவர்கள் மறக்கப்படலாம். இவர்கள் நினைக்கப்பட்டாலும் அவர்கள் ஆயுள் காலத்தின் பின் இவர்கள் ஆற்றிய சேவைகளும் பணிகளும் அவர்கள் இறப்பின் பின் அவர்களுக்கு என்னவாகின்றது? அவர்கள் மத்தியில் நாம் எங்கே நிற்கின்றோம்? என்பதை ஓடிக் கொண்டே இருக்கும் நாம் சிந்தித்துப் பார்க்கும் நிலையில் இருக்கின்றோம். எமது சந்ததியை முன்னோக்கிப் பார்க்கின்ற போது எமது தந்தையின் தந்தையை அல்லது எமது தந்தையின் பாட்டனின் பெயர் எமக்குத் தெரிந்திருக்கின்றதா? இல்லை அவர்பற்றி அறிகின்றோமா? இங்கு எமது நிலை இப்பிரபஞ்ச வாழ்நாளில் எங்கே என்று இப்போது அறிந்து கொள்கின்றோம்.

இத்தேடல் என்பது மனிதனில் மட்டும்தான் இருக்கின்றதா இல்லை வேறு உயிரினங்களிலும் இருக் கின்றனவா? என்பன கேள்விக்குறிகள். பூமியில் கோடிக் கணக்கான உயிரினங்கள் உள்ளன. அவற்றை தொல் காப்பியர்

ஒன்ற றிவதுவே உற்ற றிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவெ அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
ஆறறிவதுவெ அவற்றொடு மனனே
நேரிதி உயர்ந்தோர் நெறிப்படுத்தினரே"

என ஓரறிவு, ஈரறிவென வகைப்படுத்தினார். ஆனால் இவ்வகைப்படுத்தலை விஞ்ஞானிகள் ஏற்றுக் கொள்ள வில்லை. லின்னேயஸ் என்னும் பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானி 1707 ஆம் ஆண்டிலே உயிர்களின் உடலமைப்பு, தன்மை, இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தினார். உயிரினங்கள் முதலில் தாவரங்கள், பிராணிகள் என்று வேறுபடுத்தினார். பிராணிகளில் முதுகெலும்பு உள்ளவை, முதுகெலும்பு இல்லாதவை என்று இரு உபபிரிவுகள் உள்ளன. முதுகெலும்பு உள்ளவை மீன், தவளை, ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் என்று 5 பிரிவுகள் உள்ளன. முதுகெலும்பு இல்லாதவை அமீபா, கடற்பஞ்சி, மண்புழு, பூச்சி, சிப்பி, நட்சத்திரமீன் ஆகியன அடங்கும்.




தாவரங்களில் இரு பெரும் பிரிவுகள் உண்டு. பூ உள்ளவை, பூ இல்லாதவை. பூவுள்ள தாவரங்களில் மூடிய விதையுள்ளவை, மூடாத விதை உள்ளவை என இருவகைப்படுகின்றன. ஆல்கா, காளான், பாசி, பிரணி ஆகியவை பூக்காத தாவரங்களாகின்றன. பாலூட்டிகள் குட்டி போட்டு பால் தருபவை. ஆடும், மாடும் ஒரே குடும்பம் . பூனையும், புலியும் ஒரு குடும்பம் . கழுதையும், குதிரையும் ஒரே குடும்பம். இவற்றில் சைவமும் அசைவமும் உள்ளன. ஊர்வனவற்றுள்ள பாலூட்டிகள் உஷ்ண ரத்தம் உடையவை. நுரையீரல்களால் சுவாசிப்பவை. பறவைகளும் நுரையீரலால் சுவாசிக்கின்றன. ஆனால் அவை முட்டையிட்டு குஞ்சு பொரிப்பவை. ஒவ்வொரு பிரிவிலும் வெவ்வேறு லட்சணங்களும், பாகுபாடுகளும் இருக்கின்றன. இவ்வாறு லின்னேயஸ் அவர்களுடைய ஆராய்ச்சி செல்கின்றது.

இவற்றுடன் மனிதனின் திறமையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாம் எம்மை நாமே மெச்சிக் கொள்வது போலியாகவே படுகின்றது. பிறருக்காக எம்மை நாம் இழக்கின்றோம் சமூகசேவை செய்கின்றோம் என்று சொல்லும்போது முதலையின் பல் இடுக்கிலே இறைச்சி பொறுத்துவிட்டால், ஆ என்றபடி வாயை விரித்தபடி நீரினுள் முதலை படுத்திருக்கும். அப்போது குகிமா என்னும் குருவி வாயினுள் இருந்தபடி அதன் பற்களை துப்பரவு செய்துவிட்டுப் பறந்துவிடும். காகம் வீதியில் கொட்டிக்கிடக்கும் குப்பைகளை துப்பரவு செய்து செல்வதுடன் உணவுகளைக் கண்டால் கா…கா.. எனக் கத்தி தன் இனத்திற்கும் உணவுகளைப் பகிர்ந்தளிக்கும். இதுவும் ஒரு சமூக சேவையே.

மனிதர்களில் சிறந்த கட்டிடக் கலை விற்பனர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக் கின்றோம் கண்களே இல்லாத கறையான்கள் சிறந்த கட்டிடக்கலை நிபுணர்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியதே. இவர்களில் அரசன், அரசி, தொழிலாளர்கள், படைவீரர்கள், போன்ற பல பிரிவுகள் இருக்கின்றன. தொழிலாளர் கறையான்கள் செம்மண்ணை உண்ணும் அச்செம்மண் வயிற்றினுள் சென்று அமிலங்களுடன் சேர்ந்து ஒருவகை பதார்த்தமாகும். இதனை வாயினால் வெளியெடுத்தே தன் கட்டிடப்பணியைத் தொழிலாளர் கறையான்கள் மேற்கொள்ளும். இக்கட்டிடத்தில் ஏதாவது பழுது ஏற்பட்டுவிட்டால், டிக்டிக் என்று மற்றைய கறையான்கள் தட்டும்போது தொழிலாளர் கறையான்கள் வந்து திருத்த வேலைகளைச் செய்வார்கள். இக்கட்டிடத்தில் பலவகையான அறைகள் இருக்கின்றன. உலாவும் அறையும் உண்டு. தொனேசியாவிலுள்ள ஒரு கறையான் புற்று 15,000 தொன் எடையுள்ளது. இது 150 ஆண்டுகள் பழைமையானது. சோழர்காலக் கட்டிடடம், பல்லவர்காலக் கட்டிடம் என நாமும் பெருமை பேசிக் கொள்ளுகின்றோம். ஆபிரிக்கக் காட்டிலுள்ள கறையான் புற்றுக்களை யானைகளால்கூட உடைக்க முடியாது. இந்த புற்றுக்களை 21 பாகை சென்ரிகிறேட்டிலிருந்து 36 பாகை சென்ரிகிறேட் வரை வெப்பநிலையில் வைத்திருப்பார்கள். தொழிலாளர்கள் கட்டிடம் கட்ட பாதுகாப்புப் பணியைப் படைவீரர்கள் செய் கின்றார்கள். படைவீரர்கள் மெழுகுபோல் ஒரு எச்சிலை அக்கட்டிடத்தில் உமிழ்ந்துவிட அம்மணத்தில் பூச்சிகள் நெருங்காது. மீறி நெருங்கும் பூச்சிகளை படைவீரர்கள் கொன்றுவிடுவார்கள். இப்போது நினைத்துப் பாருங்கள் நாம் மட்டுமா நாட்டையும் வீட்டையும் காக்கின்றோம்? இப்படிப் பல பணிகளைப் பிரித்து ஒவ்வொருவருக்கும் கொடுத்து ஒரு இராச்சியமே நடத்தும் கறையான்களைப் பற்றி எம்முடைய ஔவைப்பாட்டி என்ன சொல்ல வருகின்றார் என்று பார்ப்போம்.

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவருக்குஞ் செய்யரிதால் யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது

தூக்கணாங்குருவிக் கூடு, தேன்கூடு, கறையான் புற்று இவை யாருக்கும் செய்வது அரிது. எனவே யாம் கெட்டிக்காரர் என்று வலிமை சொல்ல வேண்டாம் என்று உறைக்கச் சொல்லு கின்றார்.

கடலில் ஆயிரக் கணக்கான உயிரினங்கள், தாவரங்கள் வாழுகின்றன. இவற்றில் சில தாவரங்கள் மீன்களைப் பிடித்து இழுத்து உண்ணுகின்றன. சிலவகை மீன்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வாயினால் ஒரு வகை வாயுவைக் கக்கித் தம்மைப் பாதுகாக்கும் சிலவகை மீன்கள் தலை,வால் பகுதியில் மின் விளக்குகள் போன்ற ஒளியை உருவாக்கி மீன்களை மயக்கி இழுத்து இரையாக்கிக் கொள்ளுகின்றன. இது தம்மைத்தாம் பிரபல்யப் படுத்துவதற்கு ஓடித்திரிகின்ற மனிதர்களைப் போலவே தமக்கு வெளிச்சம் போட்டுத் திரிவதைக் காணக்கூடியதாக இருக்கின்றன. இதைவிட விலாங்கு மீனின் தலைப்பகுதி பாம்பைப் போன்றிருக்கும் வால்பகுதி மீனைப் போன்றிருக்கும். அது மீனுக்கு வாலைக் காட்டி மீனினம் என்று தப்பிக் கொள்ளும் பாம்புக்கு தலையைக் காட்டி பாம்பு இனம் என்று தப்பிக் கொள்ளும். இவ்வாறான விலாங்குமீன் போன்ற மனிதர்களை நாம் வாழும் காலத்தில் கண்டிருக்கின்றோம். எனவே கடல்வாழ் உயிரினங்களுடன் ஒப்பிடும் போது நம் பெருமையை நாம் சொல்ல வழியில்லாமல் போகின்றது அல்லவா.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்

என்று தரப்படுகின்ற எழுதப்பட்ட செய்தியை ஒரு சபையிலே வாசிக்கத் தெரியாதவனை மரம் என்று இகழ்ந்தார் ஔவைப்பிராட்டி. ஆனால்,

"மரம்தான் மரம்தான் எல்லாம் மரம்தான்
மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்" எனக் கவிதை பாடிய கவிப்பேரரசு வைரமுத்து மரங்களின் அத்தனை மகிமையையும் எடுத்துக் காட்டி மரங்களைப் பெருமைப் படுத்தினார்.

வேர்களால் உண்ட நீரை தலையாலே எமக்குத் திருப்பித் தருகின்ற தென்னையை எமது உபகாரத்திற்கு ஒப்பிடுவோமா. தன்னுடைய அங்கங்கள் அனைத்தையும் எமக்குப் பயன்படத் தருகின்ற பனையை எமது உபகாரத்திற்கு எடுத்துரைப் போமா?
நோய்களுக்கு மருந்தாக வாய்க்குச் சுவையாக வாழ்க்கைக்கு உதவியாகப் பயன்படுகின்ற மரங்களுக்குள் ஆச்சரியப்பட வைக்கும் பண்புகள் இருக்கின்றன.

இவ்வாறு உலகப்படைப்பின் அனைத்தும் அற்புதமே. அனைத்துடனும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாம் ?

# ஒரு வாசகியின் நேச வரிகள்



கைகளில் அமர்வது கனமாயினும் கருத்துக்கள் நிறைந்து விட்டால், மனதுக்குள் மகிழ்வைச் சொரிந்தால் பாரமும் பனியாகும். ஓடிஓடித் தேடும் ஓயாத தேடல்களை ஓரிடத்தில் இருந்து படித்துவிட்டால், உள்ளத்தின் இன்பம் பல மடங்காகும்.
வெற்றிமணி தரத்தை இழந்ததில்லை. முதல் தரத்தை யாருக்கும் விட்டுக் கொடுத்ததில்லை. கைகள் தடவித் தொட பளபளப்பாய் வண்ணங்கள் எண்ணங்களைக் கவர்கிறது. பத்திரிகையின் வடிவமைப்பு புகழ வார்த்தை தேடித் தவிக்கிறது. ஆசிரியரின் ஓயாத உழைப்பு உலகத்தில் மகுடம் சூடுகிறது, ஆசிரியரின் பத்திரிகைப் பாதுகாப்பும், அக்கறையும் மாசற்ற மணிவிளக்காய் பத்திரிகைக்குப் பட்டம் சூட்டுகிறது.

25 ஆண்டுகள் என்பது வெறும் கணக்கல்ல. 25 வயதுகளை, வாழ்க்கையை ஆசிரியர் பத்திரிகைக்காய்த் தாரைவார்த்த நாள்கள். வார்த்தைகளை எமது வாயால் சொல்வது இலகு, அவ்வாறு வாழ்ந்து பார்த்தாலே புரியும் இதற்காக அவர் பட்ட விருப்புத் துயரங்களும், மகிழ்ந்தே பெற்ற இழப்புக்களும். தான் பெற்ற குழந்தையைத் தாய் எவ்வாறு கண் காணிப்பாளோ, உலகத்துக்கு நல்ல பண்புள்ள அழகான குழந்தையாக ஒப்படைப்பாளோ, அவ்வாறேதான் வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் தந்தையிடமிருந்து சுவீகரித்த தன் குழந்தை வெற்றிமணியை உயிராகப் பாதுகாக்கின்றார் என்பதை மேடைபோட்டுச் சொல்லவேண்டிய அவசியமில்லை. பத்திரிகையில் கண்பட்டவுடன் மூளை உள்வாங்கிவிடும்.
காலமும், நேரமும், சூழலும், உடற் சுகமும், உள்ளத் துடிப்பும் வெற்றிமணி ஆசிரியருக்கு என்றும் சாதகமாகவே கூடவரவேண்டும். நான் வழிமேல் விழி வைத்துக் காத்து நிற்கும் பத்திரிகை நான் வாழும் வரை என்னோடு இணைந்திருக்க வேண்டும். எனைத் தாண்டி என் அடுத்த சந்ததியையும் கவர வேண்டும். சொல்லுக்கு சக்தி உண்டென்றால், நான் சொல்லும் வார்த்தைகளும் நிச்சயம் பலிக்கும்

வாழ்க வெற்றிமணி
வளர்க வெற்றிமணி ஆசிரியர் பணி
தொடர்க எழுத்தாளர்கள் கருத்துக்கள்
துணை சேர்க விளம்பரதாரர்கள்

என வாழ்த்தும்
இவ் உள் உணர்வுகளுக்குச் சொந்தக்காரி
படைப்பையும் படத்தையும் நேசிக்கும்

**கௌசி**



# ஈழத்தின் இழப்பு ஜெர்மனியின் ஆதாயம் ஆனது

**மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி**




மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி
அவர்களும் வெற்றிமணி ஆசிரியரும்

பாடசாலை ஒன்றின் அதிபராயிருப்பவர், எப்பொழுதும் பாடசாலைக்கு முதலில் செல்பவராகவும் கடைசியாக வெளியேறு பவராகவும் இருக்க வேண்டும் என்ற தீவிர கொள்கையுடன் நான் வாழ்ந்தேன். அதனைப் பெரும் அளவில் நிறைவேற்றியும் உள்ளேன்.
சிவகுமாரன் மகாஜனாக் கல்லூரிக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்ட பின்னர் எனது தீர்மானத்தை நிறைவேற்றுதல் கொஞ்சம் கடினமாக இருந்தது.
காலை 7:45க்கு நான் பாடசாலைக்குச் செல்வேன். அங்கே சிரித்தபடி என்னை வரவேற்பார் சிவகுமாரன். மாலை விளையாட்டுப் பயிற்சி முடிந்ததும், விடுதிச்சாலையைப் பார்த்து விட்டு ஏழு மணிவரையில் நான் வீடு ஏகுகின்ற பொழுதும் சித்திரக்கூடத்தில் விளக்கு எரியும்.
சிவகுமாரின் அர்ப்பணிப்பும் கடமையுணர்வும் என்னைப் பெரிதும் கவர்ந்தது. ஆசிரியர் கூட்டத்தில் கூட இதனை நான் எடுத்துக் கூறியுள்ளேன்.
காலத்தின் கொடுமை. நான் நைஜீரியா சென்று கனடா வந்தேன்.சிவகுமார் ஜெர்மனியில் குடியேறினார்.நாம் மீண்டும் 1995ல் ஜெர்மனியில் சந்தித்தோம். எமது நாட்டின் போர் எத்தனை எத்தனை அறிவு ஜீவிகளை நாட்டை விட்டு அகல வைத்துள்ளது என எண்ணினேன்.
ஆனால் சிவகுமாரன் நிச்சயமாக அங்கு வாழ்ந்தேயிருப்பார் என அடித்துக் கூறுவேன்.அவர் போன்ற பெரும் கலைஞர் நாட்டை விட்டு வெளியேறியது ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்றே நான் கருதுகிறேன். இது சத்தியம் நிறைந்த உண்மை. ஈழத்தின் இழப்பு ஜெர்மனியின் ஆதாயம் ஆனது.

இன்று புலம்பெயர்ந்து தமிழர் வாழும் நாடுகளில் வெற்றிமணி பத்திரிகை வடிவமைப்பிலும் நேர்த்தியிலும் முதலிடத்தில் உள்ளது என்பதை நான் உறுதியாக தெரிவிப்பேன். இது அவரது ஓவியக்கலையால் கிடைத்த பெருமை.

# எங்கு நட்டாலும் மாமரம் மாமரம்தான் வேறு மரமாக மாற முடியாது.



**யேர்மனி நாட்டின் அதிபர் அங்கெலா மேர்க்கல் முன்னிலையில் உரையாற்றிய நம்மவர்**





## டாக்டர் உமேஸ்வரன் அருணகிரிநாதன்

**சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்**

யேர்மனியின் பேர்லின் மாநிலத்தில் ஜனாதிபதி அங்கெலா மேர்கல் முன்னிலையில் நடைபெற்ற அகதிகளுக்கான அரசியல் மாநாட்டில் கலந்து கொண்டு மருத்துவரும் எழுத்தாளருமான டாக்டர் உமேஸ்வரன் அருண கிரிநாதன் அவர்கள் உரையாற்றினார். இவர் தனது உரையில் எதற்காக யேர்மனி வந்தடைந்தார் என்பதையும் தற்போது அகதிகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தையும் தன்னை மையப்படுத்தி எடுத்துரைத்தார்.

இவர் தன்னைப் பற்றிக் கூறுகின்றபோது போர்ச்சூழலில் பாடசாலைக்குச் செல்ல முடியாது பயந்து வாழ்ந்தமை பற்றியும், இலங்கையிலிருந்து எவ்வாறு ஜேர்மனியை வந்தடைந்தார் எனவும் தனது தாயிடம் செய்த சத்தியவாக்கின் படி தற்போது யேர்மனியில் டாக்டராக வாழ்கின்றமை பற்றியும் எடுத்துக் கூறினார். ஒரு மாமரத்தை இலங்கையிலிருந்து பிடுங்கிக் கொண்டு வந்து யேர்மனியில் நடுகின்ற போது அந்த வேர் யேர்மனி நாட்டு மண்ணுடன் வேர் விட்டு வளரும் அதற்கான தண்ணீர் உணவுகளை யேர்மனியிலிருந்துதான் பெறும்.

ஆனால், அந்த வேர் இலங்கையினுடையதே. மாமரம் வேறு மரமாக மாற முடியாது. மாமரம் மாமரம் தான். ஆனால், இங்கு பெற்ற சத்துக்களையும் நீரையும் பெற்று வளர்வதுபோல் இந்த ஜனநாயக நாட்டின் அடிப்படையினை மாற்றக் கூடாது. இது எமது கடமை. நான் இங்கு வந்து ஒரு டாக்டராக தற்போது இருப்பது போல் தற்போது வருகின்ற அகதிகளும் எதிர்காலத்தில் இந்த நாட்டுக்கான தகுதி பெற்றவர்களாக வரக்கூடும். அதனால், அவர்களை ஊக்குவிக்க வேண்டியதும் அவர்களைப் பக்கத்தில் வைத்து வாழாது அவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டியது எமது கடமை என்றும் எடுத்துக் கூறினார்.

புலம்பெயர்ந்து அகதிகளாக வாழுகின்ற ஒவ்வொரு மனிதர்களும் தமது நாட்டை விட்டு பல சோகச்சுமைகளுடனுமே வந்தடைகின்றார்கள். அகதிகளாக வருகின்றவர்கள்.

அதனாலேயே இவர் Der fremde Deutschen என்னும் புத்தகத்தையும் எழுதி வெளியீடு செய்திருக்கின்றார். அகதிகள் அவர்களை ஏற்றுக்கொள்ளுகின்ற நாட்டின் வளங்களைப் பெற்று வாழ்வதைப்போல் அந்த நாட்டின் அடிப்படை உரிமைகளைச் சிதைத்துவிடாது.

எதிர்காலத்தில் அந்த நாட்டுக்குப் பெயர் சொல்லும் நல்ல பிரஜைகளாக வாழ வேண்டியது கடமையாகும். ஆயினும் அவர்கள் தமது வேர்களை மறந்துவிட மாட்டார்கள் என்பதை டாக்டர் உமேஸ்வர் வலியுறுத்தியுள்ளார்.

கிடைக்கும் அரிய சந்தர்ப்பங்களை நழுவவிடாது நமது வலிகளையும் பதிவுசெய்தல் நன்றே.

வெற்றிமணி விழா 2015 ஆண்டு யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் நடந்தவேளை டாக்டர் உமேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தமை வாசகர்கள் அறிந்ததே.

# அழகியல் பத்திரிகைக்கான விருதை வெற்றிமணிக்கு வழங்கலாம்.




வெற்றி மணி என்னும் அழகிய பத்திரிகையை
நீண்ட காலத்துக்கு பிறகு இன்று நேரில் தரிசித்துப்
பரிசித்து உருசித்து வாசித்தேன்.

கலாநிதி சிவகுமாரன் அவர்கள் இப் பத்திரிகையை
ஜெர்மனியிலிருந்து கடந்த 25ஆண்டுகளாக அற்புதமாகவும்
தவம் போலும் செய்து வருகிறார், அவர்தம் தந்தையார்
அமரர் மு.க.சுப்பிரமணியம் (முன்னாள் அதிபர் பொன்பரமானந்தர்
வித்தியாலம் குரும்பசிட்டி) அவர்களால் 1950 இல் இலங்கை நாவலப்பிடியில்
தோற்றம் பெற்றது இப் பத்திரிகை.
கலையும் இலக்கியமும் காதல் கொண்டு பிரசவிக்கிறது வெற்றிமணி.
பக்கங்கள் ஒவ்வொன்றும் அழகிய குழந்தையின் மண்தொடாத பாதங்கள்
போல் மிருதுவாயிருக்கிறது வெற்றிமணி.
அழகிய பத்திரிகைக்கு என்று விருது வழங்கினால் கண்ணை மூடிக்கொண்டு
வெற்றிமணிக்கு வழங்கலாம்.
வெற்றிமணி வரலாற்றில் வெற்றி மகுடம் பெற வாழ்த்துகிறோம்.
-கல்லாறு சதீஷ்- சுவிஸ்



# மாதவிடாய் நிற்கும் காலத்தில் பெண்களின் எடை அதிகரிப்பு! தவிர்க்க முடியாதா?

**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

தவிர்க்க முடியாதா? மாதவிடாய் நிற்கும் காலத்தில் எடை அதிகரிப்பு ?

“உங்கடை நிறை கூடிக்கொண்டு போகுது. அதைக் குறைக்க வேண்டும்” என்றேன்.

“உங்களுக்குத் தெரியும்தானே டொக்டர். எனக்கு இந்த பீரியட் நிண்டாப் போலைதான் உடம்பு போட்டுட்டுது” என்றார்.

அது ஏற்கனவே எனக்குத் தெரிந்ததுதான். குடும்ப மருத்துவர்களுக்கு இத்தகைய விடயங்களைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அது தெரிந்திருந்தும் அவரது எடையைக் குறைப்பது அவசியம் என்பதை உணர்ந்ததாலேயே எடை குறைப்பு பற்றிப் பிரஸ்தாபித்தேன்.

அவர் சொன்னதிலும் உண்மை உள்ளதுதான். ஆனால் மாற்ற முடியாதது அல்ல.

weight-gain-after-menopause

பெரும்பாலான பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் காலங்களிலும் அதைத் தொடர்ந்து மாதவிடாய் முற்றாக நின்ற பின்னரும் எடை அதிகரிக்கவே செய்கிறது. இடை அழகியாக இருந்தவர்கள் சள்ளை தொங்கும் குண்டுப் பீப்பாய்களாக மாறுவார்கள். இடுப்பில் மட்டுமின்றி வயிறும் பெரிதாகும். அன்ன நடை நடந்த பெண்கள் ஆயாச நடையில் அரங்கி அரங்கி நடப்பார்கள்.

இது உங்களுக்கும் வரவேண்டுமா?

மாதவிடாய் பொதுவாக 50ற்கு சற்று முன் பின்னராக நின்று போகிறது. 50 முதல் 59 வயதுவரையான பெண்களில் 30 சதவிகிதமானவர்களின் எடை அதிகரிக்கிறது. சாதாரணமான அதிகரிப்பு உள்ளவர்களாக (Over Wight) மட்டுமின்றி அதீத எடை (Obesity) உள்ளவர்களாகவும் அவ் வயதுப் பெண்கள் மாறுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

early-menopause-information

அவ்வாறாயின் மாதவிடாய் நின்ற பெண்களில் எடை அதிகரிப்பது நியதியா என்று கேட்டால். இல்லை என்றே சொல்லலாம். போஷாக்கான உணவு முறைகளையும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் கடைப்பிடித்தால் அந்நேரத்திலும் எடை அதிகரிப்பைத் தடுக்க முடியும்.

### ஏன் அதிகரிக்கிறது

மாதவிடாய் நிற்கும் போது பெண்களில் உடலிலுள்ள பெண் ஹோர்மோனான ஈஸ்ரோஜன் அளவுகளில் வீழ்ச்சி ஏற்படுகிறது. இந்த மாற்றமானது உடலின் இயக்கத்தின் வேகத்தைக் குறைத்து சோம்பலைக் கொண்டு வருவதுடன் அதிகமாக உண்ணவும் வைக்கிறது என எலிகளில் செய்யப்பட்ட ஆய்வு ஒன்று கூறுகிறது. இது பெண்களுக்கும் ஏற்புடையதாக இருக்கலாம்.

hormone-graph

அதேபோல ஈஸ்ரோஜன் அளவு குறையும்போது உடலின் வளர்சிதை மாற்ற விகிதம் (metabolic rate) தாழ்ச்சியுறுகிறதாம். மாதவிடாய் நின்ற பெண்களின் சில பிரச்சனைகளுக்காக ஈஸ்ரோஜன் மாத்திரைகளை மருந்தாகக்கொடுக்கும்போது அவர்களது உடலின் வளர்சிதை மாற்ற விகிதம் அதிகரிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அத்தகைய ஹோர்மோன் மாற்றம் ஏற்படும்போது உடலானது மாப்பொருளையும் குளுக்கோசையும் பயன்படுத்தும் ஆற்றல் குறைகிறது. இதனால் அவை உடலில் கொழுப்பாக சேமிக்கப்பட்டு எடை அதிகரிக்கிறது என்கிறார்கள். மாதவிடாய் நிற்கும் கால எடை அதிகரிப்பிற்கு ஹோர்மோன் மாற்றங்கள் ஒரு காரணமாகச் சொல்லப்பட்ட போதும் அது தவிர்ந்த வேறு பல காரணங்களும் இருக்கின்றன. வயதாகும் போது உடல் உழைப்புச் செயற்பாட்டிலும் வாழ்க்கை முறையிலும் ஏற்படும் மாற்றங்கள் முக்கியமானவை.

உதாரணமாக வயசாகும்போது தசைகளின் திணிவு குறைகிறது. அதே நேரம் அதிலுள்ள கொழுப்பின் அளவு அதிகரிக்கிறது. தசைத் திணிவு குறையும்போது அவற்றால் முன்னரைப் போல கலோரிச் சத்தை பயன்படுத்த முடிவதில்லை. ஆனால் இவை தவிர்க்க முடியாத விடயங்கள் அல்ல. உட்கொள்ளும் உணவைச் சற்றுக் குறைத்து உடற் செயற்பாட்டை அதிகரிப்பதன் மூலம் எடை ஏறுவதை நிச்சயமாக் குறைத்துக் கொள்ள முடியும்.

→

வேறு வார்த்தைகளில் சொல்வதானால் இள வயதில் உட்கொண்டது போன்ற அளவுகளில் உணவுகளைத் தொடர்ந்து உட்கொண்டபடி உடலுக்கு போதியளவு வேலையைக் கொடுக்காவிட்டால் எடை அதிகரிக்கவே செய்யும்.

பரம்பரை அம்சங்களும் அந்நேர எடை அதிகரிப்பிற்கு காரணமாகலாம். உதாரணமாக உங்கள் அம்மா அல்லது அப்பா தொந்தியும் சள்ளையும் கொண்ட பருத்த உடல்வாகு உள்ளவரானால் நீங்களும் அவ்வாறு ஆவதற்கான சாத்தியம் அதிகமே.
மன உழைச்சல்களும் காரணமாகலாம். அந்த வயதில் பிள்ளைகள் உங்களை விட்டுப் பிரிய நேரலாம், கணவன் மரணமடையலாம், மணமுறிவு ஏற்படலாம். இத்தகைய சம்பவங்களால் மன உழைச்சல்கள் ஏற்படலாம். அதன் காரணமாக ஒருவர் தனது உணவு முறையில் அக்கறை செலுத்தாது விடுவார்கள். மனம் தளர்ந்து சுறுசுறுப்பாக இயங்காது சோர்ந்து கிடக்கவும் செய்வர். இவற்றால் எடை அதிகரிக்கும்.

60 சதவிகிதமானவர்கள் தங்கள் முதுமையில் போதுமான உடற்பயிற்சி செய்வதில்லை என அறிக்கைகள் கூறுகின்றன. தொடர்ந்து வயது அதிகரிக்கும்போது உடல் இயக்கத்தில் குறைபாடும் அதிகரிக்கிறது. இதைத் தவிர்த்து உளபூர்வமாக உடற் பயிற்சிகளில் ஈடுபடுவது அவசியமாகும்.

**எடை அதிகரிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் எவை**

உடல் எடையானது தேவைக்கு அதிகமாக அதிகரிக்கும் போது உடலில் பல்வேறு சிக்கல்களும் நோய்களும் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

பிரஸர் அதிகரிக்கும்.
நீரிழிவு நோய் வருவதற்கான சாத்தியம் அதிகமாகும்.
மாரடைப்பு நோய்க்கான சாத்தியமும் அதிகமாகும்.
அதைபோல மூட்டு வருத்தங்களுக்கான சாத்தியம் அதிகரிக்கும்.

குண்டான பலர் முழங்கால் மூட்டில் தேய்வு வீக்கம் என அவதிப்படுவதை நீங்களே அவதானித்திருப்பீர்கள்.
எடை அதிகரிப்பானது கொழுப்பு அதிகரிப்பதோடு தொடர்புடையதுதானே. இந்த கொழுப்பானது வயிற்றறைப் பகுதியில் அதிகமாகவே சேரும். அதனால் வயிறு பானைபோலாகும். வயிற்றறைச் சுற்றளவானது 35 அங்குலத்திற்கு அதிகமானால் அது மேலே கூறியது போன்ற பலவித ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்பது தெரிந்ததே. எனவே அதைத் தவிர்க்க வேண்டும்.

**எடை அதிகரிப்பதைத் தடுப்பது எப்படி?**

எடை அதிகரிப்பதனால் எடையைக் குறைப்பதற்கு மாயாஜால முறைகள் எதுவும் கிடையாது. மருத்துவர்கள் கிறுக்கித்தரும் மாத்திரைகளோ, ஊடகங்களில் விளம்பரப்படுத்தும் மருந்துகளோ, கிறீன் ரீயோ, கொள்ளுச் சாப்பிடுவது போன்றவையோ மட்டும் உதவப் போவதில்லை.
**உங்கள் முயற்சிதான் அதிமுக்கிய விடயாகும்.**

**1.சோர்ந்திருக்காதீர்கள்**
கூடியவளவு உடல் உழைப்பில் ஈடுபடுங்கள். சோர்ந்து கிடக்காதீர்கள். நடந்தால் கால் உழைவு கை உழைவு என்று சாட்டுச் சொல்லாதீர்கள். முயற்சியில் இறங்குங்கள். அந்த வயதிற்கு ஏற்றது நடைப் பயிற்சி. வாரத்தின் பெரும்பாலான நாட்களில் 30 நிமிடங்களுக்கு குறையாது கை கால்களை விசுக்கி வீசி நடவுங்கள். துள்ளல் நடை நீச்சல் பயிற்சிகளும் நல்லது. வீட்டுத் தோட்டம் செய்யுங்கள். மாடிப்படிகளில் ஏறி இறங்குங்கள்.

இவற்றைத் தவிர நாளாந்த வீட்டு வேலைகளிலும் ஈடுபடுங்கள். கூட்டுங்கள் கழுவுங்கள், தூசு தட்டுங்கள்.
2.உணவில் கவனம் எடுங்கள்.

சாப்பிடுங்கள் பட்டினி கிடக்காதீர்கள். உணவைத் தவிர்க்காதீர்கள்
ஆனால் உணவின் அளவிலும் எத்தகை உணவு உண்பது என்பதிலும் மாற்றங்கள் செய்யுங்கள். எண்ணெய் பொரியில் கொழுப்பு போன்றவற்றை மிகவும் குறையுங்கள். சோறு இடியப்பம், புட்டு, பாண், போன்ற மாப்பொருள் உணவுகளை அளவோடு உண்ணுங்கள். அல்லது சற்றுக்குறையும். அதற்கான மொத்த உணவின் அளவைக் குறைக்க வேண்டியதில்லை. காய்கறிகள் பழவகைகளை அதிகம் சேருங்கள்.
**3. கலோரி வலு**

அதே போல அருந்தும் பானங்களும் அதிக கலோரி வலு அற்றதாக இருக்க வேண்டும். மென்பானங்கள், இனிப்பூட்டிய பழச்சாறுகள், போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். நாளாந்த அருந்தும் தேநீர் கோப்பி போன்றவற்றிக்கு சேர்க்கும் சீனியின் அளவையும் குறைப்பது அவசியமாகும்.

தண்ணீர், மோர். அதிகம் இனிப்பு சேர்க்காத உடன் பிழிந்த பழச்சாறுகள், இளநீர் போன்றவற்றை கூடியளவு உபயோகியுங்கள். இவற்றைக் கடைப்பிடித்தால் மாதவிடாய் நின்ற பின்னரும் மோகவைக்கும் குமரிபோல உங்கள் உடல் வனப்பைப் பேணிக்கொள்ளலாம்.

## நான் சிறுவயதில் எழுதிய வெற்றிமணியா இது!





மகிழ்ச்சியில் டாக்டர் எம். கே.முருகானந்தன்

வெற்றிமணி இலங்கையில் அன்று சிறுவர் மாத இதழாக வெளி வந்த வேளை. தனது எழுத்தாற்றலை சிறுவயதிலேயே பதிவு செய்துள்ளேன் என்கிறார் டாக்டர் முருகானந்தன் அவர்கள். அத்துடன் அதன் ஸ்தாபகர் அமரர் மு.க.சு.ப்பிரமணியம் அவர்களை தான் பல தடவை கொழும்பில் சந்தித்து இருப்பதாகவும் நினைவுகூர்ந்தார்.இலங்கையில் இன்று பிரபல டாக்டராக விளங்கும் இவர். இலக்கியத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.எல்லா டாக்டருக்கும் இலக்கியம் வாராது. இலக்கியவாதிகள் எல்லோருக்கும் மருத்துவம் வராது. ஆனால் இவருக்கு இரண்டும் கைவந்த கலை.அன்று 1960 களில் வெற்றிமணியில் ஆக்கங்களைப் படைத்த இவர் இன்றும் தமது ஆக்கங்களை வெற்றிமணியில் அருமருந்தாகத் தருவது வியப்பான உண்மை. வெற்றிமணியில் வாசகர்கள் விரும்பி படிக்கும் பகுதிகளில் ஒன்று Dr IN என்பதாகும்.




# புலம் பெயர் வாழ்வில் வேலையும் பெண்களும்



சந்திரவதனா

புலம்பெயர் வாழ்வில் வேலைக்குப் போகும் பெண்களையும், வேலைக்குப் போகாதிருக்கும் பெண்களையும் பார்ப்போ மேயானால் இரு பகுதியினரது வாழ்வும் ஏதோ ஒரு வகையில் கடினமானதாகவே இருக்கிறது. இன்றைய பெண்களுக்கு இந்த வாழ்க்கை ஒரு சவாலாகவே அமைந்துள்ளது.

குடும்பம் என்ற புனிதமான கோவிலில் குழப்பங்கள் ஏற்பட்டு விடாமல்,கணவன், மனைவி என்ற உறவில் எந்த விரிசல்களும் ஏற்பட்டு விடாமல், விடுதலைப் பாதையை நோக்கி வெற்றிநடை போட வேண்டிய ஒரு கட்டாயம் இன்றைய பெண்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்தக் கட்டா யத்தை பெரும்பாலான பெண்கள் தாமாகவேதான் விரும்பி தமக்காக எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

இங்கே முக்கியமாகக் கவனிக்கப் பட வேண்டியது என்னவென்றால், ஆண்களைப் பொறுத்த மட்டில் பெண்களின் இந்த விழிப்புணர்ச்சி, அல்லது மாற்றம் அவர்களிடம் சற்று அச்சத்தையே ஏற்படுத்தியுள்ளது. அச்சப்பட்டவர்களை அப் படியே விட்டுவிட்டு, தம்பாட்டில் போய் விடாது, தம்மோடு அவர்களையும் இழுத்துச் செல்ல வேண்டிய கட்டாயமும் இன்றைய பெண்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பெண்களுக்குள்ளும் ஆண்களைப் போலவே ஆசை, பாசம், கோபம், நேசம்.. போன்ற எல்லா உணர்வுகளும் இருக்கின்றதென்பதை ஆண்களுக்குப் புரிய வைத்து, பெண்கள் அடிமைத் தனத்தையோ, அடக்கு முறையையோ விரும்பவில்லை, தாம் தாமாகவே வாழ விரும்புகிறார்கள் என்பதை உணர வைத்து, குடும்பத்தைக் குலைய விடாது காக்க வேண்டிய பாரிய பொறுப்பும் விடுதலைப் பாதையை நோக்கி நடக்கின்ற இன்றைய பெண்களுக்கு உள்ளது. பெண்விடுதலையின் சரியான பரிமாணத்தை உணர்ந்த பெண்கள், இதையெல்லாம் கவனத்தில் கொண்டு, ஒரு முன்னேற்பாடுடனேயே விடுதலையை நோக்கி நடக்கத் தொடங்கியுள்ளார்கள்.

இந்த விடுதலைப் பாதையின் முதற் படியில் இருப்பது, பெண்கள் தாம் தமது காலில் நிற்பதற்கு ஏதுவான சுய சம்பாத்தியம். அதாவது பெண்கள் தாம் தமக்கெனச் சம்பாதிக்க வேண்டும். இன்றைய பெண்களில் அனேகமானோர் இந்த சூட்சுமத்தைப் புரிந்து வேலைக்குப் போகத் தொடங்கி விட்டார்கள். ஆனாலும் அத்தோடு அவர்களது கஷ்டங்களும், பிரச்சனைகளும் தீர்ந்து விடவில்லை.


வேலைக்குப் போகும் பெண்கள் நிறையவே கஸ்டப் படுகிறார்கள். காரணம் ஆண்கள் சமூகம் இன்னும் பெண்களின் விடுதலைப் பாதையை நோக்கிய இந்த பயணத்தைச் சரியான முறையில் ஏற்றுக் கொள்ளவில்லை.

## “யாரோடை போட்டு வாறாய்? எங்கை இவ்வளவு நேரமும் போனனி?

ஆண்கள் எந்த நேரம் வேலைக்குப் போய் எந்த நேரம் வீடு திரும்பினாலும், அவர்கள் களைத்து வந்திருக்கிறார்கள் என்ற அனுசரணையோடு பெண்களால் கவனிக்கப் படுவார்கள். இதுவே பெண் வேலைக்குப் போகும் போது அவள் எந்த நேரத்தில் வேலைக்குப் போய் எந்த நேரத்தில் வீடு திரும்ப வேண்டும் என்பது ஆண்களால்தான் தீர்மானிக்கப் படுகிறது. தப்பித்தவறி ஒரு பெண் வீடு திரும்பும் நேரம் சற்றுத் தாமதமானாலும் போதும்... ஏன் தாமதம் என்பதற்கான காரணம் ஆனால் அது கணவனாக இருந்தாலும் சரி, தந்தையாக இருந்தாலும் சரி, சகோதரனாக இருந்தாலும் சரி சந்தேகக் கண்களுடனேயே பார்க்கப்படுகிறது. “யாரோடை போட்டு வாறாய்? எங்கை இவ்வளவு நேரமும் போனனி? என்பது மாதிரியான மனசை விளாசும் கேள்விகளாலேயே அவள் வீட்டுக்குள் வரவேற்கப்படுகிறாள். அவள் கூடிய வேலையால் களைத்துப் போயிருப்பாளே என்ற அனுசரணை காட்டப்படா விட்டாலும் பரவாயில்லை. வேலை செய்து விட்டுத்தான் வருகிறாள் என்ற நம்பிக்கை கூட அனேகமான பொழுதுகளில் அவர்களிடம் இருப்பதில்லை.

பெண்கள் வேலைக்குப் போகத் தொடங்கியதால் ஆண்களின் வாழ்க்கை சற்றுச் சுலபமாகியுள்ளது. அவர்கள் தனியாகச் சுமந்த குடும்பத்தின் பணத்தேவையை, இப்போது வேலைக்குப் போகும் பெண்களும் பங்கு போட்டுச் சுமக்கிறார்கள். அதே நேரம் வீட்டிலுள்ள மற்றைய வேலைகளையும் பெண்களே தனியாகச் சுமக்கிறார்கள். பெரும்பான்மையான ஆண்கள் அதைப் பங்கு போடத் தவறி விடுகிறார்கள். ஆணும், பெண்ணும் வேலைக்குப் போய் வருகையில், ஆண் வந்து கதிரைக்குள் இருந்து தொலைக்காட்சி பார்ப்பதுவும், பெண் வந்து கால் வலிக்க, கை வலிக்க வீட்டு வேலைகளைத் தொடர்வதுவும் ஒவ்வொரு வீட்டிலும் இன்னும் நடந்து கொண்டுதானிருக்கிறது.

ஆதிகாலத்தில் வேட்டைக்குப் போன ஆண்கள் வீட்டுக்கு வந்ததும் நெருப்பைக் கொழுத்தி விட்டு அதன் முன் இருந்து குளிர் காய்வார்கள். அந்த நேரத்தில் அவர்கள் யாருடனும் பெரியளவாகப் பேச மாட்டார்கள். மௌனமாக இருந்து தம்மை ஆசுவாசப்படுத்திக் கொள்வார்கள். அதன் தாக்கம்தான் இன்றும் தொடர்வதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.




புலம் பெயர் வாழ்வில் வேலையும் பெண்களும்....

சில ஆண்கள் வீட்டு வேலைகளில் ஏதாவதொன்றைச் செய்வார்கள். அதாவது ஒரு ஆணால் சமைக்க முடியும். இன்னொருவரால் அயர்ண் பண்ண முடியும். இன்னொருவரால் வீட்டைத் துப்பரவாக்க முடியும். ஆனால் பெரும்பாலான ஆண்களால் வீட்டின் முழுவேலைகளையும் ஒரு பெண்ணைப் போல பொறுப்பேற்றுச் செய்யத் தெரிவதில்லை. அல்லது முடிவதில்லை. இதனால் வேலைக்குப் போகும் பெண் நிறையவே கஸ்டப்படுகிறாள். சில சமயங்களில் நேரமின்மை காரணமாக பிள்ளைகளைச் சரிவரக் கவனிக்க முடியாமல் கூடத் திண்டாடுகிறாள். கவலைப்படுகிறாள்.

இந்த நிலையிலும் கூட பிள்ளை ஒரு தவறு செய்யும் போது, "நீ பிள்ளையைச் சரியாகக் கவனிக்கிறாயில்லை." என்று கணவனிடம் திட்டும் வாங்குகிறாள்.

ஒரு கணவனும் தந்தையாக நின்று, பிள்ளையைக் கவனிக்கலாம்தானே. அப்படி நடப்பது மிகமிகக் குறைவு. ஏனெனில் இதெல்லாம் பெண்களின் வேலையாகவே கருதப்படுகின்றன. அது இன்று பெண் வெளியில் வேலைக்குப் போகும் போதும் மாறி விடவில்லை.

வேலைக்குப் போகும் பெண்களின் நிலை இப்படியாக இரட்டைச் சுமையைத் தலையில் தூக்கி வைத்ததற்குச் சமனாயிருக்கும் போது, வேலைக்குப் போகாத பெண்களின் நிலை வேறு விதமான பரிதாபத்தை உணர்த்துகிறது. அவர்களின் வீட்டு வேலைகள் ஒரு வேலையாகக் கணிக்கப்படுவதே இல்லை.

அனேகமான சமயங்களில் "உன்ரை மனைவி என்ன செய்கிறாள்..?" என்று கணவனை யாராவது கேட்டால்.. "அவ சும்மாதான் இருக்கிறா" என்பதே வேலைக்குப் போகாத பெண்களின் கணவன்மார்களின் பதிலாக இருக்கிறது.

இந்த அளவில்தான் பெண்களின் வீட்டு வேலைகள் கணிக்கப் படுகின்றன. அவர்கள் சிறிதளவு பணத்தேவைக்கும் கணவனை எதிர் பார்ப்பவர்களாகவே இருக்கிறார்கள். அனேகமான சந்தர்ப்பங்களில் "உனக்கென்ன தெரியும். நீ சும்மாதானே வீட்டிலை இருக்கிறாய். நான் எவ்வளவு கஸ்டப்பட்டு முறிஞ்சு வேலை செய்திட்டு வாறன்" என்று சொல்லிக் கணவன்மாரால் உதாசீனப் படுத்தப்படுகிறார்கள். வீட்டிலுள்ள சகல வேலை களையும் செய்வது மட்டுமல்லாது "எதுவுமே செய்வதில்லை" என்ற குற்றச் சாட்டையும் கணவனிடமிருந்து அடிக்கடி பெற்றுக் கொள்கிறார்கள். இதனால் வேலைக்குச் செல்லாத பெரும்பான்மையான புலம்பெயர் பெண்கள் பாரிய உளவியல் தாக்கத்துக்கும் உள்ளாகிறார்கள்.

அவர்களது வாழ்க்கை சமையல், வீட்டுவேலை, கணவனுக்குப் பணிவிடை.. என்றே போய் விடுகிறது. அனேகமான குடும்பங்களில் கணவன்மார்கள் "நான் உழைக்கிறேன். எனது பணம்." என்ற ஒரு திமிருடன்தான் இருக்கிறார்கள்.

தமது மனைவியரைச் சற்றுத் தாழ்ந்தவர்களாகவே கருதி, மனைவியரின் மனங்களிலும் "நீ தாழ்ந்தவள். எனது பணத்தில்தானே நீ வாழ்கிறாய். நான் எவ்வளவு வேலை செய்து விட்டு வருகிறேன். நீ சும்மா வீட்டில் இருந்து எனது பணத்தில்தானே சாப்பிடுகிறாய்" என்பது போன்றதான கருத்துக்களை விதைக்கிறார்கள்.

மிகச் சிறுபான்மையான ஆண்கள் மட்டுமே மனைவியரை மனைவியராக, உணர்வுள்ள ஜென்மங்களாக மதித்து, வீட்டு வேலைகளை வேலையாகக் கணித்து உதவுகிறார்கள்.

மொத்தத்தில் வேலைக்குப் போகும் பெண்களும் சரி, வீட்டில் இருக்கும் பெண்களும் சரி ஏதோ ஒரு வகையில் கஸ்டங்களையே சுமக்கிறார்கள்.

ஆனாலும் வெளிவேலை, வீட்டுவேலை இரண்டினாலுமான அதீத சுமைகளின் மத்தியிலும் வேலைக்குப் போகும் பெண்கள் வெளி உலகத்துடனான தொடர்பு, நானும் உழைக்கிறேன் என்ற மனநிறைவு போன்றதான விடயங்களால் நான், எனது பணம் என்று கர்வம் கொள்ளும் கணவர்களிடமிருந்து விடுதலை பெற்ற உணர்வைப் பெற்று, ஒரு வித தன்னம்பிக்கையுடனேயே வாழ்கிறார்கள்.

வேலைக்குப் போகாத பெண்களோ தாழ்வு மனப்பான்மை நிறைந்த உளவியல் தாக்கத்தினால் தன்னம்பிக்கை இழந்து ஒரு வித தனிமைச் சிறையில் வாழ்கிறார்கள்.

நன்றி: Manaosai


# சாதனையைச் சாத்தியமாக்கிய சிவகுமாரன்!

மலர்கள் மலர்வதும் பின்னர் வாடி விடுவதும் போல இந்தப் புலம் பெயர் தேசத்தில் மலர்ந்து வாடிய பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ஏராளம்.

நேரம், பணம் இரண்டையும் முதலீடு செய்து விட்டு வதங்கிப் போனவர்களும் ஏராளம். இந்த நிலையிலும் அதுவும் இணைய இதழ்கள் கோலோச்சி நிற்கும் இந்தக் காலகட்டத்திலும் வெற்றிமணி தொடர்ந்து 25வருடங்களாக மாதாமாதம் வெளிவருகிறது என்றால் அது ஒரு பெரும் சாதனைதான். ஒரு தடவை கூட அது வரத்தவறியதாக நான் அறியவில்லை.

இந்தச் சாதனையைச் சாத்தியமாக்கிய சிவகுமாரன் அவர்களைக் கண்டிப்பாகப் பாராட்டியே ஆகவேண்டும். அவருக்கும் எல்லோரையும் போல குடும்பம், வேலை, வீடு... என்று எல்லாக் கடமைகளும் உள்ளன. இருந்தும் மிகுந்த ஓர்மத்துடனான அவரது செயற்பாடு ஓவியம், சிற்பம் என இன்னும் பரந்தது.
மனமாரப் பாராட்டுகிறேன்.

சந்திரவதனா



# சிறுவர் தமிழ் இலக்கியம்

## கனடாவின் பங்களிப்பு



குரு அரவிந்தன்
(காப்பாளர்: ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கம்.)

கனடா தமிழர்களின் வரலாறு இந்த மண்ணில் சுமார் 40 வருடங்களாக இருந்தாலும், தமிழர்கள் சிறுவர் இலக்கியத்தில் அதிகம் ஆர்வம் காட்டுவதில்லை என்ற குறை இருக்கத்தான் செய்கிறது. ஒரு சிலரைத் தவிர ஏனையோருக்கு இதில் ஆர்வம் இல்லாமல் போனதால்தான் ஒரு கட்டத்தில் தமிழ் கற்பதில் அடுத்த தலைமுறையினருக்கும் ஆர்வம் இல்லாமல் போய்விட்டது. தமிழ் சமூகம் மட்டுமல்ல, தமிழ் பெற்றோர், தமிழ்ஆசிரியர், பிள்ளைகளுக்கும் இந்தப் பின்னடைவில் முக்கிய பங்குண்டு. புலம் பெயர்ந்த மண்ணில் தமிழ் மொழி தானாக வளரப் போவதில்லை என்பதை நாம் அறிவோம்.

தமிழ் சிறுவர் இலக்கிய நிகழ்வுகளை தங்கள் ஊடகங்களில் பதிவு செய்து ஆக்கமும் ஊக்கமும் தந்தவர்களையும், நிதி உதவிகள் செய்தோரையும், தமிழ் ஆசிரியர், பெற்றோர் போன்றோரையும் நாம் கட்டாயம் பாராட்டியே தீரவேண்டும். இன்றும் கனடாவில் தமிழ் நிலைத்து நிற்பதற்கு இவர்களின் பங்கு மிகவும் முக்கியமானது என்பதையும் வருங்காலத் தலை முறையினர் நினைவில் கொள்ள வேண்டும்.

பிற மொழிகளின் ஆதிக்கம் மட்டுமல்ல, வித்தியாசமான மேலை நாட்டுக் கலாச்சார சூழலில் நாம் வாழ்வதையும் பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். புலம் பெயர்ந்த ஆரம்ப காலத்தில் தமிழ் மொழி எப்படிக் கனடிய மண்ணில் தக்க வைக்கப்பட்டது என்பது பற்றி ஆவணப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இச் சந்தர்ப்பத்தில் கனடாவில் சிறுவர் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றி அடுத்த தலைமுறைக்காகப் பதிவு செய்கின்றேன். நாங்கள் கனடா வந்தபோது பெரிய அளவில் தமிழர்கள் கனடாவில் இருக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தமிழர்கள் இருந்தார்கள். தமிழ் மொழி கற்பதற்கான வசதிகளோ, அதற்கான சூழலோ பெரிதாக இருக்க வில்லை. தமிழ் கற்பதில் தங்கள் பிள்ளைகளை ஒருசில பெற்றோரைத் தவிர மற்றவர்கள் ஈடுபடுத்தவில்லை.
கனடாவில் அதிக அளவில் அப்போது தமிழர்கள் இல்லாதபடியால், ஆங்கில மொழியே தங்கள் பிள்ளைகளுக்குப் போதுமானது என்ற நோக்கத்தோடு சில பெற்றோர் செயற்பட்டனர். 1990 களின் முற்பகுதியில் வந்த தமிழ் பிள்ளைகள் தமிழ் கற்பதற்கான போதிய வசதிகள் கனடாவில் இல்லாதபடியால் அவர்களால் தாய்மொழியைச் சரியான முறையில் கற்க முடியவில்லை. இலங்கையில் நடந்த 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் திடீரென எதிர்பாரத வகையில் தமிழ் மக்களின் வருகை அதிகரித்தது. ரொறன்ரோவில் வருகை தந்த தமிழர் தொகை அதிகரிக்கவே தாய்மொழியாம் தமிழ் மொழியின் தேவை இந்த மண்ணில் உணரப்பட்டது. புலம் பெயர்ந்து வந்த தமிழ் மக்களில் பெரும் பகுதியினர் ஒன்ராறியோவிலும், ஏனையோர் மொன்றியல், வான்கூவர், கல்காரி போன்ற இடங்களுக்குச் சென்று குடியேறினர்.
தமிழ் மொழியின் தேவையை மனதிற் கொண்டு தமிழ் கற்பதில் ஆர்வமுள்ள மாணவர்களுக்காகச் சில தனியார் வகுப்புக்கள் ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்டன. ஒன்ராறியோ கல்விச் சபைகளின் உதவியுடன் வாரத்தில் ஒரு நாளாவது தமிழைக் கற்பிக்க வேண்டும் என்ற அனுபவம் மிக்க பெரியவர்களின் விடா முயற்சியால் வாரநாட்களில் பாடசாலை முடிந்தபின்பும், சனி ஞாயிறு காலை நேரங்களிலும் தமிழ் வகுப்புக்கள் இலவசமாக ஆரம்பிக்கப்பட்டன. எல்லா வசதிகள் இருந்தாலும் பிள்ளைகளைப் பெற்றோர் அனுப்புவதில் தயக்கம் காட்டியதால், அப்போது வீடு வீடாகச் சென்று, தாய் மொழியின் தேவை பற்றி பெற்றோருக்கு எடுத்துச் சொல்லிப் பிள்ளைகளைத் தமிழ் வகுப்புகளில் சேர்க்க வேண்டிய நிலையில் நாம் இருந்தோம். சில வகுப்புகளில் வயது வித்தியாசம் பார்க்காமல் எல்லோரையும் ஒரு வகுப்பிலே வைத்துப் படிப்பிக்க வேண்டிய நிலையும் எங்களுக்கு ஏற்பட்டது.



குரு அரவிந்தன்

அனேகமான தொடர்பு சாதனங்கள் தமிழ் மொழியின் தேவை கருதி சிறுவர்களுக்கான ஆக்கங்களைச் சிறுவர் பகுதி மூலம் முன்னெடுத்துச் சென்றன. எந்த மொழியை அழிக்கிறார்கள் என்று தமிழ் மக்கள் புலம் பெயர்ந்தோமோ அந்த மொழி இந்த மண்ணில் அழிந்து போவதற்குப் பெற்றோர்கள் காரணமாக இருக்கக்கூடாது என்பதைப் பெற்றோருக்கு மிகவும் தெளிவாக மேடைகளிலும், தொடர்பு சாதனங்கள் மூலம் எடுத்துச் சொன்னோம். தொடக்க காலத்தில் சுமார் 3500 பிள்ளைகள் வரை தமிழ் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தனர். ஆனால் தாயகத்தில் நடந்த எதிர்பாராத நிகழ்வின் காரணமாக 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின் தமிழ் கல்வி கற்கும் பிள்ளைகளின் வருகையில் திடீரெனப் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. மொழி அழிந்தால் அந்த இனமே அழிந்து விடும் என்ற பயம் தமிழர்களாகிய எங்களுக்கு ஏற்பட்டது.

ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக 2012 ஆண்டு நான் பொறுப்பேற்ற போது பெற்றோர், ஆசிரியர்களுடன் உதவியுடன் மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வந்தோம். தமிழ் பிள்ளைகளின் வருகை அதிகரித்ததால் சுமார் 3000 பிள்ளைகள் வரை 2013 ஆம் ஆண்டு தமிழ் மொழிப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தார்கள். இன்றும் ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தினர், இந்த மண்ணில் தமிழ் மொழி அழிந்து போகாமல் நிலைத்து நிற்பதற்குத் தன்னார்வத் தொண்டர்களாகப் பெரிதும் உதவியாக இருக்கின்றனர்.

தமிழ் மொழி கற்பிப்பதில் இன்று கனடாவில் ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கம்தான் அதிக ஆசிரியர்களையும், மாணவர்களையும் கொண்ட பெரிய சங்கமாக, சிறந்ததொரு நோக்கத்தோடு பணியாற்றும் சங்கமாக இருக்கின்றது.

கனடாவில் தமிழ் கற்பதற்கு ஏற்ற பாடநூல்களோ அல்லது காணொளிகளோ போதிய அளவு அப்போது இருக்கவில்லை. அக்கால கட்டத்தில் அவுஸ்ரேலியாவில் தயாரிக்கப்பட்ட மாவை ஆனந்தனின் பாப்பா பாரதி என்ற காணொளி வெளியிடப்பட்டாலும் பலர் அதைப்பற்றி அறிந்திருக்கவில்லை.

எனவேதான் கனடாவில் இருந்த கல்விமான்கள் சிலர் ஒன்று சேர்ந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு என்ன செய்யலாம் என்று திட்டம் வரைந்தனர்.

இவர்களின் உதவியுடன் தமிழ் மொழியைக் கனடாவில் கற்பிப்பதில் தொடக்கத்தில் இருந்த குறைபாடுகளை நீக்குவதற்காகக் குரு அரவிந்தன் போன்றவர்கள் எடுத்த முயற்சிகள் நல்ல பலனைக் கொடுத்திருக்கின்றன. 'தமிழ் ஆரம்' என்ற பெயரில் கனடிய சூழலுக்கு ஏற்ப குரு அரவிந்தனால் 1990 களின் தொடக்கத்தில் தயாரித்து வெளியிடப்பட்ட ஒளித்தட்டுக்கள், ஒலித் தட்டுக்கள், பாடநூல்கள், பயிற்சிப் புத்தகங்கள், சிறுவர் பாடல்கள், சொல் தேடல்கள், சிறுவர் நாடகங்கள் போன்றவை கனடியத் தமிழ் சிறுவர்களுக்கு இப்பொழுதும் பெரும் துணையாக இருக்கின்றன.

இந்த வீடியோ ஒளித்தட்டை குரு அரவிந்தன் மிகவும் சிறப்பாக நெறியாள்கை செய்திருந்தார். இதை வெளியிடும் முயற்சிக்கு உறுதுணையாக நின்ற மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி, கவிஞர் கந்தவனம், பேராசிரியர் இ. பாலசுந்தரம், திருமதி. விமலா பாலசுந்தரம், ம. சே. அலெக்ஸாந்தர், வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்), மாலினி அரவிந்தன், இதை ஒளிப்பதிவு செய்த நேரு, இசை அமைத்த முல்லையூர் பாஸ்கரன், ஆசிரியை களாகப் பங்கேற்ற திருமதி கோதை அமுதன், அருட்செல்வி மற்றும் அதில் இடம் பெற்ற நிகழ்ச்சிகளைத் தந்து உதவிய நடன ஆசிரியர்கள், பங்கு பற்றிய சிறுவர், சிறுமிகள் எல்லோரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அன்று எல்லோரும் சேர்ந்து விதைத்த விதை இன்று தமிழ் என்னும் நிழல் பரப்பிப் பெரு விருட்சமாகக் கனடாவில் நிற்கின்றது.

## பாரெல்லாம் ஒலிக்கும் வெற்றிமணியின் தமிழ் ஓசை!

வெற்றிமணி என்றதும் உடனே ஞாபகத்தில் வருவார் நண்பர் கலாநிதி சுப்ரமணியம் சிவகுமாரன் அவர்கள்தான். நான் படித்த மகாஜனக் கல்லூரியிலேயே அவரும் ஓவியம் கற்பிக்கும் ஆசிரியராகக் கடமையாற்றினார். ஆனாலும் அதிபர் பொ.கனகசபாபதி அவர்கள்தான் அவரை எனக்குக் கனடாவில் அறிமுகம் செய்து வைத்தார்.

நான் வெற்றிமணியில் எழுதத் தொடங்கிய காலத்தில் டாக்டர் கதிர்துரைசிங்கம் அவர்களிடம் இருந்து ஒவ்வொரு மாதமும் வெற்றிமணி பிரதிகளைப் பெற்றுக் கொள்வேன். வெற்றிமணி ஆசிரியரே எனது கதைகளுக்கு மிகவும் பொருத்தமான அழகான படங்களை வரைந்து மேலும் மெருக்கூட்டுவார். அதிபர் குறிப்பிட்டது போல ஒவ்வொரு காதலர் தினத்திற்கும் வெற்றிமணியில் எனது காதலர்தினக் கதை வெளிவரும். ஐந்து நாடுகளில் பெப்ரவரி மாதத்தில் ஒரே காதலர் தினவாரத்தில் எனது வெவ்வேறு காதலர்தினக் கதைகள் 1999 இல் வெளிவந்து சாதனைபடைத்தபோது, அந்த சாதனையில் வெற்றிமணியும் ஜேர்மனியில் இருந்து பங்காற்றியிருந்தது.

நண்பர் சிவகுமாரனின் நூல்களை கனடா எழுத்தாளர் இணையத்தின் செயலாளராக இருந்தபோது கனடாவில் அறிமுகம் செய்து நாங்கள் அவரைக் கௌரவித்திருந்தோம். மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு தினக் கொண்டாட்டத் தின் போது வெற்றிமணியுடன் இணைந்து அகில இலங்கை தமிழ் மாணவர்களுக்கான சிறுகதைப் போட்டி ஒன்றை நான் நடத்தி இருந்தேன். அப்போது விழா ஒன்றை ஏற்பாடு செய்து பரிசு பெற்ற மாணவர்களுக்குத் தாயகத்தில் பரிசு கொடுப்ப தற்கு நண்பர் சிவகுமாரன் மிகவும் உதவியாக இருந்து செயற்பட்டார்.

சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்த வெற்றிமணி ஆசிரியர் சிவகுமாரனின் சேவை மேன்மேலும் தொடர்ந்து தமிழ் இலக்கிய உலகிற்குக் கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன். வாழ்க வளமுடன்!

**குரு அரவிந்தன்**

தலைவர் - கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்.
காப்பாளர் - ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கம்.




தாயகத்தில் 2009ம் ஆண்டின் பின் சிறுவர்கள் இடம்பெயர்ந்து, கல்வியில் பல இடர்பாடுகளைச் சந்தித்தவேளை வெற்றிமணியின் கல்விப்பணி மையம் அங்கு செயற்பட்டது. மாணவர்களின் நிலையறிந்து பலவகையிலும் நமக்கு உதவியவர் திருமதி வலன்ரீன இளங்கோவன் அவர்கள். இவர் வெற்றிமணியின் தாயக வெளியீட்டின் ஆசிரியராகவும் பணிபுரிபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாசிப்பின் அவசியத்தை நன்கு உணர்ந்து அதனை யாசிப்போம்





ஆர். ஏன். லோகேந்திரலிங்கம்
பிரதம ஆசிரியர் : உதயன் - கனடா

தற்காலத்தில் மாத்திரமல்ல,ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கூட எம்மவர்கள் மத்தியில் வாசிப்பு பழக்கம் அதிகம் இருந்ததா என்பது ஒரு கேள்விக்குறி தான். தமிழ் மக்களின் வாசிப்புப் பழக்கம் பற்றி நகைச்சுவையாகப் பேசுகின்றபோது சிலர் சொல்வார்கள் "எங்கட ஆட்கள் அறிவுத் தேடலுக்காக வாசிப்பதில்லை, ஆனால் பரீட்சைக்காக நன்கு வாசித்து அறிந்து கொள்ளும் ஆர்வம் கொண்டவர்கள்" என்று.

ஒரு காலத்தில் யாழ்ப்பாண குடாநாட்டில் 25 இலட்சம் தமிழ் மக்கள் வாழ்ந்தார்கள். ஆனால் யாழ்ப்பாண பிராந்தியப் பத்திரிகையாக வெளிவந்த "ஈழநாடு" வெறுமனே பத்தாயிரம் பிரதிகள் தான் தினசரி விற்பனையாகியது என்பதையும் கல்விமான்கள் சிலர் தங்கள் உரைகளின் போது குறிப்பிட்டு விசனம் தெரிவிப்பதை நான் நேரடியாகவே கண்டுள்ளேன்.

நாம் எமது பாடசாலைக் காலங்களில் தினமும் பலவிதமான விடயங்களைப் படித்தோம். அவை அந்தந்தப் பாடங்கள் சம்பந்தப்பட்டவையாகும். இவற்றைப் படித்துவிட்டு நான் தினமும் படிக்கின்றேன் என்றால் தவறாகும். பள்ளிப் பாடங்கள் மட்டும் நம் அறிவை வளர்க்காது. பாடங்கள் சம்பந்தப்பட்ட மேலும் பல தகவல்களைப் பெற நாம் வேறு பல நூல்களை வாசிக்க வேண்டியது அவசியமாகிறது.

ஒரு மொழியில் புலமை பெற அம்மொழியில் வெளிவந்துள்ள பல புத்தகங்களை வாசிக்க வேண்டும். அவ்வாறு வாசிப்பதனால் அம்மொழியில் நாம் புலமை பெற முடியும். மொழி வளத்தைப் பெருக்கி கொள்ள முடியும். ஒரு மொழியில் உள்ள பல புதிய சொற்களை அறிய அம்மொழி நூல்களை வாசிக்க வேண்டும். அத்துடன் அவற்றின் பொருளை உணர்ந்து சரியான முறையில் பயன்படுத்தவும் வாசிப்பு அவசியமாகிறது.

மொழி வளத்தைப் பெருக்கும் அதே வேளையில், பொது அறிவையும் வாசிப்பதன் மூலம் வளர்த்துக் கொள்ள முடியும். பல துறைகளைச் சார்ந்த புத்தகங்களை வாசிப்பதால் அத்துறைகளைப் பற்றிய தகவல்களை அறிந்துக் கொள்ள முடிகிறது. இதன் மூலன் நாம் தகவல் அறிந்த சமுதாயமாக மாற, வாசிப்பு துணைபுரிகிறது. நாம் வாசித்து அறிந்து பெற்றுக்கொள்ளும் தகவல்கள் எமக்கு மட்டுமல்ல, சில வேளைகளில் மற்றவர்களுக்கும் பயன்படும் ஒன்றாக அமையலாம். எமக்காக மட்டுமல்ல, மற்றவர்களுக்காகவும் நாம் வாசிக்க வேண்டும்.

இந்த நவீன உலகில் மனிதன் இயந்திரமாக வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வியந்திர வாழ்க்கை யிலிருந்து மீண்டு மனமகிழ்வு பெறவும் வாசிக்கும் பழக்கம் உதவுகிறது. கடை, கட்டுரை, கவிதை,செய்யுள் போன்ற வற்றை வாசிப்பதன் மூலம் அவற்றின் சுவையை உணர்ந்து இரசிப்பது மனம் மகிழ்கின்றது. சொந்தமாகக் கதை, கட்டுரை, கவிதை எழுத விரும்புகிறவர்கள் முதலில் அவை தொடர்பான பல நூல்களைப் படித்து அறிய வேண்டும். அப்போதுதான் சொந்தப் படைப்புகளைப் படைக்கும் போது அவை தரமானவையாக இருக்கும். பல தகவல்களைத் தன்னுடைய படைப்புகளில் புகுத்த முடியும்.

எனவே, வாசிப்பு நமக்கு எவ்வளவு அவசியமாகிறது என்பதை அறிய முடிகிறது. "நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்பதற்கேற்ப பல நூல்களை வாசித்து நம் அறிவைப் பெருக்கிக் கொள்ள முயல வேண்டும். அப்போதுதான் எம் மத்தியில் வெளிவரும் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் ஆகியன நின்று நிலைத்து எமது சந்ததிக்கு உரமூட்டு பவையாக பலம் சேர்க்கும்.

# நாம் தூங்கும் போதும் விழித்திருக்கும் போதும், எம் கரங்களில் விரிந்திருப்பது "வெற்றிமணி" பத்திரிகைதான்

ஜேர்மனி தேசத்திலிருந்து வெளியாகி உலகத் தமிழர்கள் மத்தியில் அறிமுகமான நண்பர் சிவகுமாரனின் "வெற்றிமணி" பத்திரிகை தனது 25வது ஆண்டு நிறைவில் மகிழ்வது அறிந்து, ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் பூரிப்படைகின்றேன்.

இலங்கை தொடக்கம் மேற்குலக நாடுகள் வரை, எங்கும் பரவிப் பரந்து, எம்மவர்களால் மாதாந்தம் வாசிக்கப்படும் "வெற்றிமணி" எப்போதும் எங்கள் கரங்களில் விரிந்த வண்ணமே உள்ளது. ஒரு நாட்டில் எமது மக்கள் தூங்கும் போது இன்னொரு நாட்டில் எம் மக்கள் விழித்த வண்ணம் தங்கள் பணிகளை ஆற்றுகின்றார்கள். எனவே நாம் தூங்கும் போதும் விழித்திருக்கும் போதும் எங்கோ ஒரு நாட்டில் எம் மக்கள் "வெற்றிமணி" யின் பக்கங்களை விரித்துப் படித்த வண்ணமே இருப்பார்கள்.

"வெற்றிமணி" பத்திரிகை பல சிறப்புக்களைக் கொண்ட ஒரு வெளியீடாகும். ஐரோப்பாவில் வெள்ளிவிழா காணும் முதல் தமிழ் மொழிப் பத்திரிகை என்ற பெருமை அதற்கு உண்டு. அத்துடன் வெற்றிமணியானது, ஐரோப்பாவில் தமிழில் வெளிவந்த முதல் இலவச வர்ணப்பத்திரிகை என்ற தனித்து வத்தையும் கொண்டது.
இவ்வாறான சிறப்புக் கொண்ட பத்திரிகையின் வெற்றியைக் கொண்டாடும் இந்த தருணத்தில் நண்பர் சிவகுமாரன் அவர்களின் கரங்களைப் பற்றி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



உதயன் பத்திரிகை செயலகத்தில் வெற்றிமணி ஆசிரியர்.2019

ஆர். ஏன். லோகேந்திரலிங்கம்
பிரதம ஆசிரியர் - கனடா உதயன் பத்திரிகை

# கந்தபுராணமும் வாழ்வியலும்

( சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி )



புராணக்கதைகள் வேதத்தில் கூறப்பட்ட தத்துவங்களை, நீதி முறைகளை விரிவாக மக்கள் புரிந்து கொள்வதற்காகக் கூறப்பட்ட உண்மைக் கதைகளாகும். புராணங்கள் 18 (வாயு புராணத்துடன் 19 எனவும் கொள்ளப்படுகின்றது) பெரிய புராணங்களும், 18 உப (சிறிய) புராணங்களும் ஆக வியாச முனிவரால் தொகுக்கப்பட்டன. பெரியபுராணம் தவிர்ந்த மற்ற எல்லாப் புராணங்களும் சமஸ்க்கிருத மொழியில்தான் இருந்தன. பிற்காலத்தில் தமிழில் ஸ்காந்தம் என்னும் புராணம் கச்சியப்பசிவாச்சாரியாரால் கந்தபுராணமாகவும், ஹாலாஸ்ய மகாத்மியம் என்னும் உப புராணம் திருவிளையாடற் புராணமாகவும் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு மேலும் பல புராணங்கள் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டன. பெரியபுராணம் மட்டும் தமிழிலிருந்து சமஸ்க்கிருதத் திற்கு "உபமன்யு பக்த விலாசம்" என மொழிபெயர்க்கப் பட்டது.

ஸ்கந்த புராணத்தின் சங்கரசங்கிதையில் சிவரகசிய காண்டத்தில் வரும் 1.சம்பவ காண்டம், 2.அசுர காண்டம், 3.மகேந்திர காண்டம், 4. யுத்த காண்டம், 5.தேவ காண்டம், 6.தட்ச காண்டம் ஆகிய முதல் 6 காண்டங்களின் தமிழாக் கமே கந்தபுராணம். தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் வரலாற்றைக் கூறும் இப்புராணம் வேத, உபநிடதங்களின் சாரத்தையும், சித்தாந்தக் கருத்துக்களையும் கொண்டது. புராணங்களிலேயே நாயகமாக, பெருங்கடலாக திகழும் இப்புராணம் 6 காண்டங்களையும் 141 படலங்களையும், 10345 செய்யுள்களையும் உள்ளடக்கியுள்ளது. தமிழில் உள்ள மூன்று புராணங்களில் சிவபெருமானின் வலக்கண் திருத் தொண்டர் புராணம், இடக்கண் திருவிளையாடற் புராணம், நெற்றிக்கண் கந்தபுராணம் எனவும் கூறப்படுகின்றது.

கந்தபுராணம் எமது வாழ்வியலுடன் மிகவும் தொடர்புடையது. இதனால் கந்தபுராணம் எமது சொந்தப் புராணம் எனப் பெரியோர் கூறுவர். சிலர் யாழ்ப்பாணக் கலாச்சாரத்தைக் கந்தபுராணக் கலாச்சாரம் எனவும் கூறுவர். அதுமட்டு மல்லாமல் 12 ஆம், 13 ஆம் நூற்றாண்டில் தென் இந்தியாவில் காஞ்சிபுரத்தில் குமரக்கோட்டத்தில் வாழ்ந்த கச்சியப்ப சிவாச்சாரியாரால் எழுதப்பட்ட இப்புராணம் தென் இந்திய மக்களைவிட யாழ்ப்பாணத்து மக்களால் பெரிதும் போற்றப் பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் முருகன் ஆலயங்களில் மட்டுமல்லாமல் மற்ற ஆலயங்களிலும், மடங்களிலும் கந்தபுராணப் படலம் தைப்பூசத்தில் ஆரம்பித்து பங்குனி உத்தரத்தில் அல்லது வைகாசி விசாகத்தில் நிறைவடையுமாறும், சில இடங்களில் கந்தசஷ்டியை இறுதி நாளாகக் கொண்டும் (ஒருவர் கந்தபுராணப் பாடலைப் படிக்க அதன் பொருளை மற்றும் ஒருவர் கூறுவது) இன்றும் நடைபெறுகின்றது. புலம் பெயர் நாடுகளிலும் இந்நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கந்தபுராணத்திற்கு முதலில் உரை எழுதியவர் யாழ்ப்பாணப் புலவர் சுப்பிரமணிய சாஸ்த்திரியார். கந்தபுராணத்தை முதலில் அச்சிட்டவர் யாழ்ப்பாண ஆறுமுகநாவலர். யாழ்ப்பாணத்தில் இப்புராண படனமே பெண் கல்வியின் தோற்றம் என சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கச்சியப்ப சிவாச்சாரியாருக்கு முருகப்பெருமானே சமஸ் கிருதத்தில் இருந்த ஸ்கந்த புராணத்தைத் தமிழில் பாடுமாறு கூறி, "திகடசக்கரம்" என அடி எடுத்தும் கொடுத்ததால், கச்சியப்பசிவாச்சாரியார் கந்தபுராணத்தின் காப்புச் செய்யு ளை "திகடசக்கர" என தொடங்கினார். அதுமட்டு மல்லாமல் ஒவ்வொரு நாளும் பகலில் இவர் பாடி மாலையில் கருவறையில் வைக்கும் கந்தபுராணத்தின் பகுதிகளை முருகன் திருத்தம் செய்தும் வைத்தார்.

கந்தபுராண அரங்கேற்றத்தின் போதும் சபையில் இருந்த புலவர் ஒருவரால் "திகடசக்கரம்" என்ற வார்த்தையில் சொற்குற்றம் இருப் பதாகக் கூறியதை முருகனே ஒரு புலவர் வடிவில் வந்து "வீரசோழியம்" என்னும் நூலில் "திகடசக்கரம்" என்னும் சொல் இருப்பதாகக் கூறி மறைந்தார். சிவபெருமானே முரு கனாக வடிவெடுத்துத் தமிழை வளர்த்ததாக பெரியோர் கூறுவர். இதனை சிவபெருமானே உமாதேவியாருக்கு கூறியதாகப் பின்வரும் கந்தபுராணத்தில் முதலாவது காண்டம் 14 ஆவது படலம் 1070 ஆவது பாடல் (உற்பத்திக் காண்டத்தில் திருவிளையாட்டுப் படலம் 19 ஆவது பாடல்) கூறுகின்றது.

"ஆதலின் நமது சக்தி ஆறுமுகன் அவனும் யாமும்
பேதகமன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவிபோல்வான் யாவையு முனர்ந்தான் சீரும்
போதமும் அறிவில் வீடும் போற்றினார்க் கருள வல்லான்"

பரமாத்மா ஜீவாத்மாவை பீடித்துள்ள மலத்தை அகற்றி ஜீவாத்மாவை தன்னுடன் சேர்ப்பதுதான் கந்தபுராணத்தின் மூலக் கருவாகும். சைவசித்தாந்த மெய்ப்பொருளை உணர்த்துகின்ற வகையில் சூரபதுமனை ஆணவ மலமாகவும், சிங்கமுகனை கன்ம மலமாகவும், தாரகாசூரனை மாயா மலமாகவும், வேலை ஞான வடிவாகவும் கந்தபுராணம் சித்தரிக்கின்றது.
அத்துடன் நன்றி மறந்தவன் அழிவான் என்ற கருத்தும் உண்டு. இக்கருத்தை சூரபன்மனின் மகன் இரணியன் தந்தைக்கு அறிவுரை கூறும் பின்வரும் கந்தபுராணத்தில் யுத்தகாண்டத்தில் 6065 ஆவது பாடல் கூறுகின்றது.

"ஒன்றொரு பயன்தனை உதவினோர் மனம்
கன்றிட ஒருசெயல் கருதிச் செய்வரேல்
புன்தொழில் அவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ"

**"கந்தபுராணத்தில் உள்ளது வேறு எந்தப் புராணத்திலு மில்லை"**

கந்தபுராணத்தில் பெற்றோருக்குப் பணிதல், சகோதரத்துவம், தோழமை, பகைமை, புத்திர பாசம், இல்லறம், வீரம், காதல் போன்ற உணர்வுகளை மட்டுமல்லாமல் நகர்ச் சிறப்பு, பொருளாதாரம், உணவு, அரசியல், போர்க்கலை, ஆளுமை, ஆடை, ஆபரணங்கள் போன்ற சகல வாழ்வியல் சம்பந்தப் பட்ட விடையங்களும் பேசப்படுகின்றது. இதனால்தான் "கந்தபுராணத்தில் உள்ளது வேறு எந்தப் புராணத்திலு மில்லை" எனப் பெரியோர் கூறுவர்.
கற்றோரும், ஞானியரும், வல்லமை மிக்கவரும் காம வசப்பட் டால் விளைவு எப்படி இருக்கும் என்பதை கந்தபுராணத்தில் காசிப முனிவர் மாயையுடன் கூடிப் பிறந்த பிள்ளைகளான சூரன், சிங்கமுகன், தாரகன், அசமுகி மற்றும் எண்ணற்ற அசுரின் பிறப்பால் ஏற்பட்ட துன்பங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

நாம் ஒரு பொறுப்பை ஏற்கும்போது அதுபற்றி முற்றாகத் தெரிந்திருக்கவேண்டும், எனக்கு எல்லாம் தெரியும் என்ற போலித்தனம் எமக்கு இருக்கக் கூடாது என்பதை எடுத்துக் காட்ட கந்தபுராணத்தில் முருகன் பிரம்மாவிடம் பிரண வத்தின் பொருள் கேட்ட நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது.
திருமணங்களைப் பொறுத்தவரை ஒன்று பெற்றோர் செய்து வைக்கும் திருமணம் (தெய்வயானை திருமணம்) மற்றது காதல் திருமணம் (வள்ளி திருமணம்) ஆகிய இரண்டையுமே கந்தபுராணம் வாழ்வியல் நெறியாகக் காட்டுகின்றது.
வேறு விதமான எந்தத் திருமணத்தையும் மனித குலம் ஏற்கக் கூடாது என்ற விடையம் மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளது.

இது மட்டுமன்றி பின்வரும் கந்தபுராணத்தின் வாழ்த்துப் பாடல் உலகளாவிய வாழ்வியலோடு ஆன்மீகத்தையும் இணைத்துக் கூறுகின்றது.

"வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"

## வெள்ளி விழாக் காணும் வெற்றிமணிக்கு எனது வாழ்த்துக்கள்

கடந்த இருபத்தைந்து ஆண்டுகள் வெற்றிமணி என்னும் இலவச மாதாந்தச் சஞ்சிகையை உருவாக்கி அதன் மூலம் புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் தொண்டாற்றி வரும் கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் B.F.A அவர்களுக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். வெற்றிமணி வாசித்துவிட்டு தூக்கிப் போடும் சாதாரண பத்திரிகை அல்ல. அதில் வரும் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால விடையங்கள் காலம் கடந்தும் எமக்குப் பயன்தரக்கூடியனவாக அமைந் திருப்பது இதன் சிறப்பாகும். ஆன்மீகம், மருத்துவம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், வரலாறு, அரசியல், தாயக நிகழ்வுகள், உலக நிகழ்வுகள் உட்பட பல விடையங் களுக்காக இதனை எமது நூலகத்தில் வைத்துப் பாது காப்பது மிகவும் பொருத்தமானதொன்றாகும். ஆசிரியரின் தகப்பனார் முன்னாள் அதிபர் அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களால் தொடங்கப்பட்ட இப்பணி தொடர ஆசிரியருக்கு நல்ல ஆரோக்கியமான நீண்ட ஆயுளைக் கொடுக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடைபெறுகின்றேன்.
**அன்புடன் : நாகேந்திரம் கருணாநிதி**

# கலைகளிலே அவள் ஓவியம்

**லண்டனில் நடைபெற்ற லலியின் ஓவியக்கண்காட்சி**








19.06.2018 முதல் 30.06.2018 வரை (Bourne hall Spring street,Ewell-Surrey KT17 1 UF) லண்டன் நகரில் திருமதி சந்திரவதனி ஸ்கந்தகுமார் அவர்களுடைய ஓவியக்கண்காட்சி இடம் பெற்றது. (அவரது ஓவியப் பெயராக லலி என்று குறிப்பிடுகின்றார்.) ஓவியக் கண்காட்சியினை Epsom and Ewell நகர பிதா Neil Dallen அவர்கள் திறந்து வைத்தார்கள். காலங்களில் அவள் வசந்தம் கலைகளிலே அவள் ஓவியம் என்று ஒரு பழையபாடல் இன்று கேட்டாலும் அது மனதை வருடியே செல்லும். பாடலின் இசை அப்படி. கலைகளிலே அவள் ஓவியம் என்று சொன்னது பெண்ணின் அழகை சொல்வதற்கென்றே அதை வைத்துக்கொண்டோம்.

இன்று சந்திரவதனி ஸ்கந்தகுமார் அவர்கள் வரைந்த ஓவியங்களைப் பார்த்தபோது தனது நேரத்தின் பெரும் பகுதியை ஓவியத்திற்குள் கரைத்திருந்தாள்.
ஒருவன் தனது உடல் நலத்திற்காக ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடம் வரை நடந்து திரும்புவான். அப்படி நடக்கும் போது தான் சென்று திரும்பும் இடத்தையே நினைத்துக் கொண்டு நடப்பானாகில் அது அவனுக்கு ஒரு வேலைபோல் சலிப்பைத்தரும். அதுவே அவன் ஒவ்வொரு அடிவைக்கும் போதும் அக்கம் பக்கம் உள்ள இயற்கை அழகை இரசித்த வண்ணம் நடப்பானாகில் அவன் செல்லவேண்டிய இடம் விரைவாக வந்துவிட்டதே என்றும் எண்ணத் தோன்றும். சலிப்பாகவும் இருக்காது. அதுபோலவே இங்கு ஓவியர் வதனி குமார். தனது ஓவியங்களை ஒவ்வொரு கணமும் இரசித்து இரசித்து படைத்தமையால் அவருக்கு அது ஒரு சலிப்பைக் கொடுக்கவும் இல்லை அதனால் நேரம் தெரியவில்லை.
அதனாலே அவரால் குறுகிய காலத்திற்குள் நூற்றுக்கு மேற்பட்ட ஓவியங்களை காட்சிப்படுத்த முடிந்தது.

தனக்காக ஓவியம் வரைந்தாலும், ஒவ்வோர் மனநிலையையும் சரியாகப் புரிந்து கொண்டுள்ளார். அதாவது தனது போக்கில் தனது எண்ணத்திற்குரிய ஓவியங்களையும் படைத்துக் கொண்டு. அதில் எந்தக் கலப்படமும் செய்யாமல். பிறர் மனதைப் புரிந்து அவர்களாகவே தன்னை நினைத்துக் கொண்டு அவர்களாகவே ஓவியங்களைக் கொடுத்தும் உள்ளார். இது தன் எண்ணத்தை பிறரிடம் திணிக்கும் எண்ணம் அற்ற ஒரு ஓவியர் என்று இவரை எடுத்துக் கொள்ளலாம். திணிப்பு எந்தவகையிலும் ஓவியனுக்கு பிடிக்காத ஒன்று. அவன் சுதந்திரமானவன். அதேபோல் பிறர் சுதந்திரத்தையும் நேசிப்பவன். அவரது ஓவியங்களின் சிறப்பிற்கு இவையும் ஒரு காரணமே. மனித வடிவங்களையே தினம் சுற்றாமல் பறவைகள் மலர்கள் மான்கள் யானைகள் என மாறி மாறி தனது படைப்புக்களை முன்வைத்துள்ளார்.

இவர் இலங்கை களனி பல்கலைக்கழகத்தில் 1979 ஆண்டு ஓவியத்தில் பட்டப்படிப்பை முடித்தவர். கொழும்பில் அன்று 01.2.1979 ஆண்டு கொழும்பு ( Samudara art Gallery ) சமுத்திரா கலைச்சாலையில் ஓவியக்கண்காட்சியை நடத்தி புகழ் பெற்றவர். ஓவியர் என்றால் ஆண் என்றே இருந்த காலத்தில் துணிச்சல்மிக்க ஒரு பெண் ஓவியராக வதனி குமார் உருவானார்.

இவரது வெற்றிக்கு அவரது கணவரது பங்கும் அதிகமாக உண்டு. வதனி குமாருடன் நானும் பல்கலைக்கழகத்தில் ஒன்றாக ஓவியம் கற்றேன். நம்மோடு கற்றவர்களில் இன்று லண்டனில் மிகவும் பிரபலமாக உள்ள ஓவியர் கே.கே.ராஜா அவர்களும் ஒருவர். அவரது ஓவியங்கள் யாவரும் அறிந்ததே. அவை தனித்துவமானவை. கற்றுக்கொண்டே இருப்பவன் தான் கலைஞன். இந்த வகையில் வதனி குமார் இன்றும் கற்றுக்கொண்டே இருக்கும் ஒரு கலைஞர். அதனால் அவளே ஒரு ஓவியம்.

**கண்ணா**

# கண்டி கலஹா தேயிலைத் தோட்டத்தில் படப்பிடிப்பு!

## இளையவர்களை அரவணைத்துக்கொண்டு பயணித்த வெற்றிமணி.






தாய்மண்ணில் கொட்டிக்கிடக்கும் வளங்கள் அற்புதமானவை. வேலைக்கு பின்பும், வாழ்வு ஒன்று அங்கு நிச்சயம் உண்டு. இங்கு வேலைக்காக வாழ்வை இழக்கின்றோம் என்பது அங்கு நின்ற நிமிடங்களில் தெரிந்தது.

மாலையில் கூடிப்பேசக் கலைகள் இருந்தன, இலக்கியம் பூத்தது, காலத்துக்கு ஏற்ப கலைகளின் வளர்ச்சி கண்முன்னே விரிந்துகிடந்தன. இளையவர் மனதில் ஏதாவது புதுமை படைக்கவேண்டும், என்ற அவா பொங்கிவழிகின்றது.
ஆண்,பெண், என்ற உணர்வுகளைப் பூட்டிவைத்த காலம் மலையேறிவிட்டது.

கற்றவர்கள் சாதரணமானவர்கள் போல் மிக எளிமையாக பழகும் தாய்மண்ணில், புதிய உலகத்தில் கால்வைக்கும் உணர்வுடன் TBB இசையமைத்த பாடல் அட இராவாச்சு போச்சு புள்ளே ஒளிப்பதி வேலையைத் தொடங்கினோம்.

தேர்ந்தெடுத்த இடம் மலையகம். கண்டி கலஹா தேயிலைத்தோட்டம். அங்கு தொழிலாளர்கள் வசிக்கும் லயத்தில் ஒரு நாளில் ஒரு பாடல் பூரணமாக எடுத்து முடித்து, மறுநாள் எடிட்டிங் வேலையும் முடித்து பாடல் வெளியிடத் தயாரானது.

இவ்வளவு சுறு சுறுப்பாக ஒரு பாடலை களமமைத்து, நடிகர்களைத் தெரிவு செய்து, ஒளிப்பதிவாளர் மற்றும் உதவியாளர்களை ஒன்று கூட்டி, இப்பணியினை வெற்றி மணிக்கு முடித்துத்தந்தவர், ஓர் இளம் கலைஞர். பேரதனைப் பல்கலைக்கழகத்தின் ஓர் கலைப்பட்டதாரி. ஊடகத்துறையில் கால்பதித்து உச்சத்தைத் தொடத் துடிக்கும் ஓர் இளம் பெண். அவர்தான் செல்வி பிரதீபா குலசிங்கம்.

இவர்களுடன் சுலக்சிதா சுகுமார், நடிகர் அஷ்வக் மொகஹமட், ஒளிப்பதிவாளர் ஜெனோஷன் ஜெயரட்ணம். ஆர்ச்சலா கதிரேசன், சித்திரா லிண்டா, திலினி, ரிஸ்மியா, என்று ஒரு பெரும் பல்கலைபட்டாளமே திரண்டுவந்தது.

படத்தளத்தை நோக்கி புறப்பட்ட நேரம் அதிகாலை 4.30. பேராதனை பல்கலைக்கழகத்தை காலை 7.30 அடைந்து விட்டோம். அங்கு சிற்றூண்டிகள் உடன் எம்மை வரவேற்க பேராசிரியர்கள் காத்து நின்னர்.
அனைவரும் இளம் மலர்கள். இவர்களில் சிங்கள ஆசிரியர்களும் உள்ளடக்கம். இவர்களது வழிகாட்டலில் ஒரு பாடல் பேராதனை பல்கலைக்கழக வெளிச் சுற்றாடலிலும், மறுபாடல் கலஹா தேயிலைத்தோட்ட லயத்திலும் படமாக் கினோம்.
லயத்தில் உள்ள மக்களது அன்பு எம்மை லயிக்கவைத்தது. சின்னஞ்சிறுசுகள் முதல் முதியவர்வரை எந்த இடைஞ்சலும் இன்றி ஒத்துழைப்பு நல்கினர். 40 வருடங்களுக்குப்பின் அந்த மக்களைச் சந்தித்தபோது அவர்கள் அன்று போல் இன்றும் அன்பில் நிறம்மாறாத பூக்களாகவே இருந்தனர்.
அன்று கல்வியைவிட்டு விலகி இருந்த அம்மக்கள் இன்று கல்விகற்பதில் பெருநாட்டம் காட்டுவது மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது.



இந்து பௌத்தம் முஸ்லீம் என 3 மதத்தவரும் எம்முடன் இணைந்து பணியாற்றினார்கள். அரசியல்வாதிகள் செய்யும் திருகுதாளங்களுக்கு சாதரணமக்கள் மேல் குறைகூற முடியாது. தோட்டத்தில் இருந்த சிறு கோவிலில் படம்பிடிப்பு நடத்தினோம். அப்போது அக்கோவிலில் திருவிழா வருவதாகக் கூறி உதவிகேட்டனர்.

நாம் கொடுப்பதற்கு முன்னரே எம்முடன் வந்த இளம் முஸ்லீம் பெண் தனது பணத்தைக் கொடுத்து விட்டார். இனம் மதம் மொழி யாவும் கடந்து நிற்கும் கலை, எவ்வளவு புனிதமானது. அதனால்தான் தெய்வீகக் கலையானது. பாடல் காட்சிகளில் அஷ்வர் அசத்தினார்.

நாயகிகள் இருவரும் நடிக்கும்போது நாயகிகள், மறுகணம் சகோதரிகள். இந்த உறவு இளம் சந்ததிகளிடம்தான் பெரிதும் பெருகிக்கிடக்கிறது.

இந்த பாடல் காட்சியினை ஒளிப்பதிவு செய்தவர் ஜெனோ ஷன். சுடச்சுட ஒவ்வொரு காட்சியும் எடுத்துவிட்டு அதனை ஆனந்தத்துடன் பார்த்து சரிபிழை செய்வார்.

மொத்தத்தில் சிறந்த பாடல் ஒன்று தாய்மண்ணில் இதுவரை எவரும் எடுத்திராத பின்புலத்தில் எடுத்த பெரு மகிழ்வுடன் இணையத்தளங்களில் மற்றும் வெற்றிமணி விழா அரங்குகளில் அப்பாடல் வெளியிடப்பட்டு பலரது மனங் களையும் கொள்ளைகொண்டது.

**கண்ணா**



# இன்னும் ஒரு கால் நூற்றாண்டு கடக்கட்டும் நடப்பதைப் பார்ப்போம்!

சேவியர்

**"முன்பெல்லாம் ஐம்பது ஆண்டுகள் தம்பதியர் சேர்ந்தே வாழ்ந்தார்களாம்" என வியப்பாய் இளசுகள் பேசித் திரியும்.**

ஒவ்வொரு கால்நூற்றாண்டும் நமக்கு முன்னால் ஏகப்பட்ட மாற்றங்களை உருவாக்கித் தந்து கொண்டே இருக்கிறது. இன்றைய நவீன தொழில்நுட்பம் நாளுக்கு நாள் ஏதோ ஒரு புதுமையை அறிமுகம் செய்து கொண்டே இருக்கிறது. "ஆஹா என்ன புதுமை இது" என வியந்து முடிப்பதற்குள் அந்த புதுமை பழையதாகி நம்மை நோக்கிப் பல்லிளிக்கிறது.

முன்பெல்லாம் மிகப்பெரிய மாற்றம் என்பது ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறை நிகழும் சமாச்சாரமாய் இருந்தது. இப்போதோ அது சில ஆண்டுகளின் இடைவெளியிலேயே நிகழ்கிறது. போன ஆண்டு வாங்கிய ஸ்மார்ட்போன் இன்றைக்கு அருங்காட்சியக பொம்மை போல மாறிவிடுகிறது.
ஆர்டிபிஷியல் இண்டலிஜென்ஸ், ஆகு மெண்டட் ரியாலிட்டி, மெஷின்லேர்னிங் போன்றவற்றின் கலவை இன்று மனிதர்களின் இடத்தை இயந்திரங்களுக்கு விற்றுக் கொண டிருக்கிறது.

இப்போது மனிதர்களிடையே இயந்திரங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இன்னும் இருபத்து ஐந்து ஆண்டுகளில் இயந்திரங்களின் இடையே மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். வீடுகளிலுள்ள பெரும்பாலான வேலைகளை இயந்திரங்களே செய்யும். மனிதர்களின் சோம்பல் அதிகரிக்கும், அதற்கேற்ப நோய்களும் மனிதர்களின் வாசல்களில் இறக்குமதியாகிக் கொண்டே இருக்கும்.

கொஞ்சம் ஆதிகாலத்துக்குப் போய்ப் பார்ப்போம். மனிதன் விலங்குகளோடும், இயற்கையோடும் இரண்டறக் கலந்து வாழ்ந்தான். பின்னர் கொடிய விலங்குகளை விலக்கி விட்டு, வீட்டு விலங்குகளோடு வாழ ஆரம்பித்தான். விலங்குகள் வாழ்வின் பாகமாயின. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அந்த விலங்குகளை விட்டு விட்டு இயற்கையோடு வாழ ஆரம்பித்தான்.
பின் இயற்கையையும் கொஞ்சம் கொஞ்சமாய் விலக்கி விட்டு செயற்கையில் இன்பம் காண ஆரம்பித்தான். இயற்கையும், விலங்குகளும் விலகிச் செல்ல செயற்கை மெல்ல மெல்ல மனிதனை கபளீகரம் செய்ய ஆரம்பித்தது. இப்போது, செயற்கையின் மயக்கத்தில் அவன் செல்லரித்துக் கொண்டிருக்கிறான். அவனது கரங்களில் வாழ்க்கை, அவசரத்தைத் திணித்து விட்டு நிதானமாய்ச் சிரிக்கிறது.

இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளில் என்னென்ன நடக்கும் என்பதை கணிப்பதே கடினமாக இருக்கிறது. தொழில்நுட்பத்திலும், அறிவியலிலும் வியப்பின் கதைகளை அடுக்கி வைத்தாலும் வாழ்க்கை கொண்டு வரப்போகிற சில விஷயங்களை நினைத்தால் மனதில் கவலை கூடாரமடித்துக் கொள்கிறது.
கூட்டுக் குடும்பங்கள் தனித்தனி குழுக்களாக வாழ்ந்து வரும் இன்றைய சூழல் இனியும் பலவீனமடையும். தனித்தனிக் குடும்பமே ஒற்றுமையாய் வாழாத சூழல் உருவாகும். வீடுகளில் இருக்கும் ஒரு சில நபர்களையும், தொழில்நுட்பம் கண்ணுக்குத் தெரியாத சீனப் பெருஞ்சுவர்களால் பிரித்து வைக்கும். எங்கே தொடுதலும், அணைத்தலும் இல்லாத உறவுகள் வாழ்கிறதோ அங்கே அன்பும் அன்னியோன்யமும் விலகி, செயற்கைச் சாத்தான் செயர் போட்டு அமர்வான். வருடங்கள் செல்லச் செல்ல குடும்பங்களின் இறுக்கமான இழை பிரிந்து எளிதில் உடையும் நிலையில் அவை நிலைபெறும்.

அன்புக்காகவும், உறவுக்காகவும், ஆறுதலுக்காகவும் தோள்களையும், ஆள்களையும் தேடிய காலம் தேய்ந்து விடும். இன்பத்துக்காகவும், இளைப்பாறவும் இயந்திரங்களைத் தேடும் காலம் நிச்சயம் உருவாகும். அப்போது கண்ணியமான காதலை, கணினி இயந்திரங்கள் இடமாற்றம் செய்யும். ஸ்பரிசத்தின் கவிதையை டிஜிடலின் மென்பொருள்கள் அழித்துச் சிரிக்கும். உறவுகளின் இனிமையை முழுமையாத் தொலைத்த ஒரு தலைமுறை முளைத்தெழும்பும்.

திருமணங்கள் ஆயிரம்கால பந்தங்கள் எனும் நிலை அழிந்தொழிய, அவை பழங்கால சித்தாந்தத்தின் மிச்சங்கள் எனும் கருத்துருவாக்கம் உருவாகும். முடிச்சுகளால் முடங்காத வாழ்க்கையையே மனித மனம் தேடும். அவை கலாச்சாரத்தின் கட்டளைகளையும், வயதுகளின் வரம்புகளையும் கலைத்தெறியும். விட்டுக்கொடுத்தல் எனும் வார்த்தை அகராதியிலிருந்து விலகி விட, விட்டு விலகுதல் என்பதே வெகு சகஜமாய் மாறும்.

"முன்பெல்லாம் ஐம்பது ஆண்டுகள் தம்பதியர் சேர்ந்தே வாழ்ந்தார்களாம்" என வியப்பாய் இளசுகள் பேசித் திரியும். இணைந்து வாழ்கின்ற குடும்பங்கள் அழிந்து வருகின்ற உயிரினங்கள் போல எங்கேனும் ஒன்றிரண்டு அவமானக் குரல்களிடையே அடக்கமாய் வாழ்ந்து முடிக்கும்.

ஆற்றங்கரையில், மாமர நிழலில் ஆர அமர நாவல் வாசித்த இனிமைத் தருணங்களெல்லாம் முழுவதும் விடைபெற்றோட, நாலு வரி நாவல்கள், ரெண்டு வரி கதைகள் என எழுத்துகளெல்லாம் இறுக்கமாகும். ஓடும் ரயிலில் தோன்றி மறையும் காட்சிகள் போல இலக்கியத்தின் சுவை இதயத்தில் நுழையாமல் வெளியேறிச் செல்லும்.

நட்புகள் பெரும்பாலும் டிஜிடல் வசமாகும். வார இறுதிகளில் சந்தித்து, குட்டிச் சுவரில் கதைகள் பேசும் எதிர்காலங்கள் இல்லாமலேயே போகும். கான்ஃபரன்ஸ் போட்டு டிரீட் கொண்டாடும் புதுமைகளே அரங்கேறும். பல இடங்களில் இருந்தாலும் டிஜிடலில் விர்ச்சுவலாய் ஒரே இடத்தில் கலந்து சிரிக்கும் சந்திப்பு தளங்கள் உருவாகும்.

இன்னும் ஒரு கால் நூற்றாண்டு கடக்கட்டும்.....



"முன்பெல்லாம் திரைப்படங்களைத் திரையிட தியேட்டர்கள் இருந்துச்சாம் தெரியுமா ?" என எதிர்காலம் பேசிக்கொள்ளும். நினைத்த இடங்களில் படங்களைத் திரையிட்டு ரசிக்கும் விரல்சுவல் விழிகள் உருவாகும். விழிகளுக்கு நேரடியாகவே படங்கள் தரவிறக்கம் செய்யப்படும். இமைத்தலைக் கொண்டு எதுவும் செய்யலாம் எனும் புது தொழில்நுட்பம் உருவாகும்.

மனிதர்கள் நடமாடும் இயந்திரங்களாகவே இருப்பார்கள். அவர்களுடைய கண் அசைவுகளும் கவனிக்கப்படும். அவர்களுக்கென எந்த சுதந்திரமும் இருக்காது. அவர்கள் மூச்சு விடுகின்ற எண்ணிக்கையையும் சட்டெனச் சொல்லும் டிஜிடல் சிலந்தி வலை எங்கும் வியாபித்திருக்கும். எல்லாமே ஆட்டோமெடிக் பாதையில் பயணிக்கும். தானாகவே முளைத்து வளரும் தானியங்களைப் போல, தானாகவே ஓடும் ஆட்டோமெடிக் கார்களைப் போல, எல்லாமே தானியங்கியாய் மாறும்.

வர்த்தகமும், பணமும் டிஜிடலின் கைகளில் தஞ்சம் புகும். எதையும் கையில் பார்க்க முடியாத சூழல் உருவாகும். இருப்பதாய்த் தோற்றமளிக்கும் மாயக் கரன்சிகளில் உலகம் புரண்டு படுக்கும். சர்வதேச நிறுவனங்கள் நினைத்தால் யாரை வேண்டுமானாலும் கண நேரத்தில் ஏழையாக்கவோ, கண நேரத்தில் செல்வந்தனாக்கவோ முடியும் எனும் சூழல் உருவாகும்.

நம் வாழ்க்கை நம் கையில் என்பது நகைச்சுவையாய்த் தோன்றும். நம் வாழ்க்கை நம் கையைத் தவிர எல்லாருடைய கைகளிலும் தவித்து வாழும். ஏதோ ஒரு ஏகாதிபத்யச் சிந்தனையின் பகடைக்காய்களாக மானிட வர்க்கம் மாறும். யாருடைய அடையாளத்தையும் முழுமையாய் அழிக்கவும், யாரை வேண்டுமானாலும் புகழில் ஏற்றவும், யாரை வேண்டுமானாலும் புழுதியில் அழுத்தவும் டிஜிடல் தீர்வுகள் மிக எளிதாகும்.
ஆடைகள் என்பவை அவமானம் மறைக்க எனும் சிந்தனை மறையும். ஆடை என்பது அங்கத்தின் விளம்பரப் பலகை எனும் புதிய சிந்தனை வலுப்பெறும். அழகை அங்கீகரிக்கவும், அதை அடையாளப்படுத்தவும், அதை பகிரங்கப்படுத்தவும் ஆடைகள் பயன்படும். எதுவுமே நீண்டகாலத் திட்டங்களாய் இருக்காது. வேகத்தின் விளைநிலங்களாகவே அனைத்தும் மின்னி மறையும்.

நாவினால் பேசிக்கொள்வதை மறந்து போகும் தலைமுறை உருவாகும். விரல்களாலும், சென்சார்களாலும், அசைவுகளாலும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் புதிய வழிமுறை வியாபிக்கும்.

நின்று நிதானித்து வாழ்க்கையை ரசிப்பவர்களை, அறிவிலிகள் என உலகம் பேசும். கால ஓட்டமெனும் காட்டாற்றில் கட்டையுடன் கட்டிப் புரண்டு சுழல்பவர்களை அகிலம் பாராட்டும். எல்லாம் தலைகீழாய் மாறிய ஒரு புதிய உலகம் சமைக்கப்படும்.

அந்த கால மாற்றத்தின் கடைசிப் படிக்கட்டில் நின்று கொண்டு ஒரு கூட்டம், கடந்த தலைமுறையின் அனுபவங்களை விதைக்கப் போராடும்.
மனிதத்தை விட்டு விடாதீர்கள்,அதுவே வாழ்வின் மகத்துவம் என அவர்கள் கூக்குரலிடுவார்கள். உறவுகளை விட்டு விடாதீர்கள் அன்பின்றி அமையாது உலகு என அவர்கள் போதிப்பார்கள். கடந்த தலைமுறையின் புனிதத்தைப் புதைத்து விடாதீர்கள் என அவர்கள் பதட்டத்துடன் பேசுவார்கள்.
அவர்களைக் கவனிக்கவும் நேரமின்றி, அடுத்த காலாண்டை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் வாழும் தலைமுறை !

## தமிழ் வற்றிய பூமியில் கூட வெற்றியை சுமக்கும் திறமை உமக்கு.



தந்தையே,
தமிழீன்ற விந்தையே.

அன்பின்
முதல் இழையை
யாரே அறிவர்

கடலில்
முதல் அலையை
யாரே அறிவர்.

தொலை தூர
தொடுவானம் போல
அருகே தெரியும்
அன்புமக்கு.

யாரும் அறியாத
பெருமழையின்
முதல் துளி போன்ற
இதயம் உமக்கு.
ஈன்ற பொழுதில்
பெருதுவக்கும்
தந்தையர் மத்தியில்,
பெரிதுவந்து ஈந்தவர்
நீர்

எழுத்துகளின்
இடைவெளியிலும்
நேசம் வாசிக்கும்
மனம் உமக்கு.

சொல்லாத
வார்த்தைகளிலும்
பாசம் பழகும்
பரிசுத்த மனம் உமக்கு

தமிழ்
வற்றிய பூமியில் கூட
வெற்றியை சுமக்கும்
திறமை உமக்கு.
தலைமுறை தோறும்
தமிழையும்
தாழ்மையையும்
பகிரும் வாழ்வு உமக்கு.
வாழ்த்துகிறேன்.

கதிரவனை
வாழ்த்தும்
மின்மினிபோல

இமயத்தை
வாழ்த்தும் கூழாங்கல்
போல

ஆழியினை
வாழ்த்தும்
கேணியினைப் போல
வாழிய நீர்
பல நூறாண்டு...

அமைதியை மட்டுமே
அகத்தினில் கொண்டு.

இனிய
நல்வாழ்த்துகள்

அன்புடன்
**சேவியர்**

# நாடனொடு நட்பே




**பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்**
ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியர்
கக்சுயின் பல்கலைக் கழகம் யப்பான்.

பண்டைத்தமிழர் வாழ்வியல் இயற்கையோடு மிகவும் ஒன்றியதாக இருந்தது. அதனை அக்காலத்தில் புலவர்களுடைய பாடல்கள் நன்கு பதிவு செய்துள்ளன. இயற்கை நிலையில் அங்கு வாழ்ந்தவர்களின் உணர்வுகளின் வெளிப்பாடும் இயற்கையோடு ஒன்றியிருந்ததைப் புலவர்கள் காட்சிப்படுத்தியுள்ளனர். மனித வாழ்வியலில் அகம்,புறம் என இருகூறுகளைத் தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணநூல் வரையறை செய்வதற்கு சங்கப் பாடல்களே பேருதவி புரிந்தன. பாடலின் புனைவுக்கு இயற்கை எவ்வாறு துணை நின்றது என்பதை தொல்காப்பியம் தெளிவாக விளக்கியுள்ளது. முதல், கரு, உரி என்ற மூன்று சொற்களைச் சிறப்புப் பொருள் கொள்ளும் கலைச் சொற்களாகப் பயன்படுத்தி இயற்கை நிலையையும் மனிதர் வாழ்வியலையும் தொல்காப்பியம் இணைத்துக் காட்டுகிறது. இந்த அடிப்படையை வைத்து இலக்கியக் காட்சிகளாகப் பாடல்களை நோக்குவது பயனுடைத்து.

பாடல் புனைவில் சிறப்பாக இடம்பெறும் கூற்று நிலை வகைப்பாடு பாடல் புலப்படுத்தும் உணர்வு நிலையைத் தெளிவாக அறிய உதவுகிறது. கூற்றுநிலையை யாருடைய கூற்று என இனங்காண் பதற்கு சில சொற்கள் அல்லது சொற்றொடர்கள் உதவுகின்றன. பின்வரும் பாடலை இவ்வகையில் காட்சிப்படுத்திக் காணலாம்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயஉந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந் தேன் இழைக்கும் நாடனொடு நட்பே::
(குறுந்தொகை:3)

இப்பாடல் பெண்ணின் கூற்றாக அமைந்துள்ளது. தன்னோடு தொடர்பு கொண்டுள்ள ஆண்மகனின் நட்பு எத்தகையது என்பதைப் பெண் உரைப்பதாகப் பாடல் புனையப்பட்டுள்ளது. "நாடனொடு நட்பு" என்ற தொடர் பெண் கூற்றாக அமைந்த பாடல் என்பதை உறுதி செய்கிறது. "நாடன்" என்ற சொல் ஆண்மகனின் வாழ்விடப் பரப்பையும் அறிவுறுத்துகின்றது. ஒரு சிறிய பிரதேசத்தைச் சார்ந்தவனாக அல்லாமல் நில அளவால் பாரிய பிரதேசத்தை உள்ளடக்கிய நாட்டுக்கு உரிமையாளன் என்ற ஒரு பொருளையும் இத்தொடர் தருகிறது. எனினும் பாடலின் அமைப்பில் ஒரு செய்தியைச் சொல்ல வந்த பெண்ணின் மொழிநடை தனித்துவமாக உள்ளது. சங்கப் பாடல்களைப் பாடிய புலவர்கள் பெண் கூற்றாகப் பாடல்களைப் புனையும் போது அதனைச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளனர். தன்னோடு நட்பாய் இருக்கும் ஆணின் நட்பை அளந்து காட்ட முடியாது என அப்பெண் கூறுகின்றாள். அந்த நட்பு அவளுடைய பார்வைக்கெட்டிய நிலப்பரப்பைக் காட்டிலும் பெரியது. இன்னும் நிலம் என்பது இக்கூற்றில் வேறொரு பொருளையும் தருகிறது. வள்ளுவர் நிலத்தை அகழ்வாரைத் தாங்கும் நிலமெனக் குறிப்பிட்டுள்ளார். தனக்குத் துன்பம் செய்பவரையும் தாங்கிக் கொள்ளும் நிலத்தையும் விட தன்னுடைய நட்புப் பூண்டவனுடைய நட்பை உயர்வானதெனக் கூறுகிறாள். தனக்காக எத்தகைய இடர்களையும் தாங்கக் கூடியவன் என்ற நம்பிக்கை யோடிருக் கிறாள்.

மேலும் அந்த நட்பு வானத்தைக் காட்டிலும் மிகவும் உயர்ந்ததென்பதை "வானிலும் உயர்ந்தன்று" என்ற தொடர் குறிப்பிட்டு நிற்கிறது. அதேபோல நீரைக் காட்டிலும் ஆழமானது என்று குறிப்பிடுகிறாள். பெண்மொழி என்ற வகைப்பாட்டில் ஒரு பெண் தன் உணர்வு நிலையின் அளவைப் புலப்படுத்த நிலம், வான், நீர் என்னும் இயற்கை நிலைகளையே பயன்படுத்தியுள்ளாள்.

அடுத்து அவனுடைய நாட்டைப் பற்றி விளக்கும் போது இயற்கைக் காட்சியை எடுத்துரைக்கின்றாள். அவனுடைய நாட்டிலே மலைச்சாரல்களிலே கரிய கொம்பர்களிலே குறிஞ்சிப்பூ மலர்ந்திருக்கிறது. அதிலிருந்து தேன் எடுத்துத் தேனீக்கள் கூடுகளைக் கட்டியுள்ளன. குறிஞ்சி மலர்களின் பெருக்கத்தால் நிறைந்த தேனைச் சேகரிக்க முடிகிறது. நட்புக் கொண்டவனுடைய மலைநாட்டின் வளம் பற்றிய குறிப்பு பெண்ணின் கூற்றாக அமைந்து இயற்கைக் காட்சியாக அமைந்துள்ளது.

பெண்ணுடைய அகவுணர்வைப் பெண்ணே கூறுவது போலப் பெண்மொழியிலே காட்சிப்படுத்தும் போது செய்யுளைப் பாடிய புலவர் அதற்குரிய சொற்களைப் பயன் படுத்தியுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. "நாடனொடு நட்பே" என்ற தொடர் அவளுடைய உள்ளத்து உறுதியைக் காட்டுவதாக உள்ளது. தனக்கும் அவனுக்கும் இடையே உள்ள நட்பின் இறுக்கத்தை அவள் தன் தோழிக்குக் கூறும் போது எதையும் மறைக்கவில்லை.
அகப்பாடல்களில் தோழி யென்னும் பாத்திரம் ஆணுக்கும் பெண்ணுக்கு மிடையே ஏற்படும் நட்புத் தொடர்பை அறிந்தவளாகச் சித்திரிக்கப் பட்டுள்ளாள். இவருடைய அகவுணர்வு களையும் நன்கு புரிந்து கொள்ளும் அறிவாற்றல் படைத்தவளாயுமுள்ளாள். இதனால், புலவரே தோழி யாகத் தன்னைப் பாவனை செய்து பாடலைப் பாடுவதா கவும் ஒரு கருத்துண்டு. பெண்மையின் அகவுணர்வு களைப் புலப்படுத்தும்போது ஏற்ற சொற்களைப் பயன்படுத்தும் ஆற்றல் புலவர்களிடம் இருந்துள்ளது.

உரையாசிரியர்கள் மேற்குறிப்பிட்ட பாடலுக்கு உரை செய்யும் போது குறிஞ்சித்திணைக்குரிய புணர்தல் ஒழுக் கத்திற்குரிய பாடல் எனக் குறிப்பிட்டுள்ளனர். குறிஞ்சிநிலக் கருப்பொருள்களான சாரல், குறிஞ்சி, தேன் என்பன அதை உணர்த்தி நிற்கின்றன.
சாரல் என்பது வளம் பொருந்திய பக்க மலையாகும். மலைச்சாரலிலே பெரிய தேன் கூடுகளிருப்பது இதற்குச் சான்றாகவுள்ளது. "இழைத்தல்" என்ற சொல் தேனீக்கள் பக்குவமாகத் தங்கள் தேனைச் சேமித்து வைப்பதற்காக நுணுக்கமாக அமைக்கின்ற கூடுகளை இன்றும் மலைச்சாரல்களிலே காணலாம். குறிஞ்சிமலர் இருப்பதால் மலைநாடு என்பது கருப்பொருளால் விளக்கமுறுகிறது.

பாடல் இன்னொரு குறிப்பையும் தருகின்றது. "நட்பு" என்ற சொல்லால் பெண் தனக்கும் அவனுக்குமிடையே உள்ள தொடர்பின் நிலைப்பாட்டையும் கூறிவிடுகிறாள். சங்கப்பாடல்களில் நட்பு, கேண்மையென இரு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நட்பு என்பது மனத்தளவான நெருங்கிய தொடர்பு. கேண்மையென்பது உள்ளமும் உடலும் ஒன்றிய நெருங்கிய தொடர்பு. எனவே இப்பாடலில் குறிப்பிடப்பட்ட பெண் திருமணம் ஆகாதவள் என்பதும் "நட்பு" என்னும் சொல்லால் பெறப்படுகிறது.

இப்பாடல் தேவகுலத்தார் என்பவரால் பாடப்பட்டது. 5 அடிகளால் அமைந்த இப்பாடலில் தலைவி தன்னுடைய நிலையைத் தோழிக்குக் கூறுவதாக அமைந்துள்ளதென உரையாசிரியர்கள் உரை செய்துள்ளனர். தோழியை விளிக்கும் சொல் எதுவும் பாடலில் இல்லை. ஆனால், பெண்ணின் உரையாடல் மூலம் தோழிக்குக் கூறிய கூற்று என்பது பெறப்படுகிறது. பாடலின் அகவலோசை இதற்கு ஒரு சான்றாகவுள்ளது. தனது நட்பின் இறுக்கத்தை "நட்பே" என்ற சொல்லின் ஈற்று ஏகாரம் தேற்றப் பொருளாக முன்னிலையில் நிற்பவருக்குக் கூறும் செய்தி என்பதை நன்கு விளக்கி நிற்கிறது. சங்கப்பாடல்களில் வரும் இடைச்சொற்கள் நுட்பமான பொருளை உணர்த்துவன. "ஆரளவின்றே" என்ற சொல்லில் வரும் ஏகாரம் எதிர்மறைப் பொருளில் அளக்க முடியாதது எனப் பொருள் தந்து நிற்கிறது. பெண்ணுடைய மொழியின் பொருள் தருமாற்றலை இடைச் சொற்கள் மூலம் புலவர் வெளிப்படுத்தியிருப்பது புலவரின் தனித்துவத்தைப் புலப்படுத்தி நிற்கிறது.

பாடற்பொருள் விளக்கம்

| | |
|---|---|
| நிலத்தினும் பெரிதே | நிலத்தைக் காட்டிலும் பரந்தது |
| வானினும் உயர்ந்தன்று | வானத்தைக் காட்டிலும் உயர்ந்தது |
| நீரினும் ஆர்அளவின்றே | - நீரைக் காட்டிலும் ஆழமானது |
| சாரல் | - பக்கமலையிலே |
| கருங்கோல் | - கரிய தண்டினையுடைய |
| குறிஞ்சிப் பூக்கொண்டு | - குறிஞ்சிப்பூக்களைக் கொண்டு |
| பெருந்தேன் இழைக்கும் | - பெரிய தேன் கூடுகளைச் செய்கின்ற |
| நாடனொடு நட்பே | - மலைநாட்டிலேயுள்ளவனோடு நான் |
| கொண்டிருக்கும் நட்பே | |

திணை : குறிஞ்சி
கூற்று : பெண்மகள்
முதற்பொருள் : சாரல்
கருப்பொருள் : சாரல், குறிஞ்சி, தேன்
உரிப்பொருள் : புணர்தல்




இது வெற்றிமணியின் யேர்மனி வெள்ளி ஆண்டு. வெள்ளி விழாக் கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடைபெற இறை ஆசிகளை வேண்டுகிறோம்! வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் சிவகுமாரனின் திருவினையாக்கும் முயற்சிகளே அவர் தந்தை ஈழத்திலே பல்லாண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய இந்த இதழுக்கு யேர்மனியிலே பதிவைத்து இருபத்தைந்து அகவையுள்ள சிறப்பான இதழாக ஆக்கியுள்ளன.

சிவகுமாரன் மிகச் சிறந்த கலைஞர். வண்ணமும் வடிவும், எண்ணமும் கோலமும் அவருடைய கைவண்ணங்கள். ஆனால் இவற்றையெல்லாம் நடைமுறைகளாக ஆக்குதற்கு அவருடைய அயரா உழைப்பே அடிப்படைக் காரணியாகிறது.

வெற்றிமணிக்கு வலுவாக சிவகுமாரனின் குடும்ப உறுப்பினர்களின் ஊக்கமும் பக்கத் துணையும் அமைகின்றன. வெற்றிமணி ஒரு தனித்துவமான இதழ். சிவகுமாரன் அதன் வடிவமைப்பு, வண்ணம், உள்ளுடல் ஆகியன பற்றி பல்வேறு நிலைகளிலே ஆராய்ந்து ஆராய்ந்து புதிது புதிதாக வெளியீடு செய்துகொண்டிருக்கிறார். எமது முதுமை காரணமாக விரைவுடனும் வேகமுடனும் பக்கத்துணையாற்ற முடியவில்லை. ஆனால் அதன் உயர்வுக்கும் சிறப்புக்கும் வாழ்த்துக்கூற முடிகின்றது. வெற்றிமணியுடன் பல்லாண்டுகளாகத் தொடர்புற்றிருப்பது எங்களுக்குப் பெருமை தருகிறது.

இன்று போல் என்றும் பொலிவு குன்றா அகவைகளுடன் வெற்றிமணி முன்னோக்கி நடைபோட எல்லாம் வல்ல இறைவனுடைய தாள் தாமரைகளை வணங்கி வாழ்த்துகிறோம்.!



பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ்
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்
ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியர்
கக்சுயின் பல்கலைக் கழகம் - யப்பான்.

# காயகல்பம்

# மரணத்திற்கு ஒரு மாற்று மருந்து.



உங்களுக்கு மரணிக்க ஆசையா என்று கேட்டால், ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து ஒரே வார்த்தை ஒலிக்கும், "இல்லை எனக்கு மரணிக்க ஆசை இல்லை இல்லை". இதோ மரணிக்க ஆசை இல்லாதோர் மட்டும் தொடர்ந்து வாசியுங்கள்.

மரணம் என்பது ஒருவகையான உடலின் ஊனம். அல்லது உடலின் பசி என்று சொல்லலாம். உடல் எப்போதும் ஏதோ ஒன்றை எதிர்பார்த்தவண்ணமே உள்ளது. புரியும் படி சொல்ல வேண்டும் என்றால். ஒவ்வொரு நாளும் உங்களுக்கு தாகம் ஏற்படுகின்றது, பசிக்கின்றது, கழிவகற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகின்றது. இதெல்லாம் அத்தியாவசிய செயற்பாடு என்று மனிதன் வகைப்படுத்தியுள்ளான்.

இப்படி அத்தியாவசிய செயற்பாடுகளைச் செய்யாமல் விட்டால், இதற்குப் பதில் உடல் மரணத்தை நாடும். ஆகவே உடல் ஒன்றை எதிர்பார்க்கின்றது அதைக் கொடுக்காவிட்டால் அதற்குப் பதில் மரணத்தை எதிர்பார்க்கின்றது. இதுதான் இலகுவான புரிந்துகொள்ளுதல். அப்படி என்றால் உடல் எதிர்பார்க்கும் உணவைக் கொடுத்தால் எமக்கு மரணம் வராமல் அல்லவா இருக்க வேண்டும்? அப்படி இருக்கையில் தினமும் மூன்றுவேளை உணவுண்ணும் பக்கத்துவீட்டு அண்ணனும் 35 வயதில் அற்ப ஆயுளில் மரணமடைந்த செய்தி தான் என்னை மீண்டும் சிந்திக்க வைத்தது.

அது எப்படி மரணம் என்ற ஒன்று நிகழலாம்? உடலிற்குத் தேவையான ஒன்றைக் கொடுக்கும் போதும் உடல் மரணத்தை நாடும் என்றால் அதில் நியாயம் இல்லையே என்ற யோசனையுடன் நடந்து சென்று கொண்டிருந்த நான் தெருவில் கண்ட ஒரு காட்சி என்னை தெளிவுபடுத்தியது.
அதிக எடையோடு தெருவில் சென்ற ஒரு வண்டி கவிழ்ந்து விழுந்து கிடந்தது, அதை பார்த்த அங்கே அதிக எடையோடு வந்த இன்னுமோர் வண்டி, அந்த இடத்திலேயே நின்று அதன் எடையை இன்னுமோர் வண்டியில் இறக்கி வைத்துக் கொண்டிருந்தது. இப்போது எனக்குத் தெளிவு பிறந்தது.

உணவு என்பதால் மரணம் தடைப்படுவது கிடையாது, மரணம் தள்ளிப் போடப் படுகின்றது. மரணம் தடைப்பட வேண்டும் என்றால் மருந்து உண்ணவேண்டும். மருந்து என்றால் என்ன? உணவு என்றால் என்ன?
விருந்து சமைத்து உண்டால் அது உணவு. வீரியம் உள்ளதை அறிந்து அரைத்து உண்டால் அது மருந்து. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால், உடல் ஏன் கழிவகற்றுகின்றது? போதுமான உணவைக் கொடுத்தால் எதற்காக உடல் மிகுதியென்று கழிவகற்ற வேண்டும்? அதற்கு ஒரே காரணம் நாம் தேவைக்கு அதிகமாக வயிற்றை நிரப்பி வைக்கின்றோம் அதனால் உடல் உழைத்துக் களைத்து உயிரை இழக்கின்றது. நாம் உண்ணும் உணவு சிகப்பு இரத்தமாகவும் வெள்ளை இரத்தமாகவும் உடல்

சிந்தனை சிவவினோபன்.

முழுதும் சென்று எம்மை இயக்கிக் கொண்டு உள்ளது. சிகப்பு இரத்தம் என்னை உற்சாகமாக வைத்திருக்கவும், வெள்ளை இரத்தம் எம் உடலில் உள்ள தீய கிருமிகளை அழிக்கவும் பயன் படுகின்றது. இந்த இரண்டையும் சீர்படுத்தும் அளவு மருந்து உண்டாலே போதும். உடல் மலம் கழிப்பதை நிறுத்திவிடும். இதனால்த் தான் சித்தர்கள், தியானத்தில் அதிக காலம் அப்படியே அமர்ந்த நிலையில் இருந்திருக்கின்றார்கள்.

இப்போது ஒரு சந்தேகம் வந்திருக்கும் அது எப்படி மருந்துணவைக் கண்டு பிடிப்பது அதில் எப்படி உட்கொள்ளும் அளவைக் கண்டு பிடிப்பது என்று சந்தேகம் வரும். அதற்கு நீங்கள் முதலில் தமிழ் படிக்க வேண்டும், தமிழில் உள்ள பழைய நூல்களைத் தேடிக் கற்க வேண்டும். இந்த கட்டுரையின் முடிவில் இப்போது உங்களுக்கு ஒரு சில காயகல்ப உணவு வகைகளைக் குறிப்பிடுகின்றேன் அதை உட்கொள்ளும் முறையையும் சொல்லுகின்றேன், செய்து பாருங்கள். அறுகம்புல்லு, துளசி, முருங்கையிலை, நெல்லிக்காய்.
மேலே சொன்ன உணவுப் பொருட்களை தாவரத்தில் இருந்து பறிக்கும் போதே மந்திரங்கள் சொல்லி அல்லது தேவாரங்கள் பாடிப் பறிக்க வேண்டும். அதற்கு காரணம் தாவரத்தில் இருந்து பறிக்கும் போது, தாவரம் அதன் வலியை விஷமாகக் கக்கிவிடாமல் இருக்க மந்திர ஒலிகளை எழுப்பவேண்டும்.
அதன் பின் பறிக்கப்பட்ட தாவர பகுதிகளை சூரிய நிழலில் காயவைக்கவேண்டும். முக்கிய கவனம் சூரிய ஒளியில் இல்லை, சூரிய நிழலில். அதாவது பகல் வேளையில் ஒரு குடை அல்லது தாள்வாரத்தின் நிழலில் காயவைக்க வேண்டும்.
காய்ந்து தொட்டால் உதிரும் பக்குவத்தில் அதை எடுத்து நன்றாக சாம்பலாகும் வண்ணம் அரைத்துக் கொள்ள வேண்டும். அரைத்த துகள்களை உள்ளங்கையில் எடுத்து தேன்குழைத்து அருந்தினால் அது வாய் முதல் வயிறுவரை சென்று வேகமாக குருதியிற் கலந்து, உடலிற்கு மருந்து வழங்கும். இதன் மூலம் உடல் அதிக சக்தியையும், குறைந்த வேலையையும் பெறும். இதோடு உங்கள் ஆத்மாவையும் ஒன்றிக்க வைத்தால், மரணமின்றி மகிழ்ந்து வாழலாம்.
மரணத்தில் இன்பம் மாற்றுண்டு,
மாற்றன்று மரணமே இன்புற்று!



சிவன் பெற்ற மகன்,
இவன் பெற்ற வரம்,
கரம் தொட்டு மனம்,
வடம் நீட்டும் மடல்- வெற்றிமணி.
வென்றது இவராகிலும்,
தந்தது அவராகுமே!
சுப்ரமணியின் சூட்சும ஒலியை - சொற்பதமாக
வழங்கிடும் சிவன் மகன் (சிவகுமாரன்).

- சிந்தனை சிவவினோபன்.

# யேர்மனியில் தமிழ்த் தொலைக் காட்சிகளின் வருகைகள்




**செ.தவா (பிரதம ஆசிரியர்: தமிழ்ரைம்ஸ்)**

யேர்மனி நாட்டிற்கு ஈழத்தமிழர்களின் வருகை என்பது 1980ஆம் ஆண்டுக்கு பின்னர் தான் என்று பரவலாக அறியப் படுகின்றது. அன்றைய காலகட்டங்களில் தமிழர்களின் மொழியிலான எந்த ஊடகங்களும் யேர்மனியில் இருந்திருக் கவில்லை

ஆனால் புலம்பெயர்ந்து யேர்மனிக்கு வந்த ஈழத்தமிழர்கள் தமது தமிழ் மொழியிலான ஊடகங்களை உருவாக்குவதில் கடுமையான உழைப்பையும் முயற்சியையும் மேற்கொண்டு பல ஊடக தளங்களை நிறுவியிருக்கின்றார்கள் என்பது ஆரோக்கியமான செய்தியே! அப்படி புலம்பெயர்ந்து யேர்மனிக்கு வந்த ஈழத்தமிழர்கள் உருவாக்கிய ஊடகங் களில் தொலைக்காட்சியின் உருவாக்கம் பற்றியே இங்கே பார்க்க இருக்கின்றோம்.

யேர்மனியைப் பொறுத்தவரை ஈழத்தமிழர்களின் முதல் தொலைக்காட்சியானது, 1994ஆம் ஆண்டு செல்வநாயகம் அவர்களால் உருவாக்கப்பட்டதாகும். இதுவே யேர்மனியில் உருவாக்கிய முதல் தமிழ் தொலைக்காட்சி ஆகும்.



**கலைவிளக்கு 20 வயதினிலே... நிகழ்வின்போது திரு.தணிநாயகம் செல்வாநாயகம்**

படங்கள் :வெற்றிமணி

யேர்மனியின் தற்போதைய தலைநகரான பேர்லின் மாநகரில் „மீடியா போட்“ (Media port) ஊடக நிறுவனத்துடன் இணைந்து 1994ஆம் ஆண்டு பங்குனி மாதம் 27ஆம் திகதி „உலகத் தமிழ்த் தொலைக்காட்சி“ எனும் பெயரில் பரீட்சார்த்த ஒளிபரப்பினை ஆரம்பித்து தனது சேவையைத் தொடங் கியது. ஆனால் நான்கு மாதங்களில் அரசியல் சூழ்நிலை களால் தனது தொலைக்காட்சிச் சேவை தடை செய்யப்பட்டது என உலகத் தமிழ்த் தொலைக் காட்சியின் ஸ்தாபகர் திரு.தணிநாயகம் செல்வாநாயகம் அவர்கள் தெரிவிக்கின்றார்.

இந்தத் தொலைக்காட்சித் துறையில் தவிர்க்க முடியாத வராக திரு.சுப்பிரமணியம்.பாக்கியநாதன் அவர்களும் விளங்குகிறார்.

1986ஆம் ஆண்டு „கலைவிளக்கு“ எனும் சஞ்சிகையை ஆரம்பித்தவர் அதன் தொடர்ச்சியாக 1991ஆம் ஆண்டு கலைவிளக்கு எனும் வீடியோப் பத்திரிகையையும் ஆரம்பித்து யேர்மனி வாழ் தமிழ்மக்களுக்கு காட்சி ஊடகத்தின் வெற்றிடத்தை நிரப்பியவர். 1991ஆம் ஆண்டு offener kanal எனும் யேர்மனிய உள்ள தொலைக்காட்சிச் சேவையுடன் இணைந்து டோட்முண்ட், கஸ்றொப் றெக்ஸல், கேர்ன, சுவேற்றா போன்ற பல உள் ஊர் நகரங்களுக்கான தமிழ் மொழியினூடான தொலைக்காட்சிச் சேவையினையும் நடத்தியிருந்தார்.

தற்போதும் திரு சுப்பிரமணியம். பாக்கியநாதன் அவர்கள் எமது ஐரின் (itn) தொலைக்காட்சிச் சேவையினை இணைந்து நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியினால் ஊடகங்களை இயக்குவது இலகுவானதாகக் காணப்படு கிறது.

## அந்தவகையில் ஐபிரிவி (IPTV) தொழில்நுட்பத்தில் தற்போது யேர்மனியிலிருந்து

அந்தவகையில் ஐபிரிவி (IPTV) தொழில்நுட்பத்தில் தற்போது யேர்மனியிலிருந்து ஐரிஎன், சந்தோரா, தமிழ்எம்ரிவி, எஸ்ரிஎஸ் ஆகிய நான்கு தொலைக்காட்சிகள் ஒளிபரப்பாகி வருகின்றது.

இவற்றில் தமிழ்எம்ரிவி நீண்டகாலமாக இணையத்தில் ஒளிபரப்பாகிய தொலைக்காட்சியாகவும் எஸ்ரிஎஸ் தொலைக்காட்சியும் இணையத்தில் ஆரம்பித்து தற்போது ஐபிரிவி யாக ஒளிபரப்பாகி வருகின்றது.

சந்தோரா மற்றும் ஐரின் ஆகியவை தொலைக்காட்சிகளாக ஒளிபரப்பாகி வருகின்றன.

ஆனாலும் வேல்ட்கோவில் (Worldkovil) மற்றும் தமிழ்அலை ஆகிய சேவைகள் இணையத்தில் ஒளிபரப்பப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல கலைஞர் களுக்கு வாய்ப்பளிக்கும் பல தொலைக்காட்சிகள் இயங்கினாலும் அச்சு ஊடகங்களின் செயற்பாடு தவிர்க்க முடியாததாகவே இருக்கின்றது. அந்த வகையில் 25ஆவது ஆண்டின் வெற்றி விழாவினைக் கொண்டாடும் வெற்றிமணி பத்திரிகைக்கும் அதன் ஆசிரியர் மு.க.சிவகுமாரன் அவர்களுக்கும் தமிழ்ரைம்ஸ் பத்திரிகைக் குழுமம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் மன நிறைவு கொள்கின்றது

தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES

செ.தவா
பிரதம ஆசிரியர்

# யாவரும் கேளிர்



ஓவியம்: கண்ணா

உலகில் மக்களாக வாழ்வோரின் தொகை பெருகியுள்ளதே தவிர மக்களின் பண்போடு வாழ்வோரின் தொகை பெருக வில்லை அதனால்தான் உலகத்தில் குழப்பமும் கோளாறும் பூசலும் போரும் இன்று தவிர்க்க முடியாதவைகளாகி விட்டன. மற்றோர் உயிரின் துன்பத்தைத் தன் துன்பம் போல் உணராவிட்டால் அறிவால் பயன் உண்டோ? துன்பத்தில் உழல்பவனை நிழற்படம் (Photo) காணொளி (Video) சுயமி (Selfie) எடுத்துவிட்டு பரிவற்ற மனதோடு கடந்துவிடுகிற பண்பு எவ்விதத்திலும் மனிதத்துவத்திற்கு பொருத்தமானதல்ல.

## "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்"

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று பாடிய வள்ளலாருக்குரிய பரிவும் பண்பும் எத்தகையதென்று நாம் சிந்தையில் எடுத்தாக வேண்டும். அன்புவழி நடக்கின்ற மனம்அது. பாரம் சுமந்து செல்லும் வண்டி மாடுகளைப் பார்த்தால் சிறிது நேரம் அந்த மாடுகளின் கால்களை தடவிக் கொடுப்பாராம் வள்ளலார். சிறு உயிர்கள் கூட துன்பம் சந்திக்க கூடாது என்ற வள்ளலாரின் மனம் நம்மில் எத்தனை பேருக்கு இருக்கிறது.

மற்ற உயிர்க்குத் துன்பம் செய்யும்போது அந்த உயிர் துன்பப்படுவதாகத் தோன்றும். செய்த துன்பம் அந்த உயிரின் உடலளவில் சிறிது நேரம் தாக்கி நீங்கும். ஆனால் உண்மையாகத் துன்பம் உறுவது செய்தவர்களின் மனமே. செய்தவர்களின் உடலிலே துன்பம் தாக்காவிட்டாலும் அவர் களுடைய மனம் அந்தத் துன்பத்தைப் பட்டு வருந்தும். மனம் பண்படுகின்ற போது இந்த உண்மை தெளிவாக விளங்கும் ஒருவனுக்கு முதலில் தன் குழந்தைகளின்மேல் அன்பு இயற்கையாக ஏற்படும் அந்த அன்பிலே நெஞ்சம் பழகப் பழக தான் பழகும் மற்றக் குழந்தைகளின் மேலும் படிப் படியாக அன்பு வளரும். அந்த அன்பில் நெஞ்சம் தோயத் தோய உலகத்திலுள்ள எல்லா உயிர்களிடத்திலும் அன்பு வளர்ந்து எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும், எல்லா உயிரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் அமையும். மாற்றம் அவரவர் மனங்களிலிருந்தே ஊற்றெடுக்க வேண்டும்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"என்று முதலில் கூறிய திருமூலரின் வசனமும்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றுப் பாடல் வரியும் உலகம் ஒரு குலமாதல் வேண்டும் என்பதைச் சுட்டி நிற்கின்றன. ஒற்றுமை பற்றி பேசுதல் எளிது, எழுதுதல் எளிது பேச்சும் எழுத்தும் செயலாதல் வேண்டும்.

**வெற்றிமணி அன்றும் இன்றும் ஓசை குன்றாது ஒலிப்பது கண்டு அகமகிழ்கின்றேன்**

**தேசபந்து க.வே.மகாதேவன்** (சட்டத்தரணி)
குரும்பசிட்டி. தெல்லிப்பளை.




வெற்றிமணி 1955 களில் பதிப்பாசிரியராக இருந்த திரு.கே.வி.மகேந்திரன் மற்றும் பொன் .இராசரத்தினம் ஆகியோர் 2005 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வெற்றிமணி விழாவில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களால் கௌரவிக்கப்பட்டவேளை. (இவர்கள் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் அக்கா பிள்ளைகள்)





அமரர் பொ.கனகசபாபதி அவர்கள் ( மகாஜனாக்கல்லூரி முன்னாள் அதிபர்) எழுதி, வெற்றிமணி 2000 ஆண்டு வெளியீடு செய்த "மாறன் மணிக்கதைகள் " என்னும் நூல் சுவிஸ்லாந்து நாட்டிலும் வெளியிடப்பட்டது. அவ்வேளை ஆசிரியரின் மாணவர்களாகிய சட்டத்தரணி கே.வி.மகாதேவன் அவர்களும் ஆசிரியை பவானி மகாதேவன் அவர்களும் சிறப்புவிருந்தினராக் கலந்து சிறப்பித்தனர்.
அருகே தாயகத்தில் அன்று தந்தை செல்வா,தளபதி அமிர்ந்தலிங்கம் செனட்டரர் நடராஜா ஆகியோர் குரும்பசிட்டியில் சட்டத்தரணி கே.வி.மகாதேவன் அவர்களது பணிமனை திறந்து வைத்தவேளை.

# புலம்பெயர் மண்ணில் பூந்தமிழின் வாசம்.

கலை இலக்கிய ஆர்வலர்கள் தத்தம் திறமைகளை வெளிப்படுத்தத் களம்தேடி அலைந்த ஆரம்ப காலங்கள்... ஆங்காங்கே புதிது புதிதாய் முளைத்தெழுந்த எண்ணிக் கையற் சஞ்சிகைகள் பத்திரிகைகள் அவர்களுக்குக் கரம் கொடுத்தன.
கால்நூற்றாண்டுக்கு முன்னதான அந்தக் காலப்பகுதியில் எண்ணிக்கையற்றுப் பூத்த தமிழ் இதழ்களில் நிலைத்து நின்றவை ஒரு சிலவே.
தாயகத்தில் 1950 களில் உருவாகி தொடர்ந்து பல ஆண்டு கள் தமிழ் இலக்கியப்பரப்பில் ஒலித்துக் கொண்டிருந்த வெற்றிமணியைத் தந்த தந்தையார் மு.க. சுப்பிரமணியம் அவர்கள் இடைநிறுத்திய தமிழ்ப்பணியை புலம்பெயர்ந்த மண்ணில் புதிய வேகத்தோடு ஒலிக்க விட்டார் தனயன் திரு மு.க.சு. சிவகுமாரன்.

நேற்றுப் போலிருக்கிறது வெற்றிமணியின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்புரையாற்ற நான் அரங்கேறியது.
நூல்வெளியீட்டுத் துறையிலும் தனது தமிழ்ப் பணியைத் தொடர்ந்த வெற்றிமணி மதுரகவி கலாநிதி வி.கந்தவனம் அவர்களின் எழுத்தாளன் (1995) நூலினை வெற்றிமணி வெளியீடாக வெளியிட்டு அதனை வெளியிட்டு வைக்கும் வாய்ப்பினை எனக்கு வழங்கியதோடு காலப்போக்கில் அதன் வெளியீடுகளின் வரிசையில் எனது காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி. (2004) நூலையும் வெளியிட்டுச் சிறப்பித்தது.
இலக்கியச் செம்மல் என்று எனக்குக் கௌரவத்தைத் தந்து மகிழ்ந்தது வெற்றிமணி.
என்போன்ற மூத்த தலைமுறையினரோடு இன்றைய தலைமுறையினரையும் சிறப்பிக்கும் வெற்றிமணயின் வளர்ச்சியில் மகிழ்வுகொள்வதோடு வெற்றிமணியின் இந்த வளர்ச்சியில் அயராது உழைத்துவரும் கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் அவர்களது அரும்பணியையும் போற்றி மகிழ்கிறேன்.
வெற்றிமணியின் முதலாவது ஆண்டு நிறைவின்போது அதனை வாழ்த்திமகிழ்ந்த எனது வாழ்த்து இன்று வெள்ளிவிழாக்காணும் அதன் வளர்ச்சியைப் போற்று வதற்கும் ஏற்றதாக இருப்பதால் அந்த வாழ்த்தையே மீளவும் வழங்கி மகிழ்கிறேன்:

**வாழ்த்துக்கள் பலிக்கட்டும்**
**வரலாறு பதிக்கட்டும்!**
**வெள்ளிவிழாக்காணும் வெற்றிமணியை**
**வாழ்த்துகிறேன்!**

**ஒலிக்கட்டும் வெற்றிமணி**
**பல நூறாண்டு!**

வெற்றிமணி ஒலிக்கிறது ஓராண்டாக!
மேலைத் திசையெங்கும் வீசும் தமிழ்மணத்தின்
தேவை அறிந்து நல்ல சேவை புரிவதற்காய் -
வெற்றிமணி ஒலிக்கிறது!
பற்றுதலைத் தமிழ்மீது வளர்த்தோர் தம்மைப்
பக்குவமாய்த் தன்னருகே ஈர்க்கும் நல்ல
வெற்றிமணி இதன் சேவை பெருகவேண்டும்
வேண்டியதை வாசகர்கள் பெறவும்வேண்டும்
அற்புதமாய் ஓவியங்கள் ஆக்கும் கண்ணா
அருந்தமிழில் கொண்ட பற்றை காட்டும் எங்கள்
வெற்றிமணி ஒலிப்பதிலே விளயும் இன்பம்
வேறெதற்கும் ஈடாகா! புகழ்ச்சியில்லை!
தாய்மொழியை மறவாதோர் தாய்நிலத்தைத்
தாம்தமது நெஞ்சினிலே சுமந்தும் வாழ்வார்
தாயகத்தின் விடுதலைக்காய் உழைப்போரோடு
தாய்மொழியைக் காப்பதற்கு முயல்வோர் தாமும்
சேவையிலே ஒத்தவர்தாம் தேர்ந்தோம் உண்மை
தீமையறத் தீந்தமிழைக் காத்துநிற்போம்
ஒலிக்கட்டும் வெற்றிமணி பலநூறாண்டு
ஓங்கட்டும் நம் தமிழின் மேன்மை கீதம்
அன்புடன் வாழ்த்தும்

**இந்துமகேஷ்**
(சின்னையா மகேஸ்வரன்
ஆசிரியர்: பூவரசு)
(ஆனி 1995)




2002 ஆண்டு யேர்மனியில் கவிஞருக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில், வெற்றிமணி "இலக்கியச் செம்மல் எனும் பட்டத்தை திரு.இந்துமகேஷ் அவர்களுக்கு மதுரகவி கலாநிதி வி கந்தவனம் அவர்கள் மூலம் கொடுத்து மகிழ்ந்தது.
அருகே 2001 ஆண்டு பூவரசு சஞ்சிகையின் பத்தாவது ஆண்டுவிழாவில் வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள்.

# நானும் வானொலியும்...



நான் அறிவிப்பாளன் ஆகியதும்! படித்த படிப்பை எல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டு எல்லோரும் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும் என்ற வாழ்க்கையின் தத்துவத்தைக் கற்றுத்தந்து ஐரோப்பிய தேசம்தான்.



த. இரவீந்திரன்
நிர்வாக இயக்குனர் ஐரோப்பிய தமிழ் வானொலி

கிழிந்த சேலையை உடுத்திருந்தாலும் அழகில் ரதிபோல இருக்கும் இளம் பெண்களைப்போல ஓலைக் குடிசையாக இருந்தாலும் டிரான்ஸிஸ்ற்றர் ரேடியோக்கள் இல்லாத வீடுகளை காணமுடியாத யாழ்ப்பாணத்து வீடுகள் நிறைந்த காலமது...
இலங்கையையும் தாண்டி சிங்கப்பூர் மலேசியா (இந்தியா) தமிழ்நாடு என தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளிலெல்லாம் ரேடியோ சிலோன் மயில்வாகனம் என்ற பெயரை அறிந்திராதவர்களே இல்லையென இருந்த காலமது....

யாழ்ப்பாணத்து இரவுகளெல்லாம் கூத்தும் களியாட்டமுமாக இருந்தபோது நாளை நடைபெற இருக்கின்ற நாடகங் களுக்கும்ரூபவ் திரைப்படங்களுக்கும் இன்றே தட்டி வேன் களிலும் சோமசெற் கார்களிலும் ஒலிபெருக்கிகளைக் கட்டி விளம்பரம் செய்பவர்களெல்லாம் அப்துல் ஹமீட்ரூபவ் கே.எஸ்.ராஜா பாணியிலேயே தங்களது குரல்களை மாற்றி விளம்பரம் செய்துகொண்டிருந்த காலமது....

ஆம் இலங்கை வானொலியின் தேசிய ஒலிபரப்பு வர்த்தக ஒலிபரப்பு என இரண்டு சேவைகளும் இலட்சக்கணக்கான நேயர்களை தங்கள் வசம் கட்டிப்போட்டிருந்த அந்த எழுபது எண்பதுகளில் காற்சட்டைக்கு பொத்தான் சரியாக பூட்டத்தெரியாத அந்த சின்ன வயதில் வானொலி அறிவிப்பாளராக அல்ல! இலங்கை வானொலி நிலையத்திற் குள் ஒருமுறையாவது எனது காலடி பட்டுவிடாதா என ஏங்கியதுண்டு. அந்த நாட்களில் கற்பனையில் கூட நினைத்ததில்லை எதிர்காலத்தில் நான் தனியாக ஒரு வானொலி நிலையத்திற்கு நிர்வாக இயக்குனராக இருப்பேன் என்று!.

அறிவிப்புத்துறையில் அன்று ஆர்வம் அதிகம் இருந்தாலும் மறந்தும் ஒலிவாங்கியை யாரும் எனது கைகளில் தந்துவிடுவதில்லை. தனது வேலைகளைக் கவனிப்பதற்காக தாயவள் குழந்தையை தரையிலே கிடத்திவிட்டுப்போக தானாகவே உடும்பு பிரட்டி தவழ்ந்து தவழ்ந்து தாயை நாடிச் செல்கின்ற குழந்தைகளைப்போலத்தான் நானும்! எண்பது களில் பாடசாலையில் ஒலிபெருக்கி கட்டுபவர்களுடன் கூடச் சென்று ஒலிவாங்கி ஒழுங்காக வேலை செய்கின்றதா என பரீட்சித்துப் பார்க்கும் அந்த நேரத்தில் எனது குரலையும் பரீட்சித்துப் பார்த்ததையும் தொண்ணூறுகளில் போர் சூழல் விடயங்களை ஊர் ஊராய் ஒலிவாங்கியோடு திரிந்த அந்த நாட்களை இன்று இரைமீட்டிப் பார்க்கின்றபோது விசித் திரங்கள் நிறைந்த இந்த மனித வாழ்க்கையை நினைத்து உள் மனதிற்குள் சிரித்துக் கொள்வதுண்டு.

இன்று வெளிநாடுகளில் வாழ்கின்ற நமது தமிழர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் அன்று நினைத்தும் பார்த்திருக் கமாட்டார்கள் நாம் வரும் காலத்தில் வெள்ளையர்கள் வாழ்கின்ற தேசத்தில் வாழ்வோமென்று!. ஆம் படித்தவர்கள் மட்டும்தான் வெள்ளையர்கள் தேசத்தில் வாழமுடியும் என்ற வழமையை காலம் எப்படிப் புரட்டிப்போட்டதோ? அப்படித்தான்

எனக்கு ஒலிவாங்கி உனது கைகளில் இருந்தால் உனது குரலும் ஒலிக்கும் என்ற உண்மையைச் சொல்லித்தந்தது.

அறிவிப்புத்துறையில் நான் கற்றுக்கொண்டது மேடை அறிவிப்பாளனாக இருந்தால் அந்த மேடையை தொய் வில்லாமல் நகர்த்த வேண்டும். வானொலி அறிவிப்பாளனாக இருக்கும்போது அதிகம் பேசாது நேயர்களை பேசவைத்து நிகழ்ச்சியை கலகலப்பாக்க வேண்டும் என்ற மந்திர வித்தையை!. ஐரோப்பிய நாடுகளில் பிரான்ஸ் நாடுதான் நமது கலை பண்பாட்டு விழுமியங்களின் விதைகளை விதைப்ப தற்குரிய விளைநிலமாக இருந்தது என்றால் அதில் வியப்பதற்கு எதுவுமில்லை! அதற்கு முக்கிய காரணம் அங்கு வாழ்கின்ற தமிழர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் பாரிசிலும் பாரிசைச் சுற்றியுமே வாழ்கின்ற காரணத்தால் எந்தக் காரணமாக இருந்தாலும் ஒன்றுகூடுவது மிக இலகு வானதாக இருக்கின்றது. ஏனைய ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற நாடுகளில் வாழ்கின்ற நாம் பிரிந்து பிரிந்து மிக தூரமாக வாழ்வதால் ஒரு நிகழ்விற்காக ஒன்று கூடுவதென்பது மிகவும் கடினமாக இருந்ததனால் தமிழர்களின் கலாச்சார நிகழ்வுகளின் ஆரம்ப மையமும் பாரிஸாகவே இருந்தது.

அந்த வகையில் உருவானதுதான் ஐரோப்பாவில் முதன் முதல் இருபத்தி நான்கு மணிநேர ஒலிபரப்பு என்னும் அடையாளத்தோடு உருவான T.R.T.தமிழ் வானொலி. அந்த வானொலிக்கு ஜேர்மன் நாட்டு பொறுப்பாளராக நான் பொறுப்பேற்று நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினேன். இதுதான் நான் வானொலி அறிவிப்பாளனாக உருவான வரலாறு. பாரிஸில் T.R.T யின்இருபத்திநான்கு மணிநேர வானொலியைத் தொடர்ந்து ஐரோப்பாவில் அதே போன்று பல தமிழ் வானொலிகள் ஒலிக்கத் தொடங்கியது. ஆனால் எல்லாவற்றும் அற்ப ஆயுளாகவே இருந்தது.

வானொலியுடன் சேர்த்து தொலைக்காட்சியுமாக ஆறு வருடங்கள் நடாத்தி வந்த T.R.T தொலைக்காட்சி பொருளாதார நெருக்கடி காரணமாக நிர்வாகம் மாறி T.T.N என்னும் பெயரில் இயங்க ஆரம்பித்தபோது T.R.T. யில் பணியாற்றிய கலைஞர்களின் பங்களிப்போடு ஆரம்பமான துதான் A.B.C தமிழ் வானொலி. அந்த வானொலியில் நான் நிர்வாகத்திலும் இணைந்து செயல்பட்டேன்.

இலங்கை வானொலி போன்றவற்றை அரசாங்கமே நடாத்து வதால் பொருளாதாரப் பிரச்சனைகள் எவையும் இருப்ப தில்லை! ஆனால் நாம் தனியாக வானொலி நடாத்துவது என்பது விளம்பரதாரர்களை நம்பியே இருக்கின்றது. அந்த வகையில் பாரீஸ் விளம்பரங்களோடு நானும் ஜேர்மனியில் உள்ள வர்த்தகர்களுடன் எனக்கிருந்த நட்பினைப் பயன்படுத்தி பல நிறுவனங்களிடமிருந்து விளம்பரங்களை பெற்றுக் கொடுத்தாலும் சற்றலைற் வாடகை அலுவலக வாடகை தொலைபேசி மின்சாரம் இப்படியான பொதுச் செலவுகளை சமாளிப்பதற்கு கிடைத்த விளம்பரங்கள் போதுமானதாக இல்லாததால் சில வருடங்களில் A.B.C வானொலியும் தனது சேவையை நிறுத்தியபோது

## ஐரோப்பிய தமிழ் வானொலி

நம்பிக்கையை மட்டும் மூலதனமாக வைத்து நான் கனடா சர்வதேச தமிழ் வானொலியுடன் இணைந்து ஜேர்மனியில் இருந்து பதினைந்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்தது தான் ஐரோப்பிய தமிழ் வானொலி பெரிய தொழிலதிபர்களின் ஆதரவு மற்றும் இயக்கங்களின் பின்னணி ஆதரவு என பல பக்க பலங்களோடு ஆரம்பித்த வானொலிகளே சில வருடங்கள் தாக்குப் பிடிக்க முடியாமல் நின்றபோது எந்தவிதமான பின்னணி ஆதரவும் இல்லாமல் தனி ஒரு மனிதனாக பதினைந்து வருடகாலமாக தொடர்ந்து இந்த வானொலியை இயக்குவதற்கு பக்கபலமாக இருந்துவரும் விளம்பரதாரர்களை இந்தவேளை நன்றியோடு நினைத்துக் கொள்கின்றேன்.

கூடுதலான நிகழ்ச்சிகள் தொலைபேசி மூலமான நேரடி நிகழ்ச்சிகளாக இருப்பதனால் அதில் பங்குபற்றும் நேயர்கள் பலர் இன்று எனது குடும்ப உறவுகளைப்போல ஆகிவி ட்டார்கள். இத்தோடு இலங்கை இந்தியாவில் இருந்து வருகின்ற பல அரசியல்த் தலைவர்கள் ஆன்மீகச் சிந்தனை யாளர்களென பலரது தொடர்புகளும் ஏற்படுவதற்கும் இந்த வானொலியே காரணமாக அமைந்திருக்கின்றது.

இவற்றோடு இன்று நான் தலைமை ஆசிரியராக இருந்து நடாத்திவரும் அகரம் அகரதீபம் போன்ற சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கும் இந்த வானொலியே மூல காரணமாக இருக்கின்றது.

நேற்றுப்போல இருக்கின்றது! ஊடகத்துறையின் மிகப்பெரும் சக்திகளில் ஒன்றாக விளங்கும் இந்த வானொலியோடு நான் இணைந்து வெள்ளிவிழாக் காணப்போகின்றேன். ஊடகத் துறையிலும் அதற்கு அப்பாலும் பல நண்பர்களைச் சம்பாதித்துக் கொண்டேன்! அதற்கும் மேலாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதிய மனிதர்களுடன் (நேயர்கள்) அறிமுகமாகிக் கொண்டே வருகின்றேன்.

இவையெல்லாம் இறைவன் எனக்கு வழங்கிவரும் கொடையாகவே நினைக்கின்றேன். இன்றும் என்னை ஒரு வானொலியின் இயக்குனராகக் கருதாது எந்த ஆர்வத்தோடு அறிவிப்பாளனாக வந்தேனோ அதே ஆர்வத்தோடே நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குகின்றேன். ஐரோப்பிய நாடுகளில் தமிழ் வானொலிகள் என்ற வரலாற்றில் நானும் இருப்பதையிட்டு ஆண்டவனுக்கு நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்

## புலத்தின் தமிழ்சிறக்க உழுதசால் என்றுன்னை ......

வாழுங் காலம் ஒருபொழுதாற் குறைந்தாலும்
யாருங் காணார் இவ்வுலகத்தே - யாரேனும்
நீளுங் காலம் நெறிமிகுந் துழைக்குங்கால்
ஊரே மறவாது காண்

தரங்கம் பாடிவரும் தமிழீழ மண்தன்னில்
அரங்கம் காண்பார் ஒரு சிலரே - அஞ்ஞான்றே
பொங்கும் முந்நீர் போல்வாழும் தமிழ்சிறக்க
அங்கம் வருத்தி உழைத்தனை நீ

புலத்தின் தமிழ்சிறக்க உழுதசால் என்றுன்னை
பழுத்தோர் பலரும் இயம்புதலால் - ´´அ´´கரத்தின்
நிலத்தோர் யாவரும் ஏற்றுன்னை வழிமொழிந்தார்
மலைத்தேன் போல் நிலைத்திடுக

முகமறியாப் பலரின் வாழ்த்துண்டு உனக்கு
அகம் நிறைய வாழ்த்துவோர் அவையுண்டு - அவையெலாம்
ஆலின சிந்தைபோல்நீ அகமகிழ்ந் தேயிருக்க
வாழிய பல்லாண்டு காலம்.

த. இரவீந்திரன்
நிர்வாக இயக்குனர் ஐரோப்பிய தமிழ் வானொலி










## யாழ்ப்பாணத்து நீர்வளத்தைப் பிரமிக்க வைக்கும்

# வழுக்கையாறும், இடிகுண்டுக் கிணறும்

இ.கோபிராஜ் சண்டிலிப்பாய் -வடக்கு


வழுக்கையாறு


படங்கள்: வெற்றிமணி

இடிகுண்டுக் கிணறு

இது யாழ்ப்பாணக் குடாநாட்டின் 16km நீளமான பருவகால ஆறாகும். வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரிவுகள் அதிகம் நன்மை பெற்றாலும் வலிகாமம் மேற்கு அதிக நன்மைகளைப் பெறுகின்றன. இது தெல்லிப்பழையில் ஆரம்பமாகி அளவெட்டி, கந்தரோடை, கட்டுடை, மானிப்பாய் நிலப்பிரதேசம் 49 சதுரமைல் ஆகும். வடிநிலத்தில் பூதன்குளம், பிணக்கைக்குளம், கட்டுவயல்குளம், அம்பனைக் குளம், ஆலம்குளம், ஐயனார்கோயிலடி, நவாலி, அராலி போன்ற பகுதியில் நீரோட்டத்தைக் கட்டுப்படுத்த கதவுகள் அமைக்கப்பட்டன.

வலிகாமம் மேற்கில் குறிப்பாக 325 ஹெக்ரெயரில் இருந்து 480 ஹெக்ரெயர் அதிகரிக்கும். இதில் அராலி நீர் உட்புகுவதை தடுக்கமுடியும். இவ்வடிநிலத்தில் தற்போது பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. வடக்கு மேற்குப் பகுதியில் அதிகம் பெரும்பகுதி பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படாது உள்ளது. இதில் குடியிருப்பு, பொழுது போக்கு மையம், கைத்தொழில் போன்றன அமைத்து பயன்படுத்த முடியும். தரைக்கீழ் நீரில் தங்கியிருக்க வேண்டிய தேவையுண்டு. இதைவிட அராலியில் வழுக்கையாற்று கழிமுகம், பறவைகள் சரணாலயம் விருத்தி செய்யப்பட்டால் அபிவிருத்திக்குப் பயன்பாடாக இருக்கும்.

வழுக்கையாற்று பள்ளத்தாக்குக்கு மேற்குப் புறமாக மாசியப் பிட்டி பொதுச்சந்தைக்கு அருகாமையில் சிவன் கோயில் ஒன்று அழிபாடுகளுடன் காணப்படுகின்றது.

தரைக்கீழ் நீர்வளம் இலங்கையில் பரவலாகக் காணப் படுகிறது. 80 நிலப்பரப்பை உள்ளடக்கியதாக புத்தளத் திலிருந்து வட கிழக்குப் புறமாக கிளிநொச்சியினூடாக முல்லைத்தீவு வரை செல்லும் வரைகோட்டிற்கு வடக்குப் புறமாக யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட்ட பகுதி முழுவதும் உள்ளடங்கும்.

பண்டைய காலத்தில் இவ்வழுக்கை ஆற்றினைப் பயன்படுத்தி உரோம வியாபாரிகள் வியாபாரம் செய்தனர். தற்போதைய உடுவில், மாசியப்பிட்டி சந்தைக்கு இடையே தோணித்துறை ஒன்றினை திரும்புதுறை என்று பரப்பு கொண்டு தற்போதைய உடுவில் குளத்தின் ஒரு முனையை குறிப்பிட்டு நின்ற தெனலாம். புதைந்த மரத்தோணியின் பல பாகங்கள் இதற்குச் சான்றாகின்றன.
உரோம வியாபாரிகளது நாணயங்களில் பெருமளவு வழுக்கை யாற்றுப் பள்ளத்தாக்கில் சிதறியிருப்பது ஆதாரமாகும்.
இடிகுண்டு கிணறு

இது 400 வருடங்கள் பழமையானது என சிலர் தெரிவித்தபோதும் இன்னோர் வகையில் 150 - 140 இற்கு இடைப்பட்ட வருடங்களாகும். ஆரம்பத்தில் 3 - 5 அடிக்கு இடைப்பட்ட ஒரு துவாரமாகக் காணப்பட்டது. இது திடீரென இயற்கையாக உருவாகியது. பின்னர் காலத்துக்குக் காலம் இடிந்துபோய்க்கொண்டு இருப்பதனால் இது இடிகுண்டு என்ற பெயரைப் பெற்றது.

கடந்த 30 வருட சுற்றுவட்ட அளவைவிட தற்சமயம் 2 மடங்காக உயர்ந்தது. 10 வருடங்களுக்கு முன்பு எப்போதும் நீர் வற்றிப் போனதில்லை. ஆனால் இன்று முற்றாக நீர் வற்றுகிறது. ஆனால் அடிப்பகுதி வரண்டு போவதில்லை. இதன் நீர்மட்டம் குறையும்போது அயற்கிராமங்களின் கிணறுகளில் நீர் வற்றிப் போகின்றது. அத்துடன் அயலில் உள்ள வயல் காணிகளிலும் உவர்த்தன்மை அதிகரிக்கிறது.
இது ஓர் புனல் வடிவில் உள்ளது.
இடிகுண்டின் அடியிலிருந்து சீமெந்து கட்டு, கிணறு போன்று செங்குத்தாகவோ "குளம் போன்ற சாய்வாகவோ அமைக்கப் படவேண்டும். விவசாயத்துக்கு வெளியே நீர் இறைக்கும் இயந்திரம் வைத்து நீரைப் பெற்றுக்கொள்ளக் கூடிய அமைப்பு அவசியம்.

இடிகுண்டிற்கு வரத்துவரும் வெள்ளம் நீர் நிலை நிரம்பிய பின்பு வெளியேறுவதற்கு வழிசமைக்க வேண்டும். அதற்கு 31/2 அகலமும் 200 அடி நீளமும் வரம்பு இடிகுண்டிலிருந்து வழுக்கையாற்றின் வாய்க்கால் வரை உள்ளது. இது சிறிய வாய்க்காலுடன் கூடிய சீமெந்துக் கட்டாக மாற்றியமைக்க வேண்டும்.

இடிகுண்டிலிருந்து நீர்ப்பாசனத்துக்கான சீமெந்து வாய்க்கால் 300 மீற்றர் நீளத்துக்குத் தேவை. கால்நடைகள் நேரடியாகத் தண்ணீர் பெற சாய்வாக அமைக்கப்படவேண்டும்.

இடிகுண்டின் சேறு அகற்றி சுற்றிவர மண் அணை அமைக்கவேண்டும். இடிகுண்டின் உள்ளே மண் இடிந்து விழுவதால் அதைத் தடுக்க வேண்டும்.
வழுக்கையாற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடிய எதிர் காலத் திட்டங்கள்

வழுக்கையாற்றுத் திட்டத்தின் விவசாய அபிவிருத்தி என நோக்கும்போது நீண்டகால நோக்கமாக விவசாய, கால்நடை அபிவிருத்தியை மேம்படுத்தி எதிர்கால மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல்.

குறுங்கால நோக்கமாக கிராமத்து வளங்களை இனங்கண்டு, எதிர்நோக்கும் பிரச்சினையை இனங்கண்டு அதற்கான தீர்வை முன்வைத்தல். நீர்வளத்தை மேம்படுத்தல், வழுக்கையாற்று வாய்க்கால் புனரமைத்தலுடன் விவசாயக் கிணறுகளைப் புனரமைத்தல். சோளச்செய்கை, குரக்கன் செய்கை, நிலக் கடலை, அவரைச் செய்கை போன்றவற்றிற்கு பயிற்சிகளை வழங்கி ஊக்கப் படுத்தலாம். சூரிய மின்கலத்துடன் இணைந்த நீர் இறைக்கும் இயந்திரத்தை அறிமுகப் படுத்தலாம். பழச்செய்கையை ஊக்கப்படுத்துவதுடன் சந்தைப்படுத்தல் வசதிகளை உருவாக்கி வீட்டுத் தோட்டம், ஒருங்கிணைந்த பண்ணை போன்றவற்றை உருவாக்குதல். எமது கையில் இவ் வழுகையாறு, இடிகுண்டு கிணறு போன்றன சிறந்த வளங்களாக எமக்கு இருக்கின்றன. இதை நாம் பயன்படுத்தத் தவறியுள்ளோம். இனிவரும் காலத்தில் இதைப் பயன்படுத்தி அபிவிருத்தியில் மேல் நோக்கிச் செல்வோம்.

## வழுக்கையாறு



## தொன்மைமிக்க பழைய தேரின் சிற்பங்கள் பாதுகாக்கப்படவேண்டிய பொக்கிஷம் ஆகும்.

முன்பிருந்த முக உத்தரத் தேரை விடவும் பெரியதாகவும் 45 அடி உயரம் கொண்ட புதிய தேர் அமைக்கப்பட்டுள்ளது. தேர் ஓட்டமும் (30.7.2019) இடம்பெற்றது. பல நூறு வருட பழமைவாய்ந்த பஞ்சரதங்களின் நடுநாயகமாக விளங்கும் சண்முகப் பெருமானின் முக உத்தர திருத்தேர் 1990ஆம் ஆண்டுளில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின்போது அழிவடைந்திருந்தது. மேலும் இதன்போது, ஏனைய நான்கு தேர்கள், சப்பை இரதம், திருமஞ்ச இரதம், கைலாயவாகனம் என்பவையும் முற்றுமுழுதாக அழிவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பழுதடைந்த தேர் மஞ்சம் இவற்றை இங்கு காணலாம்.
பழைய தேர் படங்கள் வெற்றிமணி.









பழைய தேர் படங்கள் வெற்றிமணி.



# முயற்சியாளர் மு.க.சு

-.

கவிஞர்.வி.கந்தவனம்



கவிஞர்.வி.கந்தவனம்



மு.க.சு.ப்பிரமணியம்

மு.க.சு.என்னும் மூன்றெழுத்துக்கள் ஒரு காலத்தில் தமிழாசிரியர் உலகில் மிகவும் பிரபலியமாக இருந்தவை.
படிப்படியாக அவை பத்திரிகை உலகம், கலையுலகம் என்பவற்றிலும் வளர்ந்தோங்கலாயின.
திரு.மு.க.சுப்பிரமணியம் அவர்கள் -ஈழகேசரி- திரு. நா. பொன்னையா அவர்கள் பிறந்த குரும்ப சிட்டிக் கிராமத்தவர். பாடசாலை ஆசிரியர், தலைமையாசிரியர், அதிபர் என்று பல பதவிகளில் கல்விச் சேவையைச் செவ்வனே செய்து புகழ்பெற்றவர். குரும்பசிட்டியில் சன்மார்க்க சபை மூலம் சமூகப் பணிகளிலும் ஈடுபட்டவர். யாழ் இலக்கிய வட்டத்தின் உப தலைவராகவும் சிலகாலம் விளங்கி அதன் வளர்ச்சிக்கு உறு துணையாக இருந்தவர். -வெற்றிமணி- ப் பத்திரிகையை நடத்தி மாணவர் உலகத்தின் அறிவையும் எழுத்தாற்றலையும் வளர்த்தவர்.

கலைத்துறையில் இவருக்கு ஆர்வம் அதிகம், பரத நாட்டியம், சங்கீதம், மிருதங்கம், ஓவியம் முதலிய கலைகளுக்கு ஆதரவு அளித்தார். இவற்றை கற்கும் வண்ணம் பாடசாலைப் பிள்ளைகளை ஊக்குவித்தார். தான் பெற்ற பிள்ளைகளையும் இத்துறைகளிற் கற்று முன்னேற வைத்தவர். ஈழத்துத் தமிழ் மக்கள் பொதுவாக பரதநாட்டியம், சங்கீதம் போன்ற கலைகளுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை ஓவியக்கலைக்குக் கொடுப்பதில்லை. பாடசாலை மட்டத்துக்கு அப்பால் ஓவியம் தலையெடுத்த சரித்திரங்கள் மிகவும் குறைவு. பேனாவிலும் தூரிகை வலுவுடையது என்பார்கள். இந்த வலுவான கலை எம்மவர் மத்தியில் வலுவிழந்து கிடப்பது கவலைக்குரியது. உயர் மட்டத்தில் இதனைக் கற்க முன்வருபவர் மிகவும் குறைவு. ஓவியம் வருவாய் தராது என்பது பலருடைய கருத்து. வருவாய் தராத கலையை யார் தான் கற்க முன் வருபவர்? ஆற்றல் மிக்க ஓவியர்கள் ஆங்காங்கு இருந்தும் அவர்களது ஆக்கங்களை பணம் கொடுத்து வாங்கி ஊக்குவிப்பார் இல்லை. தமது இல்லங்களை ஓவியங்களால் அலங்கரிக்க நினைப்பாரும் இல்லை. இவற்றிற் கெல்லாம் ஓவியக் கல்விப்பிரதம அதிகாரி கலாகேசரி ஆ.தம்பித்துரை போன்றவர்கள் மேற் கொண்ட சில முயற்சிகள் அவ்வளவு பயனளித்திருப் பதாகத் தெரியவில்லை. மு. க. சுப்பிரமணியம் அவர்கள் நல்ல ஓவிய இரசிகர்.
தமது மகன் திரு. சிவகுமாரனை ஓவியத் துறையில் ஊக்குவித்தார். இலங்கைப் பல்கலைக் கழகத்தின் களனி வளாகத்தில் ஓவியம் கற்று வெளியேறிய முதல் பட்டதாரி மாணவர்களில் தமிழ் மாணவர் சிவகுமாரனும் ஒருவர்.
சிறுவர்களுக்கென்று ஒரு தனிப்பத்திரிகை இல்லாத காலத்தில் தேவையை உணர்ந்து -வெற்றிமணி- என்ற பெயரில் சிறுவர் சஞ்சிகை ஒன்றை ஆரம்பித்தார். மு. க. சு. 1950 ம் ஆண்டில் தொடங்கிய இம் மாதாந்த சஞ்சிகையை ஏறத்தாள 30 வருடங்கள் நடத்திச் சாதனை படைத்தவர். பத்திரிகையால் அவர் வருமானம் பெற்றவரல்லர். வருமானத்தை எதிர்பார்த்து அவர் பத்திரிகையை நடத்தவும் இல்லை. மாணவர் நலன் கருதித் தனது சொந்த வருமானத்தில் ஒரு பகுதியைப் பத்திரிகைக்கென்று ஒதுக்கி மாதா மாதம் தவறாது வெளியிட்டு வந்தார். பலமாணவர் தமது எழுத்தாற்றலை இப்பத்திரிகை மூலம் வளர்த்துக் கொண்டனர்.

மேலும் மாணவர் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கவும் வெற்றிமணி உதவியது.

பொதுவாகவே தமிழ் மாணவர் பாடப் புத்தகங்களுக்கு அப்பால் பிறநூல்களையோ பத்திரிகைகள், சஞ்சிகைகளையோ வாசிப்பது குறைவு. பாடசாலைகள் இத்துறையில் மாணவர்களை ஓரளவு ஊக்கு வித்தாலும் வீடுவாசல்களில் பாடப் புத்தகங்களையே பிள்ளைகள் வாசிப்பதை பெற்றோர் பெரிதும் விரும்புகிறார்கள். இதற்குப் பிரதான காரணம் கல்வித் துறையைப் பெறத்தக்க அளவில் எமது சமுதாயம் பரீட்சை மையச்சமுதாய மாக இருந்தமையே ஆகும். பல வீடுகளில் சஞ்சிகைளுக்கு தடை விதிக்கப் படுதலும் உண்டு. அன்று சினிமா, காதல் கதைகள் முதலியவை பிள்ளைகளைப் பழுதாக்க வல்லன என்ற பயம் பெற்றோர்களின் கண்ணில் எப்பொழுதும் எண்ணெயை ஊற்றிக் கொண்டே இருக்கும் இந்த நிலைமையை ஊடறுத்து வெற்றிமணி பாடசாலைகள் வழியாக வீடுகளையும் சென்றடையத் தொடங்கியது. ஆசிரியர், பெற்றோர்என்போரின் எதிர்பார்ப்புக் களுக்கேற்பப் பத்திரிகையின் விடைய தானங்கள் அமைந்திருந்தன. மாணவரின் படைப்புகளுடன் மாணவருக்கேற்ற பிற ஆக்கங்களையும் வெற்றிமணி தாங்கிவந்தது. அவற்றைத் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் எழுத்தாளர்கள் என்போரைக் கொண்டு எழுதிவித்து வெளியிட்டார்.

மு.க.சு. "தம்பிக்கு" டாக்டர் நந்தி எழுதிய கட்டுரைத் தொடர் இளைஞருக்கேற்ற அரிய அறிவுரைகளை கொண்டவை பின்னாளில் யான் எழுதிய "பரீட்சையில் சித்தியடைவது எப்படி" என்னும் கட்டுரைகளும் "வெற்றிமணி" யில் தொடராக வெளிவந்தன. முடிவில் அதனை நூலாகவும் பிரசுரித்தார். மு. க. சு. பிரபல கணக்கியல் ஆசிரியர் திரு. வை. சி. சிவஞானம் அவர்களைக் கொண்டு கணக்கியல் பற்றிய கட்டுரைகளைத் தொடராக எழுதிவித்தார். அதுவும் நூலாக வெளியிடப் பட்டது. இவ்விதம் மு. க. சு. அவர்கள் மாணவர் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பணி அளப்பரியதே. என்னைக்கொண்டு நிறைய வேலை வாங்கியவர்களில் மு.க.சு. அவர்கள் முதன்மையானவர். மிகவும் முக்கியமாக "வெற்றிமணி" யில் பிரசுரிக்கத் தகுந்த மாணவர் கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றைத் தெரிவு செய்யும் பொறுப்பை என்னிடமே விட்டிருந்தார். அத்துடன் பத்திரிகையில் எழுத்துப் பிழைகள் இடம்பெறாமல் இருக்கவேண்டும் என்னும் நோக்கத்தில் தான் பலமுறை பிழைதிருத்தங்களைச் செய்திருந்தாலும் கடைசிப் பிரதியை என்னிடத்தில் அனுப்பி வைத்து எனது அங்கீகாரத்தைப் பெற்றபின்னரே அச்சடிக்கும் வளக்கத்தையும் மேற்கொண்டிருந்தார்.



முயற்சியாளர் மு.க.சு

வெற்றிமணிப் பத்திரிகையைத் தொடர்ந்து வெளியிடுவதற்கு மு.க.சு. அவர்களுக்கு உற்ற துணையாக இருந்தவர் திரு. பொன். இராசரத்தினம் அவர்கள். இராசரத்தினம் மு.க.சு.வின் மருகர் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள சக்தி அச்சகத்தை திறமாக நடத்தியவர். வல்ல தொழிலாளி யாகவும் நல்ல நிருவாகியாகவும் விளங்கியவர். ( பின்னாளில் சக்தி அச்சகம் சுண்ணாகத்திற்கு இடமாற்றம் செய்யப் பட்டது) உரிய காலத்தில் வெற்றிமணியை வெளியிடு வதிலும் அதன் விநியோக அலுவல்களிலும் திரு. இராசரத் தினம் அவர்களின் பங்கு மிகவும் பெரியது என்பது வெற்றிமணியுடன் தொடர்புற்றிருந்தவர்கள் நன்கு அறிந்த தொன்றாகும்.

மு.க. சு. அவர்கள் எனக்கு சிறப்பாகச் செய்த ஓர் உதவி யையும் குறிப்பிடல் வேண்டும். எனது -கீரிமலையிலே- என்னும் நூலின் வெளியீடு 1970 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கிலும் பின்னர் இணுவில் கணேசவித்தியா சாலையிலும் நடைபெற்றது. வெளியீட்டு வைபவங்களில் இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்களும் நண்பர்களும் சொக்கன் ஏ. ரி. பொன்னுத்துரை ,கவிஞர் காரை செ. சுந்தரம் பிள்ளை ஆகியோரும் நிகழ்த்திய உரைகளை எழுத்தில் பெற்று அவற்றை வெற்றிமணியில் தொடந்து வெளியிட்டார். பின்னர் அவற்றை இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்களைக்கொண்டே தொகுப்பித்து -கீரிமலையினிலே நூல்நயம்- என்ற பெயரில் நூலாகவும் தனது செலவில் வெளியிட்டு என்னைக் கௌரவித்தவகை என்றும் மறத்தற் கரியது.

இதனை ஒரு துணிச்சற்பணியாகக் கருதிய தொகுப்பாசிரியர் இரசிகமணி கனகசெந்திநாதன் தனது முன்னுரையில் மு. க. சு.வுக்குப் பின்வருமாறு நன்றி தெரிவிக்கின்றார் இந்த நூல்நயம்- என்ற நூல் உருவானதற்கு உண்மையாக ஒருவருக்கு நன்றி கூறவேண்டும் என்றால் அவர் வெற்றிமணிப் பத்திரிகையின் ஆசிரியர் திரு.மு.க.சுப்பிரமணியம் அவர் களேயாவர் . யாழ் இலக்கிய வட்டத்தின் உபதலை வராக முன்பு இருந்தவர். தமது பத்திரிகையில் இக்கட்டுரைகள் தொடர்ந்து வரத்தாராளமாக இடம் கொடுத்தவர் .-நன்றி- என்ற மூன்றெழுத்துள் அதை அடக்கமுடியாது. - வெற்றிமணி - வெளியீடாக அவர் இதை வெளியிடப் பொறுப்பேற்றமை இக்காலத்தில் ஒரு துணிவு தரும் செயலாகும். உண்மையில் மு.க.சு. அவர்கள் மிகுந்த துணிவு உடையவர் நினைத்ததைச் சாதிக்கும் அளவுக்கு துணிவுள்ளவர். அதேசமயத்தில் பணியவேண்டிய இடத்தில் பணிந்து போகும் பெருமையும் உடையவர். பரந்த மனப் பாண்மையும் இரக்க சிந்தனையும் உடையவர்

இவ்வியல்புகளால் அவர் சிறந்த ஒரு நிர்வாகியாகவும் விளங்கினார். யாவரையும் அணைத்துச் செல்லும் அவரின் ஆளுமையை குரும்பசிட்டி திரு. பொன். பரமானந்தர் வித்தியா சாலையில் அவர் அதிபராக இருந்த காலத்தில் நன்கு கவனிக்கமுடிந்தது. அவரது காலத்தில் இப்பாடசாலை அடைந்த வளர்ச்சியை அனைவரும் அறிவர்.

அவரது வசீகரத் தோற்றம் அவருக்கு கிடைத்த ஒரு வான் கொடை. எந்த நேரமும் அவர் முகத்தில் புன்முறுவல் பூத்திருக்கும். சிரிப்பு கலகலக்கக் காத்திருக்கும். சிரிப்பினால் காரியங்கள் சாதித்தவர் மு. க .சு. அவர்கள்.

மு.க.சு. வின் மற்று மொரு சிறப்பியல்பு சுறுசுறுப்பு. குரும்பசிட்டியில் இவரைப்போன்று சுறுசுறுப்பாக இயங்கிய வேறொருவரையும் நான் காணவில்லை. தூரபயணங்கள் போக மற்றய இடங்களெல்லாம் இருசில்லுவண்டி இவரது சுறுசுறுப்பை விறுவிறுப்பாக்கும். பலபேர் எனது இல்லத்துக்கு வந்து பலதும் பத்தும் பேசி எனது நேரத்தை வீணாக்குவதுண்டு. எனக்கு அறவே பிடிக்காத ஒரு விடயம் அரட்டை அடிப்பது இருப்பினும் வந்த விருந்தினரை திருப்திப் படுத்தும் வகையிற் பொறுமையுடன் கேட்டுக் கொண் டிருப்பேன்.

இத்தகைய விருந்தினருக்கு நேர்மாறானவர் மு. க. சு. அவர்கள். வருவார் அலுவலோடு வருவார் அலுவலை முடித்துக் கொண்டு போய்விடுவார். பொழுதை அவர் பழுதாக்குவது கிடையாது.

வாழ்க்கையை மு.க.சு. அவர்கள் நோக்கிய விதத்தை பின்வருமாறு சுருக்கலாம்.

**வாழ்க்கை இன்ப துன்பம் நிறைந்தது**
**அவற்றை அனுபவித்தல் வேண்டும்**
**வாழ்க்கை பிரச்சனைகள் உடையது**
**அவற்றைத் தீர்க்க வேண்டும்.**
**வாழ்க்கை தேவை மிகுந்தது.**
**அவற்றை நிறைவேற்ற வேண்டும்**
**வாழ்க்கை சேவைக்குரியது**
**சேவைகளை உவந்து செய்தல் வேண்டும்**
**வாழ்க்கை குறுகியது.**
**விரைவில் செய்வதை செய்து முடித்தல் வேண்டும்.**

நண்பர் மு.க.சு. அவர்கள் இன்று இல்லை. எனினும் அவரது நாமம் வாழ்ந்து கொண்டே இருக்கின்றது. எனக்கும் அவருக்கும் இருந்த உறவும் தொடர்கின்றது.

யேர்மனியில் அவரது மைந்தர் சிவகுமாரன் அவர்கள் தந்தையாரின் -வெற்றிமணி விழாக்களில் பங்கு பற்றும் வாய்ப்பும் எனக்குக் கிடைக்கிறது. அதில் இலண்டன் - ஈழகேசரி- இதழில் யான் "எழுத்தாளன்" என்னும் தலைப்பில் தொடர்ந்து எழுதிவந்த கட்டுரைகளைத் தொகுத்து அழகிய படங்களோடு கூடிய நூலாக வெளியிட்டு என்னைப் பெருமைப் படுத்தினார் கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் அவர்கள். தந்தை எவ்வழி அவ்வழி மைந்தன்.

2005 மு.க.சு. 25 ஆண்டு நினைவு கட்டுரை இன்று அவரது 100 ஆண்டு விழாவும், வெற்றிமணி யேர்மனியில் 25 வது ஆண்டு நிறைவு விழாவும் சங்கமமான தருணம் மீழ்பிரசுரமாகிறது. மகிழ்வான செய்தி.



பிரதம விருந்தினராக வெற்றிமணி ஸ்தாபகரின் துணைவியார் ஆசிரியை திருமதி.நவநிதி. சுப்பிரமணியம் ,சிறப்புவிருந்தினர் சீர்காழி சிவசிதம்பரம்,தலைமை: கவிஞர்.வி.கந்தவனம் மற்றும் பூவரசு சஞ்சிகை ஆசிரியர் திரு.இந்துமனேஷ அவர்கள்




வெற்றிமணி தாயகத்தில் 1950 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு யேர்மனியில் 2000 ஆண்டு பொன்விழாக் கண்டவேளை

# மு.க.சுப்பிரமணியம் முதல் மு.க.சு.சிவகுமாரன் வரை

என்.செல்வராஜா
நூலகவியலாளர், லண்டன்





அன்று
வெற்றிமணி டாண் டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள் மொழி நலமுற ஒலித்திடுவாய் -

என்ற வாழ்த்து ஒலியுடன் வெளிவந்த, இலங்கையின் முதலாவது சிறுவர் மாத இதழான ”வெற்றிமணி”க்கு இன்று 69 வருடங்கள்.
1950 இல் நாவலப்பிட்டியில் ஆசிரியராகப் பணிபுரிந்த அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களால் இந்த வெற்றிமணி ஆரம்பிக்கப்பட்டது.
1957 ஆம் ஆண்டுவரை நாவலப்பிட்டியிலும், 1958 இல் இருந்து க.வே.மகேந்திரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பூண்டுலோயாவிலும், பின்னர் 1964 இல் இருந்து திரு. பொ. இராசரத்தினம் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு முல்லைத்தீவு தண்ணீரூற்றிலும் இருந்து வெளிவந்தது வெற்றிமணி. தொழில் இடமாற்றம், கடதாசி விலை உயர்வு போன்ற பல காரணங்களால் இடையிடையே வெளிவருவதில் தடையேற்பட்டாலும், முல்லைத்தீவில் இருந்து வெளிவரும்போது அது தனக்கென ஒரு சொந்த அச்சகமான “சக்தி அச்சகத்தை“ ஸ்தாபித்திருந்தது.

1968 இல் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் குருப்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலத்தில் அதிபராக பதவி உயர்வு பெற்ற பின்னர், சக்தி அச்சகம் யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரான்லி றோட்டிற்கு இடம் மாறி வெற்றிமணி அங்கிருந்து வெளியாகியது.. அதன் பின்னர் 1972 இல் இருந்து 1979 வரை சக்தி அச்சகம் சுண்ணாகத்திலிருந்த பேரூந்து நிலையத்திற்கு முன்பாக இடம் மாறியது. இலங்கையில் ஏறக்குறைய 30 வருடங்கள் வெற்றிமணி வெளிவந்தது.

திரு.வை.சி.சிவஞானம் அவர்களின் “கணக்கியலுக்கோர் அறிமுகம்“ கட்டுரைத் தொகுப்பும் கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் “பரீட்சையில் சித்தியடைவது எப்படி?“ இரசிகமணி. கனக செந்திநாதன் எழுதிய “கீரிமலையினிலே“ - கவிஞர் வி.கந்தவனம் எழுதிய கவிதை நூலுக்கான விமர்சன நூல் மற்றும் டாக்டர் நந்தி (சிவஞானசுந்தரம்) அவர்கள் எழுதிய “உங்களைப் பற்றி“ கட்டுரைத் தொகுப்பும் வெற்றிமணி வெளியீடுகளாக அன்று வெளிவந்தன.
உன்னதமான இடத்தை வாசிப்பு பெற்றிருந்த அவ்வேளையில், அதனை உரிய முறையில் பாவித்து வெற்றி கண்டவர் அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள். அன்னார் 1980 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 21 இவ்வுலகை நீத்தார். அத்துடன் வெற்றிமணியும் அங்கு ஓய்வு கொண்டது.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பண்டிதர் இ.நமசிவாயம், இரசிகமணி கனக செந்திநாதன், கவிஞர் வி.கந்தவனம், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கவிஞர் இ.நாகராஜன், காரை சுந்தரம்பிள்ளை, திக்குவல்லை கமால், க.மொழிவரதன்(மகாலிங்கம்), கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத் துரை, வேல் அமுதன், வை.சி.சிவஞானம், நந்தி, பாலமுனை பாறுக், சரணாகையூம், சௌமினி, மூதூர் கலைமேகம், சொக்கன், அரியாலையூர் ஐயாத்துரை, அருட்கவி சீ.விநாசித் தம்பி, கோப்பாய் சிவம், சு.சிவகுமாரன், பண்டிதர் சோ.இள முருகனார்,நெல்லைதாசன்,திமிலைத்துமிலன் (எஸ்.கிருஷ்ண பிள்ளை), கேணிப்பித்தன் (சி.அருளானந்தம்), வ.ந.கிரிதரன் போன்றோரும் தமிழகத் திலிருந்து சாலை இளந்திரையன், மதுரை கா.தமிழ்த்தம்பி போன்றோரும் அன்று வெற்றி மணியில் எழுதிய எழுத்தாளர் களில் ஒரு சிலராவார்.
இன்று
கவிஞர் வி.க.வின் ”தமிழ் எங்கள் உயிருக்கு மேல்” என்னும் வாசகத்துடனும், ”தோல்வியைக் கண்டு அஞ்சுபவர் களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச் செல்கிறது” என்ற அரவிந்தரின் மணிமொழியுடனும் 1994 இல் இருந்து புலம்பெயர்ந்த தேசத்தில் வெளிவருகின்றது வெற்றிமணி.

அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் புதல்வர் மு.க.சு. சிவகுமாரனை ஆசிரியராகக் கொண்டு ஜேர்மனியில் இருந்து வெளிவருகின்ற வெற்றிமணி, ஐரோப்பாவில் வெளிவந்த முதலாவது இலவச வண்ண மாத இதழாகும். திரு சிவகுமாரன் இலங்கை களனி பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பட்டதாரியாவார். அதனால் பத்திரிகை, வர்ணத் தில் அழகாகவும் சிறந்த வடிவமைப்புடனும் வருகின்றது.

வெற்றிமணியில் வெளிவந்த கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், அறிவியல் விடயங்கள் நூலுருவம் பெறு கின்றன. தாயகத்தில் உள்ள மாணவர்களுக்கு இலவசமாக கொடுக்கப்படுகின்றன. நூலுருப் பெற்ற புத்தகங்களாக கவிஞர் வி.கந்தவனம் அவர்களின் “எழுத்தாளன்“ (1995) திரு.பொ.கனகசபாபதி (முன்னாள் மகாஜனாக்கல்லூரி அதிபர்) அவர்களின் “திறவுகோல், மாறன் மணிக்கதைகள்“ (2000) மாதவியின் “இடைவெளி“ சிறுகதைத்தொகுப்பு (2000), “தமிழே காதல்“ (2002) சுகந்தினி சுதர்சன் எழுதிய கவிதையும் சித்திரங்களும் கொண்ட “வெற்றிமணிகள்“ நூல் (2003) இந்துமகேஷ் அவர்களின் “காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி“ (2006) கதிர் துரைசிங்கம்(கனடா) அவர்களின் நகைச்சுவை அறிவியல் துணுக்குகள் “காதோடு காதாக“ (2005) மு.க.சு.சிவகுமாரன் எழுதிய அறிவியல் கட்டுரைத் தொகுப்பு “அதிசய உலா“ (2007) வலன்ரீனா இளங்கோவன் (கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை, யாழ் வெற்றிமணி மாணவர் பத்திரிகையின் இணை ஆசிரியர்) எழுதிய “யாழ்ப்பாணத்து நாட்டிய மரபுகள்“ மற்றும் வெற்றிமணி ஆசிரியர் எழுதிய பொன்னும் மணியும், முனைவர் மனோன் மணி சண்முகதாஸ் அவர்கள் எழுதி வெற்றிமணி 2013 வெளியிட்ட பிஞ்சு முகத்தின் தேடல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இது வெற்றி மணியின் 21 வது வெளியீடு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

2005ஆம் ஆண்டிலிருந்து, வெற்றிமணி மீண்டும் மாணவர் இதழாக யாழ்ப்பாணத்தில் இலவ சமாக வெளிவருகின்றது.
இதன் இணை ஆசிரியராக வலன்ரீனா இளங்கோவன் அவர் களும், கௌரவ ஆலோசகராக மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் உள்ளனர். அத்துடன் அறிவியல் ஆன்மீகம் கலந்த சிவத்தமிழ் என்னும் காலாண்டு சஞ்சிகையையும் 2004 இல் இருந்து வெற்றிமணி வெளியிடுகின்றது. இன்று 15 ஆண்டுகளை நிறைவுசெய்து தொடர்கிறது.



சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
முத்துவிழா நிகழ்வை வெற்றிமணி இலங்கை,யேர்மனி,இங்கிலாந்து,
கனடா ஆகிய நான்கு நாடுகளில் கொண்டாடியது.
லண்டன் ஈலிங்கன் கனகதுர்க்கா அம்பாள் ஆலயத்தில்.
29.01.2015 நடைபெற்ற விழாவில் மு.க.சு.சிவகுமாரன்
கவிஞர்.வி.கந்தவனம் மற்றும் நூலகவியலாளர் என்.செல்வராஜா

# "கட்டுக்கதை"




நண்பர்களே, கட்டுக்கதை என்றால் என்ன? கற்பனைகள் கலந்த கதைகளா அல்லது உண்மையை மறைப்பதற்காகக் கூறும் கதைகளா? இரண்டு கூற்றுகளும் கட்டுக்கதைகளுக்கு பொருந்துகின்றன.

கதைகள் என்றாலே கற்பனைகள் கலந்தால் மட்டுமே நன்றாக இருக்கும். கேட்பவர்கள் ரசிக்கும் அளவிற்கு கதைகள் இருக்க வேண்டும் அல்லவா! கற்பனை வளம் நிறைந்தவர் களாகச் சிலர் இருக்கின்றனர்.
சும்மா ஒரு விடயத்தை பெரிதுபடுத்தி, ஒன்றுமில்லாத ஒன்றுக்கு, கண் முக்கு வாய் வைத்து,கதைப்பது,கட்டுக்கதை. ஒன்றைத் தலை கீழாகக்கதைப்பது என்றும் சொல்லலாம். ஆம்,




பெண் ஒருத்தியை இரசித்துக் கதைக்கும் பொழுது அவளின் கண்கள் மூக்கு மற்றும் வாயை வர்ணித்தால் தான் அவளின் அழகை இரசிக்கமுடியும்.

இதேபோலவே கட்டுக்கதையின் இரசனைகள்.

கற்பனைக் கதைகள் யார் மனதையும் புண்படுத்தாதவை ஆனால் கட்டுக்கதைள் புண்படுத்துபவை. கண்ணால் காண பதும் பொய் காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய்.
விசாரிக்காமல் பொழுதுபோக்குக்காக சிலர் பேசுவார்கள். ஒன்று கூடியும் உரையாடுவார்கள். பொய்யான விடயத்தை உண்மையாக்குவதற்குக்கூட உழைப்பார்களாம் சிலர்.
இக்கதைகள் மனங்களைப் புண்ணாக்கி விடுகின்றன. மற்றவர்கள் மனம் புண்படாது நடந்து கொள்வதே நன்று.



றஜினா தருமராஜா

தொலைபேசியில் மணிக்கணக்காக உரையாடுவார்கள். போக்குவரத்துக்குப் பணம் செலவு செய்து வீடு சென்றும் உரையாடுவார்கள்.
கட்டுக் கதை எடுத்துக்காட்டுகள் சில:
ஒரு குடும்பத்தலைவன் வேர்வை சிந்தி கடுமையாக உழைக்கச் செல்கிறார். அவர் சம்பாதித்தப் பணத்தில் வீடு கட்டுகிறார்.

ஊர் என்ன சொல்லும்? இவருக்கு எங்கிருந்து இவ்வளவு பணம் என்று கேட்கும். கட்டுக் கதையை உருவாக்கும் நேரம் வந்து விடும். அவர்களுக்கும் இக் கட்டுக்கதையினால் நேரம் போனதாகிவிடும். அதாவது பொழுதுபோக்கு.

**இந்தக் கட்டுக்கதைகள் பற்றி இன்னும் சில...**

இளம் சந்ததியினரைப் பற்றிக் கட்டுக்கதைகள் தினம் உருவாகி வருகின்றன. ஓர் ஆணும் பெண்ணும் வெளியில் நின்று உரையாடக்கூடாது. ஆம், உடனே இவர்கள் காதலர் கள் என்பர்.

பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் பெண் தன் நண்பன் ஒருவனுடன் நூலகத்துக்குச் சென்று கல்வி கற்பதற்காகச் சந்திக்கின்றனர். இவர்களைக் காண்பவர்கள் இவர்கள் நூலகத்துக்குச் செல்லும் முன்னரே கட்டுக் கதைகளை உருவாக்கிவிடுவர்.



வேலைக்குச் செல்லும் பிள்ளைகள் வேலை முடிந்து இரவில் வீடு செல்கிறார்கள் என்றால் அதற்கும் ஆயிரம் கதைகள். வேலை இல்லை பொய் என்பர்.
இந்தக் கட்டுக்கதைகள் இன்று தோன்றியவை அல்ல. நம்நாட்டிலேயே அன்றும் இருந்துள்ளது.

ஆனால் என்ன அப்போது இன்றுபோல் வேகமாக கட்டுக்கதை பரவ வட்சப்வசதிகளோ! வைபர் வசதிகளும் வெறும் சைபர்தான்.

அதனால் பொட்டுக்காலும், போகும் இடங்களிலும், இரவிரவாக அக்கம் பக்கத்து வீட்டுத் திண்ணைகளிலும் இந்தக் கட்டுக்க தைகள் பிரசவித்துக்கொண்டுதான் அன்று இருந்தன.

கட்டுக் கதையினால் பாதிக்கப் பட்டவர்கள் அதிகம். ஆம் மன அழுத்தத்துக்கு உள்ளாகி துன்பப் படுகின்றனர். ஆகவே தயவு செய்து மற்றவர்களின் மனதைப் புண்படுத்தாது வாழப் பழகிக் கொள்ள வேண்டும். ஏனெனில் நாம்செய்யும் காரியங்கள் எங்களுக்கே திரும்பி வந்துவிடும்.

**நன்மை செய்வோம்!**
**நல்லதைப் பேசுவோம்!**
**நன்மை பெறுவோம்.**

# வெற்றிமணி தமிழ் மக்களின் சொத்து



தமிழில் பத்திரிகை ஒன்றை தொடர்ச்சியாக வெளியிடுவது எந்தளவுக்குச் சிரமமானது என்பது அனைவருக்கும் தெரியும். அதுவும் புலம்பெயர்ந்த மண்ணியில், ஜனசஞ்சகமான முறையில் வெளியிடுவது சவால் நிறைந்தது. இந்தச் சவால்களை எதிர்கொண்டு, 25 ஆண்டுகளாக "வெற்றி மணி"யை மாதந்தவறாமல் ஜேர்மனியிலிருந்து வெளிக் கொண்டுவரும் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் போற்றப்பட வேண்டிய ஒருவர்.

அவரது அயராத உழைப்பு, அர்ப்பணிப்பு என்பற்றுடன் அதற்கு ஆதரவளிக்கும் தமிழ் வாசகர்களும்தான் வெற்றி மணியின் "வெள்ளிவிழா"வின் பின்னாலிருப்பவர்கள்.

வெற்றிமணி முதலில் ஒரு சிறுவர் இதழாக 1950 இல் இலங்கையிலிருந்து வெளிவரத் தொடங்கியது. சிவகுமாரனின் தந்தை மு.க.சுப்பிரமணியம் அவர்கள்தான் இதனை ஆரம் பித்து அதன் ஆசிரியராகவும் இருந்தவர். இலங்கையிலிருந்து வெளிவந்த முதலாவது சிறுவர் சஞ்சிகையாக இரு வரலாற்றில் பதியப்பட்டிருக்கின்றது.

ஆசிரியராகப் பணியாற்றிய மு.க.சுப்பிரமணியம் அவர்கள் மாணவர்களின் வாசிப்புப்பழக்கத்தை ஊக்குவிப்பதை நோக்க மாகக்கொண்டு இந்த சஞ்சிகைளை ஆரம்பித்து நடத்தினார்.

மு.க.சுப்பிரமணியத்தின் மகன் மு.க.சு.சிவகுமாரன் ஜேர்மனி யிலிருந்து வெற்றிமணியை 1994 களிலிருந்து ஒரு ஜனரஞ்சக பத்திரிகையாக வெளியிட்டுவருகின்றார்.தந்தையிடமிருந்த அதே சமூக உணர்வுடன்,அதனை ஜேர்மனியிலிருந்து மீண்டும் அவர் வெளிக்கொண்டுவருவது பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயம்.

புலம்பெயர்ந்த நிலையில், தமது வேலை, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கான போராட்டங்களுக்கு மத்தி யில் சமூக நோக்குடன் இவ்வாறான பத்திரிகை ஒன்றை வெளியிடுவது என்பது சவாலானது. அந்த சவாலை அவர் எதிர்கொண்டார். அதில் வெற்றியும் பெற்றிருக்கின்றார்.

புதிய தலைமுறையினரிடம் வாசிப்புப் பழக்கம் குறை வடைந்து செல்கின்றது. புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் தமிழ் மொழியின் எதிர்காலம் கேள்விக்குள்ளாக்கப் படுகின்றது. இவற்றுக்கு மத்தியில் தமிழில் ஒரு பத்திரிகை யை வெளியிடுவதன் மூலம் புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் தமிழை வாழவைத்துக்கொண்டிருக்கின்றார் சிவகுமாரன்.

புலம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான அம்சங்களை உள்ளடக்கிய கட்டுரைகள், தாயக அரசியல் விவகாரங்கள், பொழுதுபோக்கு அம்சங்கள் என்பவற்றுடன் ஒரு ஜனரஞ்சக இதழாக ஐரோப்பா வாழ் மக்கள் மத்தியில் இதனை வெளிக் கொண்டுவருகின்றார். கவர்ச்சியான பக்க வடிவமைப்பு, சிறப்பான அச்சுப்பதிப்பு என்பவற்றுடன் தமிழக பத்திரிகைகளுக்குப் போட்டிபோடும் வகையில் வெற்றிமணி வெளிவருகின்றது.



**பாரதி இராஜநாயகம்,**
பிரதம ஆசிரியர்,
ஞாயிறு தினக்குரல்,
கொழும்பு.

இப்போது 25 ஆண்டுகளைப் பூர்த்திசெய்து வெள்ளிவிழா கொண்டாடும் வெற்றிமணியின் பின்னால், ஐரோப்பாவிலுள்ள தமிழ் எழுத்தாளர்கள்,ஆர்வலர்கள் பலரும் அணிதிரண்டுள்ளார்கள்.


அவர்களுடைய தமிழ் ஆர்வத்துக்குக் களம் அமைத்துக் கொடுப்பதும் வெற்றிமணிதான்.

அந்த வகையில் வெற்றிமணி தமிழ் மக்களின் சொத்து. வெள்ளிவிழா சிறப்பாக இடம்பெறவும், இன்னும் பல வருடங்களுக்கு புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் தமிழை வாழவைக்கும் வகையில் வெற்றிமணி வெற்றிகரமாக வெளிவரவும் வாழ்த்துகிறேன்.

## 1956 ஆம் ஆண்டு வெற்றிமணியில் இலங்கையில் கல்வி பற்றி வெளிவந்த அரிய விபரத்தொகுப்பு

இலங்கையில் கல்வி விபரம் 1954
மாணவர்களும், ஆசிரியர்களும்,நாம் வசிக்கும் இலங்கைத்தீவில் எத்தனை பாடசாலைகள் உண்டு என்பதனையும்,எத்தனை ஆசிரியர்கள் சேவை செய்கின்றனர் என்பதையும், எத்தனை மாணவர்கள் கல்விகற்க்கின்றார்கள் என்பதையும் அறியவிரும்புவோர் - கீழே 1954 ம் வருடத்தில் உள்ளவிபரங்கள் கொடுக்கப்படுகின்றன.

| பாடசாலைகளின் | தொகை - | மாணவர்கள் - | ஆசிரியர்கள் |
|---|---|---|---|
| ஆங்கிலப்பாடசாலை | - 705 | - 325,806 | - 13,257 |
| சிங்களப்பாடசாலை | -3955 | -1,021,072 | - 28,040 |
| தமிழ்ப்பாடசாலை | - 1,169 | -203,935 | - 6,093 |
| தோட்டப்பாடசாலை | - 899 | -66,280. | -1,078 |



இலங்கையில் கல்வி விபரம் 1954

மாணவர்களும் ஆசிரியர்களும், நாம் வசிக்கும் இலங்கைத்தீவில் எத்தனை பாடசாலைகள் உண்டு என்பதையும் எத்தனை ஆசிரியர்கள் சேவை செய்கின்றனர் என்பதையும் எத்தனைமாணவர்கள் கல்விகற்கின்றனர் என்பதையும் அறியவிருப்புவர்-கீழே 1954-ம் வருடத்திலுள்ள விபரங்கள் கொடுக்கப்படுகின்றன.

| பாடசாலைகளின் தொகை | மாணவர்கள் தொகை | ஆசிரியர்கள் தொகை |
|---|---|---|
| ஆங்கிலபாடசாலை-705 | 325,806 | 1[illegible] |
| சிங்களபாடசாலை.-3955 | 1,021,072 | 28,040 |
| தமிழ்ப்பாடசாலை.-1,169 | 203,935 | 6,093 |
| தோட்டப்பாடசாலை.-899 | 66,280 | 1,078 |

01.08.1956

பேனநண்பர்கள் (இலங்கை)

141–ஏ. இந்திரராஜா–151/1 நாவலரோட் நுககொடை
142–எஸ். ஏ. ஈஸ். சரீபுத்தீன் அரசினர்கனிஷ்டபாடசாலை ஓட்டமாவடி
143–சு. த. பஞ்சாட்சரம் மத்தியகல்லூரி–மட்டக்களப்பு.
144–செல்வி புஷ்பவல்லி துரைராஜா–லேடிசிமித் பலாங்கொடை.
145–ஏ. அலித்தம்பி–மெயின்வீதி ஓட்டமாவடி. வாழைச்சேனை.

நன்றி : வெற்றிமணி 01.08.1956

# கைமாறிப்போனது கைகாட்டி மரமா! இல்லை நம் வாழ்வா?

2002 ம் ஆண்டு திருநெல்வேலி யாழ் வளாகத்தின் பின்புறத்தில் சென்ற புகையிரதப்பாதை
அழிந்து தெருவாகியும் வீடாகியும் போயிருந்த காலம். நடுத்தெருவில் கைகாட்டி மரம்?
சம்மந்தமே இல்லாமல் நின்றது!
வழியில் வந்த சிறுவனைக் கேட்டேன் “இது என்னவென்று தெரியுமா?“
அவனுக்கு புகையிரதம் அதனால் போனது தெரிந்திருக்க நியாயமில்லை.
அவன் சட்டெனக் கேட்டான் “சகடையைத் தெரியுமோ?” என்று.
நான் சற்று யோசிக்க....
அதுதான் யாழ்ப்பாணத்தில் குண்டுவீசிய பொம்பருக்கு நாம் வைச்ச பெயர் என்றான்
அட! வெளிநாடு! படம் எடுக்கிறீங்களா? என்றபடி
சைக்கிள் வளையத்தை உருட்டியபடி ஓடிவிட்டான் சிறுவன்.

படம் வெற்றிமணி : சிவகுமாரன்



# கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பது புகையிரதப் பெட்டி மட்டுமல்ல
# நாம் இழந்துபோன வாழ்வும்தான்

2014 ம் ஆண்டு காங்கேசன்துறை வெளிச்சவீடு அருகே கடற்கரையில்
நிறுத்திவைக்கப்பட்டு இருந்த புகையிரதப்பெட்டி
ஆனால், தற்போது இவ்விடத்தில் இல்லை

படம் வெற்றிமணி : சிவகுமாரன்









# சிவத்தமிழ் சஞ்சிகை

## 15 ஆண்டு நிறைவு மலர் வெளியீடு

வெற்றிமணி வெளியீடாக வரும் சிவத்தமிழ் சஞ்சிகையின் 15 வது ஆண்டு சிறப்பு மலர் வெற்றிமணி ஸ்தாபகர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் நூற்றாண்டு விழா அரங்கில் (12.05.2019) வெளியிடப்பட்டது. மலரை வானதி நர்த்தனாலயக் காப்பாளர் திரு தேசிங்குராஜா அவர்கள் வெளியிட சிறப்புப்பிரதிகளை OTS உரிமையாளர் திரு ஜெகதீஸ்,கோபரா ஞானம் உரிமையாளர் திரு ஞானம், மற்றும் திருமதி கோபி (AKR Visualizers உரிமையாளர்) **ETR** வானொலி அதிபர் அகரம். அகரதீபம், சஞ்சிகை ஆசிரியர் திரு த.ரவிந்திரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். வெற்றிமணி, சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் சிவத்தமிழ் ஆரம்ப இதழில் சிறப்பு ஆசிரியராக பணியாற்றிய.கலாநிதி வானதி தேசிங்குராஜா அவர்களுக்கும் இன்று உதவி ஆசிரியராகப்பணியாற்றும் ஆன்மீகத்தென்றல் திரு.புவனேந்திரன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார். சிறப்புமலரில் ஆக்கங்கள் படைத்த திருமதி கௌரி சிவபாலன் மற்றும் றஜினா தருமராஜா ஆகியோரை ஆசிரியர் அறிமுகம்செய்து பாராட்டினார். சிறப்பு மலர் கம்காமாட்சி அம்பாள் ஆலயகுரு சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்கள் மற்றும் சுவெற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலயகுரு சிவஸ்ரீ ஜெயந்திநாதக் குருக்கள் முன்னிலையில் வெளியிடப்பட்டது. அருகே அறிவிப்பாளர் “சகநாயகன்” சி.சக்திவேல் அவர்கள்.

தாயகத்தில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது முத்துவிழாவில் சிவத்தமிழ் சிறப்பிதழ் வெளியிடப்பெற்றது. மேடையில் திருமதி நாச்சியார் செல்வநாயகம் (தலைவர் இந்து நாகரிகத்துறை யாழ் பல்கலைக்கழகம்) முனைவர் மனோன்மணி. சண்முகதாஸ், சிவத்தமிழ்ச் செல்வி,தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் அ.சண்முகதாஸ், அருட்கவி.சி.வினாசித்தம்பி.பேராசிரியர் சு.மோகதாஸ், பிரம்மஸ்ரீ சி.சரவணபவான் (சிற்பி) வெற்றிமணி, சிவத்தமிழ் பிரமத ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் ஆகியோர்.




சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது முத்துவிழா 07.01.2005




ஈழத்தின் முதல் சிறுவர் மாதாந்த சஞ்சிகையின் ஸ்தாபகர்
மு.க.சுப்பிரமணியம் அவர்களின் நூற்றாண்டுவிழா.

12.05.19 அன்று ஞாயிற்றுக்கிழமை St.Monika Geminde zentrum, Am Kleinenberg 07, 58239 Schwerte Ergste என்னும் இடத்தில் வெற்றிமணி ஸ்தாபகர் அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் 100 ஆவது ஆண்டுவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. அவர் மகனும் தற்போதைய வெற்றிமணி ஆசிரியருமான மு.க.சு.சிவகுமாரன் அவர்களின் ஏற்பாட்டில் இவ்விழா நடைபெற்றது. இவ்விழாவினை சகநாயகன் சி.சக்திவேல் அவர்களும் வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரனின் மகள் சிவஜெனனியும் தொகுத்து வழங்கியிருந்தார்கள்.

திருமதி நிர்மலா தெய்வேந்திரம், திருமதி.சுமதி.மோகன் ஆசியா சமுத்திரம் திருமதி ஜலயா இரகுநாதன், ஆடற் கலாலயம் அதிபர் ரஜினி சத்தியகுமார், சிவ அருள் (எசன் தமிழ்ப்பாடசாலை) ஆகியோர் மங்கள விளக்கேற்ற நிகழ்வு ஆரம்பமானது. அதன்பின் இவ்விழாவில் ஜேர்மனி காமாட்சி அம்மன் ஆலய பிரதமகுருவும் ஸ்தாபகருமான சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்கள், ஜேர்மனி ஸ்வெற்றா அம்மன் ஆலய பிரதம குருவான சிவஸ்ரீ ஜெயந்திநாதக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள். மு.க.சுப்பிரமணியம் அவர்களின் மகள் திருமதி.கலாநிதி லோகதாசன் அவர்கள் வரவேற்புரை நடத்தினார்.

அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களை நினைவுபடுத்தும் வண்ணம் அவருடைய மாணவர்களாகிய சுவிஸிலிருந்து வருகை தந்த மகேந்திரன். சக்திபாலன் அவர்களும், பொ.நற்குணராஜா அவர்களும் உரையாற்றினார்கள். ஈழத்து சிறுவர் இலக்கிய உலகில் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் பங்கு என்ற தலைப்பில் எழுத்தாளர் கௌசி அவர்களும், சிறுவர் சஞ்சிகைகள் என்ற தலைப்பில் தனசேகரன் பிரபாகரன்(தமிழ்நாடு) அவர்களும் மூச்சின் முக்கியத்துவம் பற்றி கரிணி கண்ணன் அவர்களும், ஊடகவியலாளர்கள் கலைவிளக்கு சு.பாக்கியநாதன்.ETR வானொலி அதிபர் அகரம் சஞ்சிகை அகரதீபம் சஞ்சிகைகளின் ஆசிரியர் திரு.ரவிவீந்திரன் மற்றும் தமிழ்ரைம்ஸ் பிரதம ஆசிரியர் தவா ஆகியோரும் வாழ்த்துரைகள் வழங்கிச் சிறப்பித்தனர். வெற்றிமணி வெளியீடக வரும் சிவத்தமிழ் சஞ்சிகையின் 15 வது ஆண்டு சிறப்பு மலர் அங்கு வெளியிடப்பட்டது. அதனை வானதி நர்த்தனாலயக் காப்பாளர் திரு தேசிங்குராஜா அவர்கள் வெளியிட சிறப்புப்பிரதிகளை OTS உரிமையாளர் திரு ஜெகதீஸ்,கோபரா ஞானம் உரிமையாளர் திரு ஞானம்,மற்றும் திருமதி அர்ச்சனா கோபிநாத் AKR Visualizers உரிமையாளர்) அகரம் சஞ்சிகை அகரதீபம் சஞ்சிகை ஆசிரியர் திரு.த.ரவிந்திரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். சிவத்மிழ் பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் சிவத்தமிழ் ஆரம்ப இதழில் சிறப்பு ஆசிரியராக பணியாற்றிய .கலாநிதி வானதி தேசிங்குராஜா அவர்களுக்கும் இன்று உதவி ஆசிரியராகப் பணியாற்றும் ஆன்மீகத் தென்றல்திரு.புவ னேந்திரன் அவர்களுகும் நன்றி தெரிவித்தார்.

**இலங்கை முதல் சிறுவர்**

இலக்கிய மாத இதழின் ஆசிரியரான அமரர் மு.க.சுப்பிர மணியம் அவர்களின் பணியை நினைவுறுத்தும் வண்ணம் சிறுவர்களின் நடனங்களும் உரைகளும் சிறப்பாக கண்கவரும் வண்ணம் சபையோரைக் கவர்ந்திருந்தன. சலங்கை ஒலி நாட்டியப்பள்ளி அதிபர் சாவித்திரி சரவணன், ஆடற்கலாலய நாட்டியக்கலாவித்தகர் நிமலன் சத்தியகுமார், நாட்டியக் கலாஜோதி கார்த்திகா ஈஸ்வரலிங்கம் ஆகியோரின் நெறிப்படுத்தலில் மாணவிகளின் நடனங்களும்,

எசன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் செல்வி நீதினி தவக்குமார் (சோமசுந்தரப்புலவர்) செல்வி டிலக்ஷனா விஜிதராஜ். (அதிபர் மு.க.சுப்பிரமணியம் வெற்றிமணி ஸ்தாபகர்) வள்ளுவர் பாடசாலை மாணவர்கள் யோர்மனி செல்வன். சஞ்சே நகுலதாஸ் (சுவாமி விபுலானந்த அடிகளார்) செல்வி. கயல்வி கணேசலிங்கம் (தனிநாயகம் அடிகளார்) மாணவர்களின் உரைகளுடனும் இந்நிகழ்வுகளைச் சிறப்பித் திருந்தனர்.





செல்வன். சஞ்சே நகுலதாஸ்  செல்வி. கயல்வி கணேசலிங்கம் செல்வி நீதினி தவக்குமார்  செல்வி டிலக்ஷனா விஜிதராஜ்





அறிவிப்பாளர் சி.சக்திவேல் - அகரம் ரவி - வெற்றிமணி சிவா - தமிழ்ரைம்ஸ் தவா







இளையோரின் பார்வையில் என்ற தலைப்பில் செல்வன். சிவவினோபன், செல்வன். இராம் பரமானந்தம், செல்வி. றஜினா தர்மராஜா, திரு நெடுந்தீவு முகிலன் ஆகியோர் உரையாற்றினர். வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்களின் நெறியாள்கையில் தந்தையின் விவரணப்படமும், அவர் மகன் சஞ்சய் சிவகுமாரனின் இசையிலும் நெறி யாள்கையில் தயாரித்து வெளியிடப்பட்டது. இடையிடை யே தந்தையின் நினைவலைகளை மகன் வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் வெளிப்படுத்தினார்.

இறுதி நிகழ்வாக திரு. வி.சபேசன் திரு.முல்லைமோகன், திரு.கி.த.கவிமாமணி, திருமதி.நகுலா சிவநாதன், திருமதி. இந்து தெய்வேந்திரம், திரு. ஏலையா முருகதாசன், திரு. த.இரவீந்திரன் ஆகியோர் வீட்டில் பிள்ளைகளுக்கு முன்னுதாரணமாக பெற்றோர் திகழ்கிறார்களா? என்ற தலைப் பில் பட்டிமன்றம் ஒன்றை சிறப்புற நடத்தினர்.

இறுதியில் இராப்போசன விருந்துபசாரத்துடனும் சபையோரின் நிறைவான மனமகிழ்வுடனும் நிகழ்ச்சி நிறைவுபெற்றது. அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் செய்த சேவைகளின் மூலம் மறைந்தும் வாழ்கின்றார்.- -கௌசி





# தனது உலக சாதனையை தானே முறியடித்து
# சாதனை படைத்தார் தர்ஜினி சிவலிங்கம்






## இலங்கை அணியில் தர்ஜினி, எழிலேந்தினி

Tharjini Sivalingam is 6'.11", making her the world's tallest netballer

இங்கிலாந்தின் லிவர்பூலில் (12-21 ஆடி 2019) நடைபெற்ற உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடருக்கு இலங்கை அணியில் யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த தர்ஜினி சிவலிங்கம் மற்றும் எழிலேந்தினி சேதுகாவலர் ஆகிய இருவரும் இடம்பெற்றுள்ளனர்.

15ஆவது உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் ஜுலை மாதம் 12ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை லிவர்பூலில் நடைபெற்றது. இதில் ஏ குழுவில் இடம்பெற்றுள்ள இலங்கை அணி, உலக வலைப்பந்தாட்ட தரவரிசையில் தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ள அவுஸ்திரேலியா, வட அயர்லாந்து, சிம்பாவே ஆகிய அணிகளுடன் பலப்பரீட்சை நடத்தியது

இதில் வலைப்பந்தாட்ட உலகில் அதி சிறந்த சூட்டர் (shooter) வீராங்கனை என்ற பெருமைக்குரியவரும் ஆசியாவிலேயே அதி உயரமான வலைப்பந் தாட்ட வீராங்கனையுமான தர்ஜினி சிவலிங்கம்,( 6.2) மிகப் பெரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் இம்முறை உலகக் கிண்ணத்தில் இலங்கை அணிக்காக களமிறங்கினார்.
கடந்த வருடம் சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப்பில் 3 வருடங்களுக்குப் பிறகு இலங்கை அணியில் இடம்பிடித்த தர்ஷினி, இலங்கை அணிக்கு சம்பியன் பட்டத்தை வென்று கொடுப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.
அண்மைக்காலமாக தேசிய மற்றும் சர்வதேச மட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் பிரகாசித்து வருகின்ற வட மாகாணத்தைச் சேர்ந்த இளம் வீராங்கனையான எழிலேந்தினி சேதுகாவலர் முதற்தடவையாக உலகக் கிண்ண இலங்கை வலைப்பந்தாட்ட அணியில் இடம்பிடித்துள்ளார்.

கடந்த வருடம் கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெற்ற நான்கு அணிகள் பங்குகொண்ட நட்பு ரீதியிலான அழைப்பு வலைப்பந்தாட்டத் தொடரில் இலங்கை அணிக்காக அறிமுகத்தைப் பெற்றுக்கொண்ட எழிலேந்தினி, அதன்பிறகு நடைபெற்ற ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டித் தொடரிலும், அண்மையில் நிறைவுக்கு வந்த கென்யா, மலேஷியா மற்றும் இலங்கை இளையோர் வலைப்பந்தாட்ட அணிகள் பங்குகொண்ட நட்பு ரீதியிலான அழைப்பு வலைப்பந்தாட்டத் தொடரிலும் அவர் விளையாடியிருந்தார்.
இந்த நிலையில், இம்முறை உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை அணியை சதுரங்கி ஜயசூரிய வழிநடத்தவுள்ளார். இவர் கடந்த வருடம் சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற இலங்கை அணியை வழிநடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தர்ஜினி சிவலிங்கம்

தனது உலக சாதனையை தானே முறியடித்து சாதனை படைத்தார் தர்ஜினி சிவலிங்கம். உலகக்கிண்ண வலைப் பந்தாட்டத் தொடரில் அதிக கோல்களை போட்ட வீராங் கனையாக இலங்கையின் தர்ஜினி சிவலிங்கம் மீண்டும் உலக சாதனை படைத்தார்.



## தர்ஜினி சிவலிங்கம் மீண்டும் உலக சாதனை படைத்தார்.

இதேவேளை, உலகக்கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரில் இலங்கை அணி சிங்கப்பூரை தோற்கடித்து 15 ஆம் இடத்தைப் பிடித்தது. இங்கிலாந்தின் லிவர்பூலில் நடைபெறும் உலகக்கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரில் 15 மற்றும் 16 ஆம் இடங்களை தீர்மானிக்கும் போட்டி இன்று நடத்தப்பட்டது.

இந்தப் போட்டியில் இலங்கை அணியும் சிங்கப்பூர் அணியும் மோதின. போட்டியில் இலங்கை அணி 78- 57 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. மற்றும் லீக் போட்டியொன்றிலும் இலங்கை அணி சிங்கப்பூரை 88 50 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியிருந்தது. இன்றைய போட்டியில் நட்சத்திர வீராங்கனையான தர்ஜினி சிவலிங்கம் 77 கோல்களைப் போட்டார்.
இதன் மூலம் கடந்த திங்கட்கிழமை சிங்கப்பூர் அணிக்கு எதிராக 76 கோல்களைப் போட்டு தானே படைத்த உலக சாதனையை தர்ஷினி சிவலிங்கம் இன்று புதுப்பித்தார்.

இது உலகக்கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரொன்றில் வீராங்கனையொருவர் பதிவு செய்யும் அதிகூடிய கோல் களாகும்.
தர்ஜினி சிவலிங்கம் இவ்வருட உலகக்கிண்ண வலைப்பந் தாட்டத் தொடரில் இதுவரையில் 271 கோல்களைப் போட்டு, தொடரில் அதிகூடிய கோல்களைப் போட்ட வீராங்கனை யாகவும் பதிவாகி யுள்ளார்.

எவ்வாறாயினும், இன்றைய போட்டியுடன் அவர் சர்வதேச அரங்கிலிருந்து ஓய்வு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உலக வலை பந்தாட்டத்தில் உயரம் தொட்ட தர்ஜினி சிவலிங்கம் அவர்களின் வாழ்த்து




உண்மையின் இதழாய்
எங்கும் ஒலிக்கட்டும்

கண்ணிமை போல
கலை கலாச்சாரம் காக்கட்டும்

ஊடகத்துறையில் உயரம்
தொட்டிடும் வெற்றி மணி

உலக தரத்தில் உள்ளங்களை
கவர்ந்திடும் உந்தன் அணி

இருபத்தைந்து அகவையில்
பெரும் சமூகப்பபணி உந்தன் கையில்

வெள்ளி விழா காணும் வெற்றி மணியே
சொல்லில் நேர்பட ஒலித்திங்கு வெல்வாய் தனியே

தமிழை அணி செய்வாய்
தரணியில் தனித்துவமாய் மிளிர்வாய்

அழகு தமிழால் ஐரோப்பிய மண்ணை அலங்கரி
உலக தமிழர் மனங்களில் உனக்கென தடம் பதி!

இருபத்தைந்து அகவையில் இளந்துடிப்போடு
உலாவரும் வெற்றிமணியை உவகையோடு

வாழ்கவென வானுரசும் பேரரசு தமிழ் கொண்டு
வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்!

**தர்ஜினி சிவலிங்கம்.**

உலக சாதனை படைத்த
இலங்கை வலைபந்தாட்ட வீராகனை







மயக்க மருந்து

# மிகப் பிரபலமான சில கண்டுபிடிப்புகள் தற்செயலாகத் தான் கண்டு பிழக்கப்பட்டன, தெரியுமா?

மிகப் பிரபலமான சில கண்டுபிடிப்புகள் தற்செயலாகத் தான் கண்டு பிடிக்கப்பட்டன, தெரியுமா?

அறிவியலில் எவ்வளவோ கண்டுபிடிப்புகள் இறந்தகாலத்தில் நடந்தன, நிகழ்காலத்தில் நடக்கின்றன, மேலும் எதிர் காலத்தில் நடக்கப்போகின்றன. அது ஒரு நாளும் நின்று விடப் போவது இல்லை. இதில் என்ன விசேஷம் என்றால், இறந்தகாலங்களில் எவ்வளவோ திட்டமிடப்படாத கண்டுபிடிப்புகள் நிகழ்ந்துள்ளன என்பது தான். என்ன புரிய வில்லையா? ஒரு விஷயத்தில் ஆராய்ச்சி செய்துகொண்டு இருந்த ஆராய்ச்சியாளர்கள் தற்செயலாக வேறு ஏதோ ஒரு விஷயத்தைக் கண்டுபிடித்துள்ளார்கள். இப்படித் தற்செய லாகக்கண்டுபிடிக்கப்பட்ட 5 மிகப் பிரபலமான கண்டுபிடிப் புகளைப் பற்றி சொல்லவா?

1) 907ம் ஆண்டில் Leo Baekeland என்பவர் அரக்கு (Shellac) எனப்படும் ஒருவகை இயற்கைப் பிசினுக்குப் பதிலாக செயற்கை பிசின் உருவாக்கும் செயலில் ஈடுபட்டுள்ளார். ஆனால் அவர் அந்நேரம் கண்டுபிடித்தது செயற்கைப் பிசின் இல்லை. தற்செயலாக நெகிழி எனப்படும் பிளாஸ்டிக்கை உருவாக்கி விட்டார். இவரின் இந்த மாபெரும் கண்டு பிடிப்பினால் இன்று எங்கு பார்த்தாலும் பிளாஸ்டிக் காணமுடிகிறது.

2) 1878ம் ஆண்டில் Constantin Fahlberg எனப்படும் ரசவாதி (chemist) அவரது ஆராய்ச்சிகள் முடிந்தவுடன் தனது கைகளைச் சுத்தம் செய்ய மறந்துவிட்டார். வீடு சென்றதும் தற்செயலாக அவரின் கைகளைச் சுவைத்துப் பார்த்த இவர், அவை இனிப்பாக இருந்தன என்பதை அவதானித்தார். அது தான் முதல் முறையாக இன்று பெரும்பாலும் நீரிழிவு நோயாளர்களால் உபயோகிக்கப்படும் சாக்கரின் (saccharin) எனப்படும் செயற்கை இனிப்பூட்டி உருவான நேரம் ஆகும்.

3) 1945ம் ஆண்டில் ரேடார் (Radar) ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள Percy Spencer எனப்படும் பொறியியலாளர் அவரது ரேடார் ஆராய்ச்சி நேரத்தில் காற்சட்டைப் பாக்கெட்டில் இருந்த சாக்லெட் உருகுவதை அவதானித்தார். அத்துடன் பிறந்தது தான் இன்று ஒவ்வொரு வீட்டிலும் காணப்படும் நுண்ணலை அடுப்பு (micro wave oven).

4) இந்த நான்காவது கண்டுபிடிப்புக்கு யார் சொந்தக்காரர் என்பது இன்று வரைத் தெளிவாகக் கூறமுடியவில்லை, ஆனால் இந்தக் கண்டுபிடிப்பு தற்செயலானது என்பதில் ஒரு மாற்றுக் கருத்துமே இல்லை. 1772ம் ஆண்டுக்குப் பின் நைட்ரஸ் ஆக்சைடு (Nitrous oxide) எனப்படும் வாயு பல வருடங்களாகச் சிரிப்பூட்டும் வாயு (laughing gas) ஆக உபயோகிக்கப் பட்டது.



Dr.நிரோஷன்

இந்த வாயு அளவுக்கு மீறிச் சுவாசித்தால் உடனடியாக மயங்கி விடுவார்கள் என்பதை அறிந்தவர்கள், அதனை அந்நேரம் எவ்வாறு பயன் படுத்த வேண்டும் என்பதைத் தெரியாமல் இருந்து விட்டார்கள். 1844ம் ஆண்டில் தான் Horace Wells என்னும் பல் வைத்தியர் தற்செயலாக இந்த வாயு மயக்க மருந்தாக உபயோகிக்கலாம் என்பதைக் கண்டுபிடித்தார். ஒரு கொண்டாட்டத்தில் சிரிப்பூட்டுவதற்காக அளவுக்கு மீறி சுவாசித்த நண்பர் ஒருவர் தவறி கீழே விழுந்து, உடலில் ஆழமான வெட்டுக் காயம் ஏற்பட்டும் ஒரு வலியும் இல்லாமல் இருந்ததை அவதானித்த இவர், அந்தச் சம்பவத்துடன் இன்றைய மயக்க மருந்தின் அடிப்படையைக் கண்டு பிடித்துவிட்டார்.



Antibiotic



Micro wave oven

5) மருத்துவ உலகில் மிகவும் முக்கியமான கண்டுபிடிப்பு ஒன்று கூட தற்செயலாகத் தான் நிகழ்ந்தது. 1928ம் ஆண்டில் Alexander Fleming என்பவர் இன்ஃபுளுவென்சா (Influenza) என்னும் வைரஸ்களுடன் (Virus) ஆராய்ச்சி செய்துகொண்டு இருந்தார். விடுமுறைக்குச் சென்று திரும்பிய இவர், அவரது ஆய்வுக்கூடத்தில் தவறுதலாக ஸ்டாபிலோகோகஸ் (Staphylococcus) என்னும் கிருமிகள் வைத்து இருந்த ஒரு தட்டு மூடப்படவில்லை என்பதை அவதானித்தார்.

பதறி ஓடி வந்து அதை நீக்க முயன்ற இவர், அந்தத் தட்டில் பூஞ்சை (அல்லது பூஞ்சணம்) பிடித்து இருந்ததைக் கவனித்தார். இதில் சுவாரசியமான விஷயம் என்னவென்றால், அந்த ஆபத்தான கிருமிகள் தட்டில் பூஞ்சை பிடித்த இடத்தைத் தவிர மீதி இருந்த எல்லா இடங்களிலும் பரவி இருந்தன.

எனவே, இந்தப் பூஞ்சை உள்ள இடத்தை அந்தக் கிருமிகள் தவிர்க்கின்றன என்பதைத் தற்செயலாகக் கண்டுபிடித்த இவர், பெனிசிலின் எனப்படும் நுண்ணுயிர் எதிர்ப்பி (antibiotic) உருவாக்குவதற்கு அடிப்படையாக இருந்தார். இந்த நுண்ணுயிர் எதிர்ப்பி இன்று நம்மைப் பல்வேறு நோய்களில் இருந்து குணப்படுத்துகிறது. உண்மை சொல்லப்போனால் இன்னும் எவ்வளவோ கண்டுபிடிப்புகள் தற்செயலாக நிகழ்ந்து இருக்கின்றன.

ஒன்றைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் போது, வேறு ஏதோ வொன்றைக் கண்டுபிடித்து இன்று மனித வாழ்க்கையே மாற்றி அமைத்துள்ளனர்.
நண்பர்களே, அடுத்த முறை சமைக்கும் போது அல்லது குளிக்கும் போது ஏதாவது வித்தியாசமாக இருந்தால் அது என்னவென்று ஆராய்ந்து பாருங்கள்.

தற்செயலாக இந்த உலகையே மாற்றி அமைக்கக்கூடிய மருந்து மாத்திரை அல்லது வேறு சுவாரசியமான விஷயங் களைக் கண்டுபிடித்து விடுவீர்கள்.

## வெற்றிமணி எல்லா வயதினரும் விரும்பும் சிறந்த பத்திரிகை!

இருபத்தைந்தாம் வருட வெற்றிவிழாவைக் கொண்டாடும் மணி வெற்றிமணி.
தமிழ் அங்காடிகளுக்குச் சென்றால் கண்ணில் படும் வெற்றி மணியைப் பல காலங்களாக எனது பெற்றோர் எடுத்துவந்து அதில் உள்ள அனைத்தையும் வாசித்து மகிழ்வதை அடிக்கடி கண்டிருக்கிறேன்.
அப்படி என்ன தான் அதில் இருக்கிறது என்று எடுத்துப் பார்க்கும் போது தான் புரிந்தது, வெற்றிமணி எல்லா வயது களுக்கும் அழகிய வர்ணங்களில் விதவிதமான தலைப்பு களில் சுவாரசியமான கட்டுரைகளைக் கொண்டது என்பதை.
அறிவியலில் அதிகளவில் ஆர்வம் கொண்ட எனக்கும் கூட வெற்றிமணியூடாக அறிவியல் பேச ஒரு வாய்ப்பு கிடைத்தது.

இப்படி வெளிநாடுகளில் நமது தாய்மொழித்தமிழை வளர்க்கும் சேவையைச் செய்துவரும் வெற்றிமணி, இன்று 25ம் ஆண்டு வெள்ளிவிழாவைக் கொண்டாடிக்கொண்டு இருக்கின்றது. வெற்றிமணி இந்தப் பயணத்தைத் தொடர்ந்து செய்து, முத்து, மாணிக்க, பொன்,வைர விழா என்று மட்டும் இல்லை, நூற்றாண்டு விழாவையும் கொண்டாட வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.
அன்புடன்
**நிரோஷன் தில்லைநாதன்.**

மரம் மாந்தர் மிருகம் நூல் அறிமுகவிழா 28.10.2012






## வெற்றிமணியுடன் மணியான பொழுதுகள்

கண்ணன் அண்ணா என்று அவரை விழிப்போரை உற்றுக் கவனித்தால் அவர்களது நட்பு நீண்டகாலமாக இருப்பதைக் காணலாம்.
கண்ணா என்பது ஓவியக்கலைவேளுக்கு சொந்தமான பெயர். குடும்ப உறவினர் அழைக்கும் பெயர். சிவகுமாரன் எழுத்தாள னாக பத்திரிகை ஆசிரியராக உள்ள எமது அன்புக்குரிய கண்ணனின் பெயர். எமது உறவு மிகவும் நீளமானது ஆழமானதும்கூட..
வானதி நர்த்தனாலயத்தின் இலட்சனையை அவர் 1987 இல் வரைந்து தந்தார். எமது நாட்டியாலத்தின் அரங்கேற்ற மலர்களை வடிவமைப்பதில் வெற்றிமணி ஆசிரியர் அவர்கள். முன்னணியில் நின்று பணிபுரிந்தவர்

செல்வி.அன்பரசி சிவதாசன் அவர்களது அரங்கேற்ற மலரை வர்ணத்தில் வடிவமைத்த முதல்வரும் அவர்தான். (11.05.1991) யேர்மனியில் வெளிவந்த முதலாவது வர்ண அரங்கேற்ற மலர் (யேர்மனியில் முதலாவது அரங்கேற்றம் ) என்ற பெருமையைப் பெற்றது. மொத்தம் 43 அரங்கேற்றம் எமது நர்த்தனாலயம் செய்துள்ளது. இவற்றில் பல வெற்றிமணி ஆசிரியர் தலைமை யில் நடைபெற்றவை என்பதை மகிழ்வுடன் பதிவு செய்ய விரும்புகின்றேன். வானதி நர்த்தனாலயத்தின் அனைத்து பணிகளிலும் வெற்றிமணியின் ஆதரவு அன்றும் இன்றும் இருந்துகொண்டே உள்ளது.
1994 ஆண்டு வெற்றிமணி ஆரம்பித்தவேளை எமக்கு பலதரப் பட்ட தாயகக் கடமைகள் சூழ்ந்த வேளையிலும் எமது நடன வகுப்புக்களில் எல்லாம் வெற்றிமணி பவனிவந்தது. அன்று யேர்மனியில் நடைபெறும் கலைநிகழ்வுகள் அனைத்தையும் பதிவுசெய்து மக்களிடம் எடுத்துச் சென்ற பெருமைக்குரியது வெற்றிமணி.
சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முத்துவிழாவை நான்கு நாடுகளில் நடத்தி, அன்னைக்கு பெருமை சேர்த்தவர். நான்கு விழாக்களில் யேர்மனியிலும், லண்டனிலும் நடைபெற்ற இரு விழாக்களிலும் எமது நர்த்த னாலய மாணவர்கள் கலந்துகொண்டதை மகிழ்வுடன் நினைவுகூருகின்றேன்.
வெற்றிமணி 2004ம் ஆண்டு சிவத்தமிழ் சஞ்சிகையை ஆரம் பித்தபோது சிவத்தமிழின் சிறப்பு ஆசிரியையாக என்னைக் கௌரவப்படுத்தியவர். என் மீது கொண்ட நம்பிக்கைக்கும் அன்புக்கும் இது சான்றாகும். வெற்றிமணி தொடர்ந்து வெற்றித்தடம் பதிக்க வாழ்த்துகின்றோம்.
அன்புடன் கலாநிதி வானதி.தேசிங்குராஜா.
வானதி நர்த்தனாலயம்- யேர்மனி



# கலாச்சாரத்தின் கண்ணாடி

வேலைக்குச் சென்றால் தமிழர் நாம், ஜேர்மனியர் செய்ய மறுக்கும் வேலைகளை ஏன் எடுத்துச் செய்கிறோம்? ஜேர்மன் ஆசிரியர் தவறு செய்தாலும், எம் பிள்ளைகளிடமே நாம் தவறைத் தேடிக்கொள்கிறோம்? எம் கலாச்சாரமே இதற்கு காரணம்.

முதலீட்டை நிர்ணயிக்க ஓரளவு நேர்மையான தொழில் கிடைத்தால் போதும் என்று, அதை நாம் ஏற்றுச் செய்கிறோம். அவ்விடத்திலும் நாங்கள் செய்யத் தேவையில்லாத வேலைகளையும், அதிக நேரத்தையும் குறைந்த சம்பளத்திற்கே செய்து முடித்து விடுகிறோம். முதலாளி ஏசினால், அதற்கு மறுவார்த்தை பேசாது, பணிந்துபோகிறோம். இதுவே ஒரு ஜேர்மனியராக இருந்தால், „இல்லை, எனக்கு இது பிடிக்காது, நான் இந்த வேலையை செய்ய மாட்டேன்!" என்று சொல்லிடுவார், முதலாளியும் இழைத்தவன் உள்ளான் தானே என எம்மிடம் அந்த வேலையை கொடுத்திடுவார். இப்படி முறைகேடான நிகழ்வுகளுக்கும் நாம் ஆளாகிறோம். அகதிச்சமுதாயத்தில் வளர்ந்த எமக்கு தொழிலுக்கான நன்றிக்கடமையும், முதலாளிக்கான மரியாதையும் இங்கு முக்கியமாகிறது.

தற்போது Mainz பல்கலைக்கழகத்தில் „Intercultural Project" ஒன்றில் நான் கர்நாடக சங்கீதம் கற்பித்து வருகிறேன். அங்கு ஜேர்மனியில் வளர்ந்து வரும் Master of Eduation (ஆசிரியர் தொழில் பட்டதாரிகள்), வேறு கலாசாரங்களை அறிந்து, அவற்றிற்கு மரியாதை செலுத்த கற்றுகொள்கிறார்கள். ஜேர்மனிய அரசாங்கத்திற்கு ஏன் இந்த முனைவு?

வேலையிடங்கள், பாடசாலைகள், ஏன் தனிப்பட்ட வாழ்க்கையிலும் கூட கலாசாரங்கள் மோதிக்கொள்ள வாய்ப்புக்கள் இருக்கும். அண்மைக்காலத்தில் அகதியாக வந்த மாணவன் ஒருவன் „நான் வகுப்பறையை சுத்தம் செய்ய மாட்டேன், அது பெண்களின் வேலை" என்று ஆசிரியரிடம் சொன்னான் என்றால், தனிப்பட்ட முறையில் அந்த ஆசிரியர் கோவம் கொள்ளலாமா? தண்டனை வழங்கும் உரிமை ஆசிரியர் பக்கம் இருந்தாலும், அவரது தொழில் கற்பித்தல். சிறுவனின் பண்பாட்டுக்கூறுகள் மூலமாக அவன் பக்கம் பார்த்தால், அவனுக்கு விளக்கம் கூறி அவனை ஆளுமையான மனிதனாக்கி வெளியுலகிற்கு அனுப்பிடலாம்.

ஜேர்மன்மொழி கற்பிக்கும் போது, ஆண்-ஆசிரியரை மாணவிகள் கண்ணைப்பார்த்து பதில் சொல்ல மாட்டார்கள். இதனால் அந்த மாணவிகள் அனைவரும் பெண்ணுரிமை கோரதவர்கள் என நினைக்காமல், அவர்களது கலாச்சாரத்தில் அது தவறாகக்குறிக்கப் பட்டிருந்தாலும் இந்த புதிய வாழ்வுமுறையில் அது வேண்டப்படுகிறது என விளக்கம் கூறுவதுடன், அவர்கள் மௌனமாக ஏற்றுகொண்ட கலாச்சாரக் கூறுகளை ஆரோக்கியமான முறையில் மீளாய்வு செய்யத் தூண்டவேண்டும்.

ஜேர்மனிய ஆசிரியர்கள், எமது பெற்றோர் ஜெர்மனிய கலாசாரக்கூறுகளுக்கு இணங்கிப்போகாது இருந்தால் அவர்கள் „படிக்காதவர்கள்" என்று மிக விரைவாக தீர்மானித்துவிடுவார்கள்.

ஆனால் பெற்றோர் ஆசிரியர் ஒன்றுக்கூடலில் மதுபானம் அருந்துவது வழக்கம் என்பது எனது பெற்றோரின் வழக்கத்திற்கு பொருந்தாததாக இருந்தாலும், நம் பெற்றோர் ஆசிரியரைவிட மேலதிகமான கல்வித்தகமை பெற்றிருக்கலாம்.



ராம் பரமானந்தன்
Ram Paramananthan

இருந்தாலும் இங்கே ஒருவருடைய கலாச்சாரம் வகுக்கும் இடைவெளியினால், அவரை அறிவில்லாதவராகவோ, அல்லது தவறாக நடப்பவராகவோ எடைபோடுவது தவறு. பலவித சமூகங்களை சந்திக்கும் விமானப்பணியாளர்களுக்கு வெவ் வேறு சமூகங்களை எப்படி அணுகுவது என்று கொடுக்கப்படும் பயிற்சிப்பட்டறைகள் இன்று விமானம் கடந்து அனைத்து பகுதிகளிலும் அவசியமாகின்றன.

ஐரோப்பிய நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும் சமா தானமான, ஆரோக்கியமான சூழலை வகுக்க, பல்கலாசார சமூகங்களை இணைத்தும் அவர்களது வாழ்வியலையும் கற்பிக்கிறார்கள். Diversity எனும் பெயரில், பல விதமான மக்கள் கூடும்போது, ஒருவரது பண்பாட்டில் தவறெனக் கருதுவது அடுத்தவரது கலாசாரத்தில் அவசியமாக இருக்கிறது. பிறநாட்டில் சமநிலையை பெறுவதற்கே குல்ட்டூர் ரெலடி விஸ்முஸ் „Kulturrelativismus" அதாவது பிறரது கலாச்சாரத்தின் கண்களாலேயே அவர்களைப் பார்ப்பது முக்கியமாகிறது. இன்னொருவருடைய கலாசாரத்தை புரிந்துகொள்ள அந்தக் கலாசாரத்தை கண்ணாடியாகத் தூக்கி மூக்கில் மாட்டவேண்டும் என்பது இங்கே பொருள்.

Kulturrelativismus என்பது பொதுவான விழுமியங்களை மறுத்து, நாட்டுக்கும், நேரத்திற்கும், வயதிற்கும், சமுதாய வர்க்கத்திற்கும் வேறுபடும் என்று குறிக்கிறது. எனது கலாச்சாரத்தில் இழிவு எனக் கருதப்படுவது வேறு கலாசாரத்தில் இழிவாகுமா? உலகளாவிய ரீதியில் எனது கலாசாரத்தின் விழுமியங்களேதான் கொண்டு செல்லப் படுகின்றனவா? வணக்கம்கூற கைகொடுப்பது சில கலாசாரங் களில் மிக இழிவானது என்பதை உதாரணமாக்கி கிணற்றுத் தவளை எண்ணங்களை தூக்கி வீசலாம்.

1995 இல் இருந்து சமூகவியாளாலர் Wolfgang Nieke இந்த Kulturrelativismus பற்றி பேசி வருகிறார். ஆனால் அண்மைய காலத்தில் இருந்தே தான், ஜேர்மனியில் Interkulturelle Bildung அதாவது பல்கலாச்சாரக் கல்வி செயல்முறைப் படுத்தப்பட்டு வருகிறது. இதனால் வகுப்பறைகளில் பல்லின மாணவர்கள் கூடும்போது, ஆரோக்கியமான சுற்றாடல் பேணப்படுகிறது. இருந்தும் சில வயது முதிர்ந்த அல்லது பல்கலாசாரக் கல்வியை பெறாத ஆசிரியர்கள், அறியாமை யினால் மாணவர்களை தவறாக தண்டித்துவிடுகிறார்கள். இதன்காரணமாக, பல ஆண்டுகளாக கற்பித்துவரும் ஆசிரியர் களுக்கும் பயிற்சிப்பட்டறைகள் வழங்கப்படுகின்றன.

புலம்பெயர்ந்த பின்புலம் கொண்ட மாணவர்களுக்கு வகுப்பறையில் வரும் நெருக்கடிகளுடன், வீடுகளிலும், முரண் பாடுகள் உண்டாக்குகின்றன. எனது பெற்றோரின் விழுமி யங்கள், என் வாழ்வுமுறைக்கு பொருந்தாததாக இருக்கலாம். ஆனால் அதே நேரத்தில், அடக்கமான பிள்ளைகளே பெருமையாகக் கருதப்பட்ட நிலையிலிருந்து, இன்று மறுகேள்வி கேட்கும் பிள்ளைகளே திறமைசாலிகள் என்று பேசிக்கொள்ளும் காலமாற்றமும், முரண்பாடுகளைக் கொண்டு வருகிறது. இதனால் கலாசாரக் கண்ணாடிகளை கழட்டி வைப்பதும், மாட்டிக்கொள்வதும் சமுதாயங்களிடையே சமாதானத்தையும், ஆரோக்கியமான உறவையும் நிலை நாட்டுகிறது.




# First baby born through dead uterus transplant

**Author: Sahana Asokan**

There are 130 million babies born worldwide a year, but have you thought about how many are born naturally? Not all women have the ability to give birth which may be due to many genetically reasons. There are many ways that women can have children thanks to our medical advancement. Now, doctors have successfully found another way! Uterus transplant. This is the beginning of a new choice women can make.

In Brazil, a woman who had died from a brain haemorrhage at the age of 45 donated her uterus to another woman. The woman had a genetic disorder which meant that she was born with no uterus. There have been many cases involving a deceased donor uterus transplant that many people from different countries have tried. Unfortunately, none of the other nations such as US, Czech Republic and Turkey have been successful.




The woman, aged 32, wanted to have a child and this was possible due to the transplant.

The procedure lasted ten and a half hours in total and involved the doctors to connect the veins, arteries, ligaments and vaginal canals.

The women had to remain in intensive care for two days and then another six days on a specialised transplant ward. To prevent her body rejecting the new organ, she took five immunosuppression drugs.

This was combined with other treatments that were needed to avoid blood clotting and infections. After the doctors approved of the procedure, they inserted the fertilised eggs through IVF.



Sahana Asokan

A normal pregnancy lasts about two hundred and eighty days or forty weeks, however the women's gestation period last for thirty-five weeks and three days. On the 5th of December, her daughter was born by a caesarean section and she weighed 2.55 kilos. When the doctors delivered the baby, the transplanted uterus




was removed, and it displayed no irregularities. Dani Ejzenberg, at Sao Paulo University in Brazil led the team and he claims that this is a medical milestone.

"This creates the possibility of childbirth for many infertile women with access to suitable donors and the needed medical facilities," said Ejzenberg.

Medicine and technology is growing rapidly, and this event is one of the many cases that proves our strides in the medical field. Brazil has successfully given birth to someone who had a deceased donor uterus transplant which has given more hope to humanity.






# வெற்றிமணி விழாக்களும் அறிவிப்பாளரான அற்புத நாட்களும்

சகநாயகன் சி.சக்திவேல்.

எதிர்கால தலைமுறை ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் வாழ்வதற்கு கனிகளையும் நிழல்களையும் தருகின்ற விருட்சங்களை உருவாக்கியவர்கள் நம் மூத்தோர்கள். நல்ல தொரு சமுதாயத்தின் மூலம் மகிழ்ச்சி எப்போதும் சீராக இருக்கும் என்று முனைப்புடன் இருந்தவர்கள் கல்விமான்கள்.

அப்பேற்பட்ட கல்விமான்களில் ஒருவராகிய ஆசிரியர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் "இன்றைய சிறுவர்கள் நாளை நாட்டை ஆளும் மன்னர்கள்" என்பதை உணர்ந்து, அவர்களின் வாசிப்பு பழக்கத்தையும், எழுத்தாற்றலினையும் மேம்படுத்துவதை கருத்திற் கொண்டு 1950ம் ஆண்டில் விதைத்த விதைதான் வெற்றிமணி சிறுவர் சஞ்சிகை.

அது வெற்றிகரமாக பவளவிழாவை நோக்கி சென்று கொண்டிருக்கும் வேளை, ஐரோப்பாவில் அதன் விழுது வெள்ளி விழாவை நிறைவு செய்து மகிழ்கிறது.

வெற்றிமணியின் நிகழ்ச்சித் தொகுப்பாளராக 25 வருட காலமாக பணியாற்றுகின்றேன். கடந்து வந்த பாதையில் எழுத்து,தமிழ்பேச்சு,மற்றும் கலைகளில் அனுபவமிக்கவர்கள், சாதித்தவர்கள்,சாதிக்கத்துடிப்பவர்கள், எனப் பலரையும் வெற்றிமணியின் மூலப்பிரதிகளில் தேடித்தேடி கண்டெடுத்து வாசகர்களுக்கு பகிர்கிறேன். வெற்றிமணியின் மூலப்பிரதிகள் ஒரு பெரும்களஞ்சியம். அதில் நீங்கள் எதனைத் தேடு கிறீர்களோ அது கிடைக்கும்.

1981ம் ஆண்டு இலங்கையில் இருந்து யேர்மனி வந்த மு.க.சுப்பிரமணியத்தின் மைந்தன் மு.க.சிவகுமாரன் காலம் நேரம் இடம்பார்த்து 1994 ஆண்டு பதிவைத்து வளர்த்த வெற்றிமணி, முதலாவது ஆண்டு விழாவை 22.07.1995 சனிக்கிழமை அல்ரீனா நகரத்தில் கொண்டாடியது. இவ்விழா வெற்றிமணி யேர்மனியில் முதலாவது ஆண்டுவிழாவாக மட்டுமன்றி கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் மணிவிழா வாகவும் அமைந்தது பெருமைக்குரியது. அப்பெருமைக்கு காரணம். கவிஞர் 1967 களில் வெற்றிமணியில் மாணவர்கள் கல்விக்கு ஏற்ற பல கட்டுரைகளை எழுதிவந்தவர். அது மட்டுமன்றி அக்கால கட்டத்தில் கவியரங்கிற்கோர் கந்தவனம் எனப் புகழ்பூத்தவர்.

தாயகத்தில் இருந்து மங்கல இசைக்கலைஞர்கள் என்.குமரகுரு, அவர்களுடன் ப.நாகேந்திரன், என்.பி.பால முரளி, கே.பி.செல்வநாயகம் எஸ்.சுகுமாரன் ஆகியோரின் இசை விருந்துடன் விழா ஆரம்பமாகி முத்தமிழால் மணம் வீசியது. பிரதம விருந்தினராக மணிவிழா நாயகன் கவிஞர் வி.கந்தவனம் அவர்கள் கலந்து சிறப்பித்தார். அத்தினம் கவிஞர் எழுதிய எழுத்தாளன் எனும் நூல் அங்கு வெற்றிமணி வெளியீடாக வெளியிடப்பட்டது.
நூலை பூவரசு ஆசிரியர் இந்து மகேஷ் அவர்கள் வெளியீட்டுரைசெய்தார்.

இந்த மங்கலகரமான ஆரம்பத்துடன் விழாக்களும் பத்திரிகை யும் இன்று 25 வருடங்களைக் கடந்த பாதையை சுருக் கமாகப் பார்ப்போம்.

1996 வெற்றிமணி விழாவில் பிரதம விருந்தினராக தமிழாலயத் தந்தை இரா.நாகலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பிக்க கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கா.சிவநாதன் அவர்களும் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டார். அன்று வெற்றிமணி வெளியீடாக கோடை காலச் சிறப்பிதழ் ஓவியா சஞ்சிகை வெளியானது.

2000 ஆண்டு யேர்மனி லூடின்சைட் நகரில் தாயகத்தில் 1950 இல் உருவான வெற்றிமணிக்கு பொன்விழா இங்கு எடுக்கப்பட்டது. பிரதம விருந்தினராக வெற்றிமணி ஸ்தாபகரது மனைவி திருமதி நவநிதி சுப்பிரமணியம் அம்மா அவர்களும், தென்னிந்திய திரைப்பட பாடகர் டாக்டர் சீர்காழி சிவசிதம்பரமும் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிக்க கவிஞர் வி.கந்தவனம் தலைமையில் விழா சிறப்புற்றது. அன்று பொன் விழா மலரினை பூவரசு ஆசிரியரும் அன்று வெற்றிமணியின் ஆஸ்த்தான வெளியீடு உரையா ளருமான திரு. இந்துமகேஷ் அவர்கள் வெளியீட்டுவைத்தார். சீர்காழி சிவசிதம்பரம் அவர்கள் சஞ்ஜே சிவா இசையமைத்த பால் குடி மறந்தகையோடு ஒலிப்பேழையை வெளியிட்டு சிறப்பித்தார்.
2002 ஆண்டு கவிஞர் வி.கந்தவனம் அவர்களுக்கு உலகப் பல்கலைக்கழகம் (அரிசோனா) கலாநிதி பட்டம் வழங்கியதை கௌரவித்து வெற்றிமணி விழா எடுத்து பாராட்டியது.
2003 வெற்றிமணி ஆசிரியரின் (மு.க.சு.சிவகுமாரனின்) கவிதை நூல் - தமிழேகாதல்- வெளியீட்டுவிழாவும் கலாநிதி பட்டம் பெற்றமைக்கான பாராட்டு விழாவும் வூப்பெற்றால் நகரத்தில் இடம்பெற்றது.





பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களின் பவளவிழா 29.03.2015




மணிவிழா 28.08.2010

16.11..2003 வெற்றிமணியின் வெற்றிநிலா முற்றம் வெற்றிமணியின் (99வது இதழ் வெளியீடு) நிகழ்ச்சி டோட்மூண்ட் நகரத்தில் நடைபெற்று. இவ்விழாவில் மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி அவர்களும், தாயகத்தில் இருந்து வருகை தந்த நாட்டியக் கலைஞன் கலைக்கோவில் வேல் ஆனந்தன் அவர்களும் மற்றும் கவிஞர் வி.கந்தவனம் அவர்களும் விழாவினைச் சிறப்பித்தனர். வெற்றிநிலா முற்றம் என்ற தலைப்பில் கவியரங்கம் ஒன்றும் இடம்பெற்றது. சுகந்தினி சுதர்சன், விக்னா பாக்கியநாதன், நகுலா சிவநாதன், கௌசல்யா சொர்ணலிங்கம்,ஏலையா க.முருகதாசன், ஆகியோர் கலந்து கொண்டனர். அன்று சுகந்தினி சுதர்சன் அவர்களின் வெற்றிமணி வெளியீடான சித்திரக் கவிதைகளடங்கிய “வெற்றிமணிகள்” கவிதை நூல் வெளியிடப்பட்டது.

2004 ம் ஆண்டு வெற்றிமணியும் வானதி வாணி நர்த்தனாலயமும் இணைந்து நடத்திய விழாவில் பரதமாதேவி என்னும் நூல் வெற்றிமணியால் வெளியிடப்பட்டது. திருமதி வானதி தேசிங்குராஜா அவர்கள் கலாநிதி பட்டம் பெற்றதை சிறப்பிக்கும் விழாவாகவும் அமைந்தது. அன்று வெற்றிமணியின் ஆன்மிகச் சஞ்சிகையான சிவத்தமிழ் அன்றையதினம் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆசியுடன் உதயமானது.

03.10.2005 இல் நம்மண்ணின் இசைவேந்தர் பொ. சுந்தரலிங்கம் அவர்களின் நாத சங்கமம் சிகழ்ச்சி வெற்றிமணி ஆதரவில் மு.க.சுப்பிரமணியம் அரங்கில் இடம்பெற்றது, கனடா கதிர் துரைசிங்கம் அவர்களின் காதோடு காதாக நகைச்சுவை துணுக்கு நூலாக வெற்றிமணி வெளியீடாக அன்றையதினம் வெளிவந்தது.பொன் சுந்தரலிங்கம் அவர்களின் நாத சங்கமம் ஒலிப் பேழையும் வெளியிடப்பெற்றது. மதுரக்குரலோன் கண்ணன் அவர்களை, அவரது குருவான சங்கீதபூசணம் பொன் சுந்தரலிங்கம் அவர்கள் பொன்னாடை போற்றிக் கௌரவித்தார்.

இதே வருடம் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முத்துவிழாவை நான்கு நாடுகளில், தாயகம் 10.01.2005 இலண்டன் 29.01.2005, யேர்மனி, 05.02.2005 கனடா 18.02.2005 என முறையே வெற்றிமணி இறையருளுடன் சிறப்புற நடத்திமுடித்தது.

2006 ம் வெற்றிமணியின் சிவத்தமிழ் விழாவை ஆன்மிகத் தென்றல் திரு.த.புவனேந்திரன் அவர்களுக்கு மணிவிழாவாக கொண்டாடி மகிழ்ந்தது. விழாத் தலைவராக நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்கள் கலந்து சிறப்பித்தார்.2007 ஆம் ஆண்டு சிவத்தமிழ் விழா கம் நகரில் நடைபெற்றது. இவ்விழாவில் மங்கல வாத்தியங்களுடன் தமிழாலயத் தந்தை இரா.நாகலிங்கம் ஐயா அவர்களும், கம்காமாட்சி அம்பாள் ஆலய குரு சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்களும் அழைத்து வரப்பட்டனர். விழாவில் ஆசிரியக்குருமணி. பக்குவத்திருமணி எனப்பட்டங்கள் முறையே வழங்கி கௌரவிக்கப்பட்டனர். வெற்றிமணி வெளியீடான சிவகுமாரனின் அதிசய உலா நூல் வெளியிடப்பட்டது.

2007 ஆம் ஆண்டு மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி அவர்களின் திறவுகோல் நூல் வெற்றிமணி வெளியீடாக வெளியிடப்பட்டது. அன்று பெற்றவர் கற்ற முற்றம் என்ற தலைப்பில் பெற்றவர்கள் கற்ற பாடசாலைகளை அவர்களது பிள்ளைகள் மூலம் பேசவைத்து அரங்கம் ஆனந்தம்கொண்டது

07.05.2008 இல் டோட்மூண்ட் நகரில் சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வர ஆலயத்தில் சிறந்த சமூகத்தொண்டன் திரு.சண்முகம். ஜெகதீஸ்வரன் அவர்களுக்கு வெற்றிமணி ஆலய நிர்வாகத்துடன் இணைந்து, மணிவிழா எடுத்து பாராட்டியது. கவிஞர் வி.கந்தவனம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். வியாபார ஸ்தாபன உரிமையாளர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

23.08.2008 இல் கம் நகரில் நடைபெற்ற வெற்றிமணி விழாவிற்கு கனடா பாரதி கலைக்கூட இசைக் கலைஞர்கள் 25க்கு மேற்பட்டவர்கள் கலந்து சிறப்பித்தனர். இவ்விழாவின் பிரத விருந்தினராக கம்நகர உப நகரபிதாவும் தாயகத்தில் இருந்து யாழ் பல்கலைக்கழப் பொறியியலாளர் சி.தயாபரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ் வெற்றிமணி ஆசிரியர் திருமதி வலன்ரீனா இளங்கோவன் அவர்களும் கலந்து சிறப்பிக்க விழாவிற்கு டாக்டர் கதிர். துரைசிங்கம் அவர்கள் தலைமைதாங்கினார். பாரதி கலைக்கூடத்தின் இசைவிருந்து அன்று உச்சத்தை தொட்டது. இத்தருணத்தில் வெற்றிமணி சகநாயகன் எனும் பட்டத்தை எனக்கு வழங்கி நான் மகிழ வெற்றிமணி மகிழ்ந்தது. திருமதி வலன்ரீனா இளங்கோவன் எழுதிய யாழ்பாணத்து நாட்டிய மரபுகள் நூல் வெற்றிமணி வெளியீடாக வெளிடப்பெற்றது.

2008 ம் ஆண்டு சுவெற்ராகரில் இடம்பெற்ற சிவத்தமிழ் விழாவில் கற்றிங்கன் வரசித்திவிநாயகர் ஆலய தலைவர். நா.இராவிந்திரன் அவர்களுக்கு இறைபணிக்கினியனார் எனும் பட்டத்தை சிவத்தமிழ் வழங்கியது.

28.08.2010 ம் ஆண்டு வெற்றிமணிக்கு (1950.2010) மணிவிழாக் கொண்டாட்டம் பேரசிரியர் சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்றது சிறப்புவிருந்தினராக முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தார்.

2011ம் ஆண்டு டோட்மூண்ட் நகரில் தென் இந்திய பின்னணிப் பாடகர் மொழி பட புகழ் பல்ராம் கலந்து சிறப்பித்தார்.

2012ம் ஆண்டு மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் மரம், மாந்தர், மிருகம், நம்மை வாழவைத்தவர்கள் என இரு நூல்கள் சுவற்றா நகரில் வெற்றிமணியின் அனுசரனையுடன் மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் அறிமுகம் செய்தது.

2013ம் ஆண்டு வெற்றிமணி முனைவர் மனோன்மணி சண்முதாஸ் அவர்களின் பிஞ்சு மனங்களின் தேடல் என்ற நூலை வெற்றமணி 21 வது நூலாக வெளியிட்டு மகிழ்ந்தது. இவ்விழா சுவற்றா நகரில் இடம் பெற்றது.



பேராசிரியர் சண்முதாஸ் அவர்களின் பவளவிழா 29.03.2015



நாத சங்கமம் பவளவிழா 03.10.2005

சுவற்றா நகரில் இடம்பெற்ற அனைத்து விழாக்களுக்கும் ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன் மற்றும் ஜெகன்மோகன் ஆகியோரது அபாரமான ஆதரவு கிடைத்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 2013ம் ஆண்டு வெற்றிமணி விழா டோட்மூண்ட் நகரில் நடைபெற்றது. தென்னிந்திய திரைப்பட பாடகி மாதங்கி மற்றும் பல்ராம்,ரோகினி சதீஸ் இவர்களுடன் லண்டன் ரி.பி.பி. இசைக்குழுவின் பாடல்களும் சிறப்பித்தன.

29.03.2015 ஞாயிற்றுக்கிழமை பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களின் பவளவிழா இடம்பெற்றது. அன்று பவள விழா நாயகனின் வரலாறு பாடலாக சிவகுமாரனால் எழுதப்பட்டு சஞ்சே சிவா அவர்களால் இசையமைக்கப்பட்டு திரையிடப் பட்டது. வெற்றிமணி தயாரிப்பான என்னவளும் சீதையே படம் அங்கு திரையிடப்பட்டு பலரது பாராட்டையும் பெற்றது.அன்ரன் அவர்களது பழைய நாணயங்கள், புத்தகங்கள் காட்சிக்கு ஆவணப்படுத்தப்பட்டு இருந்தது.

22.08.2015 வெற்றிமணி விழா டோட்மூண்ட் நகரில் டாக்டர் உமேஷ்வரன் அருணகிரிநாதன் தலைமையில் இடம்பெற்றது. கலைஞர் C.J.Germany கலந்து சிறப்பித்தார். இவர்கள் இருவருக்கும் இதுவே யேர்மனியில் முதல் மேடை என அவர்கள் குறிப்பிட்டு மகிழ்ந்தார்கள். லண்டன் ரி.பி.பி. குழுவினரில் பாடலும் குறும் படமும் அரங்கை கலகலப் பாக்கியது.

16.06.2018 ம் ஆண்டு வெற்றிமணி வெள்ளிவிழா ஆரம்ப விழா குக்குள்கோவன் நகரில் நடைபெற்றது. (1994ம் ஆண்டு யேர்மனியில் ஆரம்பமான வெற்றிமணிக்கு 2018 இல் வெள்ளிவிழா தடம்பதிக்கும் ஆண்டு) 1994 இல் பதிவைத்த வெற்றிமணி 2018 நறுமணம் வீசும் பூக்களுடன் ஆரம்பவிழா ஆரம்பமானது. இவ்விழாவிற்கு ஆசியா சமுத்திரம் திரு இராசையா ரகுநாதன்,அன்பழகன் ஆகியோர் பெரும் அனுசரணையாளர்களாக இருந்து சிறப்புச் செய்தனர்.

12.05.2019 இல் வெற்றிமணி ஸ்தாபகர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் நூற்றாண்டு விழா சுவற்றா நகரில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் அவரது ஆத்மா போற்றும் வகையில் சிறுவர் பேச்சும் கலை நிகழ்வும் இரவு உணவும் விருந்தாக படைக்கபட்டது. அன்று சிவத்தமிழ் சஞ்சிகையின் 15 வது அண்டு மலரும் வெளியீடு செய்யப்பட்டது. முதலாவது சிவத்தமிழின் உதவி ஆசிரியராக இருந்து சிறப்புச் செய்தவர் கலாநிதி வானதி தேசிங்குராஜா அவர்கள். மலர் திரு. தேசிங்குராஜா அவர்களால் அன்றையதினம் வெளியிட்டு வைக்கப்பட்டது. படைப்பாளிகள் பிறர் இன்புற்று வாழ தம் வாழ்நாளின் பெரும் மணித்துளிகளை சமூகத்திற்கு அர்பணிக்கின்றனர். இதனை நான் நேரடியாகக் கண்டு உள்ளேன். வெற்றிமணி வளரும் கலைஞர்களை ஊக்கு விக்கும் விதத்தில் வெற்றிமணி வளர்கலை விருதுகளை வழங்கி உற்சாகப்படுத்தி கௌரவித்தும் வருவதை நான் நேரில் பார்க்கும் பேறு பெற்றவன்.

15.09.2019 வெற்றிமணி வெள்ளிவிழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் ஆண்டவன் கிருபையும் கிடைத்தது ஒரு வரமாக கருதுகிறேன். பி.குறிப்பு: நான் அறிவிப்பாளனாக கலந்து கொண்ட விழாக்களை மட்டுமே தொகுத்துள்ளேன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அதே சமயம் என்னுடன் ஒவ்வொரு காலகட்டத்திலும் விழாக்களில் இணைந்த தொகுப்பாளர்கள் அனைவரையும் மகிழ்வுடன் நினைவுகூருகின்றேன்.



மரம் மாந்தர் மிருகம் நூல் அறிமுகவிழா 28.10.2012



வெற்றிமணி ஸ்தாபகர் மு.க.சுப்பிரமணியம்
நூற்றாண்டு விழா 14.05.2019



வளர்கலை விருது - காத்தனா தனபாலசிங்கம்
மிருதங்க அரங்கேற்றம் 02.09.2017




# யாழ்ப்பாணத்துக் கிணற்றுப் பண்பாடு

நீர் எங்கள் வாழ்வுக்கு இன்றியமையாதது. ஓர் அரசு தன்னுடைய குடிமக்களுக்குத் தூய்மையான குடிநீர் வழங்கும் பெரிய பொறுப்பினை உடையது. ஆறு, ஏரி, குளம், கிணறு ஆகியன குடிநீர் வழங்குவன. இலங்கையிலே சிங்கள மக்கள் வாழும் இடங்களிலே ஆறுகள் உண்டு. அவர்களுடைய ஆற்றுப் பயன்பாடு “ஆற்றுப் பண்பாடு“ ஒன்றினை உருவாக்கியுள்ளது. ஆனால், யாழ்ப்பாணம் ஆறில்லா இடம். கிணறுகள் பல நீர் வழங்கும் நிலைகளாயுள்ளன. இதனால் இங்கே ஒரு கிணற்றுப் பண்பாடு உருவாகியுள்ளது.

யாழ்ப்பாணம் பண்டைக் காலத்திலிருந்தே வரண்ட இடமாக இருந்துள்ளதாக செவி வழிக் கதைகளாலும் சில இலக்கியச் சான்றுகளாலும் அறிகிறோம். யாழ்ப்பாடி என்ற ஒருவன் யாழ் வாசித்து மணற்றிடர் எனப்படும் இப்பகுதியினைப் பரிசாகப் பெற்றான் என்று ஒரு கதை கூறுகின்றது. மலை எதுவும் இல்லாத இந்நிலத்திலே ஆறு ஊற்றெடுத்தோட வழியில்லை. நல்ல நீரினை தேக்கி வைத்தே யாழ்ப்பாண மக்கள் பயன்பெற வேண்டியவராயுள்ளனர்.

இயற்கை அன்னை மக்கள் வாழ்வுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்து கொண்டேயிருக்கிறாள். உலகளாவிய வகையில் இந்த உண்மையினை நாம் உணரக்கூடியதாயுள்ளது. இவ்விடத்தில் யாழ்ப்பாணத்துப் பூப்பௌதிக அடிப்படையில் நிலத்தின் கீழ் உள்ள பாறைகள் பற்றி நாம் விளக்கமாக அறியும்பொழுது மணற்றிடருக்கு இயற்கை அன்னை குடிநீர் வழங்கச் செய்துள்ள ஏற்பாட்டினை உணர்ந்து மகிழலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ்ப் பகுதிகளில் சுண்ணக் கற்பாறைகள் காணப்படுகின்றன. இவை மயோசீன் காலப் பாறைகள் எனப் புவியியலாளர் கூறுகின்றனர். யாழ்ப்பாணச் சுண்ணக் கற்பாறைகள் நன்கு உருவாக்கம் பெற்ற அடையற் பாறைகளாக உள்ளன. இப்பாறைகள் ஊடாகவே தரைக்கீழ் நீர் மேலே எழுகின்றது. இதன் காரணமாக யாழ்ப்பாணம் கிணறுகள் நிறைந்த நாடாக அமைந்துள்ளது. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் கடல்வழி பயணித்தவர்கள் இவ்வுண்மையை உணர்ந்துள்ளனர். அவர்களுள் ஒருவர் யாழ்ப்பாணக் கிணறுகள் பற்றித் தன்னுடைய நூலிலே குறிப்பிட்டுள்ளார்.

இன்று ஒவ்வொரு வீட்டிலும் கிணறு அமைக்கும் வழக்கம் உண்டு. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்னர் ஊர்கள் தோறும் பொதுக்கிணறுகளே அமைக்கப்பட்டன. பொதுக்கிணறு ஆண் பெண், இளையோர் முதியோர் என்ற வேறுபாடின்றி எல்லோரும் வந்து நீர் பெறவும், குளிக்கவும், உடை தோய்க்கவும் பயன்பட்டது. பலர் வந்து ஒரு கிணற்றினைப் பயன்படுத்தும்போது அங்கு செய்திப் பரிமாற்றம் நடைபெற்றது. நகையாடி மகிழ்ந்தனர். சில வேளைகளில் சண்டைகளும் கூட நடைபெற்றன.

தற்கொலை செய்யவும், கொலைசெய்து பிணத்தைத் தூக்கிப் போடவும் கிணறுகள் பயன்பட்டன. காதலர் சந்திக்கும் இடமாகவும் அமைந்தது.



**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

கிணற்று நீர் குளிர்காலத்திலே சூடாகவும், சூடானகாலத்திலே குளிராகவும் இருப்பதால் இந்நீரை எந்நேரமும் பயன்படுத்தக் கூடியதாயுள்ளது.

எம்முடைய நீர்ப்பயன்பாடு பல சுவையான தன்மைகளை உடையது. சில கிரியைகளுக்கும் கொண்டாட்டங்களுக்கும் புதுநீர் கொள்வது வழக்கம். தைப் பொங்கல் அன்று காலையிலே பொங்குவதற்குப் புது நீர் கொண்டுவரும் வழக்கம் உண்டு. இத்தகைய புதுநீர் கிணற்றிலேயே பெறப்பட்டது. இது நீர் வழிபாட்டின் எச்சமாக அமைகின்றது.

நீர் வழிபாடு தமிழர்களிடையே பண்டைக்காலத்திலிருந்து வந்தது. அவ்வழிபாடு மழை நீர், ஆற்று நீர், கடல் நீர் ஆகியவற்றின் தொடர்புடையதாகவே அமைந்தது. கிணற்று நீர் வழிபாடு தொடர்புடையதாக இருந்தமைக்குச் சில சான்றுகள் காட்டலாம்.
கிணறு தோண்டித் தண்ணீர் ஊற்றெடுத்தவுடன் கிணறு வெட்டியவர்கள் அக்கிணற்றுக்கருகே பொங்கலிட்டு மடை பரப்புவர். இது இன்றும் நிகழ்ந்து வருகிறது.

யாழ்ப்பாணச் சுண்ணக்கற் பாறை காரணமாக சில இடங்களில் வற்றும் கிணறுகளும் சில இடங்களில் வற்றாக் கிணறுகளும் அமைந்துள்ளன. கிணறு வெட்டுபவர்கள் சிலவேளைகளில் மிக ஆழமாக வெட்ட வேண்டிவரும். எப்பொழுது ஊற்றுக்கண் திறந்து நீர்வரும் எனச் சிலவேளை பல நாட்கள் அவர்கள் வருத்தத்துடன் வெட்டுவர்.

ஆயக்கடவைப் பிள்ளையாரை ஊற்றுக் கண்ணைத் திறந்து வைக்கும்படி பிரம்மஸ்ரீ க. கணேசையர்: “ஆட்டாதே எங்கள் அரனார் திருமகனே, கோட்டாலே குத்திக் கூவத்தைக் காட்டிடுவாய்” என்று பாடுகிறார்.

கிணறு வெட்டுவதன் முன்னம் நிலையம் எடுக்கும் வழக்கம் உண்டு. நல்ல தண்ணீர் மேல் நிலையில் எங்கே தரைக் கீழ் இருக்கின்றதெனச் சில சிறிய பரிசோதனைகள் ஊடாக குறித்துக் காட்டுபவர்கள் இருக்கிறார்கள்.

தம்டைய அருட்சிறப்பாலே இத்தகைய நிலையங்களை இனங்கண்டு கூறும் வழக்கம் யாழ்ப்பாணத்திலே இருந்து வந்துள்ளது. அளவெட்டி கலாநிதி அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் இக்கலையிலே வல்லவர்.

எல்லோரும் வந்து பொதுக் கிணறுகளைப் பயன்படுத்துவர் என்று முன்னர் குறிப்பிட்டேன். இவ்வழக்கம் எல்லாக் கிணறுகளிலும் எல்லாக் காலங்களிலும் நடை பெற்றதெனக் கூறடியாது.

பொதுக் கிணறுகளில் உயர்ந்த சாதியினர் மட்டுமே தண்ணீர் அள்ள முடியும். தாழ்ந்த சாதியினர் அள்ள முடியாது. உயர் சாதியினரே தண்ணீரை அள்ளி அவர்களுடைய குடங்களிலே ஊற்றலாம். கரவெட்டிப் பகுதியில் தாழ்ந்த சாதியினர் தமக்கென ஒரு கிணற்றினை அமைத்தபொழுது அக்கிணற்றுக்குள் நஞ்சு கொட்டப்பட்ட நிகழ்வும் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்து மிகச் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவரான கே. டானியல் கிணறு தொடர்பான இக்கொடுமைகளையெல்லாம் தன்னுடைய "தண்ணீர்" என்னும் நாவலிலே விரிவாகக் கூறுகிறார்.

கிணற்றடி தொடர்பாக யாழ்ப்பாணத்தவரிடையே சில நம்பிக்கைகள் உண்டு. இரவு நேரத்தில் பெண்கள் தனியாகக் கிணற்றடிக்குச் செல்லக்கூடாது என்று ஒரு நம்பிக்கையுண்டு. பொதுக்கிணறு என்ற காரணத்தால் இரவு நேரத்தில் யார் அங்கு வருகிறார்கள் எனக் கூற முடியாது. எனவே பெண்களை அங்கு இரவில் போகாமல் இருக்க வைப்பதற்கு அங்கு இரவில் பேய் உலாவுவதாக அச்சமடையச் செய்வர்.

யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் நல்ல தண்ணீர் இல்லாத கிணறுகளும் இருக்கின்றன. பெரும்பாலும் கோயில்களை அண்டியுள்ள கிணறுகள் நல்ல தண்ணீருடையனவாக அமைகின்றன. மருதமரம் இருக்குமிடத்தில் நிலத்தின் கீழ் நல்ல தண்ணீர் இருக்குமென மக்கள் நம்புகின்றனர்.



தென்னிந்திய தமிழ் திரைப்படத்தில்
கிராமத்துக் காதல்
என்றால் குடம் வராமல் போகாது.
படம்: கவிக்குயில்

கோயிலை அண்டியுள்ள கிணறு கோயிற் கிணறு என அழைக்கப்படும். யாழ்ப்பாணக் கிணறு பற்றி இன்னும் பல செய்திகள் இருக்கின்றன.

## Cow boy ஐ நினைவூட்டிய படம்



நவாலி - அட்டகிரி வீதி 2014
படம்: வெற்றிமணி (சிவகுமாரன்)

# 1933 இல் யாழ்ப்பாணப் பொதுசன நூலகம்




யாழ்ப்பாணத்திலுள்ள பொதுசன நூலகம் பற்றி மாணவர்கள் அவசியம் அறிய வேண்டும். என்ற கருத்தோடு வெற்றிமணி 15.09.1968 ஆண்டு வெளியிட்ட கட்டுரை ஒன்றினை இங்கு மறு பிரசுரம் செய்கின்றோம்.

1933 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இலவசத் தமிழ் நூலகத்தை திரு.க.மு.செல்லப்பா உருவாக்கினார். அவரது அசையாத நம்பிக்கையும், உழைப்பையுங் கண்ட மாவட்ட நீதிபதியாக இருந்த திரு. சி.குமாரசுவாமி அவர்கள் 1936 ஆம் ஆண்டு நூலக ஆர்வம் கொண்ட பல அன்பர்களை அழைத்து நூலகம் ஒன்றை நிறுவவேண்டும் என ஆலோசனை கூறினார். இதன் பயனாக ஆஸ்பத்திரி வீதியில் மின்சார நிலையத்திற்கு எதிரே உள்ள வாடகை அறையில் இலவச நூலகம் உருவானது. கௌரவ நூலகர், பொறுப்பாளர் ஆகிய இரு உத்தியோகத்தரையும், 844 நூல்களையும், 30 சஞ்சிகைகளையும் கொண்டதாக அமைந்தது. தினசரி ஏறக்குறைய 50 பேர் நூலகத்தைப் பயன்படுத்தி வந்தனர்.

1935 ஆம் ஆண்டு யாழ் நகரசபைத் தலைவராக இருந்த திரு. ஆர். ஆர். நல்லையா அவர்கள் இந்நூலகத்தை நகரசபை பொறுப்பேற்று நடத்த ஒழுங்கு செய்தார். நூலகம் பிரதான வீதிக்கு மாற்றப்பட்டது. 1936 ஆம் ஆண்டு நகரசபை மண்டபம் அமைக்கப்பட்டதும் மண்டபத்திற்கு எதிரேயுள்ள கட்டிடத்தில் நூலகம் செயற்பட்டு வந்தது. நிரந்தர நூலகர் ஒருவரும் நியமிக்கப்பட்டார். 1952 ஆம் ஆண்டு தொடக்கம் நூலகம் வளரத் தொடங்கியது. மாநகரசபை முதல்வர் திரு.சாம்.ஏ.சபாபதி வணக்கத்துக் குரிய ரி. எம். எவ். லோங் மாநகரசபைப் பிதாக்களாக இருந்த திரு. ரி. எஸ். துரைராசா, திரு. அல்பிரட் துரை யப்பா, இணைக்காரியதரிசியாக இருந்த திரு. ரி. முருகேசம் பிள்ளை, திரு. அ. விசுவநாதன் ஆகியோர் பிரதானமாக நூலகத்தின் வளர்ச்சியில் பங்கு கொண்டவர்களாவர்.

பொதுமக்களிடமும், வெளிநாட்டு நிறுவனங்களிடமும் உதவி பெறப்பட்டது. 1953 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்ட நிதிகள் யாவும் யாழ்ப்பாண மத்திய நூல்நிலைய நிதி என்ற பெயரின் கீழ் கொண்டுவரப்பட்டது. திராவிடக் கட்டிடக்கலையின் விற்பன்னரான திரு. வி. எம். நரசிம்மர் இன்றை நூலக கட்டிடத்தின் மாதிரிப் படத்தை வரைந் தளித்தார். நூலகவியல் வல்லுனரான திரு. இரங்கநாதனின் நூலக உள்ளமைப்புச் சம்பந்தமான ஆலோசனைகளும் பெறப்பட்டன.

ஆசிய நிறுவனம் 104, 115 ரூபாவையும், இந்தியத் தூதுவர் 10,000 ரூபாவையும் அன்பளித்தனர். 1959 ஆம் ஆண்டு நூலகம் இப்பொழுதுள்ள கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. அனுபவம் மிக்க நூலகர் ஒருவருடன் பயிற்சி பெற்ற பட்டதாரி ஒருவர் 1964 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டதால் நூலக நடைமுறைகளில் சில முன்னேற்றமான தன்மைகள் புகுத்தப்பட்டன. சிறுவர் நூலகம் தோன்றியது. அமெரிக்க நூலகம் அன்பளிக்கப்பட்டது.

உடனுதவவும் பகுதி தனியாக அமைக்கப்பட்டது. புத்தக விநியோக முறையில் நவீன முறைக் கையாளப்பட்டன. சுமார் 4000க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் புத்தக இரவல் பெறும் பகுதியை உபயோகிக்கின்றனர். சராசரி 30 க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் மாதம் மாதம் இப்பகுதியில் அங்கத்துவம் பெறுகின்றனர். நூலகம் பின்வரும் ஐந்து பெரும்பகுதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

வாசிகசாலைப் பகுதி 2. புத்தக விநியோகப்பகுதி 3. உடன் உதவும் பகுதி 4. சிறுவர் பகுதி 5. அமெரிக்கப் பகுதி

வாசிகசாலை: எல்லா மக்களும் எவ்வித கட்டணமுமின்றி காலை 8 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை ஞாயிற்றுக்கிழமை அரசாங்க விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் உபயோகிக் கலாம்.

புத்தக விநியோகப்பகுதி யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் 5 ரூபா சீவிய சந்தாவாகக் கட்டி அங்கத்துவம் பெறலாம். எல்லைக்கு வெளியே உள்ளவர்கள் 5 ரூபாவுடன் மாதப் பணமாகிய ஒரு வருடப் பணம் 12 ரூபாவையும் ஒரு முறையில் கட்டி அங்கத்தவராகலாம். புத்தகங்கள் இரவல் பெற்று வாசிக்க முடியும். புத்தக விநியோகம் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரையும்.

உடனுதவும் பகுதி: இங்குள்ள புத்தகங்கள் யாவும் அப் பகுதியிலேயே உபயோகிக்க வேண்டும். அங்கத்துவப் பணம் கட்ட வேண்டியதில்லை. இப்பகுதி காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரையும் பிற்பகல் 1 மணியிலிருந்து இரவு 8 மணி வரையும் திறக்கப்படும்.

சிறுவர் பகுதி: மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் 5 வயதுக்கும் 14 வயதுக்கும் உட்பட்ட பிள்ளைகள் ரூபா 3 சேர்ப்புப் பணமாகக் கட்டி அங்கத்துவம் பெறலாம். ஞாயிற்றுக் கிழமை, அரசாங்க விடுமுறை தினங்களைத் தவிர்ந்த ஏனைய நாட்களில் மாலை 2 மணி முதல் 6 மணி வரை திறந்திருக்கும். போயாவுக்கு முந்திய நாளும் போயாவிலும் காலை 1030 மணி முதல் 12 மணி வரையும், பின்பு பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரையும் திறந்திருக்கும். ஒரு சிறுவருக்கு ஒரு புத்தகம் மாத்திரம் 14 நாட்களுக்குப் பாவிக்கக் கொடுக்கப்படும்.

அமெரிக்கப்பகுதி: அங்கத்தவராக உள்ளவர்கள் இப்பகுதியிலும் இரண்டு புத்தகங்கள் பெறலாம். இப்பகுதி காலை 10-30 மணி முதல் மாலை 6 மணி வரையும் திறந்திருக்கும். சனிக்கிழமை களில் பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரையும் திறக்கப்படும். ஞாயிற்றுக்கிழமையும், அரசாங்க விடுமுறை தினங்களிலும் பூட்டப்பட்டிருக்கும். 15,000 க்கு மேற்பட்ட நூல்கள் மாதத்தில் பாவனைக்கு எடுக்கப்படுகின்றன. உள்ள புத்தகத் தொகை 35,000. வருடா வருடம் மாநகரசபை புத்தகங்களுக்கும் சஞ்சிகை களுக்குமாக 20,000 ரூபா செலவிடுகின்றது.

தென்கிழக்காசியாவிலே தலைசிறந்த நூலகம் என இது மிளிர வேண்டும் என்பது பலரின் விருப்பமாகும். நன்றி வெற்றிமணி 15.09.1968.

இந்த விருப்புக்கு நெருப்பு வைத்த சம்பவம் இலங்கையில் நடந்த கொடுமைகளின் உச்சம் என்றாகிவிட்டது இன்று.




# கைமணிக்கூடு

ச.லலீசன், யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணம் ரதி வாச் யாருக்கு ஞாபகம் உண்டு?

## உங்கள் முதல் மணிக்கூடு அங்கு வாங்கியதாக இருக்கலாம்.

மாற்றம் என்ற சொல்லைத் தவிர மாறாதது எதுவுமில்லை என்பதை இன்றும் கண்டு கொண்டேன். யாழ்ப்பாணத்தில் உச்ச நிலையில் இருந்த மணிக்கூட்டு வியாபாரம் அதை மையப்படுத்தியிருந்த மணிக்கூடு திருத்தும் வியாபாரம் என்பன இன்று உறக்கத்தை நோக்கிச் சென்ற வண்ணமுள்ளன.



திரு. ஆனந்தசிவம்

எனது தேவைக்காக யாழ். முனீஸ்வரன் வீதியில் உள்ள சிவாஸ் மணிக்கூட்டுக் கடைக்குச் சென்றபோதே என்னுள் இந்த உணர்வு ஏற்பட்டது. முன்பெல்லாம் நான்கைந்து பணியாளருடன் படு பிஸியாக இயங்கும் ஈச்சமோட்டை யைச் சேர்ந்த திரு.ஆனந்தசிவம் இப்போ தனியாளாக இத் தொழிலைப் பார்த்துக் கொள்கின்றார். கைத்தொலை பேசியில் மணிக்கூடு வந்தமையும் இன்று மணிக்கூடு கட்டும் பாஷன் வழக்கொழிந்து போகின்றமையுமே தன்னுடைய தொழில் வீழ்ச்சிக்குக் காரணம் என்கின்றார்.

பத்தாண்டுகளுக்கு முன்னர் கூட நாளொன்றுக்கு நாற்பது பேராவது பற்றரி மாற்ற வருவார்களாம். இப்போது பத்துப் பேர் வருவதே அருமை என்கிறார். அதைவிடக் கொடுமை திருத்தக் கொடுத்த மணிக்கூடுகளை மீளப் பெறாமல் விடுதல் என்கிறார்.

1960,1970களில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்த ரதி வாச் வேக்ஸ்தான் நான் அறிந்த வரையில் யாழ்ப் பாணத்தில் கொடி கட்டிப் பறந்த மணிக்கூட்டுக் கடை. திரு. ஆனந்த சிவம் 1964 இல் நாளொன்றுக்கு ஒரு ரூபா சம்பளத்தில் அங்கு வேலை செய்தவர். அப்போது அவருடன் 68 பணியாளர்கள் வேலை செய்தனராம். இதைவிட ஆஸ்பத்திரி வீதியில் இருந்த சில்வா வாச் வேக்சிலும் இருபதுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் வேலை செய்தனர்.

தற்போது மணிக்கூடு சேவிஸ் செய்ய நூற்றிருபது ரூபா அறவிடப்படுகின்றது. ஆனால் நானூறு ரூபாவுக்கு மணிக்கூடு வாங்க முடிகிறது. இதனால் பழையவற்றை எறிந்து விடுவதிலேயே அநேகர் அக்கறை காட்டுகின்றனர்.



ஒரு காலத்தில் தரமான மணிக்கூடுகளுக்குப் பெயர் பெற்ற அல்டி எலக் ரோனிக்ஸில் இன்று மணிக்கூட்டு வியாபாரம் படுத்துவிட்டது. அங்கு CCTV கமரா வியாபாரமே சூடு பிடித்திருக்கிறது.

மணிக்கூட்டுத் தொழிலின் சரிவு நிலையைக் கண்டு வேறு மார்க்கத்தைத் தேட ஆனந்தசிவம் போன்றவர்கள் முன்வர வில்லை. இது சற்று வேதனைக் குரியதே.

இளம் தொழிலாளர்கள் போன் திருத்தத் தொடங்கிவிட்டனர். காலத்திற்கு ஏற்பத் தம்மை மாற்றிக் கொண்டு விட்டனர். இருந்தாலும் தனது தொழிலால் தான் தன்னிறைவடைவதாக ஆனந்த சிவம் திருப்திப்பட்டுக் கொள்கிறார். இது தானே வாழ்க்கையில் தேவையானது.


### தமிழ் உறவுகளை இணைக்கும் தேச மணி

வெற்றிமணி நம்மவரின் அறிவுமணி
இதயங்களின் அன்பு மணி
தமிழ் உறவுகளை இணைக்கும்
தேச மணி



ச.லலீசன்
( பிரதி அதிபர் கோப்பாய்
ஆசிரியர் கலாசாலை )

# நீங்கள் யாருக்காக உயிர் வாழ்கிறீர்கள் !



**ஏழு வர்ணங்களில் சில உங்களுடையதாக இருக்கலாம்.**

அன்பு வேண்டும் என்று எவரிடமும் கெஞ்சாதீர்கள்.
அது உண்மையாக இருந்தால் நீங்கள் கையேந்தவேண்டிய அவசியமில்லை...
எவரையும் நினைத்து அழுதுகொண்டே இருக்காதீர்கள் கொஞ்சம் புன்னகைக்கத் தொடங்குங்கள்.
தேவையில்லாத ஞாபகங்கள் தானாகவே அழிந்துவிடும்.
சாய்ந்து கொள்வதற்கு தோள்கள் இல்லையே என்று கவலைப்படாதீர்கள். தலையணைகள் உங்கள் நிம்மதியை ஒருபோதும் பறிக்காது.
தனிமையோடு வாழ்ந்துகொண்டிருப்பதால் மனசு உடைந்து போகாதீர்கள் உங்களைப்பற்றி அது எவருக்கும் எதையும் சொல்லிச் சிரிக்கவே சிரிக்காது.
வலிகளை தாங்க முடியவில்லையே என்று வருத்தப் படாதீர்கள். தன்னம்பிக்கை உங்களை தளரவும்விடாது அது உங்கள் விழிகளை நனைத்தும் விடாது.
சின்னசின்ன சந்தோஷங்களுக்காக எந்தத்தவறையும் செய்து விடாதீர்கள். வாழ்க்கையில் சந்தோஷத்தைவிட நிம்மதியே அவசியமானது.

02

நாம் அனைவரும் நமக்கு ஏற்பட்டவலியை இன்னொருவருடன் பகிர்ந்து கொள்ளும் நேரம் நிச்சயமாக ஒரு நாள் உருவாகும்.
அதனையாராலும் மறுத்துவிடமுடியாது.
எல்லாவற்றையும் கண்ணீரால் சலவை செய்துவிட்டு கடந்து போகவும்முடியாது.
துயரங்கள் பொதுவானவைதான். ஒருபழைய சோகப்பாடலை திரும்பகேட்பது போல் இருக்கும். ஆனால் சூழ்நிலை வேறுவிதமாக இசை அமைத்துவிடும்.

எல்லா நம்பிக்கைகளும் நம்மைவிட்டுப் போகும்போது நாம் ரகசியங்களை பாதுகாக்கவேண்டிய அவசியத்தை இழந்து விடுவோம்.
இந்ததருணத்தை கடக்கும் ஒவ்வொரு இருதயமும் ஆறதலா கவே இயங்கிக்கொண்டிருக்கும். இப்பொழுது ஒருபுது உறவின் தொடர்பினை ஏற்றுக்கொள்வோம். அவர்களிடம் எல்லாக் குப்பைகளையும் கொட்டுவோம்.

அந்த அரவணைப்புக்கு அடிமை ஆகிவிடுவோம் மொத்த துன்பத்திலும் இருந்து மீண்டுவிடலாம் என்று கனவு காண் போம். இதுதான் நாம்நன்றாக புரிந்துசிந்தித்து வாழவேண்டிய மிகமுக்கியமான சந்தர்ப்பம். உங்கள் உண்மையான அன்பு பொய்யாகிவிட்டது என்பதால் இன்னொருவரை நாடாதீர்கள்!
ஏனென்றால் இந்தகுழப்பமான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பொய்யான நேசத்தையே உங்களுக்கு இலகுவாக உண்மை என்று நம்பவைத்துவிடுவார்கள்.
எல்லோரிடமும் கவனமாக இருங்கள்

03

கடந்துசெல்லும் ஒருநாள்
ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும்
மிகமுக்கியமானது.
இழந்தவினாடியை யாராலும்
திரும்பசம்பாதித்துவிடவும் முடியாது.
அதை பயனற்றவகையில்
செலவு செய்துவிடாதீர்கள்.



**நெடுந்தீவு முகிலன்**

நீங்கள் சந்திப்பது புதுமனிதர்கள் எனினும் அவர்களிடம் புன்னகைத்துவிடுங்கள். அது உங்களுக்கு ஒரு போதும் நஷ்டத்தை ஏற்படுத்தாது. எதிரில் அதை உள்வாங்கு பவருக்கு கவலைகள் இருந்தாலும்கூட அவருடைய மனசில் உங்களுடைய சிரிப்பு புத்துணர்ச்சியை ஏற்படுத்திவிடும்.

நீங்கள் எதற்கு அதிகநேரம் செலவு செய்கிறீர்களோ அதுவே உங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியாக அமையவேண்டும். இல்லையென்றால் நீங்கள் நாட்களை பாழாக்கிக்கொண்டு இருக்கிறீர்கள்.

வலிகளையும் சோகத்தையும் வேதனைகளையும் நினைத்து பார்ப்பதற்கென்று நாளொன்றுக்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிவிடாதீர்கள்.
அது உங்கள் வாழ்நாட்களில் பல பொழுதுகளை உங்களுக்கு தெரியாமலே விழுங்கிவிடும். உங்களைவிட்டு ஏதோ ஒன்று தொலைந்து போகும் போது நீங்கள் தேடுவது தவறில்லை... ஆனால் அது உங்களுக்கு கிடைக்கவே கிடைக்காது என்று உங்களுக்கு தெரிந்தபிறகும்
நீங்கள் அதற்காகவே காத்திருப்பது அல்லது அதை தேடி அலைந்து கொண்டிருப்பது நேரடியாகவே நீங்கள் நாட்களை வீணடிக்கும் செயல்!

மனிதர்களிடத்தில் மட்டுமல்ல எல்லா உயிர்களிடத்திலும் கருணையுடன் இருங்கள். இதயம் முழுதும் அன்பை வைத்திருங்கள்.
எந்த ஒருகணத்திலும் யாரையும் வஞ்சித்துவிடாதீர்கள். ஏழைக்கு பணக்காரனுக்கு என்று ஒவ்வொரு பொழுது விடிவதில்லை...

கடக்கும் தருணங்கள் திரும்ப வரவே வராது. இழக்கம் ஒவ்வொரு நொடியிலும் பிறவியின்பயனை நினைத்து வாழுங்கள்!



04

உங்கள் வாழ்க்கையில் மிகதுயரமான தருணங்கள் வரும்போது நீங்கள் தவறவிட்ட நேசங்கள் ஞாபகத்திற்கு வரும்.

ஆனால்அந்தஅழகான உணர்வுகளை உங்களால் மீட்டிப் பார்க்க மட்டும்தான் முடியுமே தவிர கைகோர்த்து விட முடியாது.

நீங்கள் உங்கள் எதிர்காலத்திற்காகவும் உங்கள் முன்னேற்றத்திற்காகவும் முடிவெடுத்து ஏதோ ஒருபயணத்தில் சென்றுவிட்டிருப்பீர்கள்.

உங்கள் பாதை சரியாக இல்லை என்பதால் இலக்கை அடைய முடியவில்லை என்பதால் திரும்ப தொடக்க இடத்திற்கு போவதற்கு முயற்சிக்காதீர்கள்.

அங்கே யாரும் உங்களுக்காக காத்திருக்க மாட்டார்கள். காத்திருக்கவேண்டிய அவசியமும் இல்லை நீங்கள் அவர் களை வேண்டாம் என்றுதூக்கி எறிந்துவிட்டு போனபிறகும் ஏன் உங்களை அவர்கள் நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அவர்கள் ஒரு புதுவாழ்க்கைக்காக தங்களை அர்ப்பணித்து இருப்பார்கள். இப்போது திரும்பவும் நீங்கள் உங்கள் சுயநலத்திற்காக அவர்களை நாடும்போது அவர்கள் ஏதோ ஒரு வாழ்க்கையில் சந்தோஷமாக இருக்கலாம். உங்கள் பழைய அன்பை புதுப்பிப்பதற்காக தயவு செய்து அவர்களின் இப்போதைய நிம்மதியை பறித்துவிடாதீர்கள்.

05

பிடிக்கவில்லை என்றால் உண்மையாய் விலகிவிடுங்கள் சகித்துக் கொண்டு பொய்யான அன்பை வெளிப்படுத் தாதீர்கள். யார் கருத்துக்களையும் கேட்டு செயற்பட வேண்டிய எந்த அவசியமும் இல்லை...

தன் மனசாட்சிக்கு பயப்படுபவன்தான் இந்த உலகத்தி லேயே முதல் நியாயமானவன். தவறு என்று தெரிந்து விட்டால் முகத்துக்கு நேராக பேசப் பழகுங்கள்.

ஒரு தடவை அதை கண்டுகொள்ளாமல்விட்டால் அதுவே உங்களுக்குப் பழகிவிடும். எல்லா சமயத்திலும் மௌனமாக இருந்துவிடக்கூடாது. காலம் கடந்த விளக்கங்களால் எந்தப் பயனுமில்லை.. பேச வேண்டிய இடத்தில் உங்கள் கருத் துக்கள் ஆணி அடிப்பதுபோல் இருக்கவேண்டும்.

உங்களுக்கு சம்பந்தமில்லாத சம்பவங்களுக்கு விளக்கம் கொடுக்கவே வேண்டாம். ஏனென்றால் நாளடைவில் அந்த கருத்துக்கள் உண்மையாக மாற்றப்படக்கூடும்.

நீங்கள் நீங்களாக இருக்க வேண்டுமென்றால் யாரையும் நம்பாமல் இருந்தாலேபோதும்... நீங்கள் ஒருவருக்காகமாற ஆரம்பித்தால் ஒவ்வொருவருக்காகவும் மாறவேண்டிய நிலை ஏற்படும். இந்தமாறுதல்கள் தொடர்ந்து கொண்டே இருந்தால் இந்த உலகத்தில் நீங்கள் இருந்ததற்கான ஆதாரம் இல்லாமல் போய்விடும் ஆகவே நீங்கள் நீங்களாகவே இருங்கள்!

06

உங்களை அழாமல் பார்த்துக் கொள்வதற்கு உறவை தேடுவீர்கள். ஆனால் உங்கள் கண்ணீரைதுடைத்து கொள்வதற்குகூட அவர்கள் உதவுவதில்லை..

வாழ்க்கையில் அன்பை கொடுத்து ஏமாந்தவர்களைவிட அன்புகிடைக்கிறது என்று நம்பி ஏமாந்தவர்கள்தான் மிக மிகஅதிக மானவர்கள்.

உங்களுக்காக வாழ்க்கையில் எதையும் இழப்பேன் என்று சொன்னவர்களை ஒருகணம் நினைத்துப் பாருங்கள். உங்கள் இதயத்தில் வலி அதிகமான காயத்தை அவர்கள்தான் ஏற்படுத்தி இருப்பார்கள்.

பொறுமை இல்லாதவர்கள்தான் கோபத்தில் முடிவெடுப் பவர்கள்.கோபத்தில் முடிவு எடுப்பவர்களுக்கு விட்டுகொடுப் பின் தன்மைபுரியாது. இந்த சந்தர்ப்பத்தில் உங்கள் மௌனம் எல்லா தவறுகளையும்

மூட்டைகட்டி உங்கள் தோளில் ஏற்றிவிடும்.ஒருகாலத்தில் யாருக்காக மெழுகாக உருகி உருகி உங்களை இழந்தீர்களோ..?

அவர்கள் உங்களை நினைத்துகூடப்பார்க்காமல் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். இந்த உலகத்தில் யாரோடு சந்தோஷ மாக நிம்மதியாக இருப்பதாக நினைக்கிறீர்களோ..?

அந்த நபர்கள் மூலமாக நிச்சயமாக நிறைய அழுவீர்கள். ஏனென்றால் உண்மையான அன்புக்கு இங்கே கண்ணீர் துளிகளும் காத்திருப்புகளும்தான் பரிசாககிடைத்துக் கொண்டிருக்கிறது. தேவைகளும் ஆசைகளும் நிறைவேறும் வரைதான் இந்த உலகத்தில் உறவுகள்.

07

புரிதல் என்றால் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை...

நன்றாகப் புரியக்கூடியவர்கள் இந்த உலகத்தில் இருந்தால் அவர்களை மிகப்பெரிய அறிவாளிகள் என்று நம்புகிறேன்.

ஓராயிரம்ஆண்டுகள் எனக்கு வாழ இங்கே வாய்ப்பு கிடைத்தாலும் ஒருசிலரை என்னால் புரிந்து கொள்ளவே முடியாது. கூட இருப்பவர்களின் மாறுதல்களால் புரிதல் பற்றிய என் உணர்வுகள் உடைந்து துண்டாகிவிட்டது.

அன்பாகபழகியவர்கள் தேவை முடிந்ததும் தொடர்பை துண்டிக்கும் போது அந்த நம்பிக்கையைசுமந்த இதயம் நொறுங்கிவிடுகிறது.

புரிதல் ஒரு மொழியாகஇருந்தால்படித்து பகிர்ந்து இருப்பேன் அதை மௌனம் என்று நினைத்து பல நேரங்களில் அடிமையாகிவிட்டேன்.

எப்படித்தான் இருந்தாலும் மனிதர்களைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை...

தனிமையும் கண்ணீரும் எனக்குநிறையவே புரியவைக்க முயல்கிறது. ஒரு குழந்தையின் அழுகையின் காரணத்தை தாய் உணர்ந்துகொள்வாள். ஆனால் உள்ளுக்குள்ஆளும் ஒவ்வொரு இதயங்களின் வலியையும் யாரறிவார்!

ஆகவே எவருக்கும் எதையும் புரியவைக்க முயற்சிக் காதீர்கள். உங்கள் வாழ்க்கையை நீங்கள் வாழ்வதற்கே இந்த ஆயுள்போதாது.



# பல முதல்களின் முதல்வர் மு.க.சு.சிவகுமாரன்

## அவர்களின் வெற்றிமணிக்கு 25 வயது






சுதந்திரச்சிலை 1981 Ludwigstadt-Germany



வெற்றிமணியின்
முதலாவது ஆண்டு விழா
யேர்மனி 1995

திரு.ச.ஜெகதீஸ்வரன் (OTS) வெற்றிமணி ஆசிரியர்.மற்றும் திருபரன் ,சி.சக்திவேல்.

பல முதல்களின் முதல்வர் மு.க.சு.சிவகுமாரன் அவர்களின் வெற்றிமணிக்கு 25 வயது

பல முதல்களின் முதல்வராகிய வெற்றிமணியின் ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் அவர்களின் வாழ்நாள் சேவை களை இத்தருணத்தில் நினைத்துப் பார்க்கும் நாள்.

செய்யும் தொழிலும் செயலும் திறம்பட வேண்டுமானால், செய்பவர் திறமை திறம்பட இருக்க வேண்டியது அவசியம். கருவி அற்புதமானால், கருத்தா கருவிக்கு ஆற்றிய அர்ப் பணிப்பும் போற்றப்படவேண்டியதும் புரியப்பட வேண்டியது மாகும். படைப்பாளியின் திறமை அறியப்பட்டாலேயே அந்தப் படைப்பின் வெற்றி புரியப்படும் வெற்றிமணியான விபரமும் புரியும்.

வெற்றிமணி பத்திரிகை தாயகத்தில் ஆரம்பித்து 69 வருடங்கள் ஆகின்றன. அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் 1950 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைத்த வெற்றிமணி அவர் மறைவின் பின் நின்று போக அவருடைய மகன் மு.க.சு. சிவகுமாரன் அவர்கள் மீண்டும் தாயகத்தில் வெற்றி மணி மாணவர் காலாண்டு இதழாக இன்றும் வெளியீடு செய்து கொண்டு வருகின்றார். தாயகத்தில் ஏற்பட்ட சில பல சூழ்நிலைகள் காரணமாக தாமதங்கள் அங்கு ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

ஆனால், ஐரோப்பாவில் இவர் புலம்பெயர்ந்து தன்னுடைய வாழ்க்கையைத் தளம் அமைத்த பின் மீண்டும் வெற்றிமணி பத்திரிகையை யேர்மனியில் ஆரம்பித்து இம்மாதம் (ஆனிமாதம் 1994 - ஆனிமாதம் 2019) 25 வருட வெற்றி காண்கின்றார். தற்போது இலண்டன், சுவிஸ், யேர்மனி ஆகிய நாடுகளில் பலரும் தேடும் சிறப்புப் பெற்ற இலவச வண்ணப் பத்திரிகையாக இப்பத்திரிகை வெளிவருகின்றது.

இப்பத்திரிகை எவ்வாறு ஐரோப்பாவில் ஆரம்பிக்கப்பட்டது என்னும் வரலாற்றை இத்தருணத்தில் நாம் நினைத்துப் பார்க்க வேண்டிய அவசியத்தில் இருக்கின்றோம்.

கணனியுகம் பிரபலமடையாத காலத்தில் வெற்றிமணி பத்திரிகைக்கு படைப்புக்கள் ஆசிரியரிடம் கையெழுத்துப் பிரதியாக வந்தடையும். அப்போது அத்தனை கட்டுரை களையும் வாசித்து தமிழில் அச்சடித்து (அக்காலத்தில்எள மாத்திரமே இருந்தது) அக்கட்டுரையை அளவாக வெட்டி வெட்டி ஒட்டி, அவற்றிற்குரிய படங்களுக்குரிய இடத்தை மட்டையில் நீல மையால் கோடு போட்டு நேராக ஒட்டி விளம்பரத்துக்கு சதுரப்பெட்டி போலப் போடுகின்ற வசதிகள் அக்காலத்தில் கணனியில் இல்லாத காரணத்தினால், சதுரம் கீறியே அச்சகத்திற்குக் கொடுக்க வேண்டும். படங்களை வெட்டி ஒட்டிப் பின் கழட்டியே அச்சகத்திற்குக் கொடுக்க வேண்டியது அவசியம்.

**வெற்றிமணியின் கோடைவிடுமுறை இதழ்**

**ஓவியா 1995**

தனியே நம்பரிட்டுக் கொடுக்கப்பட்ட படங்களை அவ்வவ் இடங்களில் அச்சகத்தினர் சேர்ப்பார்கள். இவ்வாறு பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் ஆரம்பத்தில் இரு வருடகாலமாக கறுப்பு வெள்ளை வண்ணத் தில் வெற்றிமணி வெளிவந்தது. பின்னரே வெற்றிமணி வண்ணக்கலவையில் பிரகாசிக்கத் தொடங்கியது. இத்தனை கடினத்தின் மத்தியில் ஆரம்ப காலத்தில் வெளியான வெற்றிமணியை வளர்த் தெடுத்து இன்றைய நவீன காலத்திற்குத் தன்னை இசைவாக்கம் அடைய வைத்து கண்ணையும் கருத்தையும் கவர வைக்கும் வெற்றிமணியாகத் திகழ்வதற்கு வழி செய்த வெற்றிமணியின் ஆசிரியர் கலாநிதி. மு.க.சு.சிவகுமாரன் அவர்களின் சாதனைகளை சற்று சீர்தூக்கிப் பார்ப்போம்.

1 **நுண்கலை பட்டம் B.F.A**

இலங்கையில் முதன் முதலாக நுண்கலையில் கலைமாணி பட்டத்தை (வளகளனிப் பல்கலைக்கழகத்தில் 1979 ஆம் ஆண்டு பெற்ற முதல் மூன்று தமிழர்களில் மு.க.சு. சிவகுமாரன் அவர்களும் உள்ளார். (சிவகுமாரன், கே.கே. ராஜா. பவானி. சண்முகலிங்கம்.)

**2. சுதந்திரச்சிலை**

யேர்மனியில் முதன் முதலாக நாம் ஒன்றும் பணத்திற்காகக் கைநீட்டி யேர்மனியில் தஞ்சம் புகுந்தவர்கள் இல்லை. எம் இனத்தின் சுதந்திரத்தை விரும்பிப் போராடி உயிர் பிழைக்கத் தஞ்சம் புகுந்தவர்களே நாம் என்பதை யேர்மனியர்களுக்குப் புரிய வைப்பதற்காகத் தமிழ் சுதந்திரச் சிலையை Ludwig Stadt என்னும் இடத்தில், தாம் வாழ்ந்த அகதிகள் விடுதியில் அமைத்துக் காட்டி மார்பு தட்டிக் கொண்ட முதல் தமிழன்.



நகரசபை துணைமுதல்வர்
திரு றைன்காட் லிண்டிக் அவர்களுடன்




யோ்மனி Ludwigstadte என்னும் நகரத்தில் அந்த நகரத்துக்குரிய சின்னத்தை சிற்பமாக வடிவமைத்துக் கொடுத்து தமிழருக்குப் பெரும் புகழைச் சம்பாதித்துக் கொடுத்த முதல் தமிழன்.

4.யோ்மனி ஓவிய சிற்பக் கண்காட்சி (Art and Sculputure Exibition )யோ்மனியிலுள்ள னுழசவஅரனெ என்னும் நகரத்தில் 1990 இல் முதன் முதலாக வண்ணக் கலவைகளுடன் சித்திர சிற்பக் கண்காட்சியை நடத்திய முதல் தமிழன்

5.இளையவா் இசையில் வெளிவந்த மெல்லிசை இறுவெட்டு வெளியீடு யோ்மனியிலுள்ள நகரத்தில் 2000 ஆம் ஆண்டு முதன் முதலாக இளைஞனின் (20 வயது நிரம்பிய சஞ்ஜீவன்







Art and Sclputure Exibition in Dortmund 1990

சிவகுமாரன்) இசையமைப்பில் (முறைப்படி சட்டவிதிகளுக்கு அமைந்தது) சிறந்த தொழில்நுட்பத்துடன் தமிழில் மெல்லிசை இறுவெட்டு தயாரித்து வெளியீடு செய்ததுடன், பால்குடி மறந்த கையோடு, கெட்டபையன், பைரவன், மாயவன், சிவமயம் போன்ற 10 க்கும் மேற்பட்ட இசை இறுவெட்டுக்கள் யோ்மனியில் வெளியீடு செய்த முதல் தமிழன்.

6.ஆன்மீக சஞ்சிகை

யோ்மனியில் முதன்முதலாக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவா்கள் பெயா் சூட்டிய சிவத்தமிழ் என்னும் ஆன்மீக சஞ்சிகையை 2004 ஆம் ஆண்டு னுநைடநெடிநசப என்னும் இடத்தில் வெளியீடு செய்து வைத்தது மட்டுமல்லாமல் 15 ஆவது ஆண்டு சிறப்பு மலரையும் ஸ்வெற்றா நகரத்தில் வெளியீடு செய்து வைத்த முதல் தமிழன்

7.கனடிய தமிழா் தகவல் ஐரோப்பிய விருது.

கனடா தமிழா் தகவல் நிறுவனத்தினரால் 1999 ம் ஆண்டு கனடிய தமிழா் தகவல் ஐரோப்பிய விருதை ஜோ்மனியி லிருந்து சென்று பெற்றுக்கொண்ட முதல் தமிழன். கனடாவிலே வெற்றிமணி பத்திரிகை 1995 முதல் 2000 ஆண்டுவரை வெளிவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

8.பரதக்கலை சஞ்சிகை

இலங்கையிலே பரதக்கலையை முன்னிறுத்தி வந்த முதல் சஞ்சிகையாகிய அபிநயா என்னும் சஞ்சிகையை திருமதி வலன்ரீனா இளங்கோவனை பிரதம ஆசிரியராகக்கொண்டு வெளியீடு செய்த முதல் தமிழன்.

9.கோடைவிடுமுறை இதழ் ஓவியா

யோ்மனியில் 1995 ஆம் ஆண்டு வெற்றிமணியின் கோடைவிடு முறை கால இதழாக ஓவியா என்னும் சஞ்சிகையை முதன் முதலாக தமிழில் வண்ணப் புத்தகமாக வெளியீடு செய்து வைத்த முதல் தமிழன்.

10.யோ்மனியில் தமிழ் வெளியீட்டகம்

யோ்மனியிலே 24 க்கும் மேற்பட்ட தன்னுடையதும் பிறருடையதுமான புத்தகங்களை தானே வடிவமைத்து வெற்றிமணி வெளியீடாக பதிப்பித்து வெளியீடும் செய்து வைத்தும் தமிழ் எழுத்தாளா்களை ஊக்குவித்த முதல் தமிழன்.

இந்நூல்களில் நான் தேடிப்பெற்ற சிலவற்றை இங்கு குறிப்பிடு கின்றேன். அவ் அனைத்து புத்தகங்களும் 1000 பிரதிகள் (சிறப்பு மலா்கள் இதற்கு விதிவிலக்கு) வெளிவந்ததுடன் அத்தனையும் தாயகத்தில் மாணவா்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

1.புதிய வடிவங்கள் - கண்ணா
2.எழுத்தாளன் கவிஞர் வி.கந்தவனம்
3.ஓவியா - வெற்றிமணி வெளியீடு
4.இடைவெளி - மாதவி
5.காதல் கிராமத்தின் சாரளம் - மாதவி
6.அது என்பது இதுவா மாதவி
7.மாறன் மணிக்கதைகள் - பொ.கனகசபாபதி(கனக்ஸ்)
8.யேர்மனியில் கவிஞர் வி.கந்தவனம்
9.பல்கலைச் செல்வர் சிவகுமாரன் சிறப்புமலர்
10.வெற்றிமணிகள் கவிச்சித்திரா, சுகந்தினி, சுதஉசன்
11.காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி - இந்துமகேஷ்
12.பரதமாதேவி வானதி சிறப்புமலர்
13.சிவத்தமிழ் முத்துவிழா தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புமலர்
14.தமிழே காதல் - நிலாமகள் (வர்ணச்சித்திரங்களுடன் கவிதையும் இணைந்து யேர்மனியில் வந்த முதல் நூல்)
15.அதிசய உலா சிவகுமாரன்
16.காதோடு காதாக கதிர் துரைசிங்கம் (நகைச்சுவைத் துணுக்குகள் முதல் புத்தகவடிவம் பெற்றது)
17.திறவுகோல் - பொ.கனகசபாபதி (கனக்ஸ்)
18.யாழ்ப்பாணத்து நாட்டிய மரபு வலன்ரீனா
19.பொன்னும் மணியும் - சிவக்குமாரன்
20.அபிநயா வலன்ரீனா
21.பிஞ்சுமனங்களின் தேடல் -
முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்
22.சிறுவர் பாடல்கள் - சி.நடராஜா
23.கலைமகன் மணிவிழா சிவகுமாரன் - (மணிவிழா)
24.யாழ் வெற்றிமணி வலன்ரீனா
25.சுவற்றா கனகதுர்க்கா ஆலய கையேடு (யேர்மன்மொழியில்)
-வைஸ்ணவி - ஜெகன்மோகன்

இதில் இவர் தந்தை வெற்றிமணி வெளியீடாக வெளியீடு செய்த புத்தகங்களாகக் குறிப்பிடத்த தக்கவை

1.தம்பிக்கு - டாக்டர்.நந்தி
2.நாடகம் - கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை
3.கீரிமலையினிலே நூல்நயம் (கவிஞர்.வி.கந்தவனம்) இரசிகமணி கனக செந்திநாதன்
4.கணக்கியலுக்கோர் அறிமுகம் - வை.சிவஞானசுந்தரம்
5.பரீட்சையில் சித்தியடைவது எப்படி - கவிஞர்.வி.கந்தவனம்
6.ஒரே ஒருதெய்வம் குறுநாவல் - சிவகுமாரன்

நாடகங்கள் (கதை வசனம்)
தாலாட்டுப் பாடமாட்டேன் -தமிழீழ நாடக வட்டம் -யேர்மனி - 1997-கனடா 01
தேன் வந்து பாயுது காதினிலே - வெற்றிமணி பொன்விழா- 13.05.2000
பொட்டு - (வானொலி நாடகம்) கீதவாணி -கனடா 2000
படலை - (வானொலி நாடகம்) கீதவாணி -கனடா 2001
2000 ஆண்டு முதல் 2019 வரை பல பாடல்களின் பாடல் களின் ஆசிரியரா இருந்து பல TBB அல்பங்களை அழகுபடுத்தி உள்ளார்

இவ்வாறு பல சாதனைகளை யேர்மனியில் செய்த இவர் பல முதல்களின் முதல்வராகினார். பல திறமைகளையும் அர்ப் பணிப்புக்களையும் செய்து பிறருக்காகத் தன் வாழ்நாள்களை செலவிட்டு தமிழுக்கும் தமிழர்களுக்கும் சேவையாற்றும் வெற்றிமணி ஆசிரியரின் தியாக மனப்பான்மையின்றி இந்த வெற்றிமணி 25 ஆண்டுகளை ஐரோப்பாவிலே கடந்திருக்காது என்பதை உறுதியாக இந்த சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்துவது அவசியமாகும். இதேவேளை அவரின் இம்முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்குகின்ற எழுத்தாளர்களும் வர்த்தக நிறுவனங்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவன் செய்நூலாமோ பாரில்
தோன்றிய பத்திரிகையெல்லாம் வெற்றிமணி போலாமோ
போற்றத் தகுதியெனத் தெளி

கை வந்தமரும் எதுவும் கருத்தைக் கவர வேண்டும்
கண் தோன்றும் எதுவும் மனத்தைக் கவர வேண்டும்
சொல் பெற்று உயரும் வடிவம் சொந்தமாக வேண்டும்
அதுவே விண்முட்டும் புகழை உவந்தளிக்கும்

25 ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் வெற்றிமணிக்கு என் இதயம் கனிந்த வாழ்த்துகள்.



"தாலாட்டுப் பாடமாட்டேன்" நாடகத்தில் த.இரவீந்திரன் தோன்றும் ஒரு காட்சி ,கதை வசனம் சிவகுமாரன் இயக்கம் க.சிவதாசன் 1997



தேன் வந்து பாயுது காதினிலே கதை வசனம் சிவகுமாரன்
இயக்கம் குரு.பிலபெல்ட்
நடிகர்கள்: தமிழினி தேசிங்குராஜா,சந்திரா,டயானி,
ப.அகல்யா. ராஜமனோகரன், ராஜி ஆகியோர்
வெற்றிமணி பொன்விழா-13.05.2000



சுவெற்றா கனகதுர்க்கா ஆலய கையேடு (யேர்மன்மொழியில்)
வைஷ்ணவி .ஜெகன்மோகன் 2015

ஆக்கம்: குறிஞ்சி நிலா



# வரலாறு இல்லையேல் தமிழர் வாழ்வு இல்லை



**ஆவணஞானி அமரர் இரா.கனகரட்ணம் அவர்கள் நினைவாக ஒரு மீள் பார்வை**

ஆசிரியரைப்பற்றி:
ஆவண ஞானி இரா கனகத்தினம் அவர்கள் ஈழத்தில் குரும்பசிட்டி என்ற கிராமத்தில் பிறந்தவர். 1956ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கிட்டத்தட்ட 56 வருடங்களாக இலங்கைத்தமிழர் வரலாற்றை ஆவண வடிவமாகத் தொகுத்து வருவதை முழு நேர சேவையாக செய்து வருகிறார். 1890 முதல் 2011 வரையான 121 வருட வரலாற்று, அரசியல், கலாச்சார செய்திக் குறிப்புகள், நாளிதழ்கள், படங்களை தனது வாழ்க்கையே அர்ப்பணித்து திரட்டியவர்.

தான் பிறந்த குரும்பசிட்டியிலும் பின்பு கண்டியிலும் ஆவணக் காப்பகத்தை நிறுவி தனிமனிதனாய் 2000 ஆண்டுவரை திரட்டிய இரா.கனகரத்தினம் அவர்கள் இலங்கை இராணுவத் தின் கெடுபிடிகளால் கிளிநொச்சிக்கு காப்பகத்தை கொண்டு செல்லவேண்டியிருந்தது. அங்கு தமிழர் வரலாற்று வடிவங் களை திட்டமிட்டே அழித்து வரும் சிங்களவர்களால் ஒரு நூற்றாண்டு கால ஆவணங்களும் தீக்கிரையானது. இதற்கு சில வருடங்களின் முன்பு 75 வீதமான ஆவணங்கள் நுண்படச் சுருள்களாக ஆக்கப்பட்டு அன்னிய தேசம் ஒன்றில் பாதுகாகக்கப்படுவது மனதிற்கு ஆறுதல் அளிக்கிறது.

தமிழர் வாழும் தேசங்களில் எல்லாம் பண்பாடும் மொழியும் காப்பாற்றப் பட வேண்டும் என்ற உத்வேகத்துடன் உலகத் தமிழர் பண்பாட்டு கழகம் என்ற அமைப்பை 1974 ம் ஆண்டு வேறு சில அறிஞர்களோடு பல கெடுபிடிகளுக்கு மத்தியில் தாபித்தவர் திரு கனகரத்தினம் என்றால் மிகையாகாது. தமிழர் வாழும் தேசங்கள் என்றால் இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா என்று வரலாற்றாசிரியர்கள் கற்பித்து வந்த காலத்தில் அலைகடல்களுக்கு அப்பால் தமிழர் என்ற நூலினூடு இந்தொனேசியா முதல் கரிபியன் தீவுகள் வரை பரந்துவாழும் எமது உறவுகள் பற்றிய தகவல்வகளை தந்தவர் இரா.கனகரத்தினம் அவர்கள்.

தந்தை செல்வநாயகம் பற்றிய ஒரு புத்தகம், சீசரின் தியாகம் (1952), அலைகடல்களுக்கு அப்பால் தமிழர்(1983), உலத் தமிழர் ஐக்கியத்தை நோக்கி(1974), மொறிசியசு தீவில் எங்கள் தமிழர்(1980), இறீயூனியன் தீவில் எங்கள் தமிழர் (1989) ஆகிய நூல்களை ஏற்கனவே எழுதி உள்ளார்.
இலை மறை காயாக வாழ்ந்து ஈழத் தமிழ் வரலாற்றை ஆவணப்படுத்தும் இப் பெரியாரை வாழும் காலத்திலேயே கௌரவிப்பது தமிழர்கள் அனைவரதும் கடமையாகும்.

நூல் 1 : ஒரு குடையின் கீழ் உலகத் தமிழினம் உலகத் தமிழர்களை ஒரு அமைப்பின் கீழ் கொண்டுவரவேண்டும் என்ற ஆசிரியரின் கொள்கையில் இருந்து உருவான இந்நூல் அனைத்து தமிழர்களும் படிக்க வேண்டிய ஒன்று. உலகத் தமிழர் இயக்கம் ஆரம்பிக்க ஏதுவான காரணங்களையும் அதனை ஸ்தாபிக்க உதவியவர்கள் பற்றியும் எவ்வாறான கெடுபிடிகளுக்கு மத்தியில் அவ் அமைப்பு உருவாக்கப்பட்டது என்றும் விரிவாக தனது மனப்பதிவுகளை முதலாவது பகுதியில் ஆசிரியர் விபரித்திருக்கிறார்.
இரண்டாவது பகுதியில் உலகெங்கணும் பரந்துவாழும் தமிழர்களை - முக்கியாமாக 18ஆம் நூற்றாண்டில் இடம் பெயந்தவர்கள் - பற்றிய செய்திகளை விபரமாக தொகுத்து வழங்கப்பட்டிருக்கிறது. அலை கடல்களுக்கு அப்பால் பல சிறிய தீவுகளில் ஆங்கிலேயர்களாலும் பிரான்சியர்களாலும் குடியேற்றப்பட்ட மக்களின் தகவல்கள் வியப்படையச் செய்வ தோடு இன்று புலம் பெயந்த தமிழர்கள் தமிழ் மொழியை பண்பாட்டு விழுமியங்களை சந்ததிக்கு கொடுக்காமல் விட்டால் என்ன நடக்கும் என்பதையும் கடந்த கால வரலாறு ஐயமுற தெரிவிக்கிறது.

சிங்கப்பூர், மலேசியா, மியன்மார், அந்தமான் நிக்கொபார் தீவுகள், ரினிடாட், மார்த்தினிக், குவாட்லொப், சீசெல்ஸ், பிஜித்தீவுகள், தென் ஆபிரிக்கா, மொரிசியஸ், இறீயூனியன், இந்தொனேசியா வாழ் தமிழர்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய ஆசிரியர் இன்னும் சில ஆய்வு செய்யப்படாத நாடுகளையும் பட்டியலிட்டிருக்கிறார்.

நூல் 2: ஒரு நூற்றாண்டு இலங்கைத்தமிழர் வரலாறு.
மைக்கிரோபிலிம்களில் வரலாறு இன்றேல் தமிழர் வாழ்வே இல்லை என்ற ஆவணக்காப்பகத்தின் தாரக மந்திரத்தை புடம் போட்டுக்காட்டும் இக்கைநூல் தமிழர்கள் வரலாற்றை ஏன் ஆவணப்படுத்தவேண்டும் என்ற கேள்விக்கு விடை காண்ப தோடு ஆசிரியர் எப்படி ஆவண காப்பகத்தை உருவாக்கினார் என்ற வரலாற்றை விளக்குகிறது.

ஏலவே குறிப்பிட்டு போன்று ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட இலங்கைத்தமிழர் வரலாறு மைக்கிரோபிலிம்களில் தொகுக் கப்படுள்ளது. ஆவணங்களை தொகுக்க ஆசிரியருக்கு உறு துணையாகி நின்றவர்களின் பெயர்களும் ஆவணங்கள் சேகரிக்கப்பட்ட தினசரி, வார ஏடுகளின் பட்டியலும் தரப் படுள்ளன. இலங்கையில் தோன்றி மறைந்த பல்வேறு சஞ்சிகைகள், வாரப் பத்திரிகைகள், பழந்தமிழ் ஏடுகள், காட்டூன்கள் மற்றும் செய்திகளின் மூலங்கள் எல்லாம் ஆவணக்காப்பத்தில் ஆவணப்படுத்தப்பட்டிருந்தன. தமிழர் களின் பல தலைமுறைகளுக்கு கிடைத்திருக்க வேண்டிய சொத்து ஒரு நாளில் தீயால் அழிக்கப்பட்டது.





# இவர்கள் எல்லோரும் தமிழ் மரபு வழிவந்தவர்களே!?

நார்வே நாட்டின் பண உதவியுடன் 75 வீதமான ஆவணங்கள் நுண்பட சுருளாக்கப்பட்டன. இவற்றில் ஒரு தொகுதி சுவிஸ்லாந்து யுனெஸ்கோ ஆவணக்காப்பகத்தில் எதிகால சந்ததியினரின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இன்னும் ஒரு பெரிய தொகுதி புகலிட நாட்டொன்றில் பாதுகாப்பாக உள்ளது. 25 வீதமான ஆவணங்கள் முற்றிலும் அழிந்து விட்டன. இந்த நுண்பட சுருள்களை பற்றி இக் கையேடு விளக்குகிறது.
மைக்ரோ பிலிமில் பதிவாகியுள்ள வரலாற்று முக்கியம் வாய்ந்த ஒரு செய்திகள்:

இவர்கள் எல்லோரும் தமிழ் மரபு வழிவந்தவர்களே?



1.S.W.R.D பண்டாரநாயக்கா 2.பிரதமர் ஸ்ரீமாவே பண்டாரநாக்கா 3. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா 4.முன்னாள் ஜனாதிபதி J.R.ஜெயவர்தனா



J.R.ஜெயவாதனா



சந்திரிக்கா

ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் ஒரு தலைசிறந்த தமிழ் இனப்பற்றாளர், ஆய்வாளர் அரசியல்வாதி. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு பின்புறம் தன் மனைவியின் பெயரில் ஒரு வரலாற்று ஆய்வு மையத்தை நிறுவியவர். நீண்ட காலம் தலைநகர் கொழும்பில் வாழ்ந்தவர். முதல் பெண் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரா நாயக்க குடும்பத்தினரதும் ஜனாதிபதியாக இருந்த J.R.ஜெயவர்தனா குடும்பத்தினரதும் நெருங்கிய குடும்ப நண்பர்.
இவர் தனது நீண்டகால ஆய்வின் பின் ஸ்ரீமாவோ பண்டாரநாக்கா நீலப்பெருமாள் என்ற தமிழர் வழிவந்த வாரீசு என்பதனையும். J.R.ஜெயவர்தனா தம்பிமுதலியார் என்ற தமிழர் மரபுவழி வந்தவர் என்பதனையும் போதிய ஆதாரங்களுடன் நீரூபித்து TRIBUNE என்ற ஆங்கில ஏட்டில் நீண்ட பல கட்டுரைகளை எழுதி ஒரு அரசியல் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தார்.

தகுந்த சான்றுகளுடன் வெளிவந்த இக்கட்டுரைபற்றி ஸ்ரீமாவோ குடும்பத்தில் இருந்து எதுவித மறுப்போ கருத்து வெளிப்பாடோ வரவில்லை. J.R.ஜெயவர்தனா மட்டும் அந்த ஆய்வு சுவாரஸ்யமாக உள்ளது என்பதோடு நிறுத்திக் கொண்டார்.

இந்த நிகழ்விற்குப்பின் திரு.ஜெம்ஸ் தேவதாசன் இரத்தினத் திற்கு நடந்த ஒரு பாராட்டுவிழாவில் J.R.ஜெயவர்தனா கலந்துகொண்டு (இரத்தினத்தின் முதுமைகாரணமாக) அவரைக் கையைப்பிடித்து மேடைக்கு அழைத்துச்சென்று பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.



திரு.ஜெம்ஸ் தேவதாசன் இரத்தினம்

திரு.ஜெம்ஸ் தேவதாசன் இரத்தினத்தின் மரணத்தின் போது உலங்கு வானூர்திகள் மூலம் மலர்மாரி பொழியுவும் J.R.ஜெயவர்தனா ஏற்பாடு செய்திருந்தார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.
**நன்றி: இலங்கைத் தமிழர் வரலாறு (1890-2011) இரா. கனகரத்தினம்.**
ஆவண ஞானி திரு.இரா.கனகரத்தினம் அவர்களால் 1889 முதல் ஆவணி 2011 வரை இலங்கைத் தமிழர் வரலாறு மைக்ரோ பிலிம்களாக திரட்டப்பட்டுள்ளன.
ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட இச்சேகரிப்புக்கள் இக்காலத் தில் நிகழ்ந்த அனைத்து சம்பவங்களையும் உள்ளடக் கியதாக, காய்தல் உவத்தலின்றி பல பக்கக் கருத்துக் களையும் அரச செய்திகள் உட்பட பிரதிபலிப்பனவாக அமைந் துள்ளன.

மைக்ரோ பிலிம் பிரதிகள் ஏறத்தாள 500 வருடங்கள் வரை வைத்து பேணமுடியும். ஆயினும் புதிய பிரதிகளாக மாற்றவும் ஒன்றுக்கு மேற்பட்டபிரதிகள் எடுக்கவும் வசதியுண்டு.

## நினைவுத்தூபி

தமிழர்களின் தன்னலமற்ற தியாகத்திற்காக எழுப்பப் பட்ட நினைவுத்தூபி தமிழர்கள் குடியேறிய குவாட் லோப் என்ற கரீபியன் தீவுக் கடற்கரையில் நிறுவப்பட்ட நினைவுத்தூபி.

குவோட்லோப் தீவின் வளத்திற்கும் பொருளாதார பங்களிப் புக்கும்,அவர்கள் வழங்கிய தன்னலமற்ற தியாகத்திற்குமாக குவாட்லோப் அரசால் தமிழர் வந்திறங்கிய Pointe A Pitre என்ற இடத்தில் நிர்மாணிக்கப்பட்ட நினைவுத்தூபி ஓம் என்ற வார்த்தை தங்கத்திலான சூரியன் 4 திசைகளிலும் சங்குகள், சிவனின் திரிசூலம். கரும்புச் செடியின் இலை.கணபதியின் சிலை,எனத் தமிழர்களின் பண்பாடு பாரம்பரியங்களைச் சுமந்து நிற்கும் இச்சிலை தமிழர்களின் உழைப்புக்கும் தியாகசிந்தனைக்கும் அர்ப்பணிப்பாக எழுதுந்நிற்கின்றது.

இத்தூபி தமிழர்கள் அங்கு வந்திறங்கி 150 வருட நினைவை (1854-2004) முன்னிட்டு 2004 ஆம் ஆண்டு கொண்டாட்டத்தின் போது அமைக்கப்பட்டது.

நன்றி: வெற்றிமணி- 2013 தை



# அட்டைப்படம் சொல்லும் சங்கதி
# நாம் வாழும் நாட்டையும் நேசிப்போம்



யேர்மனியில் லூடின்சைட் Lüdenscheid நகரம் பல்வேறு விடயங்களில் மிகவும் பிரபலமாக விளங்குகின்றது.

மின்சார விளக்குகள் செய்வதற்கு மிகவும் பிரபலமான நகரம் இது. சமீபகாலங்களில் இங்கு காணப்படும் விளக்குகளின் நகரம். "City of Light" என்ற விளம்பர பதாதைகள் இதனைமிகவும் அழகாகச் சுட்டிக்காட்டுகின்றன. ERCO என்ற இங்கு உள்ள நிறுவனமே இந்த உற்பத்தியில் மிகவும் முக்கியமானது. இந்த நிறுவனம் உலகப்புகழ்பெற்ற கட்டிடங்களான துபாய் இல் உள்ள Burj al Arab hotel in Dubai றோம் நகரில் உள்ள Vatican Pinakothek in Rom பாரிசில் நகரில் the Grand Louvre e in Paris பேர்லின் நகரில் உள்ள the Brandenburg Gate in Berlin,Bilbao நகரில் உள்ள the Guggenheim-Museum போன்றவற்றிற்கு மின்சார விளக்குகள் பொருத்தி அவை மிக அழகாக காட்சியளிக்க வகைசெய்தன.

இந்த அழகான நகரில் காணப்படும் "Phänomenta". என்று அழைக்கப்படும் விஞ்ஞான நூதனசாலை Northrhine Westphalia வடக்கு யேர்மன் மாநிலத்தில் முதல்தரமானது இது. உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் இங்கு வந்து பௌதீகம் சம்மந்தமான ஆராய்ச்சிகளை செய்ய இந்த இடம் மிகவும் உதவியாக உள்ளது. இங்கு கட்டப்பட்டிருக்கும் 78மீற்றர் உயரமான கோபுரத்தில் ஊசல் (pendulum )பொருத்தப்பட்டுள்ளது. 1851ம் ஆண்டு உலகம் சுற்றுகிறது என்பதை பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானி Léon Foucault என்பவருக்கு உணர்த்தியது எதுவோ. அதே அடிப்படையில்தான் இக் கோபுரம் அமையப்பெற்றுள்ளது. இன்று லூடின்சைட் நகரத்தின் அடையாளமாகக் காணப்படும் இந்தக்கோபுரத்தில் ஐரோப்பாவில் பெரிய பல வண்ணக் காட்சிக் கருவி (Europe's largest kaleidoscope) பொருத்தப் பட்டுள்ளது மிகவும் முக்கியமானதொன்றாகும்.

மேலும் இந்த அழகான நகரம். பல்வேறு நதிகள் நீர்த்தேக்கங்கள் மலைத் தொடர்களைக் கொண்டது. பல்வேறு மலைத் தொடர்களைக்கொண்டதினால் இந்நகரை. மலை களின் நகரம் (Bergstadt) என்றும் அழைப்பார்கள். ஆராய்ச்சிகளின் படி 1067 ஆண்டு கிராமமாக காட்சியளித்து, பின்னர் 1268 ம் ஆண்டு நகரமாக மாறியது என்றால் மிகையா காது.

வாகன உதிரிப்பாகங்கள் மின்சார விளக்குகள் இரும்பு பிளாஸ்டிக் போன்றவற்றை உற்பத்திசெய்யும் பல்வேறு சிறிய நடுத்தர தொழில்பேட்டைகள் கொண்ட நகரமாகத் திகழ்கின்றது. இந்த அழகான நகரில் காணப்படும் Kostal என்ற பெரிய நிறுவனம் வாகனங்களுக்கு தேவையான மின்சார உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாக விளங்குகின்றது. இந்த நிறுவனத்தில் ஏறத்தாள 1500 பல்தரப்பட்ட வேலையாட்கள் உள்ளனர். இந்த நிறுவனமே முதலாவதாக மங்கலாக்கும் வாகனங்களின் முன்பக்க விளக்கைத்தயாரித்தது. (dimming headlight.) அத்துடன் வாகனங்களுக்குத்தேவையான மின் இணைப்பு பலகை (first patented switch panel) ஐரோப்பாவில் முதல் முதலாகத் தயாரித்த நிறுவனமாகும். இத்தகைய பிரபலமான நிறுவனத்தில் வெற்றிமணி ஆசிரியர் 33 வருடங்கள் வேலை செய்து அண்மையில் (1.02.2018) ஓய்வுபெற்றார்.



அவர் அங்கு வேலைசெய்யும் காலத்தில் வாகனங்களின் மின்சார உதிரிப்பாகங்களைக் கொண்டு பல சிற்பங்களையும் படைத்தார். அவற்றில் ஒன்று இன்று Kostal பிரதான நுழைவாசலில் கண்ணாடிப் பேழைக்குள் கம்பீரமாக இருக் கின்றது. இச்சிற்பம் 1997 முதல் அங்கு உண்டு.

முதல் முதலாக லூடின்சைட் நகரில் 1898 ஆண்டு Carl Berg தொழிற்சாலையில் போர்க்கால வானூர்தி (Zeppelin airship) தயாரிக்கப்பட்டது. அதுமட்டுமா!

அச்சுக்கலைக்கும் இந்தநகரம் பெயர் பெற்றது 2013 ஆண்டு பேர்லின் நகரில் நடைபெற்ற புத்தகக்கண்காட்சியில் Druck & Medien Awards 2013 என்ற விருது Seltmann Printart Gmbh Lüdenscheid க்கு கிடைத்தது. இந்த அச்சகத்தில் வெற்றி மணி சிவத்தமிழ் அச்சாகி வெளிவருகிறது.(1999 முதல்)







ஆரம்பத்தில் ஒட்டுவேலைகளால் அமைக்கப்பட்டு அதனைப் படம் எடுத்து அச்சாக்கியது அந்தக்காலம். இன்று போல் அன்று வடிவமைப்பு கணனியின் கைகளில் இல்லை. அது கண்ணாவின் கையில் இருந்தது. (ஓவியருக்கான வெற்றிமணி ஆசிரியரின் பெயர்) அப்பொழுது அச்சகத்தின் அதிபர் Frank Seltmann மிகவும் அக்கறையுடன் எனது முயற்சிகளுக்கு கைகொடுத்தார். இன்று வரை எமக்கு பலக்கபலமாக இருந்து வருகின்றார். 2012 முதல் அவரது மகன் Arno seltmann ஸ்தாபனத்தின் அதிபராக உள்ளார். இந்த அச்சகம் 4 சந்ததிகளைக்கண்டது. 1852 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்றால் பாருங்களேன்.

யேர்மனியில் ஒரு தமிழ்ப்பத்திரிகை Lüdencheid நகரத்தில் இருந்து வெளிவந்து, அது முதல் வெள்ளிவிழாக்கண்ட பெருமையைப் பெறுகிறது. வெற்றிமணி சிவத்தமிழைத் தொடர்ந்து இந்த அச்சகத்தில் அகரம், அகரதீபம், தற்போது தமிழ் ரைம்ஸ், என பல அங்கு அச்சாகி வெளிவர வெற்றி மணியும் காரணமானது என்பது உண்மை. தாய் நாட்டை மறவாது நாம் தமிழர்களாக இங்கு வாழவேண்டும். அதே நேரம் எமக்கு அடைக்கலம் தந்து எமது சந்ததியினர் சுதந்திரமாக கல்வி,கலை,வர்த்தகம், என பலவற்றிலும் உச்சம் தொட ஆதரவு தந்த இந்த நாட்டையும் மதிக்க வேண்டும். அதனால் வெற்றிமணி வெள்ளிவிழா மலரின் முன்அட்டையில் நகரத்தின் அடையாளமான "Phänomenta". வை இடம்பெறவைத்து நன்றி உணர்வை வெளிப்படுத்துகிறது வெற்றிமணி.




1. மு.க.சுப்பிரமணியம்.
2. கனகசபாபதி (கனக்ஸ்)
3. டாக்டர் எம்.கே.முருகானந்தன்
4. சேவியர்
5. றஜீனா தருமராஜா
6. டாக்டர் நிரோஸன்
7. சைவசிந்தாந்த ரத்தினம் நாகேந்திரன் கருணாநிதி
8. பாரதி
9. கலாசூரி திவ்யா சுஜேன்
10. சிவவினோபன்
11. ஜுட் பிரகாஸ்
12. சந்திரவதனா
13. பேராசிரியர். சண்முகதாஸ்
14. முனைவர். மனோன்மணி சண்முகதாஸ்
15. வ.சிவராஜா
16. நெடுந்தீவு முகிலன்
17. அனித்தா செல்வராஜா பூஷன்
18. கே.எஸ்.சுதாகர்
19. இலக்கியச் செம்மல் இந்துமகேஷ்
20. ஏலையா முருகதாஸ்
21. குரு அரவிந்தன்
22. சிவஜெனனி அரவிந்தன்
23. கனகசபேசன் அகிலன்
24. வன்னியான் பூனகர் இரவி
25. நகுலா சிவநாதன்
26. கவிஞர் கந்தவனம்
27. கௌசி
28. தனசேகரன் பிரபாகரன்
29. டாக்டர். கதிர் துரைசிங்கம்
30. கலாநிதி.பால.சிவகடாட்சம்
31. புவனம்.தர்மரட்ணம்.
32. Money Clinic ரகு தர்மரட்ணம்
33. இளவாலை எஸ்.ஜெகதீசன்
34. ஆன்மீகத் தென்றல் த.புவனேந்திரன்.
35. சுபோதினி.சபாரட்ணம்
36. வலன்ரீனா.இளங்கோவன்
37. எழிலன்
38. மட்டுவில் ஞானகுமாரன்
39. எஸ்.என்.சேதுபதி
40. வி.ஆர்.வரதராஜா
41. விக்னா.பாக்கியநாதன்.
42. கருணாகரமூர்த்தி
43. பேராசிரியர் எஸ்.சிவலிங்கம்
44. ஆழ்வாப்பிள்ளை
45. கல்லாறு சதீஸ்
46. இராம் பரமானந்தன்
47. தம்பலகாமம் கவிதா
48. கரிணி
49. சுகந்தினி.சுதர்சன்
50. டாக்டர் புஷ்பா கனகரட்ணம்
51. உ.கெங்காதரன்
52. பவதாரணி ரவீந்திரன்
53. சங்கரி விஜேந்திரா
54. என்.செல்வராஜா
55. ஷரிகா. சிவநாதன்
56. திக்குவல கமால்
57. பத்மகுணசீலன்
58. வேல் அமுதன்
59. கோப்பாய் சிவம்
60. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
61. டாக்டர் நந்தி
62. பேராசிரியர் சாலை இளந்திரையன்
63. கா.தமிழ்த்தம்பி
64. வை.சி.சிவஞானசுந்தரம்
65. இரசிகமணி கனகசெந்தில்நாதன்.
66. கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னத்துரை
67. மு.க.சு.சிவகுமாரன்
68. டானியல்
69. கவிஞர் காரை.செ.சுந்தரம்பிள்ளை
70. குறமகள் (வள்ளிநாயகி)
71. மகாகவி (உருத்திரமூர்த்தி)
72. கவிஞர் செ.கதிரேசபிள்ளை
73. ஆசிரியர் த.அரியரத்தினம்
74. மணிலா. இரத்தினம்
75. கவிஞர் இ.நாகராஜன்

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களை
முறையாகத் தொகுத்து, வகைப்படுத்துவதில்
நம்பிக்கையுடன் உழைப்பவர் எங்கள் நம்பியாண்டார் நம்பி

## நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்கள்

இன்று ஈழத்து எழுத்தாளர்கள் பலர் தாயகத்திலும் புலம்பெயர்ந்தும் தம் படைப்புக்களை வெளியிட்டுவருகின்றனர். தமது படைப்புக்களைக்கூட தக்கவகையில் பாதுகாக்கவோ அல்லது அதனை யாவரும் அறியச் செய்யவோ இயலாத ஒரு மந்த நிலை இன்று காணப்படுகின்றது. காரணம் வாசிப்பு நிலை இன்று தமிழ் மக்களிடம் பெருமளவு குறைந்துவருவதே ஆகும்.

இவற்றிற்கிடையே தனது அயராத முயற்சியால் பல நூல்தேட்டங்களை தொகுத்து பல எழுத்தாளர்களது படைப்புக்களை ஒழுங்கு படுத்தி அதன் அகலம் உயரம் பக்கம் தடிப்பு என தனித்தனியாக அளந்து நூல்தேட்டமாக அவற்றைப்பதிவு செய்து வைத்துள்ளார், நூலகவியலாளர் திரு. என். செல்வராஜா அவர்கள்.

தொகுப்பாசிரியர் நூல்தேட்டம் (1990-)
இலங்கைத் தமிழர்களின் தமிழ்நூல்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் பிற நாடுகளிலும் பரவலாக வெளியிடப்பட்டு வந்த போதிலும் எந்தவொரு நாடும், நிறுவனமும் அதை தொகுத்து ஆவணப்படுத்தும் நடவடிக்கையை செய்ய முன்வரவில்லை. இலங்கைத் தேசிய நூலகம் இத்தகைய பணியை சட்டபூர்வமாக மேற்கொண்டு வருகின்ற போதிலும் தமிழ் நூல்களை ஆவணப்படுத்துவதில் அக்கறை காட்டவில்லை. இந்நிலையில் ஈழத்துத் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும் பணியை 1990இல் தொடங்கி இன்று வரை 2000 நூல்களை ஒருதொகுதியில் தலா 1000 நூல்கள் என்ற வரையறையில் எட்டுத் தொகுதிகளாகத் தொகுத்திருக்கின்றார். ஒன்பதாவது தொகுதிக்கான தொகுப்பு வேலைகள் நடைபெறுகின்றன. 15 தொகுதிகளில் 15000 ஈழத்துத் தமிழர்களின் நூல்களையாவது தொகுத்து வழங்கவேண்டும் என்பது இவர் திட்டமாகும்.

ஒருவர் தனது படைப்புக்களை ஆவணப்படுத்துவதும் அவற்றை அழகுபடுத்துவதும். சிரமம் என்றாலும் அதில் அவர்களுக்கு ஒரு பெருமிதமும், மகிழ்வும் கூடவே இருக்கும். ஆனால் இவரோ பிறரது படைப்புக்களை அகமகிழ்வோடு தொகுத்து, ஆவணப்படுத்துவது ஆச்சரியமான செயல்.
பல நூல்கள் வெளியீட்டு விழாக்களில் வெளியீட்டு விழாவில் வெளியிட இருக்கும் நூலைவிட அங்கு வந்துள்ள சில எழுத்தாளர்கள் தங்களது நூலை அங்கு வந்தவர்களிடம் வெளிப்படுத்த முனைவதையும் பாத்திருப்பீர்கள். ஒரு சிலர் தமதுகைப்பைக்குள் இருக்கும் தமது நூல்களை முன்னே முன்னுரை நிகழும் வேளையிலேயே தமது உரைகளை பலருக்கு வாசித்துகாட்டிக்கொண்டும் இருப்பார்கள். இது ஒரு யதார்த்தமான விடயமாகவிட்டது. இவற்றை பார்க்கும்போது பிறரது படைப்புக்களை பரப்பும் பண்பாளர் செல்வராஜா நம்மத்தியில் வாழ்வதையிட்டு பெருமைகொள்வோம்.

வெற்றிமணியின் பல விழாக்களில் கலந்துகொண்டவர். பேச்சிலும் எழுத்திலும் ஆதாரபூர்வமாக தமது கருத்துக்களை முன்வைப்பவர். பிறரது உழைப்பை மதிப்பவர். எங்கு இருந்து எதனைப்பெற்றாலும் பெற்ற இடத்திற்கு நன்றி சொல்லி முடிப்பவர். போகும் இடம் எல்லாம் தேடல்.அது தன்னைச்சுற்றியதாக அல்ல.
தமிழ் எழுத்தாளர்கள் யாராக இருந்தாலும் சரி அவரது தேடல் அதற்குள் இருக்கும். தேடிப் பெற்றுவிட்டால் அதனை உரியவர்களுக்கு கொடுத்து அல்லது அந்தச் செய்தியைப் பகிர்ந்து மகிழ்வதில் அவருக்கு நிகர் அவரே. ஒருவருடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்று முடிவெடுத்தால் அதனை எப்படியும் முடிப்பார். ஒரு செய்தியை பகிரவேண்டும் என்று நினைத்தால் எப்படியும் பகிர்வார்.



அதற்கு உதாரணம்...
எனக்கு ஒரு கடிதம் 18.02.2014
எழுதியிருந்தார். தபால் பெட்டி
இலக்கத்திற் போட்டுள்ளார்.
அதனை நான் நிறுத்திவிட்டதால்.
அக்கடிதம் அவருக்கு திரும்பிவிட்டது.
பின்பு எனக்கு தொலைபேசியில்
தொடர்பு கொண்டு தான் போட்ட
கடிதத்தையும் அதன் விபரத்தையும்
சொன்னார்.
கேட்க மகிழ்ச்சியாக இருந்தது.
மூன்று நாட்களின் பின் அவரது
கடிதம் எனது சரியான முகவரிக்கு மீண்டும் வந்தது.
அதில்.
அன்புள்ள திரு.சிவகுமாரன்
இலங்கை இந்திய பயணங்களை முடித்துக்கொண்டு லண்டன் திரும்பியுள்ளேன். யாழ்ப்பாணத்தில் இருந்த வேளை பொது நூலகத்தில் கிராமக்கவிதை வளமும் சிந்தனைக் கட்டுரைகளும் என்ற நூலை நூல்தேட்டப்பதிவுக்காக வாசித்துக் கொண்டிருந்தபோது கண்ணில் பட்ட ஒரு செய்தியை பிரதி எடுத்து உங்களுக்கு இத்துடன் அனுப்பி வைக்கின்றேன்.

நூல்தேட்டத்தையும், எனது பிற கட்டுரைகளையும் பயன்படுத்தி தமது ஆய்வுக் கட்டுரைகளை எழுதும் எம்மவர்கள் பெருந்தன்மையாக ஒருவரிகூட நூல்தேட்டத்திற்கோ அன்றி எனக்கோ நன்றி தெரிவித்து நினைவுகூராத எம்மவர் மத்தியில், பிரபல இலக்கியவாதியும் ஈழத்து இலக்கியத் துறையில் முன்னோடிகளுள் ஒருவருமான சாரதா க.இ. சரவணமுத்து அவர்கள், உங்கள் தந்தையாரை தன் வளர்ச்சிக்கு உதவியராக அதில் குறிப்பிட்டுள்ளார். உங்கள் பார்வைக்கு அதனை அனுப்பி வைத்திருக்கின்றேன்.
அன்புடன் என்.செல்வராஜா
பி.குறிப்பு:
ஏற்கனவே இதனை உங்கள் பழைய முகவரிக்கும் இதனை அனுப்பிவிட்டேன்.

இவர் அனுப்பிய அப்பிரதியில்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
அவர்கள். வெற்றிமணி சிறுவர்மாத
இதழ் ஆரம்பிப்பதற்கு
ஆறுவருடங்களுக்கு முன் அதாவது
1944 ஆண்டு திரு.சரவணமுத்து
அவர்களுக்கு (எனது தந்தையும்
வெற்றிமணி ஸ்தாபகரும்) செய்த
சேவையைக் குறிப்பிட்டு (01.11.1944)
நன்றி கூறப்பட்டிருந்தது.



மு.க.சுப்பிரமணியம்
1942 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புகைப்படம்

நான் உடன் அந்நேரத்தில் என் தந்தைக்கு என் வயதிருக்கும் என்று கூட்டிக் கழித்துப்பாத்தேன் தந்தைக்கு அப்போது வயது 25.அப்படி என்றால் நன்றிகூறியவருக்கு இன்னும் குறைவாகவே இருக்கும். இந்த இளமைக்காலத்தில் எனது தந்தையின் சேவை உள்ளத்தை எண்ணி வியப்பதா. அல்லது சாரதா என்ற படைப்பாளியின் நன்றியினை நினைவுகூரும் பண்பை எண்ணி பூரிப்பதா. ஒரு தந்தையின் பெருமையை தனையனுக்கு அடையாளம் காட்ட எடுத்த நினைப்பை எண்ணி மலைப்பாதா என்று உள்ளது, திரு செல்வராஜா அவர்களது செயல்.

எல்லோருடைய கருத்துக்களையும் சுமக்கும் புத்தகங்களின் விபரங்களைத் தொகுத்து நாளைய எழுத்தாளர்கள் நம்பிக்கையுடன் விபரங்கள் அறிய அட்டவணைப்படுத்தி தரும் நம்பியாண்டார் நம்பி இந்த செல்வராஜா அவர்கள். எதிர்காலத்தில் பிறரது படைப்புக்களை ஒழுங்குபடுத்தி வகைப்படுத்தி நூல் தேட்டமாக ஆவணப்படுத்தி நாளைய சந்ததியினருக்கு கையளிப்பதில் நம்பிக்கைக்குரியவராக ஒரு நம்பியாண்டார் நம்பியாகத் திரு.என்.செல்வராஜா அவர்கள் திகழ்கின்றார்கள்.




தமிழாலயத் தந்தை இராமலிங்கம் நாகலிங்கம் அவர்கள், 19.05.1927 அன்று தாயகத்தில் வசாவிளான் என்னும் ஊரில் இராமலிங்கம், நாகமுத்து தம்பதிகளின் மகனாக வந்துதித்தார். அமரர் நாகலிங்கம் அவர்கள், ஆரம்பத்தில் யாழ் இந்துக் கல்லூரியிலும், பின்னர் வசாவிளான் மத்திய கல்லூரியிலும் கல்வி பயின்றார். கல்வியில் சிறந்து விளங்கியது மட்டுமல்லாது, விளையாட்டுத்துறையில், துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கினார்.

ஆசிரியராக வரவேண்டும் என்கின்ற பெருநோக்கில், கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இணைந்து, ஆசிரியர்க்கான கற்கைகளை நிறைவு செய்த பின்னர், முதலில் மாத்தளை வின்செஸ்டர் கல்லூரியிலும், தொடர்ந்து பேராதனை அரசினர் தமிழ்ப் பாடசாலையிலும், அதனைத் தொடர்ந்து, கற்றன் புனித. ஜோண்பொஸ்கோ பாடசாலையிலும், இறுதியாக உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்திலும் 1979 வரை தாயகத்தில் கல்வி போதித்தார்.
1960ம் ஆண்டு ஆயிலியம் அம்மையாரைத் திருமணம் முடித்தார். திருமணம் முடித்த காலம்முதலாய், மாமனிதரது வளர்ச்சிக்கு பின்புலமாகப் பலவழிகளில் நின்றுழைத்ததோடு, அவரோடு இணைந்து தமிழ் வளர இவரும் அரும்பாடுபட்டார். மாமனிதர் நாகலிங்கம் தம்பதியர்க்கு 2 ஆண் பிள்ளைகளும், 3 பெண் பிள்ளைகளும் உள்ளனர்.

தாயகச் சூழலால், மாமனிதர் நாகலிங்கம் அவர்கள், 1979ம் ஆண்டு புலம்பெயர்ந்து, கார்த்திகை மாதம் யேர்மனியில் உள்ள கைல்புறோன் பெருநகரத்துக்குட்பட்ட குண்டல்ஸ் கைம் நகரத்தில், அரசியல் தஞ்சம் கோரி அங்கு வாழ்ந்து வந்தார். இந்நகரத்தில் வாழ்ந்த எமது மக்களுடன் அன்பாக உறவாடி தன்னால் முடிந்த பொதுப்பணிகளில் ஈடுபட்டார்.

1985ம் ஆண்டு இவரது மனைவியும், பிள்ளைகளும் யேர்மனிக்குப் புலம்பெயர்ந்து வந்த வேளையில்,1986ம் ஆண்டு காகன் நகரத்தில் தனது மனைவி பிள்ளைகளுடன் இணைந்து வாழவேண்டிய நிலை இவருக்கு ஏற்பட்டது.
காகன் நகரத்தில் 1986ம் ஆண்டு காலப்பகுதியில் 10 பிள்ளைகளை இணைத்து அவர்களுக்குத் தமிழையும், சமயத்தையும் போதித்தார்.
1987ம் ஆண்டு என்னெப்பெற்றால் நகரத்தில் தமிழர் நலன்புரிச் சங்கம் தோற்றம் பெற்று, அங்கே வாழ்ந்த பிள்ளைகளுக்குத் தமிழைப் போதிப்பதற்கான முன்னெடுப்பில் பங்கேற்று ஆசிரியராகப் பணியாற்றினார்.
விற்றன் நகர மக்களால் விடப்பட்ட வேண்டுகோளின் பேரில் 1987ம் ஆண்டு அங்கும் ஒரு தமிழ்ப் பாடசாலையைத் தோற்றுவித்தார்.
இவ்வாறு 13 பாடசாலைகள் தோற்றம் கண்டன. 1989ம் ஆண்டு இப்பாடசாலை மாணவர்களுக்கான பொதுத் தேர்வு நடாத்தப்பட்டது. அந்த வேளையில், யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் தலைவராகப் பணிபுரிந்தார்.

1989ம் ஆண்டு இறுதிப் பகுதியில், எமது அமைப்பின் யேர்மன் பொறுப்பாளராகப் பணியாற்றிய, மாவீரர் மேஜர் சுரேந்தி என்று அழைக்கப்படும் சுரேந்திரகுமார் அவர்களுடனும், சர்வதேசப் பொறுப்பாளராகப் பணியாற்றிய திரு. லோறன்ஸ் திலகர் அவர்களுடனும் புலம்பெயர் குழந்தைகளின் தாய்மொழிக் கல்வியின் அவசியமும் அதன் தேவையும் எடுத்துரைக் கப்பட்டு முதற்கட்ட முன்னெடுப்புக்கள் தயாராகின.

1990ம் வருடம் உலகத் தமிழர் இயக்கம் தோற்றம் பெற்றது. அரசியல் பணியுடன், யேர்மன் மக்களிடையேயான எமது விடுதலைக்கான பிரச்சாரம் என்பவற்றுடன், தமிழ்க் கல்விப்பணியும் இந்த இயக்கத்தில் உள்ளடக்கம் பெற்றது. தமிழ்க் கல்விப்பணியின் பொறுப்பாளராக ஆசிரியர் திரு. இரா. நாகலிங்கம் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

1990ம் ஆண்டு முதலாவது தமிழாலயம் யூச்சன் நகரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், தனியாக இயங்கி வந்த பாடசாலைகள் தமிழாலயமாக ஆசிரியர் திரு. இரா. நாகலிங்கம் அவர்களால் இணைத்துக் கொள்ளப்பட்டது.

ஒரு காலப்பகுதியில், தொடர்ந்து உ.த.இ.பொறுப்பாளராகவும், தமிழ்க் கல்விப்பணியின் பொறுப்பாளராகவும் இரண்டு பொறுப்புக்களையும் ஏற்று ஆசிரியர் திரு. இரா. நாகலிங்கம் அவர்களே பணியாற்றி வந்தார்கள்.

நகர்ந்தும், வேகமாகவும் சென்ற இக்காலப்பகுதியில் 133 தமிழாலயங்கள் உருப்பெற்று நடைபெற்றன. 6500 மாணவர்கள் கல்வி பயின்றதோடு, 650 ஆசிரியர்களும், 350 நிர்வாகிகளும் பணியாற்றினார்கள்.

தமிழாலங்களைத் திறந்து வைப்பது, நிர்வாகிகளை நியமிப்பது, ஆசிரியர்களை நியமிப்பது போன்ற பலபணிகளை மாமனிதர் இரா. நாகலிங்கம் அவர்கள் செய்துவந்ததோடு, தமிழாலயங்களில் அனைத்து மட்டங்களிலும் ஏற்படும் முரண்பாடுகளையும் அணுகித் தீர்த்து வந்தார். அத்தோடு பல தமிழாலயங்களில் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

1.ஆசிரியர்களுக்கான கற்பித்தற் கருத்தரங்கு 2.நிர்வாகி களுக்கான கருத்தரங்கு. 3. தமிழ்த்திறன் போட்டி. 4.அரையாண்டுத் தேர்வு. 5.பொதுத்தேர்வு. 6.விழாக்கள் பரிசளிப்புக்கள்.
7.தமிழாலயங்களுக்கான நுண்கலைப் பிரிவு ஆகிய பணிகளென, அனைத்தும் இனத்தின் மீதும், மொழிமீதும் பற்றுக் கொண்டவர்கள் பலரது அயராத ஒத்துழைப்புடன் நடைபெற்று வந்தன. தாய்மொழிக் கல்வியுடன், நுண்கலைப் பிரிவையும் தமிழாலயங்களில் தோற்றுவித்து, எமது சிறார்கள் கலைகளில் தேர்ச்சிபெறவும், தமிழ்த்திறன் போட்டிகளை நடாத்தியதன் மூலமாக, அவர்களின் சிறப்பான ஆற்றல் களையும் வெளிக் கொணர்ந்த பெருமை மாமனிதர் ஆசிரியர். இரா. நாகலிங்கம் அவர்களையே சாரும்.
2004ம் ஆண்டு புலம்பெயர் மாணவர்களுக்கான பாட நூலாக்கம் தொடர்பாகத் தாயகத்தில் நடைபெற்ற கருத் தரங்கில் 13 நாட்டுப் கல்விப் பிரதிதிகள் கலந்து கொண்டார்கள். இக்கருத்தரங்கில் ஆசிரியர் திரு. இரா. நாகலிங்கம் அவர்களும் கலந்து கொண்டார்கள்.
எசன் தமிழாலயம்: “தமிழாலயத் தந்தை”
பேர்லின் தமிழாலயம்: “தமிழ்மொழிக் காவலர்”
சர்வதேச புலம்பெயர் எழுத்தாளர் சங்கம்: “தமிழேந்தல் ”
எமது வெற்றிமணி பத்திரிகை “நற்றமிழ் குருமணி”
உலகத்தமிழர் பேரவை “உலகப் பெருந்தமிழர் ”
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு யேர்மனிக்கிளை “ஈழத்தமிழ்ப் பெருமகன்” என்ற கௌரவப் பட்டங்களையும், விருது களையும் வழங்கி மாமனிதரை மகிமைப்படுத்தியது.
தேசியத் தலைவரால் மதிப்பளிக்கப்பட்ட பெருமையையும் பெற்றவர் மாமனிதர் நாகலிங்கம் அவர்கள்.

# பல இளம் கலைஞர்களை உருவாக்கிய தலைசிறந்த மிருதங்கவித்துவான் சங்கீதரத்தினம் பிரணவநாதன் அவர்கள்.



சங்கீதரத்தினம்
பிரணவநாதன் அவர்கள்.



இசை மாமேதை,
திரு.என்.சண்முகரத்தினம்

இசைப் பாரம்பரியம் மிக்க கலைக் குடும்பத்தில் தோன்றியவரும், தன்னைப் போல் தனது வாரிசுகளையும் இசைத்துறைக்கே இனிதுவக்கத் தந்தவரும், 20ம் நூற்றாண்டின் ஈழத்தின் இசை முன்னோடிகளில் ஒருவரும், ஈழத்தின் இசை மரபு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிப் பெருமை தேடித் தந்தவருமான, இசைப்புலவர் இசை வேந்தர், இசைமாமணி, கலைச்சுடர், ஏழிசைக்குரிசில், ஈழத்து இசைத்தந்தை என்ற பெருமைக்குரிய மறைந்த இசை மாமேதை, திரு.என்.சண்முகரத்தினம் அவர்களின் மைந்தர்களில் ஒருவரே, லயகுமாரன் சங்கீதரத்தினம் பிரணவநாதன் அவர்கள்.

சிறு வயதிலிருந்து தந்தையிடம் மென்முளவு வாத்திய இசையை முறைப்படி பயின்று, தொடர்ந்து சங்கீத பூசணம் திரு. ஏ.எஸ்.ராமநாதன் அவர்களிடம் மேலும் பயின்று, யாழ் பல்கலைக் கழக நுண்கலைக் கல்லூரியில், சங்கீத இரத்தினம் என்கின்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தின் அதிவிசேடப் பிரிவில், 13 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவரும், யேர்மனி கலை பண்பாட்டுக் கழகத்தின் மூத்த தாள வாத்தியக் கலைஞரும், புலம்பெயர் மண்ணில் வாழும் தாளஞானம் இசைஞானம் கொண்ட இளைய தலைமுறையினருக்கு, மென்முளவு வாத்திய இசையை அயராது போதித்து வருபவரும், ஐரோப்பிய மேடைகளில், நமது தாயகக் கலைஞர்களுக்கு மட்டுமல்லாது, தமிழகத்தின் முன்னணிக் கலைஞர்களுக்கும் இசைமுழக்க மிட்டு, இசைப்பிரியர்களின் இதயத்தைக் கவர்ந்தவரும், தாயகத்திற்கு பெருமைசேர்த்து வருகின்ற மூத்த கலைஞர்களில் ஒருவருமான புகழ்பூத்த மிருதங்க வித்துவான், லயகுமாரன் சங்கீதரத்தினம் பிரணவ நாதன் அவர்கள்.தான் கற்ற கலையை பல மாணவர்க ளுக்கு புகட்டி அவர்களை இன்று பெரும் கலைஞராக்கிய பெருமைக்குரிய வித்துவான் சங்கீதரத்தினம் பிரணவநாதன் அவர்கள்.



சகோதரர்
கலாசூடாமணி
சண்முகராகவன்
அவர்களின்
இசைக்
கச்சேரியில்...

# ஆயிரம் மேடைகளுக்கு மேல் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கிய சிம்மக்குரலோன் வலன்ரையின்.



வலன்ரையின்

1989ம் ஆண்டு புரட்சி இசைவிழா நடைபெற்றது. இந்தப் புரட்சி இசைவிழா நிகழ்வைத் தொகுத்து வழங்குவதற்காக ஒரு நிகழ்ச்சித் தொகுப்பாளரைக் கலைபண்பாட்டுக் கழகம் தேடியபோது திரு. வலன்ரையின் அவர்களைத் தேர்வு செய்தார்கள். ஒளிவிழாவில் எம்மோடு பணியாற்றிய கவிஞர் முகில்வாணன் அவர்கள் அன்றைய பொறுப்பாளராக இருந்த மாவீரர் மேஜர் சுரேந்திரக்குமார் அவர்களுக்கு என்னைப்பற்றி எடுத்துச் சொல்லி, இவரை அழைத்து இவரது குரலைப் பரிசோதித்துப் பார்க்கலாம் என்று கூறியதே இன்று இவர் ஒரு புகழ்பெற்ற அறிவிப்பாளராகத் திகழ்வதற்கு வழிசமைத்தது.

கலை பண்பாட்டுக் கழகத்தின் முதல் நடன ஆசிரியரான கலாநிதி வானதி தேசிங்குராயா அவர்கள் தனது மாணவி ஒருவரின் நடன நிகழ்வுக்கு அறிவிப்புச் செய்யுமாறு கேட்டார்கள் இவர் பலமுறை மறுத்தபோதும் நமது மேடைகளில் பங்கேற்கும் பிள்ளைகள்தான் அவர்கள், ஆகவே நீங்கள் கட்டாயம் அறிவிப்பாளராகப் பணியாற்ற வேண்டும் என்று அன்புக்கட்டளை இட்டார்கள். நடனத்தின் நுணுக்கங்களையும், அதை எடுத்துச் சொல்கின்ற வகைகளையும் அவர் பெரிதாக அறிந்திருக்கவில்லை. முதல் அரங்கேற்றத்தை செய்கின்ற பணியை செவ்வனே செய்ய வேண்டும் என்கின்ற வேணவாவில் பரதநாட்டிய மேதைகளின் நூல்களைத் தமிழகத்திலும், தாயகத்திலும் இருந்து பெற்று அவற்றைக் கற்ற பின்னரே பரதநாட்டிய நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார். இதுவரை ஐரோப்பிய, ஸ்கன்டினேவிய நாடுகள் உட்பட பல ஆசிரியர்களின், 500க்கும் அதிகமான, பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கியுள்ளார். பரதநாட்டியத்தைச் சிறப்பாக இன்று அவர் தொகுத்து வழங்குவதற்குச் சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்தவர் கலாநிதி திருமதி. வானதி தேசிங்குராஜா அவர்களே. பரதநாட்டியம் மட்டுமல்லாது, தமிழிசை, வீணை, மென்முழவு, சீர்யாழிசை அரங்கேற்றங்கள் பலவற்றையும் பலநாடுகளில் தொகுத்து வழங்கியுள்ளார்.

அவர் தனது மறக்க முடியாத நிகழ்வுகள் என்று சொல்லும் போது, டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் அவர்களால் அறிவுப்புத் திலகம், சிம்மக்குரலோன் என்று புகழாரம் சூட்டப்பட்டதையும், தன்மேலும் தனது தமிழின்மேலும் நேசம்கொண்ட லண்டனில் வாழ்கின்ற புலவர் சிவநாதன் அவர்களால் பாராட்டப்பட்டு அவரது கரங்களால் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப் பட்டதையும், நினைவுகூருகின்றார்.

இவர் நாள் முழுவதும் பயபக்தியோடு நின்று அறிவிப்புச் செய்த மாவீரர்நாள் மேடைகளும், நினைவு வணக்க மேடைகளையும் மறந்திடமுடியாது.




வானதி நர்த்தனாலயம்.

இவரின் தமிழுக்குச் சொந்தக்காரர்யாரென்றால் அவர் கற்ற புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் தனக்குத் தமிழ்போதித்த ஆசான் மறைந்த ஆசிரியர் பேரின்பநாயகம் அவர்களே. இன்றும் அவரை இவர் நினைத்துப் பெருமைப்படுவதுண்டு. தாய் தனது பாலுடன் ஊட்டிய தமிழும், தனது தமிழாசான் தந்த தமிழும், இவர் தேடிக்கற்ற தமிழும், இறைவன் கொடுத்த குரலும் பலர் அறிந்த ஒரு அறிவிப்பாளனாக, இவரை வெளிக்காட்டியுள்ளது மகிழ்ச்சியே. இவரது வளர்ச்சிக்கு உறுதுணையாக கலைபண்பாட்டுக் கழகமும் கரம்கொடுத்தது. அந்த சிம்மக்குரல் மக்களை சிறப்பாகக் கட்டிப்போடவல்லது.

# உனக்கு தெரியுமா?
# சங்கீத சாம்ராஜ்யம் உருவாக்கியவர்




1.உனக்கு தெரியுமா
Thigu neela astheka
2. பாடலெனக்கிது
முதல் தரம் தான்
Agasagevan
அழைக்குமோசை கேககலலயா
sulanga selavanai 4. மனமாளிகை ரோஜா / Thura arte athithe

## ஈழத்து மெல்லிசை மன்னர் M.P.பரமேஷ்

அன்றும் இன்றும் என்றும் இசையை தனது வாழ்க்கையாக் கியவர். என்றும் நான் என் இசைப்பயணத்தை நிறுத்தவில்லை நிறுத்தபோவதுமில்லை என்று இன்றும் உற்சாகத்துடன் தினமும் பாடல்கள் எழுதி இசையமைத்து பாடிவரும் எங்கள் அன்பு கலைஞன் ஈழத்து மெல்லிசை மன்னர் M.P.பரமேஷ் அவர்கள்.

வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் இசையோடுதான் என்று தனது வாழ்க்கையைப் பற்றியே இயற்றி, இசையமைத்து பாடியவர். சங்கீத சாம்ராஜ்யம் உருவாக்கியவர். பணத்தை எதிர்பார்க் காமல், அவமானங்களைத் தோல்விகளைக் கண்டு பயப் படாமல், எவர் தனது இலட்சியப் பாதையில் தொடர்கிறார் களோ அவர்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதற்கு எடுத்துக் காட்டு எமது மூத்த கலைஞர் ஈழத்து மெல்லிசை மன்னர் எம்.பி.பரமேஷ் அவர்கள்.

"உனக்கு தெரியுமா நான் உன்னை நினைப்பது" என்ற கவிதையை இசையமைத்து, அதை இலங்கையின் முதலாவது தமிழிசைத்தட்டில் தனது காதலி சங்கீத பூஷணம் மாலினிக்காகப் பாடிப் பதிவு செய்து வெளியிட்டவர். உனக்கு தெரியுமா நான் உன்னை நினைப்பது பாடல் உருவாகி இலங்கையின் இசை வரலாற்றில் அழிக்க முடியாத சாதனை படைக்க காரணமான பாடலாகும். அதை தொடர்ந்து

2. நீயின்றி நிலவு
3. போகாதே தூர போகாதே
4. நீ வாழுமிடமெங்கே
5. மனமாளிகை ரோஜா
6. எழுதுகிறேன் பாட்டு
7. அழைக்குமோசை கேக்கலையா
8. பாடலெனக்கிது முதல் தரம் தான்

என்ற பாடல்களையும் எழுதி, இசையமைத்துப் பாடினார். இந்த 8 பாடல்களையும் 3 இசைத்தட்டுகளில் வெளியிட்டார். இவைகளில் 1வது வெளியிடப்பட்ட இசைத்தட்டில் "உனக்கு தெரியுமா" பாடல் சாதனை படைத்தது. அதாவது இலங்கையின் முதலாவது தமிழ் பாடல், ஒரு இலங்கை தமிழனால் உருவாக்கப்பட்டு, இலங்கை இசைக்கலைஞர் களுக்கும் இசையமைக்க முடியும், இந்திய சினிமாவைத் தாண்டி தனிப்பட்ட கலைஞர்களுக்கும் இசை உலகில் சாதனை படைக்க முடியும், அதுவும் இலங்கையில் முடியும் என்று நிரூபித்த பாடல் ஈழத்து மெல்லிசை மன்னர் பரமேஷ் அவர்களால் உருவாக்கப்பட்ட "உனக்கு தெரியுமா நான் உன்னை நினைப்பது" என்னும் பாடலே தான். இசைத் தட்டுகளில் வெளியிடப்பட்ட இந்த 8 பாடல்களும் இந்திய திரையிசை பாடல்களுக்கு சமமான தரத்தில் இருந்தது.

4ஆவது இசைத்தட்டில் சிங்கள பாடல்களையம் வெளி யிட்டார். இந்த சிங்கள பாடல்கள் ஏற்கனவே மற்ற 3 தமிழிசை தட்டுகளிலும் எம்.பி.பரமேஷ் அவர்களின் வரிகளிலும் இசையமைப்பிலும் வெளிவந்த பாடல்கள் தான். அவற்றை சிங்களத்தில் மொழிமாற்றம் செய்து சிங்களப் பாடகர்களை பாட வைத்து மீண்டும் புதிய பாதையில் சென்று தமிழிசை கலைஞர்களுக்கு பெருமை சேர்த்தார். பின்வரும் இந்த 4 பாடல்களும் தமிழிலிருந்து சிங்கள மொழிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பாடல்களாகும். எம.பி.பரமேஷ் அவர்களே சிங்கள மொழியிலும் உனக்கு தெரியுமா பாடலை பாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



இசைஞானி இளையராஜாவுடன்
ஈழத்து மெல்லிசை மன்னர் M.P. பரமேஷ்

ஒரு இசையமைப்பாளர் பாடகர் கவிஞர் என்பதையும் தாண்டி வெளியிடப்பட்ட இசைத்தட்டுக்கள், இன்டர்நெட் மற்றும் எந்த டெக்னாலஜி இல்லாத காலத்தில் பட்டி தொட்டி எல்லாம் ஒலிக்க செய்தார். இவரது புகழ் இந்தியாவரை ஒலித்தது. இழப்புகள், பட்ட நஷ்டங்கள் மீண்டும் பெற முடியாதவை. உண்மையான உள்ளங்களுக்கு கலையை மதிக்கும் கலைஞர்களுக்கு ஒரு உன்னதமான கலைஞனின் உள்ளம் புரியும். எமது கவிஞர், பாடகர், இசையமைப்பாளர் ஈழத்து மெல்லிசை மன்னர் M.P. பரமேஷ் அண்ணா அவர்களுக்கு என்றும் ஒரே சிந்தனை, அது இசை மட்டும் தான்.



# ஒரு பிரமாண்டமான கோவிலைக் கட்டி எழுப்பும் தன் நம்பிக்கையை ஈழத்தமிழர்களுக்கு தந்தவர்

## சிவஶ்ரீ ஆறுமுக பாஸ்கரக்குருக்கள்





ஸ்ரீ காமாட்ஷி அம்பாள் ஆலய வரலாறு. ஆலய ஸ்தாபகர் சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக்குருக்கள் இலங்கையைச் சேர்ந்தவர்.

1986ல் பிரான்ஸ் செல்லும் வழியில் ஜெர்மனி ஹம் நகரில் தங்க நேரிட்டது. அவர் வாடகைக்கு இருந்த வீட்டிலேயே தன்னுடைய வழிபாட்டு அறையை அம்பாளின் கோயிலாக நினைத்து பூசைகளை செய்து வந்தார். இதை அறிந்து நாளடைவில் பக்தர்கள் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே சென்றது. 1989ம் ஆண்டில் நில அறையில் அன்னை காமாட்சிக்கு சிறு கோயில் போன்ற மாதிரி வடிவத்தை பக்தர்களின் உதவியுடன் உருவாக்கி அதிலே அன்னையை எழுந்தருளச் செய்து நாள்தோறும் பூசைகளைச் செய்து வரலானார். அவருக்கு உதவியாக குருக்களின் சகோதரர் சிவஸ்ரீ கேதீஸ்வர ஐயாவும் அன்றாட பூசைகளில் அன்னை காமாட்சிக்கு பணிகள் செய்து வந்தார்.

பின்னர் 1992ம் ஆண்டில் ஹம் நகரில் ஒரு மண்டபத்தை வாடகைக்கு எடுத்து அந்த இடத்தில் அன்னைக்கு கர்ப்பக்கிரகம் மற்றும் பரிவார தெய்வங்களுக்கான சந்நிதிகளை ஆலய ஆச்சாரியார்களின் உதவியுடன் அமைத்து 1992ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்து அன்னைக்கு தினமும் இரண்டு நேரப் பூசைகளை செய்து வந்தார்.

வருடாந்தர உற்சவம்

1993ம் ஆண்டில் அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாளுக்கு முதன் முதலாக வருடாந்த உற்சவத்தை குருக்கள் ஆரம்பித்து அம்பாள் தெரு வீதிவலம் வர வைத்தார். உற்சவத்திற்காக இந்தியாவிலிருந்து குருமார்கள் வரவழைக்கப்பட்டு உற்சவம் மிகச் சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டது. 1994ம் ஆண்டு உற்சவத்தில் முதன் முதலாக இரதோற்சவம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இரதோற்சவ விழாவிற்காக இந்தியா விலிருந்தும் இலங்கை யிலிருந்தும் சிவாச்சாரியர்கள் அழைக்கப்பட்டு குருக்கள் அவர்களின் தலைமையில் இரதோற்சவ விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சுமார் 2000 பக்தர்கள் உற்சவத்தில் பங்கேற்றனர்.

விழாக் காலங்களில் பங்கு பற்றும் பக்தர்களின் எண்ணிக்கை மென்மேலும் அதிகமாகவே சென்றது. இதன் காரணமாக இடத்தை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் மனதில் உதித்தது. ஒரு நாள் குருக்கள் கனவில் அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தோன்றி ஆலயத்தை அமைப்பதற்கான இடத்தை தெரியப்படுத்தி மறைந்தாள். அந்த இடம் ஹம் நகரிலிருந்து சுமார் 10கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருந்த ஹம் நகர்ப்புறமான உன்ரோப் எனப்படும் ஒரு சிறு கிராமம். 1996ஆம் ஆண்டு உன்ரோப் பகுதியில் Siegenbeckstraße என்ற முகவரியில் அன்னைக்கு சொந்தமாக நிலம் வாங்கி அந்த இடத்தில் சிறிய ஆலயமாக அமைத்து 1997ஆம் ஆண்டில் மஹா கும்பாபிஷேம் நடத்தினார்.

**புதிய இடம்**

உன்ரோப் பகுதியில் அன்னையின் ஆலயத்தில் தினமும் 2 வேளைகள் பூசைகள் செய்யப்பட்டது 1998 ஆம் ஆண்டு நடை பெற்ற அம்பாளின் மஹோற்சவ விஞ்ஞாபனத்தில் சுமார் 10 ஆயிரம் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் அருள் பெற்றுச் சென்றனர். 1998ஆம் ஆண்டு அதே இடத்தில் உள்ள பெரிய நிலத்தை பக்தர்களின் உதவியுடனும் வங்கியின் கடனுதவியுடனும் வாங்கி அங்கே ஆலயம் அமைப்பதற்கு உரிய பூமி பூசை தொடங்கப்பட்டது.

ஹம் நகரில் வசிக்கும் ஹைன்ஷ் ரைய்னர் ஐஸ்கோஸ்ற் எனும் கட்டிட நிபுணரின் கட்டுமாணப் பணியுடன் ஆலய கட்டிட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அடுத்ததாக சிற்ப வேலைகளுக்காக இந்தியாவிலிருந்து சிற்பக் கலைஞர்கள் 1999ஆம் ஆண்டு கடைசிப்பகுதியில் வரவழைக் கப்பட்டு சிற்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் ஆலய விக்கிரகங்கள் அனைத்தும் இந்தியாவில் செதுக்கப்பட்டு வரவழைக்கப்பட்டது. பார்ப்பவர்களின் மனதைக் கொள்ளை கொள்ளும் வகையில் சிலைகள் யாவும் கருங்கற்களில் மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தது. மூல விக்கிரகம் (காமாட்சி அம்பாள்) இந்தியா காஞ்சி காமாட்சி அம்பாளின் திருவுரு வத்தை ஒத்ததாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

மகாகும்பாபிஷேகம்

17 மீற்றர் உயரமான இராஜகோபுரமும் கட்டப்பட்டு சுமார் 18 மாதங்கள் தொடர் வேலைகளின் பின்பாக 2002ஆம் ஆண்டு 7ம் மாதம் 7ம் தேதி ஸ்ரீ காமாட்சி அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்திற்காக பல சிவாச்சாரியார்கள் இந்தியாவிலும், இலங்கையிலும் இருந்து வருகை தந்து அன்னையின் புதிய ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக்குருக்களின் தலைமையில் நடத்தி வைக்கப்பட்டது. கும்பாபிஷேகத்தின் பின்பாக அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாளுக்கு தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெற்று வருகிறது. இன்று 15, 20 ஆயிரம் மக்கள் இக்கோயில் தேர்த்திருவிழாவில் ஒன்று கூடி, அம்மனுடைய அனுக்கிரகம் பெற்றுச் சிறப்படைகின்றனர். ஒரு பிரமாண்டமான கோவிலைக் கட்டி எழுப்பலாம் என ஈழத்தமிழர்களுக்கு தன் நம்பிக்கை தந்தவர் இவர்.

"கவிக்குமரன்" "கலைஞானமணி" அளவையூர் தி.லம்போதரன்



உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
Further Str. 156
41462 Neuss




சிறந்த ஆடைகளின் தெரிவிற்கு மக்கள் தெரிவு செய்யும் ஸ்தாபனம்
SK Silks & Gold Paraadise
ஆடை உலகில் மாபெரும் ராஜ முத்திரை
SK
SINCE-2003
Adlerstraße 33, 44137 Dortmund
TP: 0231 9501647
Mr. P. Sritharan Proprietor M : 0170 5429251




Milin Impex GmbH
மலிவான தரமான மளிகைப்பொருட்களின்
மொத்த விற்பனையாளர்
Web :www.milinimpex.de
Tel: 0231 45 96 17
Westendorf Str.41 - 44287 Dortmund




Photography
Cinematography
Album Making
Graphic Designing
Wedding
Events
Live
Birthday
Saree Ceremony
Graphic Design
Printing
AKR Visualizers
professional photography cinematography
+49 231 1087 6361
+49 162 803 1647
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com
Rheinische Str. 72
44137 Dortmund

## 1994 ம் ஆண்டு வெற்றிமணி பத்திரிகையின் முதல் இதழ் முதல் இன்றும் தொடர்ச்சியாக ஆதரவு தரும் மூன்று முத்துக்கள்!











Jasmine Silk House
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும் பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள், அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு. நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen




KIRI VIDEO
KIRI VIDEO
CINEMATOGRAPHY
+49 1786709612
+49 2171948036
+49 1777076958
LED SCREEN
LIVE STREAM
LIVE EDITING
kirivideo
kiritharan_8@msn.com





Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும் நவீன டிசைன்களில் அமைந்த சேலைகள் மற்றும் இமிற்றேசன் நகைகள் அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை மிக்க ஸ்தாபனம்
0170 334 4059
பிருந்தாஸ்
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976




Tel: 069 25 62 6353
0049 69 25626353
0049 179 4792961
0049 151 71520425
Jaffna Bazar
Asian - African shop in FRANKFURT
Kaiser Straße.49
69329 Frankfurt Main
e.mail:jbspiece2018@yahoo.com




Thushi -Deko
உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்.....
Christal mandapa
Set round
Rada Krishna Stage
and
Raja Gopuram
Tel:02305 - 85945 - 0176 608 108 13
Thushiyanthan.Thiruselvam

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
HK Hammacher
Fahrschule- hk- hammacher.de
ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
19 வருட சிறந்த அனுபவம்
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!


Photo, Video,
DJ Sound, Led Display,
Decoration, Foodservice,
Makeup, and
Stage programme.
Nimal HD
Contact: 0152 338 329 55
nimalvideo@gmail.com.


Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த
வழங்குகின்றோம்.
ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!
பரிமாறுதல் ஒரு கலை
அது எமது நிறுவனத்தின்
கைவந்தகலை!
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de


BTM
JACK MACKEREL
Taste of the Paradise
BTM International UK Ltd
80 Goodhall Street ,Park Royal, London NW10 6TS
United Kingdom
www.btmint.com
Email: info@btmint.com
Aachi
The Mother of Good Taste
TRADITIONAL
JAFFNA CURRY POWDER
Buy 900g GET 200g BIRYANI MASALA FREE
Buy 450g GET 100g BIRYANI MASALA FREE
Original Jaffna Taste
TRADITIONAL JAFFNA CURRY POWDER
BIRYANI MASALA
அசத்தலான
சமையலுக்கு...
ஆச்சி
யாழ்ப்பாணத்து
கறித்தூள்
Aachi
The Mother of Good Taste
BTM International UK Ltd
80 Goodhall Street, Park Royal,London NW10 6TS
United Kingdom
www.btmint.com e.mail: info@btmint.com
Star Impex
எமது நிறுவனத்தில்
இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
Franziusstrasse 150(Tor 3)
44147 Dortmund Germany
e.mail:info@star-impex.de
Tel: 0231 860 26 96



Gopara Gnanam
அழகு மயிலாக அசல்
ஆடைத் தெரிவுகளுக்கு
அற்புதமான ஸ்தாபனம்
ESTD 1992
Rheinische Str. 62
44137 Dortmund
goparagnanamgermany
0049 171 330 6542




அழகு
Koneswaran Thuraisamy
46117 Oberhausen
Germany
Tel:- +49 (0) 157 39 53 2613
E-Mail: konesfotos@gmail.com
Kones
Fotos




டோட்முண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம் கலைக்கூடம்
யேர்மன் மொழி வகுப்புகள்
அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப்படுகிறது.
யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு
நல்லதோர் அரிய வாய்ப்பு
(ஞாயிற்றுக்கிழமை 10.00 மணி - 12.00 மணி வரை)
தமிழ்மொழி வகுப்புகள்
தமிழ் மொழி வகுப்புகள் இலவசம்!
ஐரோப்பாவில் பிறந்த தமிழ் மொழியைக்
கற்காத வளர்ந்த பிள்ளைகளுக்கும்
பிரத்தியேக முறையில் பயிற்றுவிக்கப்படும்.
(வெள்ளிக்கிழமை 16.00 மணி - 18.00 மணி வரை)
பரதநாட்டிய வகுப்புகள்
(ஞாயிற்றுக்கிழமை 12.00 மணி - 14.00 மணி வரை)
திரையிசை (Bollywood) நடன வகுப்புகள்
இலவசம்! (ஞாயிற்றுக்கிழமை 14.00 மணி - 16.00 மணி வரை)
வீணை வகுப்புகள்
(சனிக்கிழமை 12.00 மணி - 15.00 மணி வரை)
கீபோர்ட் மற்றும் வயலின்
வகுப்புகள்
வெகு விரைவில் ஆரம்பம்!
Rheinische str. 76-80, 44137 Dortmund
0151 633 633 33 0231 95097900



BCN TRAVELS
Consulting Network.ug
RYANAIR
easyJet
KLM
Emirates
AIR CANADA
SINGAPORE AIRLINES
QANTAS
Tel: 0231- 108 763 61, 0231 584 407 63
Fax: 0231 108 763 62
Mobile:0163- 871 43 69
Rheinische str-72 44137 Dortmund
AMMA's
Sri lankan & South Indian Specialities
Food
Tel: 0231 33 89 86 91
Rheinische str-80 A 44137 Dortmund / D
ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt
Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30
R.Ragunathan
T.Anpalagan
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
TEMPO
VALUTRANS
Ria
MoneyGram
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
K.K.L
Textilien Schmuck Haushaltsware
ஆடைகளுக்கு
புகழ் பூத்த ஸ்தாபனம்
Tel:0231 96 98 6610
Rheinische str-56 44137 Dortmund


25 years
ANNIVERSARY
வெற்றிமணி
Wuppertal
SO. SEP 15 2019
SHOW
AKR Visualizers
PALAZIO | KASINOSTR. 25 42103 WUPPERTAL
SPONSORS
M&M FAMILY
StaR-Impex
Luckifly
TKS BEST FOODS
தமிழர் அரங்கம் Dortmund
NANDY'S CURRY'S & MORE
LED-Technology
ஆசியா சமுத்திரம்
EURO Asia
THUSHI Deko
PONMAHAL JEWELLERY
TTS Brothers
Jaffna Bazar
Gopara Gnanam
அபிராமி என்றப்பிரைஸ்
BCN TRAVELS Dortmund
ORIENTALISCHE
Fahrschule Hammacher
PIRRUNTHA SILKS
SARAVANAA BHAVAN
KKL
Aachi
BTM
Milin Impex GmbH
Sweet Chilli
KIR VIDEO
JASMINE SILK HOUSE
Nimal HD Video and Photo

ஆதரவிற்கு நன்றி



Kostal தொழில் அதிபருடன்
1996





கண்ணாவின்
சிற்பங்கள்



மளிகை உலகில்
என்றும் மக்களின் முதற் தெரிவு
TKS
BEST FOODS
0049 231 950 468 83
0049 231 950 468 82
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
tksbestfoods
Rheinische Str. 79, 44137, Dortmund Germany